www.tamilarangam.net

தொகுப்பு: ஞாநி

# இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம்



காவ்யா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

www.tamilarangam.net

# இந்தியாவில் தத்துவம், கலாச்சாரம்
## - பாடங்கள், படிப்பினைகள் -
('நிகழ்' தொகுப்பு)

தொகுப்பு :
ஞானி

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

காவ்யா
பெங்களூர் - 560 038

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


| | | |
|---|---|---|
| நூல் | : | இந்தியாவில் தத்துவம், கலாச்சாரம் – சில பாடங்கள், படிப்பினைகள் |
| தொகுப்பு | : | ஞானி (கி. பழனிச்சாமி)<br>123, காளீசுவரர் நகர்,<br>கோயமுத்தூர் – 641 009. |
| உரிமை | : | கட்டுரையாளர்கள் |
| முதற்பதிப்பு | : | டிசம்பர், 2000 |
| வெளியீடு | : | லட்சுமி சுந்தரம்,<br>காவ்யா,<br>16–17–வது குறுக்குத் தெரு,<br>இந்திரா நகர், 2–வது தளம்,<br>பெங்களூர் – 560 038 |
| ஒளி அச்சு | : | ஜி.எம். சிஸ்டம்ஸ்<br>காந்திபுரம், கோயமுத்தூர் – 641 012 |
| அச்சாக்கம் | : | மா பிரிண்டர்ஸ்<br>பெங்களூர். |
| பக்கங்கள் | : | 180 + 12 |
| விலை | : | ரூ. 65/– |


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

# பதிப்புரை

கோவை ஞானி அவர்கள் ஆசிரியர், இதழாளர், கவிஞர், மார்க்சியர், எழுத்தாளர்; எல்லாவற்றுக்கும் மேலாக அபூர்வமான மனிதர். அன்பானவரும்கூட. சூதுவாதுகள் அற்ற சுத்தமானவர்; நெளிவுசுளிவுகள் அற்ற நிறைவானவர். அவரைப் பற்றி இருபது ஆண்டுகளாகத் தெரிந்து கொண்டபின் எனக்குத் தோன்றும் கணிப்பு இது. இதனை என்னைப் போலவே பலர் ஒப்புக் கொள்ளக்கூடும்.

கண்பார்வை, முதுமை, பொருளாதாரச் சிக்கல் எனப் பல்வேறு பகைகளை இவர் எளிதாக வென்று எப்பொழுதும் சிந்தனை, எழுத்து, செயல் என்று இயங்கி வருகிறார். இவருக்கும் இவரைப் போன்றவர்களுக்கும் உதவுவது என்பது அவசியமானது என்பது மட்டுமல்ல ஆனந்தமானது.

இவரது இயக்கங்களுள் ஒன்றான 'வெளியீடு' மிகவும் குறிப்பிடத்தக்கது. 'நிகழ்' கட்டுரைகளைத் தொகுத்து தந்தது 'தமிழுக்கு' ஆற்றும் அரும்தொண்டாகும். 'தமிழுலகம்' அவருக்கு நன்றி சொல்ல வேண்டும். உலகாயுதம், மார்க்சியம், இந்துத்துவம், தலித்தியம் போன்ற பல்வேறு தத்துவங்கள் இந்தியக் கலாச்சாரத்தில் பெரும் இடத்தினை பல்வேறு சிந்தனையாளர்களின் எழுத்துகள் நமக்குள் சிந்தனை விதைகளைத் தூவுகின்றன. இதுவோர் அரியத்தொகுப்பு.

- காவ்யா சண்முகசுந்தரம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

IV

# நூல் அறிமுகம்

- ஞானி

1. 1980களின் தொடக்கத்தில் (1983 ஏப்ரல்) நண்பர்கள் ஒத்துழைப்போடு "நிகழ்" இதழைத் தொடங்கினோம். "நிகழின்" 8–வது இதழ் (அக்டோபர் 88) தொடங்கி 32 வது இதழ் முடிய (1996 மே) எனது பொறுப்பில் "நிகழ்" வெளிவந்தது. முதலில் இலக்கிய இதழாக வெளிவந்த "நிகழ்" நாளடைவில் படைப்புக்களை வெளியிடுவதோடு, தத்துவம், கலாச்சாரம் முதலிய துறைகளிலும் கட்டுரைகளை வெளியிடலாயிற்று. தமிழில் சிற்றிதழ் இயக்கத்தின் ஒரு பகுதியாக வெளிவந்த "நிகழ்" தமிழகம் / இந்தியச் சூழலில் 1980களின் இறுதியில் தொடங்கி 1990 களில் அழுத்தம் பெற்ற தத்துவம் கலாச்சாரம் ஆகியவற்றின் வழியே நடைபெற்ற சிந்தனை வடிவிலான தீவிரமான போராட்டங்களில் "நிகழ்" தவறாமல் தன் பணியைச் செய்தது.

1980களின் இறுதியில் உலகளவில் மார்க்சியம் கடுமையான நெருக்கடிகளைச் சந்திக்க நேர்ந்தது. கிழக்கு ஐரோப்பாவில் தொடங்கிய நெருக்கடி பின்னர் சோவியத் ஒன்றியத்தையும் பாதித்தது. சோசலிசம் என்று அதுநாள் வரை அறியப்பட்ட பொருளியல் மற்றும் அரசியல் கட்டமைப்பு தகர்வுக்குள்ளாயிற்று. இதன் அதிர்வுகளின் பாதிப்புக்கு உள்ளாகாத நாடு என்று உலகில் ஒன்றுகூட இல்லை. இந்தியாவின் உள்ளும் இந்த நெருக்கடியின் விளைவுகளை நாமும் அனுபவிக்க நேர்ந்ததில் வியப்பில்லை.

சோசலிசத்தின் தகர்வை மார்க்சியத்தின் தோல்வியாக சித்தரிப்பதில் உலகளவில் முதலாளிய சக்திகள் பேரார்வம் கொண்டன. மரபு வகைப்பட்ட மார்க்சியக் கட்சிகள் பழைய பல்லவிகளையே திரும்பப் பாடிக் கொண்டிருந்தன. மார்க்சியத்தை ஒரு தீவிரமான மறுபார்வைக்கு உள்ளாக்குவதற்கான வாய்ப்பு இது என்று மரபு வழிபட்ட மார்க்சியர் கருதவில்லை. சந்தைப் பொருளாதாரம் முதலிய புதிய வடிவங்களில் ஏகாதிபத்தியம் தன் பிடியை எல்லாத் திசைகளிலும் இறுக்கியது. இந்த சூழலை எதிர்கொள்ளும் முறையில் மார்க்சியம் தன்னைப் புதுப்பித்துக் கொள்வதும் தேவையாக இருந்தது.

"நிகழைப்" பொருத்தவரை மார்க்சியத்தைத் தன் தத்துவமாக வரித்துக் கொண்டிருந்தது. மார்க்சியத்தின் உள்ளுரை ஆற்றல்களை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாவோ நெறியில் தேடித் தொகுக்கும் பணியில் தோழர் எஸ்.என். நாகராசன் அவர்கள் தீவிரமாக ஈடுபட்டிருந்தார். கீழை மார்க்சியம் என்ற பெயரில் மாவோ நெறியை அவர் புதுப்பித்தார். இதன் காரணமாக தத்துவம் கலாச்சாரம் என்று பல தளங்களிலும் நமக்குப் புதிய வெளிச்சங்கள் கிடைத்தன. "நிகழில்" தொடர்ந்து வெளிவந்த திறனாய்வுகளும், கட்டுரைகளும் இதை உறுதிப்படுத்தும். புதிய தேடலோடு மார்க்சியம் பெற்ற விரிவை "நிகழின்" தனித்தொகுப்பு ஒன்றில் நண்பர்கள் காணமுடியும்.

இப்பொழுது "நிகழின்" இந்தக் கட்டுரை தொகுப்பு குறித்து ஓர் அறிமுகம் என்ற முறையில் சிலவற்றை இங்கு கூறலாம். மார்க்சியம் குறித்த கேள்விகள் எழுந்த சூழலில், தமிழகத்தில் படிப்பாளிகள் மத்தியில் மார்க்சியம் குறித்தும், வேறுவகையான தத்துவப் போக்குகள் குறித்தும் விரிவான விவாதங்கள் எழுந்தன. அமைப்பியல்வாதம் முதற்கொண்டு பின்–நவீனத்துவம் வரை புதிய குரல்கள் எழுந்தன. தலித்தியம் என்றும், பெண்ணியம் என்றும் நண்பர்கள் பேசினர். இவற்றையெல்லாம் எதிர்கொள்வதற்கான திறன் மார்க்சியத்திற்குள் இல்லை என்றும் பலர் கருதலாயினர். தத்துவம் என்பதே மதவாதத்திற்கு இன்னொரு பெயர் என்றும், இந்துமதம் என்பது பார்ப்பனியம் தான் என்றும், இந்துமதமும், இந்துத்துவமும் வேறு வேறு அல்ல என்றும் உரத்த குரலில் நண்பர்கள் பேசினர். மார்க்சியத்தோடு முன்னர் உறவு கொண்டிருந்த சில நண்பர்களும், பெரியாரியம் குறித்தும், தலித்தியம் மற்றும் பெண்ணியம் குறித்தும் தீவிரமாகப் பேசினர். சிலசமயம் மார்க்சியத்தை ஒதுக்கி வைக்கவும் செய்தனர்.

இந்தியாவில் பாட்டாளி வர்க்கப் புரட்சி வெற்றி பெறவில்லை. இதற்குரிய காரணங்கள் விரிவான ஆய்வுக்குரியவை. இந்தியா ஒரு விவசாய நாடு, இங்கு பாட்டடாளி வர்க்கம், செவ்வியல் மார்க்சியம் கூறுகிறபடி வளர்ச்சி பெறவில்லை. உழவர்கள் மட்டுமல்லாமல் சமூகத்தின் ஒதுக்கப்பட்ட மக்கள் பிரிவினரோடும் இணைந்த நிலையில் தான் இங்கு மார்க்சிய இயக்கம் எழுச்சி பெறமுடியும். இந்தியாவில் சாதிய அமைப்பென்பதன் பாதிப்புக்கு ஆளாகாதவர் என்று எவரையும் சொல்ல முடியாது.

மண்டல் குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து இந்தியாவில் ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சி தீவிரப்பட்டது. புதிய காலனியப் போக்குகளும் இந்தியாவின் தொழில்துறை, வேளாண்மை முதலியவற்றை

www.tamilarangam.net



மட்டுமல்லாமல் கல்வி, மருத்துவம், கலாச்சாரம் என்று எல்லாக் களங்களிலும் கடுமையான நெருக்கடிகளை தோற்றுவித்தது. பாட்டாளி வர்க்கப் புரட்சி குறித்து பேசியவர்கள் தலித் மக்களை உள்ளடக்கிய உழைக்கும் மக்கள் அனைவர் குறித்தும் சிந்திக்க வேண்டிவந்தது. பெண் உரிமை, பெண் விடுதலை குறித்தும் பேச வேண்டிவந்தது. இவர்களை உள்ளடக்காமல், இவர்களுக்கும் உரிய விடுதலை பற்றி பேசாமல் இயக்கம் முன்செல்லமுடியாது. மார்க்சியத்தின் உள் விரிவுக்கும் இது காரணமாக அமைந்தது. இத்தகைய சூழலில் இந்தியாவின் தத்துவம் கலாச்சாரம் முதலியவற்றை ஒரு விரிவான மறு ஆய்வுக்கு உட்படுத்த வேண்டி இருந்தது. இத்தகைய பணிகளில் "நிகழ்" தன்னை ஈடுபடுத்திக் கொள்ளவே செய்தது. இந்தத் தொகுப்பில் உள்ள கட்டுரைகள் இந்த உண்மையை வெளிப்படுத்தும்.

2. தத்துவத்தின் முதன்மையான நோக்கம், மனித வாழ்வுக்கு அர்த்தம் சொல்வதாகத்தான் இருக்கமுடியும். நான் யார் என்று தொடங்கி தொடர்ந்து எழும் பல கேள்விகளுக்கும், மாறுபட்டு வரும் வரலாறு மற்றும் பொருளியல் சூழலுக்கு ஒத்தமுறையில் விடை காண்பது தான் தத்துவத்தின் வரலாறாகவும் அமைகிறது. வாழ்வின் அர்த்தம் குறித்து இருத்தலியல் எழுப்பும் கேள்விகளை மார்க்சியமும் உள்வாங்கிக் கொண்டதில் தவறு இல்லை. விரிவான வரலாறு மற்றும் பொருளியல் சூழலில் மனித வாழ்க்கை மற்றும் வாழ்வியல் சிக்கல்களைத் தேடுவதிலும், திரட்டுவதிலும் மார்க்சியம்தான் நவீன காலத்திலும் ஒரு வளமான தத்துவமாக செயல்படமுடியும்.

இத்தகைய நோக்கில்தான் வர்க்கப் போராட்டம் முதலிய மார்க்சியத்தின் இன்றியமையாத கூறுகள் விளக்கப்படவும் முடியும். சமதர்மம் மட்டுமே மனித வாழ்வின் அர்த்தமாகவும், அழகாகவும், ஆற்றலாகவும் விளங்க முடியும். இத்தகைய மார்க்சியம் இந்தியாவின் நெடுங்கால தத்துவம் மற்றும் சமய ஆய்வுகளோடு தன்னைத் தொடர்புபடுத்திக் கொள்வதில் வியப்பில்லை. தேவிபிரசாத் முதலியவர்கள் இவ்வகை ஆய்வுகளில் ஈடுபட்டனர்.

இந்தியத் தத்துவம் என்பதை இந்துத்துவம் என்றோ பார்ப்பனியம் என்றோ சுருக்கிவிடமுடியாது. இந்திய நாகரிகம் என்று அறியப்படும் தொகுப்பினுள் ஆரியர்களைக் காட்டிலும் திராவிடர்களின் பங்களிப்பு கூடுதலானது. சமதர்மம் என்பதன் கூறுகளை இந்தியாவின் தொன்மை

www.tamilarangam.net



மரபுகளில் காணமுடியும். இந்தியாவின் தத்துவ மரபில் பார்ப்பனர்களுக்கு இடம் உண்டு. எனினும், இவர்களின் பங்களிப்பைக் கூட முதன்மையானது என்று சொல்ல முடியாது. பவுத்தம், சமணம், சாங்கியம் என்று தொடங்கி எத்தனையோ தரிசனங்கள் குறித்து நாம் நிறையச் சொல்லமுடியும். பார்ப்பனியத்தின் உள்ளும் வருணம் சாதி முதலியவற்றை மறுத்துப் பேசுவதற்கான இடதுசாரிப் போக்கு என ஒன்று நெடுங்காலமாக இருந்து வருகிறது. இராமானுசர் போன்றவர் மட்டுமல்லாமல் விவேகானந்தர், பாரதி முதலியவர்களும் இந்த இடது சாரிப் போக்கை வெளிப்படுத்தியவர்கள்.

வேள்வி, சடங்கு, சாதி, பூணூல் முதலியவற்றுக்கு அழுத்தம் தருகிற பார்ப்பனியத்தின் வலது சாரிப் போக்கு என்றும் கேள்விக்குரியதாகவே இருந்து வந்திருக்கிறது. நீதி சாஸ்திரங்கள் என்பனவற்றுள்ளும் மனுநூலுக்கும் இடம் உண்டு என்பதைத் தவிர மனுவுக்கே முதலிடம் என்றும் சொல்லிவிட முடியாது. வரலாற்றில் பிற்போக்குச் சக்திகள் ஆதிக்கம் பெறும் காலங்களில் இந்த வலதுசாரிப் போக்கும் முன்னுக்கு வந்துவிடுகிறது. இந்தியாவில் ஆங்கிலேயர்களின் ஆதிக்கம் இந்த வலது சாரிப் போக்கை ஊக்குவித்தது என்பதில் ஐயமில்லை.

தத்துவ வகைப்பட்ட பொருள்முதல் வாதத்தை வறட்டுத்தனமான, இயந்திரவியல் வகைப்பட்ட பொருள்முதல்வாதம் என்றும் வெற்றி கொள்ள முடியாது என்று லெனின் கூறினார். இந்தியாவினுள்ளும் தொடக்க காலம் முதலே சார்வாகம், உலகாயுதம், நாத்திகவாதம் என்று பல வடிவங்களில் பொருள்முதல்வாதம் இருக்கத்தான் செய்தது. கருத்து முதல்வாதத்தோடு இந்தப் பொருள்முதல்வாதம் எல்லாக் காலங்களிலும் போராடி வந்தது என்பதும் உண்மைதான். அறிவியல் மட்டுமல்லாமல் அரசியல், பொருளியல், சமூகவியல் முதலியவற்றிலும் புதிய வெளிச்சங்கள் இல்லாத பழங்காலச் சூழலில் பொருள்முதல்வாதம் தன்னை நிறுவிக்கொள்வது இயலாது என்பதையும் நாம் புரிந்து கொள்ளமுடியும். மார்க்சியத்தினுள்ளும் இடம் பெற்றுள்ள வரட்டுத்தனமான பொருள்முதல்வாதம் இந்தியாவில் உள்ள வளமான கருத்துமுதல்வாதத்தை எல்லாக் காலங்களிலும் பின்னுக்குத் தள்ளிவிடமுடியாது.

பொருள்முதல்வாதமும், நாத்திகவாதமும் ஒன்றல்ல. பெரியாரின் பகுத்தறிவுவாதத்தோடு மார்க்சியரின் வளமான பொருள்முதல்வாதம் முற்றாக ஒன்றியிருக்கவும் முடியாது. மார்க்சியத்தையும், பொருள்முதல்வாதம் என்ற ஒற்றைக் கோட்பாட்டினுள் முடக்கவும் முடியாது.

www.tamilarangam.net



வளமான கருத்துமுதல்வாதத்தோடு மார்க்சியம் முரண்படுவதும் தேவை இல்லை.

மேலும் ஒன்று இந்தியாவில் வருணமும், சாதியும் இணைந்த சாதியச் சமூக அமைப்பு நெடுங்காலமாக நிலைபெற்று இருக்கிறது என்பது உண்மைதான். ஆனால் இந்தியாவைப் பொருத்தவரை 17/18 ஆம் நூற்றாண்டுகள் வரை உலக நாகரிகத்தின் உச்சங்களில் ஒன்றாக இந்தியா திகழ்ந்திருக்கிறது. அறிவியலின் பல்வேறு துறைகளில் இந்தியாவின் சாதனைகள் அற்புதமானவை. வேளாண்மை, கைவினைத் தொழில், கட்டிடம், சிற்பம், இசை முதலிய கலைகள் மருத்துவம் முதலியவற்றில் இந்தியா வேறு எந்த நாட்டுக்கும் சளைத்ததாகவும் இருக்கவில்லை. தரம்பால் முதலிய அறிஞர்கள் இந்த உண்மைகளை விரிவாக ஆராய்ந்துள்ளனர்.

இந்து மதம் என்பது ஆங்கிலேயர்கள் இந்தியாவில் தம் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காக செய்த ஒரு சாதுரியம் மிகுந்த ஒரு சதி. பல்வேறு பரிமாணங்களை உடைய இந்துமதம் என்பதையும் ஒற்றைப் பரிமாணத்தோடு கூடிய மதவாத அரசியலாக இந்துத்துவம் மாற்றி வருகிறது. தத்துவம் கலாச்சாரம் ஆகிய துறைகளில் நிலவும் பல்வேறு வகையான ஆதிக்கங்களை நாம் எதிர்கொள்ள வேண்டிய இன்றைய நிலையில் நமக்குள் சுருங்கிவிட முடியாது. இப்படிச் சுருங்குவதன்மூலம் இந்துத்துவம் முதலிய ஆதிக்கங்களுக்கே நாம் இடம்கொடுக்க வேண்டி இருக்கும்.

இந்தியா என்பதையும், இந்துமதம் என்பதையும் ஒன்று என சிலர் கருதுகின்றனர். இந்தியா என்பது ஆங்கிலேயர் தம் ஆதிக்கத்திற்காக இராணுவ வலிமை கொண்டு உருவாக்கிய ஒரு கட்டமைப்பு. இந்தக் கட்டமைப்புதான் இன்றைக்கும் பல்வேறு தேசிய இனங்களையும் ஒடுக்குவதாகவும் இருக்கிறது. இந்தக் கட்டமைப்பு, இறுக்கமானதென்று இன்று தோன்றியபோதிலும், நாளடைவில் இது தகரும் என்பதற்கான கூறுகள் வளர்ச்சி பெற்று வருகின்றன. ஏகாதிபத்தியத்தை எதிர்கொள்ள வேண்டுமானால் இராணுவ வளமையோடு கூடிய ஒரு புதிய இந்தியா தேவை என்ற ஒரு தவறான கருத்தையும் சிலர் வெளியிடுகின்றனர். மாநிலங்கள் என்று சொல்லப்படும் அரசுகளுக்கும், மைய அரசுக்கும் இடையில் சமத்துவம் என்ற முறையில் ஒரு சரியான கூட்டாட்சி குறித்தும் இன்று சிந்திக்க வேண்டி இருக்கிறது.

www.tamilarangam.net



3. இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம் என்ற பெயரில் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ள பெரும்பாலான கட்டுரைகளின் அடிச்சரடாக ஓடுவன இவ்வகைக் கருத்துக்கள். இக்கருத்துக்களின் வன்மை மற்றும் மென்மை குறித்து நண்பர்கள் விவாதிக்க முடியும். தலித்தியம் குறித்தும் பெண்ணியம் குறித்தும் சில கட்டுரைகள் இத்தொகுப்பில் உள்ளன. அம்பேத்கர் அவர்களின் இரண்டு நூல்கள் குறித்த ஆய்வுகளும் இந்த நூலில் உள்ளன. சில மொழிபெயர்ப்புக் கட்டுரைகளும் இங்கு இடம் பெறுகின்றன. மாறுபட்ட கருத்துக்களுக்கும் நிகழ் இடம் தந்திருக்கிறது என்பதை இந்தத் தொகுப்புலிருந்தும் நண்பர்கள் அறியமுடியும். ஏகாதிபத்தியம் முதலிய ஆதிக்கங்கள் நமக்குள் நுழைந்து நம்மைத் தகர்த்துக் கொண்டிருக்கும் இந்தக் காலச் சூழலில் நம்மைத் திரட்டிக் கொள்ளும் முறையில் திறந்த மனத்தோடு ஆரோக்கியமான உரையாடலுக்கு நாம் இடம் தரவேண்டும்.

"நிகழ்" இதழை நிறுத்தி இப்பொழுது ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகிறது. மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். சிந்தனைத் துறையில் ஒரு தீவிரமான போராட்டத்தில் "நிகழ்" ஈடுபட்டு இருந்தது. ஒருவகையில் இது ஒரு அறிவியக்கம். இதனோடு ஒத்துழைத்த நண்பர்கள் பலரை மீண்டும் நினைத்துப் பார்க்கிறேன். தோழர் எஸ்.என். நாகராசன் என்றும் என் மரியாதைக்குரியவர். இந்தியாவில் ஒரு புகழ்பெற்ற காந்தியவாதியாகவும், இந்திய வரலாறு குறித்த புதிய தேடல்களில் தன்னை முழு அளவில் ஈடுபடுத்திக் கொண்டவருமாகிய பெரியவர் தரம்பால் அவர்களோடு தன்னை இணைத்துக் கொண்டவர் டாக்டர் ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பேராசிரியர் ஆகவும், இந்தியாவின் சிந்தனை மரபு குறித்து புதிய ஆய்வுகளை முன்வைத்தவருமாகிய நண்பர் கலாநிதி ந. சுப்பிரமணியம் அவர்கள் தமிழில் நவீனகால படைப்பு முயற்சிகளில் ஒரு சாதனையாளராகத் தன்னை நிறுவிக் கொண்டிருக்கும் நண்பர் ஜெயமோகன் அவர்கள். இந்தியத் தத்துவம் குறித்து ஆழமான ஆய்வறிவோடு தன்னளவில் ஆன்மீகத் தேட்டத்தில் ஈடுபாடு கொண்டவர். தமிழகத்தில் இன்று நிலவுகிற பெரியாரின் பகுத்தறிவுவாதம் என்பது தமிழகச் சூழலில் முந்திய நூற்றாண்டிலும் நிலவிய உலகாயுதவாதத்தின் தொடர்ச்சிதான் என்பதைத் தன் விரிவான ஆய்வுகள் மூலம் முனைவர் முப்பால்மணி அவர்கள் தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறார். தமிழகத்தில் இடைக்காலச் சூழலில்

www.tamilarangam.net



பேரெழுச்சியாகத் தோன்றிய சைவம், வைணவம் ஆகியவற்றின் மனித நேயமும் ஆன்மீகமும் இன்றளவும் தமிழகச் சூழலில் உயிர்த்துடிப்போடு விளங்கமுடியும் என்ற உண்மையை தோழர் பொன்னீலன் அவர்களும், சிவகங்கை எஸ்.இராமகிருஷ்ணன் அவர்களும் எடுத்துரைக்கின்றனர். தோழர் எஸ்.என். நாகராசன் அவர்களிடம் என்னைப் போலவே மார்க்சியம் கற்றுக் கொண்ட நண்பர் எஸ்.வி. இராஜதுரை அவர்கள், அதன்பிறகு மார்க்சியம் என்றும், பெரியாரியம் என்றும் மனித உரிமைகள் என்றும் நெடும்பயணம் மேற்கொண்டவர். எங்களோடு இணைந்து பணியாற்றும் அரிய நண்பர்களில் ஒருவர் திரு. கண. குறிஞ்சி அவர்கள். இவர்களுக்கெல்லாம் என் நன்றிகளை மீண்டும் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களின் ஒத்துழைப்பில்லாமல் "நிகழின்" அறிவியக்கத்தை நான் நடத்தி இருக்க முடியாது. சில மொழி பெயர்ப்புக்களும் இந்தத் தொகுப்பில் அடங்கி உள்ளன. இவற்றின் மூல ஆசிரியர்களுக்கும், இவற்றை மொழிஆக்கம் செய்த நண்பர்களுக்கும் என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். "நிகழின்" கட்டுரைத் தொகுப்பை சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் அன்போடும், அக்கறையோடும் வெளியிட முன்வந்த "காவ்யா" திரு. சண்முகசுந்தரம் அவர்களுக்கு என் நன்றிகளை சொற்களால் விளக்கமுடியாது. நூலின் அச்சாக்கம் முதலிய வகைகளில் ஒத்துழைத்த அனைத்து நண்பர்களுக்கும் என் நன்றிகள் உரியவை.

www.tamilarangam.net

# உள்ளடக்கம்


1. இந்தியத் தத்துவங்களின் பயில்நிலையும் பயன்பாடும் சில சிந்தனைகள் – கலாநிதி ந. சுப்ரமணியம் 1
2. தரம்பால் நாகரீகத்தின் அடிப்படைகள் நோக்கி ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன் 30
3. பழைய பார்வையின் எல்லைகள் – ஜெயமோகன் 40
4. 19–ம் நூற்றாண்டில் தமிழகத்து உலகாயுதம் முனைவர் முப்பால்மணி 49
5. நீதி சாஸ்திரமும் அரசியலும் ஆனந்த் – தமிழில் ஜெயமோகன் 71
6. இந்துத்துவம் சில குறிப்புகள் – ஞானி 97
7. இந்து இந்தி இந்தியா நூல் திறனாய்வு – ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன் 101
8. ராஜமரியாதையும் அரியணையும் – மறுப்புரை எஸ்.வி.ராஜதுரை 116
9. ஆன்மிக அதிசயம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் – பொன்னீலன் 133
10. பெண்களும் அரசியலும் – கெயில் ஓம்வெய்த் 138
11. தலித்களின் அவலக் குரல் – டேவிட் சித்தையா 145
12. தமிழ் ஆன்மீகமும் தலித்தியமும் சிவகங்கை இராமகிருஷ்ணன் 151
13. பார்ப்பனியத்தின் வெற்றி – அம்பேத்கர் கண. குறிஞ்சி 155
14. சூத்திரர் யார்? நூல் மதிப்புரை : ஞானி 160
15. தலித் மக்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் எது விடுதலை எஸ்.என். நாகராசன் 170

www.tamilarangam.net

www.tamilarangam.net



# இந்தியத் தத்துவங்களின் பயில்நிலையும் பயன்பாடும் சில சிந்தனைகள்

- கலாநிதி நா. சுப்ரமணியம்
(யாழ் பல்கலைக்கழகம்)

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் 1996 ஜனவரி 5, 6, 7 தேதிகளில் திருப்பூரில் 'இந்தியப் பண்பாட்டின்மீது உலகமயமாக்கலின் தாக்கம்' என்ற தொனிப்பொருளில் நிகழ்த்திய தத்துவார்த்த முகாமில் 'தத்துவம்' என்ற தலைப்பில் நிகழ்த்திய உரையின் விரிநிலை. இந்த உரை அரங்கிற்குத் தலைமை வகித்தவர் டாக்டர் கி. முப்பால்மணி அவர்கள்.

'உலகமயமாக்கல்' என்பது Globalisation என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழாக்கமாக இன்று பெருவழக்கில் பயில்கிறது. பொருளியல் அடியாக உருவான இச்சொற்றொடர் 'மூலதனத்துக்கே உலகம் சொந்தம்' என்ற தொனிப்பொருள் கொண்டது. வளர்ந்த நாடுகள் வளர்முக நிலையில் உள்ள இந்தியா போன்ற நாடுகளைத் தமது மேலாணைக்கு உட்படுத்துவதற்கு வாய்ப்பாக உருவாக்கிய 'தத்துவார்த்தக் கருத்தியல்' இது. இந்தியா போன்ற நாடுகளின் முதலாளித்துவ சக்திகள் மேற்படி கருத்தியலுக்கு ஒப்புதலளித்துத் துணை போகும் நிலையில் உள்ளன. இதனால் வசதி வாய்ப்புக்கள் உள்ள மேல்தட்டு வர்க்கத்தினர் சிலர் பயன் எய்த, மிகப் பெரும்பான்மையினரான உழைக்கும் மக்கள் பெரும் பாதிப்புக்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது. இவ்வகையில் உலகமயமாக்கல் என்பது மேற்படி உழைக்கும் மக்கள் மீதான 'பொருளியற் போர்' ஆகவே கருதத்தக்கது.

உலகமயமாக்கலின் துணைவிளைவுகளிலொன்று நுகர்வோர் கலாச்சாரம் (Consumerism) இந்திய மண்ணின் சராசரி மனிதனை அவனுடைய இயல்பான வாழ்வியல் தேவைகள், அவற்றின்மூலம் எய்தப்படும் சுயதிருப்தி நிலை, பண்பாட்டு விழுமியங்கள் என்பவற்றினின்றும் பிரித்தெடுத்து அந்நியப்படுத்தும் ஆற்றல் இந்த நுகர்வோர் கலாச்சாரத்திற்கு உளது என அஞ்சப்படுகின்றது. இக்கலாசாரத்தைப் பரப்புவதில் பொதுத் தொடர்பு சாதனங்கள் – குறிப்பாகச் 'சின்னத்திரை' எனப்படும் T.V. ஆற்றிவரும் பங்களிப்பு தொடர்பாக இன்றைய சமூக சிந்தனையாளர் பலரும் கருத்தும் கவலையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

www.tamilarangam.net



இவ்வாறான சூழலில் இம்மண்ணில் நிகழக்கூடிய சமூக பண்பாட்டு விளைவுகள் தொடர்பாகச் சிந்திப்பதற்கு இங்கு ஒன்று கூடியுள்ளோம். இவ்வகையில் பண்பாட்டின் அடிநாதமான கூறு எனத்தக்க தத்துவம் சார்ந்ததாக இவ்வுரை அமைகின்றது. இன்றைய சூழலில் இந்தியத் தத்துவமரபு தொடர்பாக நாம் மனங்கொள்ள வேண்டிய சில கருத்துக்களை உங்கள் கவனத்துக்கு முன் வைக்கிறேன்.

**தத்துவம் என்பது . . .**

தத்துவம் என்பது உண்மை பற்றிய அறிவாராய்ச்சியாகும். இதனை 'மெய்யியல்', 'மெய்ப்பொருளியல்' ஆகிய பெயர்களால் வழங்கும் மரபு உளது. தத்துவத்தை ஆய்வு நோக்கில் அணுகுபவர்கள் அதனை அளவையியல் (தர்க்கம்), அழகியல், அரசியல், அறவியல், மீ பௌதிகம் (Metaphysics) ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்ட அமைப்பாகக் காண்பர். (விபரத்திற்கு பார்க்க : Dr. Will Durant - The Story of Philosophy).

'அளவையியல்' என்பது உண்மை காண்பதற்கு அடிப்படையான ஆய்வுமுறையியலாகும். 'அழகியல்' என்பது கலையின் தத்துவம். சமூகக் கட்டமைப்பு அதன் அதிகாரமையம் என்பன தொடர்பான சிந்தனை 'அரசியல்' ஆகும். மாந்தரின் நடத்தை தொடர்பான ஆய்வு 'அறவியல்' ஆகிறது. பொருள்கள், மனம் என்பவற்றின் அடிப்படை இயல்பு, செயல்படுதிறன், தொடர்புநிலை முதலியன சார்பான நுட்பமான ஆய்வியல் 'மீபௌதிகம்' என வழங்கப்படுகின்றது. தத்துவம் தொடர்பான ஆய்வுநிலைப் பொதுவிளக்கம் இது.

சமூகப் பயன்பாட்டு நிலையில் நோக்கும்போது தத்துவம் என்பது ஒருவர் தன்னையும், தன் சூழலையும் பற்றி உருவாக்கிக் கொள்ளும் கருத்து நிலைக்கு அடிப்படையான 'பார்வை' (Vision) எனலாம். இந்தப் 'பார்வை'யே அவரது நடத்தை, சமூக அரசியல் செயற்பாடு, கலையுணர்வுசார் வெளிப்பாடு ஆகியவற்றை உருவாக்கி நெறிப்படுத்தி நிற்பது. இவ்வகையில் ஒரு முழுநிறைவான தத்துவம் என்பது பின்வருவனவற்றைத் தெளிவுபடுத்துவதாக அமைய வேண்டும். அவை :

உயிர்நிலை, உணர்வுநிலை,
அநுபவங்கள், நடத்தை, வாழ்வியல்,
சமூக உறவுநிலை, உலகம் (இயற்கைச் சூழல்),
உலகிற்கு அப்பாலான நிலை.

இவை தொடர்பான தெளிவான முடிவுகளை முன்வைப்பதனூடாக

www.tamilarangam.net



வாழ்க்கையை நிறைவும் பயனும் உடையதாக்குவது தத்துவத்தின் தலையாய பணியாகும். இவற்றின் மூலம் அது எதிர்காலத்துக்கான வழியையும் அமைக்கும்.

இவ்வாறான முழுநிறைவான தத்துவங்கள் எழுந்துள்ளன என்பது தனிநிலை ஆய்வுக்குரியது. உலகில் இன்று வரை உருவான தத்துவங்கள் பலவும் தத்தம் நோக்கிற்கேற்ப மேற்படி கூறுகளில் சிலவற்றை மட்டும் மையப்படுத்தி விளக்கம் தந்துள்ளன. விளக்கம் பெறாத கூறுகளை, விளக்கம் பெற்றவற்றினூடாக உய்த்துணரப்பட வேண்டிய நிலையே உளது. இது தத்துவ உலகின் பொதுநிலை. இந்தியத் தத்துவப் பரப்புக்கும் இது பொருந்தும்.

**இந்தியத் தத்துவங்கள் : பொதுநிலை :**

இந்திய மண்ணில் எழுந்துள்ள தத்துவங்களில் முக்கியமானவையாகக் கருதப்படுவன பன்னிரண்டு. அவையாவன :

ஐவகைத் தரிசனங்கள் : சாங்கியம், யோகம், வைசேடிகம், நையாயிகம், பூர்வ மீமாம்சை.

மூவகை வேதாந்தங்கள் : அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம்.

சைவ சித்தாந்தம், உலகாயதம், சமணம், பௌத்தம்.

இவற்றுள் சாங்கியம் முதல் நையாயிகம் வரையிலான நான்கு தரிசனங்களும் இவ்வுலகம் உயிர் என்பனவற்றின் இருப்பு தொடர்பாக வெவ்வேறு வகையில் விளக்கம் தரும் நோக்கில் அமைந்தவை. பூர்வ மீமாம்சை உலகம், உயிர் என்பவற்றின் இருப்பைக் கூறுவதோடு அமையாமல் வழிபாட்டு நெறியை முதன்மைப்படுத்தி வலியுறுத்தி நிற்கும் தரிசனமாகும். இதுவேத மரபு சார்ந்த கிரியை முறைகள் மீது நம்பிக்கையை வலியுறுத்துவது. விசிட்டாத்வைதம், துவைதம், சைவ சித்தாந்தம் என்பன சமய நம்பிக்கைகளினடியாக உருவான தத்துவங்கள். முதலிரண்டு வைணவ சமயத்தையும், பின்னையது சைவ சமயத்தையும் சார்ந்தவை. இவற்றில் அவ்வச்சமயங்களின் கடவுள்களின் ஒப்புயர்வற்ற நிலை பேசப்படுவதுடன் அவர்களை உணர்வதற்கும் அடைவதற்குமான வழிமுறைகள் எடுத்துரைக்கப்படுகின்றன. சமணம், பௌத்தம் என்பனவும் சமயத்தத்துவங்களாகக் கொள்ளப்படுகின்றன. எனினும் குறிப்பிட்ட கடவுளரை முதன்மைப்படுத்தி அவை உருவாகவில்லை. அவற்றின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அடிநாதமான உணர்வுநிலை உயிர்கள் மீதுள்ள கருணையாகும். அஹிம்சை, ஜீவகாருண்யம் என்னும் பெயர்களால் இந்த உணர்வுநிலை சுட்டப்படும். இவற்றைப் போதிப்பதனூடாக உலகியல் வாழ்க்கையின் 'துன்ப துயரங்'களிலிருந்து உயிர்களை விடுவிக்க இத்தத்துவங்கள் முயல்கின்றன:

இவை தவிர ஏனைய இரண்டு தத்துவங்களான அத்வைதமும் உலகாயதமும் ஒன்றுக்கொன்று நேரெதிரான தளத்தில் நின்று தத்தம் பார்வைகளை முன்வைப்பன. உலகாயதம் இந்த உலகம் உள்ள பொருள் எனக்கொண்டு அதனை அநுபவித்து வாழ்வதற்கு வழி சொல்வது. அத்வைத்ம் இந்த உலகம், உயிர்கள் முதலிய அனைத்துமே நிலையான உண்மைகள் அல்ல என்று கூறி, இவையாவற்றுக்கும் அப்பாற்பட்டதான பிரம்மம் என்னும் மேலான பொருளொன்றே உண்மை என்கிறது. அதனை உணரும் பேரறிவே வாழ்வின் இலட்சியம் என அது பேசும். உலகாயத நோக்கிலே பிரம்மம், உயிர் என்பன 'கருத்துநிலை' கள் மட்டுமே. அத்வைதத்தின் நோக்கில் உலகம், உயிர் என்பன பொய்த்தோற்றங்களாகும்.

இவ்வாறாக இந்தியத் தத்துவங்கள் பலவும் தத்தம் நோக்கிற்கு ஏற்ப வெவ்வேறு விடயங்களைப் பேசுகின்றன. சில தத்துவங்கள் தம்முள் நேருக்குநேர் முரண்படும் நிலையிலும் உள்ளன. இத்தத்துவங்கள் அனைத்திலும் காணக்கூடிய பொதுப்பண்பு இவை நடைமுறை உலகியல் வாழ்க்கையைப் பற்றியும் சமூக உறவுநிலை பற்றியும் பேச முற்படவில்லை என்பதாகும். இவை பற்றிப் பேச வாய்ப்புடைய ஒரே தத்துவமான உலகாயதம் கூட வாழ்வியல், சமூக உறவியல் என்பன தொடர்பாக எத்தகு கருத்துக்களைக் கொண்டிருந்தது என அறிவதற்கு அத்தத்துவம் பற்றிக் கிடைக்கும் சான்றுகள் போதவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. 'கருணை'யுணர்வின் தளத்தில் முகிழ்ந்த சமணம், பௌத்தம் என்பன அறம், ஒழுக்கம் என்ற வகைகளில் விரிவாகப் பல விடயங்களைப் பேசியுள்ளன என்பதையும் அவை வாழ்வியலோடும் சமூக உறவியலுடனும் தொடர்புடையன என்பதையும் மறுப்பதற்கில்லை. ஆயினும் அவ்விரு தத்துவங்களும் உல்கியல் வாழ்க்கையைத் துறப்பதையே – துறவு நோக்கையே – தொனிப்பொருளாகக் கொண்டவை என்பது எம் கவனத்துக்கு உரியது.

இவ்வாறு இந்தியத் தத்துவப் பரப்பின் பொதுநிலை பற்றி நாம் அபிப்பிராயம் தெரிவிக்க முற்படும் போது வரலாறு சார்ந்த ஒரு உண்மையையும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டியுள்ளது. ஏறத்தாழ

www.tamilarangam.net



4500 ஆண்டுக்கால நீண்ட வரலாறுடைய இந்தியத் தத்துவ மரபு. இன்று அதன் தொல் நிலையில் முழுமையாகக் கிடைக்கவில்லை என்பதே அவ்வுண்மை. பேணப்பட்டனவாகக் கிடைத்துள்ள தரவுகளைக் கொண்டே நாம் பேசுகிறோம். இவ்வாறு பேணப்பட்டவற்றிலும்கூட காலகதியில் 'இடைச் செருகல்கள்' 'மறைப்புக்கள்' நிகழ்ந்துள்ளன. பொருள் கொள்ளும் நிலையிலும் முரண்பாடுகள் மலிந்துள்ளன. இவற்றால் குறிப்பிட்ட ஒரு தத்துவம் அது உருவான காலகட்டத்தில் கொண்டிருந்த இயல்பு எது என்பதை இனங்காண்பது சிக்கலாகவே உளது. குறிப்பாக பௌத்தம், கௌதமபுத்தரது சிந்தனை வெளிப்பாடாக உருவான நிலைக்கும், ஏறத்தாழ 500 ஆண்டுகளின் பின்னர் நாகார்சுனர் முதலியவர்களது விளக்கங்களினூடாக அது எய்திய தோற்றத்துக்கும் மிக்க வேறுபாடுள்ளது. கடவுளைப்பற்றி வெளிப்படையாகப் பேசாத வரலாற்று மனிதரான கௌதம புத்தரைக் கடவுளாகவே ஆக்கி, அவர் பல பிறவிகள் எடுத்தார் என 'ஜாதகக்கதை' கள் புனையும் நிலை ஏற்பட்டது. அதேபோல உலகம், உயிர் என்பவற்றைப் பற்றிச் சுதந்திரமாகத் தர்க்கரீதியாகச் சிந்திக்க முற்பட்ட சாங்கியம் முதலிய தரிசனங்களை வேத மரபு சார்ந்தனவாக – வைதீகம் என்ற பெயர் சூட்டி இனங்காணும் வரலாற்றுப் பார்வையும் நிகழ்ந்துள்ளது. உலகாயதம் என்ற தத்துவம் தொடர்பாக முழு நிலையில் நாம் அறியக்கூடிய பண்டைய மூல நூல்கள் எதுவும் இன்று கிடைக்கவில்லை. ஏனைய தத்துவப்பிரிவினர் தத்தம் தேவைகளுக்கு ஏற்ப எடுத்தாண்டுள்ள – பரபக்க நிலையிலான – தரவுகளில் இருந்தே அத்தத்துவம் பற்றியும் அதன் தொல்நிலை எனத்தக்க சார்வாகம், சுபாவவாதம் என்பன பற்றியும் அறிகிறோம். மேலும் இந்தியத் தத்துவப் பரப்பில் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ள வைதீக மரபானது தத்துவத்தைச் சமய உணர்வின் பின்னால் இட்டுச் சென்றுவிட்டது என்பது முக்கிய விமர்சனமாகும். இதன் விளைவாக இந்தியத் தத்துவம் என்பது 'உண்மை காண்டற்கான ஆய்வு முறைமை' என்ற நிலையை இழந்து, 'முன்னரே நிறுவப்பட்டவற்றை மீண்டும் மீண்டும் வெவ்வேறு வகை விளக்கங்களினூடாக நிலைநிறுத்தும் ஒரு புலமை முயற்சி என்ற நிலையை எய்திவிட்டது என விமர்சிப்போரும் உளர்.

எனவே இந்தியத் தத்துவங்களின் இயல்பு சமூகப் பயன்பாட்டு நிலை என்பவை தொடர்பாக நாம் நோக்கும்போது, அவை இன்றைய நிலையில் தரும் தோற்றத்தைக் கொண்டு மதிப்பிடாமல் அவை உருவான சூல், வரலாற்றுப் போக்கில் அவை எய்திய மாற்றங்கள், அவற்றுக்கான காரணிகள் என்பவற்றினூடாக அவற்றை நோக்கி மதிப்பிடுவதே பொருத்தமானதாகும் இன்றைய சூழலில் வேண்டப்படுவதும் அதுவே.

www.tamilarangam.net



**சூழல், தோற்றம், உருவாக்கம் :**

இந்திய மண்ணில் தத்துவங்கள் தோன்றி வளர்ந்த சூழலை நாம் தெரிந்து கொள்வதற்கு முதற்கண் நாம் கௌதமபுத்தர் (கி.மு. 563 – 483) காலத்துக்கு முற்பட்ட இந்திய சமூக – பண்பாட்டு வரலாற்றை நோக்க வேண்டும். மேற்படி காலப்பகுதியில் வட இந்திய மண்ணிலே பல்வேறு இனக்குழு சமுதாயங்கள் நிலவின. அவை தத்தமக்குரிய நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் என்பவற்றைப் பேணி நின்றன. இனக்குழு நிலையிலிருந்து நிலவுடைமை நிலை நோக்கிய ஒரு வரலாற்று மாற்றமும் அன்று உருவாகத் தொடங்கியிருந்தது. இது ஏறத்தாழ கி.மு. 8 – 6ம் நூற்றாண்டுகளின் பொதுவான சூழ்நிலை.

மேற்படி காலப் பகுதிக்கு ஏறத்தாழ 1000 ஆண்டுகளுக்கு முன்னர் மத்தியாசிரியாவினின்று புலம் பெயர்ந்து வடமேற்கு இந்திய மண்ணில் அடிபதித்த ஆரிய இனத்தினரின் வேதகலாசாரம் படிப்படியாக ஏனைய வட இந்தியப் பகுதிகளிலும் பரவத் தொடங்கியிருந்தது. பாரம்பரிய இந்திய இனக்குழுச் சமுதாயங்களின் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவும், மேற்படி ஆரியரின் வேதமரபுசார் நம்பிக்கைகள் பழக்கவழக்கங்கள் சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவும் முட்டி மோதி ஒன்றையொன்று 'விழுங்க' முயன்று கொண்டிருந்தன.

வேதகலாச்சாரத்தின் முக்கிய வழிபாட்டு நெறியாக இருந்தது வேள்விமுறை. இயற்கைக் கூறுகளையும் அவற்றின் பல்வகைப் பண்புகளையும் தெய்வங்களாகக் கருதி, அவற்றுக்கு மாந்தர் தமது பயத்துடன் கலந்த பணிவையும், அன்பையும் தெரிவிப்பதற்காகவும் தமது வாழ்வின் அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் நோக்கிலும் தீ வளர்த்து அதில் நெய், தானியம் முதலியவற்றைச் சொரிந்து வழிபட்ட நிலை இது. நாளடைவிலே இந்த வேள்வி முறையானது பேராசை, ஆதிக்க உணர்வு என்பவற்றின் வெளிப்பாடாக பெருவளர்ச்சி பெற்றது. பெருந்தொகையான பொருட்கள் தீயிற் சொரியப்படலாயின; ஆடுகள், மாடுகள், குதிரைகள், மனிதர்களுங்கூடத் தீயிற் பலியிடப்பட்டன. நிலவுடைமைச் சூழலில் ஆட்சியதிகாரத்தை உறுதி செய்து கொள்வதற்கும் பேரரசராக எழுச்சி பெறுவதற்குமான உணர்வெழுச்சிகளின் அடையாளமாக (Symbol) இவ்வேள்வி முறை பரிணாமம் எய்தியது. இருக்கு முதலிய நால்வகை வேதசங்கிதைகளும் அவற்றின் உரை விளக்கங்கள் போலமைந்த பிரமாணங்களும் தந்து நிற்கும் காட்சி இது. பாரம்பரிய இனக்குழு சமுதாயங்களின் பண்பாட்டு மரபுகளுள் மேற்படி வேதமரபின் வேள்விக் கலாச்சாரம் படிப்படியாகச் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது.

www.tamilarangam.net



அதேவேளை பல்வேறு இனக்குழு சமூகங்களின் உழைக்கும் வர்க்கத்தினர்க்கும் அதனைச் சுரண்டி வாழும் வர்க்கத்தினருக்கு மிடையிலான வேறுபாடுகள் மிகத் தெளிவாகத் தெரியத் தொடங்கின. மண்ணுக்காகவும், நீருக்காகவும் இனக்குழுச் சமூகங்கள் போரிட்டன. 'ரோஹிணி' என்ற நதியின் நீருக்காக கௌதம புத்தரின் உறவுத் தொடர்புடைய இரு இனக்குழுவினர் போரிட்டு நின்ற காட்சியை அவரது வரலாறு உணர்த்தும். அதிகார ஆசை காரணமாகத் தந்தையையே மகன் கொலை செய்த வரலாறும் உளது. (உ–ம் பிம்பிசாரன் – அஜாதசத்ரு)

இவ்வாறான சூழலில் வாழ்க்கையின் நிலையாமை தொடர்பான அச்சம் – மூப்பு, பிணி, மரணம் என்பன தொடர்பான மன விசாரம் மிகுதியாக எழுந்தது. உலகின் இருப்பு, வாழ்க்கையின் நோக்கு, வழிபாட்டு முறைகளின் பலாபலன், இவை யாவற்றுக்கும் அப்பாலான நிலை, மரணத்துக்கும் பின்னைய வாழ்வு முதலியன தொடர்பான வினாக்கள் உருவாயின. இவற்றில் ஒரு வகையின் உலகியல் துன்ப துயரங்கள், வாழ்வில் நிறைவுபெறாமனநிலை, மரண பயம் என்பவற்றினடியாக உருவானவை இன்னொரு வகையின் இயல்பாகவே எழும் அறிவார்வம் சார்ந்தவை.

இவ்வாறான வினாக்கள் பலவற்றுக்கும் விடை காணும் முயற்சிகள் பல நிலைகளில் மேற்கொள்ளப்பட்டன. இவை பல்வகைத் தத்துவப்பார்வைகளாக வெளிப்பட்டன. அறிவியல் நோக்கிலே – தர்க்க ரீதியாக உலகைப் புரிந்து கொள்ளும் முயற்சிகளாக – வெளிப்பட்டவை ஒருவகைப் பார்வைகள். இவையே சாங்கியம், யோகம், நையாயிகம், வைசேடிகம் ஆகிய தரிசனங்கள். உடல், உயிர், உலகம் என்பவற்றின் இருப்பு தொடர்பாகவும், இவற்றின் இறுதி நிலை தொடர்பாகவும் பேசுவதே இவற்றின் பொதுவான முதன்மைக் குறிக்கோள். வாழ்வியல் பற்றிப் பேச இவை முற்படவில்லை. பூர்வமீமாம்சை என்ற தரிசனம் ஒருவகையில் தன்னைத் தர்க்கரீதியான ஆய்வுப் பார்வையாகக் காட்டிக்கொண்டது. இன்னொரு வகையில் அது வேதமரபின் வரிபாட்டு முறைகளில் ஐயத்துக்கிடமற்ற நம்பிக்கையை முன் வைத்தது. இதுவும் சமூக வாழ்வியலின் மீது கவனம் செலுத்த முற்படவில்லை.

இன்னொரு வகைப் பார்வைகள் சமூக வாழ்க்கையை அதற்குப் புறம்பாக நின்று விமர்சிக்கும் தளத்தில் உருவானவையாகும். இவ்வகைப் பார்வைகள் வாழ்க்கையைத் துன்பமயமான ஒன்றாகவே கண்டன.

www.tamilarangam.net



இத்துன்பத்தை தவிர்ப்பதற்கு அன்பு வழியைக் காட்டின. அஹிம்சை, ஜீவகாருண்யம் ஆகியவற்றுக்கு முதன்மை கொடுத்தன. அறம், ஒழுக்கம் என்பன பற்றி விரிவாகப் பேசின. ஆனால் வாழ்க்கையின் குறிக்கோள் அதனை அநுபவிப்பது அல்ல அதனைத் துறப்பதே என்பதை வலியுறுத்தின. இவ்வாறான பார்வைகளின் ஊடாக உருவானவையே சமணமும் பௌத்தமும். இவை தமது இயல்பிலேயே வேதமரபுசார் வேள்விக் கலாசாரத்தை மறுதலித்தவை. உயிர்களைப் பலியிட்டும் பெரும்பொருட்களைச் செலவிட்டும் நிகழ்த்தும் வேள்வி முறைக்கு நேரெதிரான அறைகூவலாகவே இவற்றின் அஹிம்சையும், ஜீவகாருண்யமும் அமைந்தன. பௌத்தம் இந்த எதிர்ப்பைத் தெளிவாகவே வெளிக்காட்டியது. கௌதமபுத்தர் தமது காலத்தில் கண்முன் நிலவிய வேள்விக் கொடுமைகள், அதிகார வெறி சார்ந்த போராட்டங்கள், கொலைகள் முதலியவற்றிற்குத் தீர்வு காணும் நோக்கிலேயே 'துறவு' என்ற எண்ணக்கருவை முன்வைத்தார். அவர் துன்பத்துக்குக் காரணம் 'பற்று' எனக் கண்டார். பற்றை விட்டால் துன்பத்தினின்று விடுபடலாம் என்பது அவர் கண்ட விடை. இந்த நோக்கு நிலை அவரை, 'இயல்பான சமூக வாழ்க்கையினின்று விலகி நிற்க வழிகாட்டும் ஒருவராகவே' எமக்கு அறிமுகம் செய்கிறது. அவர் பற்றி வழங்கும் கதையும் – மனைவியையும் மகனையும் துறந்து சென்றவர் என்ற செய்தியும் – இதனை அரண் செய்வதாகவே உள்ளது.

சமணமும் பௌத்தமும் உருவான காலத்தில் ஆசீவகம் நியதிவாதம், அகருமவாதம், 'அந்நியோந்நியவாதம், அனேகாந்தவாதம் முதலிய சில சிந்தனைகளும் எழுந்தன. இவை பொதுவகையில் சமணம், பௌத்தம் என்பன போல வேதமரபுக்கு எதிரான தளத்தில் உருவானவையே எனத் தெரிகின்றன. இவற்றின் சமூகப் பார்வை – வாழ்வியல் நோக்கு – என்பன தொடர்பாக நாம் தெரிந்து கொள்வதற்குப் போதுமான தரவுகள் எமக்குக் கிடைக்கவில்லை.

மேற்குறித்தவாறான சிந்தனைகள் உருவாகிக் கொண்டிருந்த காலப்பகுதிகளில் வாழ்க்கையை அதன் உள்ளிருந்தே தரிசித்தும், மரபுகள் நம்பிக்கைகள் என்பவற்றை ஓரளவு அனுசரித்தும், அதேவேளை மனித நேயத்துக்கும் பண்பாட்டுணர்வுகளுக்கும் முரணானவற்றைத் திட்டவட்டமாகக் கண்டித்தும் சில கருத்தோட்டங்கள் உருவாயின. இவை மேலே நாம் நோக்கிய பல்வேறு வினாக்களுக்கும் பொது அடிப்படையிலே விடைகாண முற்பட்டன. இவ்வாறு உருவான சிந்தனைத் தெறிப்புக்களை நமக்கு உணர்த்தி நிற்பது உபநிடதம் என்ற இலக்கியப் பரப்பு. வேதம் என்ற

www.tamilarangam.net



இலக்கியத் தொகுதியின் இறுதிப் பகுதியாக அமைந்த உபநிடதங்களிற்பல சமணம், பௌத்தம், ஆசீவகம் முதலியவற்றுக்கு முற்பட்டன; சில, இவற்றுக்குச் சமகாலத்திலும் பின்னரும் எழுந்தவை.

உபநிடதங்களில் பேசப்பட்டுள்ள முக்கிய விடயம் பிரம்மம் ஆகும். உலகம், உடல், உயிர், உணர்வுநிலை ஆகிய அனைத்துக்கும் உள் நின்று இயக்குவதும் அவற்றுக்கு அப்பாலும் நிலைத்திருப்பதுமான ஒரு பொருளாக இப்பிரம்மம் பேசப்பட்டுள்ளது. இந்தப் பிரம்மத்தை உணர்வதன் மூலம் ஒருவர் தம்மையே பிரம்மமாகத் தரிசித்து மனநிறைவு பெறலாம் என்பது உபநிடதங்கள் தரும் செய்தி. இந்த மனநிறைவுக்கு சாதாரண உலகியல் சார்ந்த அறிவைவிட மேலான அறிவு (பரஞானம்) தேவை. அதை எய்தச் சில பயிற்சிகள் தேவை. இவையே உபநிடதங்களின் தெளிபொருள்.

இவ்வாறு பேசப்படும் பிரம்மம் என்ற கருத்து நிலையானது. உலகம், உடல், உயிர், உணர்வுநிலை முதலியவற்றை மறுக்கும் நோக்கில் உருவான ஒன்றல்ல; மாறாக, இவை அனைத்தையும் உரியவாறு தெரிந்து தெளிந்து கொள்வதற்கு, இவற்றுக்கு அப்பாலான ஒரு நிலையைத் தளமாகக் கொள்ளும் நோக்கில் உருவானதாகும். குறிப்பாகச் சொன்னால் அனைத்தும் பிரம்மமே என்பதன் மூலம் ஒரு சமநிலை நோக்கு உருவாகிறது. இது அனைத்தையும் நேசிக்கும் மனப்பக்குவத்தைத் தருகிறது. இதனால் பேராசை, பொறாமை, சுரண்டல், தாழ்வுச்சிக்கல், சுயநலம் முதலியவற்றுக்கான அடிப்படையே இல்லாது போய்விடுகிறது. மாறாக பொது நலநோக்கு, முகநிலை, தியாகம் முதலியவற்றுக்கான சுரண்டல் ஏற்படுகிறது.

"எல்லா உயிர்களையும் ஆத்மாவிலும் ஆத்மாவை எல்லா
உயிர்களிலும் காணும் சமநிலை நோக்கு அமைதல் வேண்டும்"

"இந்த உலகைத் தியாகஉணர்வுடன் அனுபவிக்க வேண்டும்,
பிறர் பொருளில் ஆசை கொள்ளலாகாது"

என்பனவாக ஈஸ்வாஸ்ய உபநிடதம் (6, 1) முன்வைத்துள்ள கருத்துக்களில் இவற்றைத் தெளிவாக அவதானிக்கலாம். இவற்றோடு,

"உண்மை பேசுக
அறத்தைக் கடைப்பிடிக்க
சந்ததியாகிய நூலை அறுந்து விடாமற் பேணுக
தாயைத் தெய்வமாகப் போற்றுக
தந்தையைத் தெய்வமாகப் போற்றுக
விருந்தினரைத் தெய்வமாகப் போற்றுக"

www.tamilarangam.net



(தைத்திரிய உபநிடதம் : 1:11:1,2)
"உண்மையே வெல்லும்; பொய் வெல்லாது"
(முண்டக உபநிடதம் : 1 : 1 : 7)

முதலியனவாக உபநிடதங்களிலே முன் வைக்கப்பட்டுள்ள போதனைகளும் எண்ணங்களும் உலகியலைத் தழுவிநின்று அதனை அறச்சார்புடன் அனுபவித்து அமையும் வாழ்வியலுக்கான வழிகாட்டு நெறிகளாக உள்ளமை நமது கவனத்துக்கு உரியது.

உபநிடதங்களிலே புலப்பட்டு நின்ற மற்றொரு முக்கிய உணர்வோட்டம் வேள்வி முறைக்கு எதிரான கண்டனம் ஆகும். பிரம்மத்தை உணர்தலே மனநிறைவுக்கான வழி என்று பேசுவதன் மூலம் உலகியல் சார்ந்த பேராசைகளைக் காரணமாகக் கொண்ட வேள்விக் – கிரியை முறைகள் ஓரளவு புறக்கணிக்கப்பட்டுவிடுகின்றன. மேற்படி உணர்வுக்கான 'பரஞானம்' என்ற மேலான அறிவு நிலையை எய்துவதற்கு தியானம், வைராக்யம் முதலான வழிமுறைகளைச் சுட்டுவதன் மூலம் மன அடக்கத்துக்கான திசைவழி காட்டப்படுகின்றது. முண்டகம் என்ற உபநிடதத்திலே வேள்வி முறை நேரடியாகவே கண்டிக்கப்படுகின்றது (1 : 12 : 7). வேள்வி முறையை நம்புவோர் மூடர் என அது சுட்டும்.

இவற்றையெல்லாம் தொகுத்து நோக்கும்போது உபநிடதங்கள், அவை எழுந்த காலத்தின் சமூகப் பிரச்சினைகளுக்கும் குறிப்பாக பேராசை, சுரண்டல், அதிகாரம் சார்ந்த உணர்வோட்டங்களுக்கும் அவை தொடர்பான செயல்முறைகளுக்கும் எதிரான உணர்வுத் தளத்தில் நின்று செயற்பட்டமை தெளிவாகிறது. இவ்வகையில் இவற்றுக்கும் சமணம், பௌத்தம் ஆகியவற்றுக்கும் இடையிலே காணப்படும் பொதுமையையும் வேறுபாட்டையும் நாம் இங்கு கவனத்திற்கொள்வது அவசியம்.

மூன்றும் சமகால சமூக முரண்பாடுகளாலான துன்பங்களை நீக்க வேண்டும் என்ற வகையில் தூய உணர்வுத் தளத்தில் உருவானவையே. ஆயின் உபநிடதங்கள் வாழ்க்கைக்குள் நின்று அதனைச் சிந்தித்தன. மற்ற இரண்டும் வாழ்க்கையின் வெளியே நின்று சிந்தித்தவை. குறிப்பாக கௌதமபுத்தர் 'பற்று' என்பதை நீங்கினால் துன்பம் நீங்கும் என்றார். உபநிடதங்கள் மேலான ஒரு பிரம்மம் என்ற பொருளை உணர்வதன் மூலம் துன்பம் நீங்கும் என்றன. இவை கூறும் பிரம்மம் என்ற உயர்பொருளை கௌதம புத்தர் ஒப்புக்கொள்ளவில்லை. பிரம்மம் என்ற கருத்துநிலை அறியாமை சார்ந்தது என்பது அவரது திடமான முடிவு. உபநிடதங்கள்

www.tamilarangam.net



முன்வைத்த இப்பிரம்மதத்துவம் வேதமரபின் கடவுள் சார் நம்பிக்கைகள், பல்வேறு இனக்குழுச் சமுதாயங்களின் கடவுள் சார் உணர்வோட்டங்கள் நம்பிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கி, அவற்றுக்கு மேலான பொதுவான தளத்தை நோக்கி மக்கள் மனதை ஈர்ப்பதாக அமைந்தது. இது ஒரு வகையில் மனத உளவியலைப் புரிந்து கொண்டு செயல்படும் உத்தி எனவும் கருதலாம். ஏனெனில் ஒன்றைக் கைவிடும்பொழுது அதைவிட வலுவான பிறிதொன்றைப் பற்றிக்கொள்ள முயல்வது பொதுவான உளப்பாங்கு ஆகும். கௌதமபுத்தர் கூறும் பற்று நீக்கம் (துறவு) என்பது பிறிதொன்றைப் பற்றிக்கொள்ளும் வரியாக அமையாமல் அதுவே சென்றடையும் முடிவாகவும் அமைந்தது. சமணத்துக்கும் இது பொருந்தும்.

சமுதாயத்தின் முரண்பாடுகளை நீக்குவதற்கு அதனை முற்றுமுழுதாக மாற்றியமைக்க வேண்டும். இது இன்று நாம் பொதுவுடைமைத் தத்துவத்தினூடாகப் பெற்ற தெளிவு, இவ்வாறான சிந்தனை உருவாக வாய்ப்பு இல்லாதிருந்த அன்றைய சூழலில் சமுதாய முரண்பாடுகளை உணர முற்பட்ட வகையிலும் அவற்றுக்கு எப்படியாவது தீர்வு காணவேண்டும் எனச் சிந்தித்த வகையிலும் உபநிடதங்கள், சமணம், பௌத்தம் என்பவற்றின் பணிகள் முற்போக்கானவை தான்; ஆனால் முழுமையானவையல்ல.

> கௌதம புத்தர் துன்ப நீக்க வழியாக ஒரு சங்கம் அமைத்தார். துன்புற்ற அனைவரையும் அதில் இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார். இவ்வாறு பலரும் (கடன்பட்டோர், போர்வீரர் உட்பட) அதில் சரணடைந்தபோது சமூகத்தின் அரசியல் பொருளியல் நிலைகள் சீர்குலைந்தன. அதிகாரவர்க்கம் வெகுண்டெழுந்தது. ஈற்றில் கௌதமபுத்தர் தமது சங்கத்தில் கடன்பட்டோரும் போர்வீரரும் சேர முடியாது என அறிக்கை வெளியிட்டார்.

என ஒரு கதை உண்டு. இது கௌதம புத்தர் சிந்தனைகளின் (போதாமைக்கு) முழுமையின்மைக்கு தக்க சான்றாகும்.

உபநிடதங்கள் பிரம்மம் என்ற உயர்நிலைபற்றியும் உண்மை, தியாகம் என்பன பற்றியும் பேசியுள்ள போதும் அவற்றை பேசியவர்களிற் குறிப்பிடத்தக்க சிலர் அன்றைய சமுதாயத்தின் அதிகார வர்க்கத்தினால் அளிக்கப்பட்ட வாய்ப்பு வசதிகள் என்பவற்றின் தளத்தில் நின்றவர்கள் என்பதை நாம் இங்கு சுட்டிக் காட்டுவது அவசியம். குறிப்பாக முக்கிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உபநிடதங்களிலொன்றான பிருகதாண்யகத்தின் முதன்மைச் சிந்தனையாளரான யாக்ஞவல்கியர் இத்தகைய ஒருவரே. இத்தகையவர்களுக்கு பிரம்மம் பற்றிய சிந்தனையானது புலமைத் திறனைக் காட்டிப் பொருளீட்டவும் சமூக மதிப்பை வளர்த்துக் கொள்ளவும் ஒரு கருவியாகப் பயன்பட்டது என்பதையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். அவ்வகையில் இவர்கள் சுரண்டலுக்குத் துணை போனவர்களேயாவர்.

ஏறத்தாழ கி.மு. 6–5 ஆம் நூற்றாண்டுகள் வரையிலான இந்தியத் தத்துவ சூழல் இதுவே. மேற்படி காலப்பகுதியில் உலகாயதம் அல்லது அதன் மூலநிலைகள் எனக் கருதப்படும் சார்வாகம், சுபாவவாதம் என்பன சார்ந்த சிந்தனைகள் தெளிவாக உருவாகிவிட்டனவா என்பதை இன்றைய நிலையில் திட்டவட்டமாக அறியமுடியவில்லை. வேத சங்கிதைகளிலே அதன் வேள்வி முறைக்கு மாறானவர்கள் பற்றி அமைந்துள்ள குறிப்புக்கள் (இருக்கு வேதம் : 1 : 151 : 9) அவர்களைத் தெய்வ நம்பிக்கை சாராதவர்களாகக் காட்டின. உபநிடதங்களில் முற்பட்டவற்றுள் ஒன்றான சாந்தோக்கியத்தில் அதன் முக்கிய சிந்தனையாளருள் ஒருவரான உத்தாலகர், பௌதிகப் பொருள்களிலிருந்து உடற்கூறுகளான எலும்பு, இரத்தம் முதலியனவும் பிராணன் (உயிர்), மனம், வாக்கு என்பனவும் உருவாகித் தொழிற்படும் முறைமையினை விளக்கியுள்ளார் (6 : 5 : 13). இவ்வகையில் இவர் இந்திய 'உலகாயத சிந்தனையின் தந்தை' எனவும் இந்திய மண்ணின் 'முதல் அறிவியலாள'ராகவும் கணிக்கப்படுகிறார். கௌதம புத்தர் காலத்தினராக அறியப்படும் அஜிதகேசகம்பளர் என்பார் சிந்தனைகளில் உலகாயதச் சார்வு காணப்படுவதை தீகநிகாயம் என்ற பௌத்த நூல் மூலம் அறிய முடிகிறது.

மேலே நாம் நோக்கிய கி.மு. 6–5 ம் நூற்றாண்டு வரையிலான காலப்பகுதிக்கு 1200 ஆண்டுகளின் பின்னரே இந்திய தத்துவ உருவாக்கத்தின் இன்னொரு முக்கிய கட்டத்தை நாம் வரலாற்றிற் சந்திக்கிறோம் . . . அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் என்பனவும் இவற்றோடு தொடர்புடைய வேறுபல தத்துவப் பிரிவுகளும் கி.பி. 8ஆம் நூற்றாண்டை அடுத்தே தோற்றம் கொள்கின்றன. ஆயினும் இவற்றுட்பல தமக்கான சிந்தனை மூலங்களை வேத இலக்கியப் பரப்பிலிருந்து – குறிப்பாக உபநிடதங்களிலிருந்து – பெற்றுக் கொண்டவை என்ற வகையில் மரபுத் தொடர்ச்சியுடையனவாகத் திகழ்வன.

இவற்றுள் 'அத்வைதம்' என்பது உபநிடதங்களிற் பேசப்பட்ட பிரம்மம் என்ற உயர்பொருளின் உண்மையை வாதிட்டு நிறுவும் முயற்சியாகும்.

www.tamilarangam.net



"பிரம்மம் என்ற ஒன்று மட்டுமே நிலையான உண்மை.
அதுவே முழுமை. அதைத் தவிர வேறு எதுவும்
உண்மையில்லை. உலகம், உடல், உயிர் என நாம்
கருதுவன எல்லாம் வெறும் தோற்றம் மட்டுமே".

என்பது அத்வைதத்தின் தெளிபொருள் இவ்வாறு பேசுவதன் மூலம் அத்வைதம் என்பது உலகச் சூழல், அதன் இயக்கம், வாழ்வியல் ஆகிய அனைத்தையும் மறுக்கும் சிந்தனையாக வடிவம் கொண்டது. உபநிடதங்களின் பிரம்ம சிந்தனையிற் புலப்பட்டுநின்ற 'அனைத்தையும் நேசிக்கும்' உணர்வுநிலை இதிலே கவனத்தைப் பெறத்தவறியது. இதனால் மரபுசார் நம்பிக்கையை நியாயப்படுத்தும் ஒரு 'தர்க்கவாத'மாகவே அத்வைதம் வடிவு கொண்டது. இவ்வாறு அத்வைதத்திற்கு வடிவு தந்தவர் என்ற வகையில் முக்கியமானவர். சங்கரர் (கி.பி. 788–820). இவர் ஆதிசங்கரர் எனவும் வழங்கப்படுகிறார்.

அத்வைதத்தின் மேற்படி 'பிரம்மம் ஒன்றே உண்மை' என்ற கருத்தியலை வைணவ சமய நம்பிக்கைகளின் தளத்தில் நின்று விமர்சித்து உருவானவையே விசிட்டாத்வைதம், துவைதம் ஆகிய தத்துவங்கள்.

பிரம்மமும் உண்மை; உலகம், உயிர் என்பனவும் உண்மை.
பிரம்மமே உலகாகவும் உயிர்களாகவும் தன்னைப் படைத்துக்
கொள்கிறது. பிரம்மத்துக்கு உலகம், உயிர் என்பன
விசேடணங்கள்.

இதுவே விசிட்டாத்வைதத்தின் தெளிபொருள். இவ்வாறு சிந்தித்தவர் இராமாநுசர் (கி.பி. 1017 – 1137). இவர் பிரம்மத்தைத் தம் சமய நம்பிக்கையின் படி மகாவிஷ்ணுவாகக் கண்டார். இவ்வாறு பிரம்மத்தை மகாவிஷ்ணுவாகக் கண்ட மற்றொருவரான மத்துவாசாரியார் (கி.பி. 1199 – 1278) பிரம்மம், உலகு, உயிர் என்பன ஒன்றினின்று ஒன்று திட்டவட்டமாகவே வேறுபட்டவை என்று கருதினார். இக்கருத்தே துவைதம் ஆயிற்று.

இவ்வாறு அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம் என்பன உருவாகி வந்த வரலாற்றுச் சூழலில், சைவம் என்ற சமயப்பிரிவு தன்னைத் தத்துவ நிலைப்படுத்திக் கொள்வதற்கு மேற்கொண்ட முயற்சிகளின் விளைபொருளாக உருவான முக்கிய தத்துவமே சைவசித்தாந்தம். இது பதி, பசு, பாசம் எனப்படும் முப்பொருள்களும் உண்மை எனக் கொள்வது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இத்தத்துவங்களில் முக்கியமாகப் பேசப்படும் விடயம் பிரம்மம் அல்லது பதி (இறைவன்) ஆகும். அதனை உணர்வது அல்லது அடைவது என்பதே இத்தத்துவங்களின் குறிக்கோள். இக்குறிக்கோளுக்கு ஏற்ற வகையிலே எவ்வாறு செயற்பட வேண்டம் என்பதையே இவை விரிவாகப் பேசியுள்ளன. ஞானம், தியானம், பக்தி, கிரியைமுறைகள் என்பனவாக இவை கூறும் செயல்முறைகள் – வழிமுறைகள் அமைகின்றன. இவை பற்றிப் பேசுகின்ற கட்டங்களில் இவற்றோடு நமது உலகியல் வாழ்க்கை என்பது எந்த அளவு தொடர்புபடுகின்றதோ அந்த அளவு மட்டுமே இவை உலகியல் வாழ்க்கை பற்றிப் பேசுகின்றன. குறிப்பாகக் கூறுவதானால் நமது இந்த உலகியல் சார் வாழ்வானது மேற்குறித்த பிரம்மம் அல்லது பதியை உணர்வதற்கான அல்லது அடைவதற்கான ஒரு 'பயில்களம்' மட்டுமே என்பதே இத்தத்துவங்களின் பொதுவான கருத்து நிலையாகும்.

மேற்குறித்த விடயங்களைப் பேசுவதில் இவற்றுள் நிலவிய முரண்பாடுகள் ஒன்றோடொன்று முட்டி மோதிக்கொண்ட வரலாறாகவே கி.பி. 19 ஆம் நூற்றாண்டிறுதி வரையிலான இந்தியத் தத்துவ வரலாற்றின் பொதுவான செல்நெறி அமைந்தது. இன்றுவரைகூட இந்நிலை தொடர்கின்றது.

**வரலாற்றில் நிகழ்ந்தது என்ன?**

இந்தியத் தத்துவங்களின் வரலாறானது அதன் தொடக்க நிலையிலே அதாவது கி.மு. 6–5 ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியிலே, 'சமூகத்தின் உலகியல் சார் துன்ப – துயரங்களுக்கு விடை நாடும் இயல்பான சமூக அக்கறை', 'அறிவுசார் தேடல் ஊக்கம்' ஆகியவற்றினூடாக ஊற்றெடுத்தது. நாளடைவில் அது 'மரபுசார் நம்பிக்கைகள்', 'தர்க்கவாதத்திறன்' ஆகியவற்றின் புகலிடமாக – பயில் களமாக – மாற்றம் எய்தியது; 'சமூக அக்கறை'யினின்று பெருமளவு விலகிவிட்டது. உபநிடதங்களின் சிந்தனைகள், சமண – பௌத்த சிந்தனைகள் என்பவற்றுக்கும் அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலியனவாக அமைந்த தத்துவங்களுக்கும் இடையில் உள்ள முக்கிய வேறுபாடு இதுதான். இந்தியத் தத்துவங்களின் வரலாறு தரும் காட்சியும் இதுதான். இதற்கான காரணிகள் யாவை?

உபநிடதங்கள் சமணம், பௌத்தம் என்பன எழுந்த காலப்பகுதியில் சமூகம் பண்டைய இனக்குழு நிலையிலிருந்து நிலவுடைமை நிலையை நோக்கி மாறுதலடைந்து கொண்டிருந்தது. இனக்குழுச் சமுதாயங்களில்

www.tamilarangam.net



இயல்பாகவே நிலவியிருக்கக்கூடிய கூட்டுணர்வு, அன்பு என்பன அன்றைய சிந்தனைகளுக்கு ஊற்றுக் கண்களாக அமைந்திருக்கலாம் எனக்கருத இடமுண்டு. ஆனால் அத்வைதம் முதலியன உருவான காலப்பகுதியிலே சமுதாயமாது நிலவுடைமை அமைப்பில் முதிர்நிலை எய்தியிருந்தது. முடியரசுகள் உருவாகி அவை நாளடைவில் பேரரசு என்ற 'சக்கராதிபத்திய'க் கூட்டமைப்புகளுக்கு உட்பட்ட நிலையையே கி.மு. 5–ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட வரலாறு காட்டுகின்றது. குறிப்பாக வட இந்தியாவின் கங்கைச் சமவெளியை மையமாகக் கொண்டு நந்தர், மௌரியர், சுங்கர், குப்தர் முதலியவர்களின் பேரரசுகள் ஒன்றன்பின் ஒன்றாக உருவாகின. தக்காணத்தில் சாதவாகனப் பேரரசு எழுச்சிபெற்றது. தென்னாட்டில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் மூவேந்தர்கள், பல்லவர் என்போரின் ஆதிக்கம் உருவாகியது; பாண்டியர், பல்லவர் என்போருக்கிடையில் அதிகாரப் போட்டி நில்வியது. கௌதம புத்தர் காலம் முதல் சங்கரர் காலம் வரை நிலவிய பொதுவான வரலாற்றுப் போக்கு இதுதான்.

இவ்வாறான நிலவுடைமை எழுச்சிச் சூழல் பேரரசுச் சூழல் ஆனது. சமுதாயத்தின் கட்டமைப்பு, பொருளியல் உறவுகள், அதிகாரத்தை வலியுறுத்தும் வழிமுறைகள் முதலியன தொடர்பான ஆழமான சிந்தனைகளை வேண்டி நின்றது. அதிகாரத்தின் உயர்நிலையில் இருந்தோரும், அறிவுசார் வாய்ப்புக்களைப் பெற்றிருந்தோரும் இது தொடர்பாக இணைந்து சிந்தித்தனர். வேதகாலம் முதல் இந்திய மண்ணிலே கருக்கொள்ளத் தொடங்கியிருந்த வர்ணம், ஆசிரமம் என்பன தொடர்பான சிந்தனைகள் இக்காலப் பகுதியில் திட்டவட்டமான 'சமூக – ஒழுக்க' கட்டமைப்புச் சிந்தனைகளாக வடிவம் கொண்டன. தர்மசூத்திரங்கள், தர்ம சாஸ்திரங்கள் (மநுதர்மசாஸ்திரம், பராசரதர்ம சாஸ்திரம் முதலியன) உருவாயின. இவை சமுதாயத்தைப் பிறப்பு அடிப்படையில் வகைப்படுத்தின. இவற்றுக்கு ஏற்ப தொழில்முறைப் பொருளியல் உறவுமுறை. வாழ்வியல் நெறிமுறை, சமூக ஊடாட்டம் என்பவற்றைக் கற்பித்தன. இவ்வாறு அமைந்த முறைமைகளின் தொகுதிகளையே நாம் 'வர்ணாசிரமதர்ம முறை' எனப் பேசுகிறோம்.

> இம்முறைமை சமுதாயத்தின் மிகப்பெரும் தொகையினரான உழைக்கும் மக்களை – உடல் உழைப்பாளர்களை – மிகவும் கீழ்ப்படியில் வைத்தது. சுரண்டி வாழும் அதிகார வர்க்கத்தினரையும் அறிவுசார் சிந்தனையாளர்களையும் உயர்படியில் நிறுவியது.

www.tamilarangam.net



இவ்வாறான அமைப்பு பேரரசுகளின் கூட்டமைப்புக்கு ஒரு பாதுகாப்புத் தளமாக அமைந்தது. இந்திய மண்ணில் உருவான இந்த முறைமையை இம்மண்ணில் காலந்தோறும் படையெடுத்து வெற்றி பெற்றோர் பலரும் பேணிக் கொண்டனர். இம்முறைமைக்குள் தங்களுக்கு அங்கீகாரமும் தேடிக்கொண்டனர். தொடக்கத்தில் கங்கைச் சமவெளியில் உருவான இந்த முறைமை காலகதியில் தென்னகம் உட்பட அனைத்திந்திய மண்ணிற்கும் பொதுவான சமூக முறைமையாகப் பரவி நிலைபெற்றது.

இவ்வாறு நிலைபெற்றுவிட்ட முறைமை சார்ந்த சமுதாயக் கட்டமைப்பின் உயர்படிகளில் நின்று கொண்டு தத்துவம் பேச முற்பட்டவர்களின் குரல்களாகவே அத்வைதம், விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலியன நமக்கு அறிமுகமாகின்றன. இவ்வாறான தத்துவங்களைப் பேசியவர்களிற் சிலர் (குறிப்பாக இராமாநுசர், சைவசித்தாந்த சிந்தனையாளருள் ஒருவரான உமாபதிசிவா சாரியார், சைவத்தின் மற்றொரு தத்துவப் பிரிவான 'வீரசைவ'த்தின் முக்கிய சிந்தனையாளரான பஸவண்ணர் முதலிய சிலர்) வர்ணபாகுபாடு என்ற வரையறையை மீறி நின்று செயற்பட்டவர்கள் என்பதும் இத்தொடர்பில் நமது கவனத்துக்கு உரியது.

சங்கரர் அத்வைதம் பேசமுற்பட்ட காலச்சூழலில் இந்திய சிந்தனைமரபில் – குறிப்பாகச் சமயம் சார்ந்த உணர்வோட்டங்களில் – ஏற்பட்டிருந்த வளர்ச்சி, மாற்றம் என்பன தொடர்பாகவும் இங்கு சுருக்கமாக நோக்க வேண்டியது அவசியம்.

கௌதமபுத்தர் காலம்வரையிலான இந்தியச் சிந்தனை வரலாற்றில் சமயம் என்பது வேதமரபுசார்ந்தோர் மத்தியிலும் பல்வேறு இனக்குழுச் சமுதாயங்களிலும் நம்பிக்கைகள், சடங்குகள் என்ற அளவிலேயே நிலவி வந்தது. நம்பிக்கைகளுக்குத் தர்க்க ரீதியான விளக்கம் நாடும் உணர்வோட்டங்களும் ஓரளவு வெளிப்படத் தொடங்கியிருந்தன. ஆனால் சமயம் என்பது ஒரு வாழ்வியல் எனத்தக்க வகையிலான வளர்ச்சியை அன்று பெற்றிருக்கவில்லை என்பதே வரலாற்றுச் சான்றுகளால் உய்த்துணரப்படுவது.

ஆனால் பின்நாளில் சமயங்கள் பலவும் சமூகவாழ்க்கையுடன் பின்னிப்பிணைந்து, 'சமயவாழ்வு' என்ற நிலை உருவாகியது. வேதமரபுசார் நம்பிக்கைகள் சடங்குகள் என்பனவும் பல்வேறு இனக்குழுக்கள் சார்ந்த நம்பிக்கைகள் சடங்குகள் என்பனவும் முட்டிமோதியதன் விளைவாக சைவம்,

www.tamilarangam.net



வைணவம், சாக்தம், கௌமாரம், காணாபத்தியம், சௌரம் முதலியனவாக சில சமயப்பிரிவுகள் தனிநிலை எழுச்சிபெற்று மக்கள் மத்தியில் செல்வாக்கை நாடி நின்றன. இவற்றின் வழிபாட்டு முறைமைகளை விளக்கும் வகையில் ஆகமங்கள், சாத்திரங்கள் என்ற வகையிலான நூல்கள் உருவாயின. (இந்த ஆகமங்களுக்கான மூலக்கருத்துக்கள் இனக்குழுப் பாரம்பரியத்திலேயே தோற்றம் கொண்டிருக்க வேண்டும் என்பது ஊகம்). சமயக் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புவதற்கு 'புராண இதிகாச' கதைமரபுகள் உருவாயின. சமூக மாந்தரைச் சமய உணர்வுடன் தொடர்புபடுத்தும் வகையில் கோயில் என்ற நிறுவனம் தோற்றம் பெற்றது. இந்நிறுவனங்களை மையப்படுத்தி சைவம், வைணவம் ஆகிய சமயங்கள் சமூகமாந்தர் மத்தியில் பக்தி இயக்கங்களை மேற்கொண்டன.

சைவம், வைணவம் முதலிய சமயங்களில் நிகழ்ந்துவந்த இந்த வளர்ச்சி, மாற்றம் என்பன சமணம், பௌத்தம் என்பவற்றையும் குறிப்பிடத்தக்க அளவு பாதித்தது அன்பையும் அறத்தையும் அடிநாதமாகக் கொண்டு துறவு நிலை பேசிநின்ற அவை, புராண மரபுச் சிந்தனைகளால் பாதிப்புற்றன. குறிப்பாக பௌத்தத்தில் இப்பாதிப்புத் தெளிவாகத் தெரிந்தது. வரலாற்று மனிதரான கௌதம புத்தர் பல அவதாரங்கள் (பிறவிகள்) எடுக்கும் புராண கதாபாத்திரம் ஆனார்; வழிபாட்டுக்குரிய தெய்வம் ஆகக் கருத்துநிலையில் மாற்றம் எய்தினார். கௌதமபுத்தரின் சிந்தனைகளில் முக்கியமான ஒன்றாகத் திகழ்ந்த 'அழிவுடைமை (உலகப்பொருட்கள் அனைத்தும் கணந்தோறும் அழிந்து மாற்றமுறுகின்றன என்ற கருத்து) பின்னாளில் நாகார்ச்சுனர் முதலியவர்களின் சிந்தனையில் 'சூனியவாதம்' ஆக வளர்ச்சி எய்தியிருந்தது.

இவ்வாறான வரலாற்றுப் போக்கிலே ஒரு பக்கத்தில் வேதமரபின் வேள்விசார்ந்த கிரியை முறையானது மக்கள் மத்தியில் நம்பிக்கையுடன் தொடர்ந்து பேணப்பட்டு நின்றது. பூர்வ மீமாம்சகர் இதனை வலியுறுத்திப் பேணி நின்றனர். இன்னொரு புறத்திலே பிரம்மம், கடவுள், வழிபாட்டு முறைமை முதலிய அனைத்தையும் மறுக்கும் உலகாயத சிந்தனையும் வலுவுடன் திகழ்ந்தது. சாங்கியம், யோகம் முதலிய தரிசனங்கள் அறிஞர் மத்தியில் பேணப்பட்டு வந்தன.

இவ்வாறான சூழலில்தான் சங்கரர், உபநிடதம் கூறும் பிரம்மம் என்ற உண்மைப்பொருளின் உயர்வைப் பேசுவதனூடாக வேதமரபுக்கு வலுவூட்ட முயன்றார். பௌத்தரின் சூனியவாதம், உலகாயதரின் இறைமறுப்புவாதம்

www.tamilarangam.net



என்பவற்றை நிராகரிப்பதும் கிரியை முறைகளுக்குரிய முதன்மையைக் கண்டித்து ஞானம் என்ற பேரறிவின் பெருமையை நிலைநிறுத்துவதன் மூலம் பூர்வமீமாம்சகரைத் தோற்கடிப்பதும் இவரது முக்கிய குறிக்கோள்களாகத் திகழ்ந்தன என்பது இவரது தர்க்க செயற்பாடுகளிற் புலப்படுகின்றது. ஆனால் வேதமரபுடன் தொடர்புடைய சமயப்பிரிவுகளை அவர் நிராகரிக்க முற்படவில்லை. 'அச்சமயப் பிரிவுகளைச் செப்பமுற மீள அமைத்தவராகவும் அறியப்படும் அவர் அச்சமயங்களின் கடவுளர் மீது தோத்திரங்கள் பாடிய பக்தரும்கூட' என்பது இத்தொடர்பில் நமது கவனத்துக்குரியது. ஆனால் அக்கடவுளரை உபநிடதங்கள் கூறும் பிரம்மத்தின் பகுதியாகவே அவர் கண்டார் என்பது அவரது தர்க்க வாதங்களிற்புலனாகின்றது. இது ஒரு வகையில் வேதமரபின் மேலாணைக்குள் மேற்படி சமயங்களை உட்படுத்தும் உத்தியாக – ஒரு 'இராஜதந்திர' அணுகுமுறையாகவும் அமைந்ததெனலாம்.

பிரம்மம் என்ற முழுமை பற்றிப் பேசவந்த நிலையில் உலகம், உயிர் என்பன உண்மையில் உள்ள பொருள்கள் அல்ல என அவர் வாதித்துள்ள முறைமை வலிந்து மேற்கொள்ளப்பட்ட ஒரு செயற்பாடாகவே பொதுவாகப் புலனாகின்றது. உலகம், உயிர் என்பன உண்மையில் உள்ள பொருள்கள் எனக்கொண்டால் அவற்றுக்கு மூலம் சுட்டவேண்டிய அவசியம் எழும். முழுமைப் பொருளான பிரம்மம் குறைபாடுடையனவான உலகம், உயிர் என்பவற்றுக்கு மூலமாக அமைந்திருப்பது சாத்தியமில்லை. பிரம்மம் அல்லாத வேறொரு மூலப்பொருளிலிருந்து அவை தோன்றின எனக் கொள்வதானால் பிரம்மம் தவிர வேறு மூலப்பொருள்களும் உள்ளன என ஒப்புக்கொள்ள நேரும். இவ்வாறான சிக்கல்களிலிருந்து விடுபட வசதியாக அவர் மேற்கொண்ட உத்தி முறையாகவே, 'உலகம், உயிர் என்பன உண்மையில் உள்ள பொருள்கள் அல்ல' என்ற அவரது வாதம் அமைந்தமை தெரிகிறது. இவ்வாறு வாதிப்பதற்கு அவர் வேதமரபை துணைக்கு அழைத்துக் கொள்கிறார். பிரம்மம் தவிர வேறு மூலப் பொருள்களும் உள்ளது எனக் கொள்வது வேதமரபுக்கு மாறானது என அவர் கூறமுற்படுகிறார். இவ்வகையில் அவர் உலகம், உயிர் என்பவற்றின் இருப்பை ஒப்புக்கொள்ளும் சாங்கியம் முதலிய தரிசனங்களையும் மறுக்கிறார். அத்வைதம் என்ற தத்துவம் உலகம் சூழல், அதன் இயக்கம், வாழ்வியல் ஆகிய அனைத்தையும் மறுக்கும் சிந்தனையாக வடிவம் கொண்ட வரலாற்றுச் சூழல் இதுதான்.

வைணவம், சைவம் ஆகிய சமயத் தளங்களில் நின்று

www.tamilarangam.net



விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலிய தத்துவங்களைப் பேச வந்தவர்களின் நிலை சங்கரரின் நிலையினின்று பெரிதும் வேறுபட்டது. சங்கரரைப் போல பிரம்மம் என்ற முழுமைபற்றி வாதிட்டு நிறுவவேண்டிய சூழல்சார் கடப்பாடு அவர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. இந்தப் பணியை ஏற்கனவே சங்கரர் வெற்றிகரமாகச் சாதித்திருந்தார். சங்கரரைப் போல வேத மரபை இவர்கள் சார்ந்திருந்தாலும் ஆகமங்கள், புராண இதிகாசக்கதைகள் என்பவற்றிலேயே இவர்கள் மிகுதியான பற்றுறுதி கொண்டிருந்தனர். அவ்வகையில் இவர்கள் கோயில் என்ற நிறுவனத்தை மையப்படுத்தியமைந்த வாழ்வியலைப் பேணி நின்றவர்கள். தத்தம் இறைநம்பிக்கையையும் அதுசார்ந்த வாழ்வியலுமே உண்மை எனப் பேசுவது இவர்களின் நோக்கும் வழிமுறையுமாயிற்று. இந்த அடிப்படைகளில் அமைந்த இவர்களின் சிந்தனைகள் அத்வைதம் சுட்டும் 'பிரம்மம் என்ற ஒரு பொருள் மட்டுமே உண்மை' என்ற கருத்து நிலையை விமர்சிப்பனவாக அமைந்தன. சமயங்களின் உணர்வுநிலைக்கு இறை, உயிர் ஆகிய இரண்டையும் வேறுபடுத்திப் பேசவேண்டியது அவசியம். இத்தொடர்பில் உயிர்வாழ்வதற்குக் களமாக உள்ள புறவுலகு பற்றியும் தெளிவுப்படுத்திக் காட்ட வேண்டியது அவசியம். விசிட்டாத்வைதம், துவைதம், சைவசித்தாந்தம் முதலிய தத்துவங்கள் அமைப்புற்ற வரலாறு இதுதான்.

இத்தத்துவங்களுள் விசிட்டாத்வைதம் உயிர்களையும் உலகையும் பிரம்மத்தின் விசேடணங்களாக 'சரீர சரீரி' உறவுசுட்டி விளக்கம் தந்ததன் மூலம் உபநிடதங்களில் உள்ளுறைந்திருந்த 'அனைத்தையும் நேசித்தல்' என்ற உணர்வோட்டத்தை ஓரளவாவது பேணிக் கொண்டது என்பதை இங்கு சுட்டுவது அவசியம். 'சக்தி விசிட்டாத்வைதம்' எனப்பெயர் பூண்ட 'வீரசைவ' தத்துவத்திலும் இப்பண்பை அவதானிக்கலாம்.

பொதுவாக சமயஉணர்வை முதன்மைப்படுத்தி, அது தொடர்பாகப் பேசுவதே 'அறிவு' 'பேரறிவு' என்பனவாகச் சிந்தித்து நின்ற இவ்வரலாற்றுச் சூழலிலே உலகியல் தொடர்பான பல கூறுகள் உரிய கவனத்தைப் பெறத் தவறின. மருத்துவம், வானியல், பொருளியல், கட்டிடக் கலைநுட்பம் முதலியனவாக அக்காலப் பகுதியில் வளர்ந்திருந்த சிந்தனைகள் தத்துவம் என்ற மைய நீரோட்டத்துள் இணைத்துக் கொள்ளப்படவில்லை. இதனால் அவை தொடர்பான பல அரிய தகவல்கள் பேணப்படாது அழிந்தன. பேணப்பட்டவைகூட சமயசார்பான புராணத் தன்மை வாய்ந்த புனைவுகளின் போர்வைக்குள்ளே தஞ்சம்புக நேர்ந்தது. சான்றாக ஒரு செய்தியைச் சுட்டலாம்.

www.tamilarangam.net



கிரகணம் என்ற வானியல் நிகழ்வானது சூரியன் சந்திரன் பூமி என்பவற்றில் நிழல் படிவதால் நிகழ்வது. இதனை பண்டைய இந்திய வானியலாளர்களான வராஹமிகிரர் (கி.பி. 6–ஆம் நூ–ஆ) பிரம்மகுப்தர் (கி.பி.. 7–8 ஆம் நூ–ஆ) ஆகியோர் அறிந்திருந்தனர். ஆனால் அவர்கள் அதனை 'ராகு – கேது' என்போர் தொடர்பான புராணக் கதைகளுடன் தொடர்புபடுத்திப் பேசவேண்டிய நிர்ப்பந்தம் அன்று நிலவியது. வராஹமிகிரர் உண்மையில் காலூன்றி நின்றார். பிரம்மகுப்தர் புராணப்புனைவில் தஞ்சமடைந்து விடுகிறார்.

மேற்கண்டவாறு இந்தியத் தத்துவப் பரப்பின் மைய நீரோட்டமானது தொடக்கத்தில் கொண்டிருந்த 'சமூக அக்கறை'யிலிருந்து பெருமளவு விலகி, 'தர்க்கவாதத்திறன்', சமய நம்பிக்கைகள் என்பவற்றில் புகலடைந்து கொண்டிருந்த காலப்பகுதியில் மேற்படி 'சமூக அக்கறை' உணர்வு முற்று முழுதாக இம்மண்ணில் வற்றிவிடவில்லை என்பதை நாம் இங்கு கவனத்திற் கொள்வது அவசியம். அது வெவ்வேறு தளங்களில் தன்னை வெளிக்காட்டி வந்துள்ளது. அவ்வகையில் இன்றுவரை அது உயிர்ப்புடன் திகழ்கிறது. அத்தளங்கள் : அறம், பக்தி, ஆன்மநேயம்.

**அறம், பக்தி, ஆன்மநேயம் :**

அறம் என்பது உண்மையின் தளத்தில் பொதுநலனைச் சார்ந்து நிற்றல். இந்நிலை நின்று பேணிக்கொள்ளும் நடத்தை நெறியே ஒழுக்கம் ஆகும். பக்தி என்பது தன்னின் மேம்பட்ட ஒன்றில் கொண்டுள்ள பற்றுறுதி காரணமாக ஒருவர் தன்னை அதில் ஒப்படைத்து நிற்கும் நிலை. ஆன்மநேயம் என்பது எல்லா உயிர்களையும் நேசிக்கும் மனப்பக்குவமாகும். இதனை அறத்தின் ஒரு பரிமாணமாகவும் கொள்ளலாம். இந்தியப் பண்பாட்டு மரபைப் பண்டையநாள் முதல் இன்றுவரை தாங்கி நிற்கும் தூண்கள் இவை.

இவற்றுள் அறமும் ஆன்மநேயமும் உபநிடதங்களிலும் சமண–பௌத்த தத்துவங்களிலும் உள்ளுறைந்திருந்தமை முன்னரே நோக்கப்பட்டது. பக்தி என்பது உபநிடதங்களுக்கு முன்பே வேதமரபில் கருவாக இருந்து பின்னாளில் சமய உணர்வோட்டத்தில் முக்கிய கூறாக உருவாகி நிலைபெற்றது.

www.tamilarangam.net



உபநிடதங்களிலும் சமணம், பௌத்தம் என்பவற்றிலும் புலப்பட்டு நின்ற அறமும் ஆன்மநேயமும் எய்திய அடுத்த கட்டவளர்ச்சிப் பரிமாணத்தை நமக்குக் காட்டி நிற்கும் நூல் திருக்குறள். கி.பி. 5–ஆம் நூற்றாண்டுக்கு முன்பே எழுந்துவிட்ட இந்நூல் தனக்கு முற்பட்ட அனைத்திந்திய விழுமியங்களையும் திறனாய்வு செய்து பேணிப் பதிவு செய்துகொண்ட ஒரு 'வாழ்வியல்' ஆக்கமாகும். தனி மனிதர், குடும்பம், சமூகம், நாடு என்ற பல்வேறு தளங்களில் ஒருவர் எவ்வாறு இயங்கவேண்டும் என்பதை அறிவுபூர்வமாகவும் உணர்வுபூர்வமாகவும் எடுத்து உரைத்துள்ள இந்நூலுக்கு நிகராக இந்திய மண்ணில் எந்த ஆக்கமும் உருவாகவில்லை. இது எந்தச் சமயப் பிரிவையும் சார்ந்ததல்ல; பல சமய உணர்வுகளையும் உட்கொண்டு, அவற்றைக் கடந்து ஒட்டு மொத்த மானுடத்தைச் சார்ந்தது. இந்நூலில் அது எழுந்த காலப்பகுதியின் ஆணாதிக்க உணர்வோட்டம், முடியரசுச் சூழல், விவசாய சமூகச் சூழல் என்பவற்றின் தாக்கம் உளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆயினும் அடிப்படையில் இது மக்கட் சார்புடையது. பாதிக்கப்படும் மக்களுக்காக இரங்குவது; ஆதிக்க வர்க்கங்களின் கொடுமைகளுக்கு எதிராகக் குரல் கொடுப்பது (செங்கோன்மை, கொடுங்கோன்மை, வெருவந்த செய்யாமை அதிகாரங்கள்), சமூக முரண்பாடுகளுக்கான காரணங்களைக் கண்டறிந்து தீர்வுகாட்ட ஆர்வம் கொண்டது.

நல்லவன் சீரழிவதற்கும் தீயவன் பெருவாழ்வு எய்துவதற்கும் எது அல்லது யார் காரணம் என்பது வள்ளுவருக்கு எழுந்த முக்கிய வினா. இதற்கான விடை காணும் பொறுப்பை எதிர்காலத் தலைமுறையிடம் அவர் நம்பிக்கையுடன் ஒப்படைக்கிறார்.

"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும் செவ்வியான்
கேடும் நினைக்கப் படும்"

என்ற குறளின் (169) தெளிபொருள் இது. வறுமைக்கு இந்த உலகில் இடமிருக்கத்தான் வேண்டுமெனில் – பிச்சை எடுத்துத்தான் வாழவேண்டு மென்பது நியதியானால் – இந்த உலகைப் படைத்தவன் அல்லது ஆள்பவன் அழிந்து போகட்டும் எனச் சாபமிடுகிறார் வள்ளுவர்.

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்"

என்ற குறளில் (1062) புலப்படும் வள்ளுவரின் இச்சீற்றம் இந்திய மனித நேய உணர்வெழுச்சியின் சிகரம் ஆகும்.

www.tamilarangam.net



இவ்வாறான குறளின் உருவாக்கத்துக்கு அதற்கு முற்பட்ட அனைத்துப் பண்பாட்டுக் கூறுகளும் பங்களிப்புச் செய்துள்ளன. இந்திய மண்ணின் வாழ்வியல் தத்துவத்தை உரியவாறு தெரிந்து தெளிந்து கொள்ள விழைபவர்கள் முதலில் கற்கவேண்டிய முக்கிய ஆக்கம் இது.

பக்தி என்ற உணர்வைச் சமய நம்பிக்கையுடன் தொடர்புபடுத்தி, வழிபாட்டு நோக்கை மட்டும் மையப்படுத்திப் பார்க்கும் மரபே நம் மத்தியில் நிலவுகிறது. சமய நம்பிக்கை என்பது பகுத்தறிவுக்கு ஒவ்வாதது எனக் கருதுவோர் பக்தி சார்ந்த ஆக்கங்களை முழுமையாகப் புறக்கணித்து விடுவதையும் காண்கிறோம். ஆனால் பக்திக்கு இன்னொரு முகமும் உளது. அது சமூக முகம். குறிப்பிட்ட சமய நம்பிக்கை சார்ந்த சமுதாயங்களில் அச்சமய நம்பிக்கையில் அதிகாரவர்க்கத்தின் கரங்கள் படியும்போது அதனை எதிர்த்து அடிமட்ட மக்கள் உட்பட அனைத்து சமூகத்தினரையும் திரட்டி நடவடிக்கைகள் மேற்கொள்வதற்குப் பக்தி கருவியாகப் பயன்பட்டு வந்தமைக்கும் வரலாற்றில் சான்றுகள் உள. அவ்வகையில் சாதி, வர்க்கம் என்பவற்றைக் கடந்து 'இறைவனின் முன் யாவரும் சமம்' என்ற சமநிலை நோக்கு – தொண்டர்குலம் என்ற நோக்கு உருவாகப் பக்தியுணர்வு பயன்பட்டு வந்துள்ளது. தமிழகத்தில் கி.பி. 6–ஆம் நூற்றாண்டில் உருவாகி பின்னர் வடநாட்டிலும் பரவிய பக்திப் பெருவெள்ள வரலாற்றில் இவ்வாறான சமநிலை நோக்குப் பேணப்பட்டு வந்தமைக்குப் பல சான்றுகள் உள. இது தத்துவத்திலும் தாக்கம் விளைவித்துள்ளது.

குறிப்பாகச் சொல்வதானால் விசிட்டாத்வைத தத்துவத்தில் உலகம், உயிர் அனைத்தையும் பிரம்மம் என்ற முழுமைப் பொருளின் உடலாக இராமாநுசர் காண்பதற்கு அவரது பக்திச் சார்பும் ஒரு முக்கிய அடிப்படை எனலாம். வைணவ பக்திப் பாசுரப் பரப்பான திவ்வியப்பிரபந்தத்தில் ஊறித்திளைத்த இராமாநுசர் சாதி பேதங்களைக் கடந்த சமநோக்கினைப் பேணி நின்றவர்; எல்லோரும் இன்புற்றிருக்க முடியுமானால் அதற்காகத் தனக்கு எவ்வகைத் துன்பம் வந்தாலும் ஏற்கத் தயார் என்ற மனநிலையைப் புலப்படுத்தியவர். இது அவரது வரலாறு தரும் செய்தி (சான்று : குருபரம்பராப்ரபாவம்). அவரது இத்தகு மனநிலை பக்தியால் விளைந்தது. அதனால் பிரம்மத்தின் உடலாக உலகம், உயிர்கள் என்பவற்றை அவரால் காணமுடிந்தது. இந்த அணுகுமுறையால் உபநிடதங்களின் 'அனைத்தையும் நேசித்தல்' என்ற பண்பை அவரால் உணர்ந்து கொள்ள முடிந்தது. பின்நாளில் வைணவ மரபிலே சமூக உள்ளடக்கம் கொண்ட பிரிவான 'தென்கலை' என்பது உருவாக இராமாநுசரின் இந்த நிலைப்பாடும் வித்தாக அமைந்தது என்பது நமது கவனத்துக்கு உரியது.

www.tamilarangam.net



வீரசைவ முதன்மைச் சிந்தனையாளரான பஸவண்ணர் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கடந்த – அவற்றை எதிர்க்கும் – வீறார்ந்த சிந்தனையையும் செயல்முறைகளையும் முன்வைத்தவர் என்பது வரலாறு. அவருக்கான கருத்து நிலை மூலங்கள் சைவ பக்தி இயக்கத்தின் நாயன்மார் சிந்தனைகளிலும் செயல்களிலும் அமைந்திருந்தன என்ற வரலாற்றுண்மையும் இங்கு நமது கவனத்துக்குரியது.

பின்நாளில் இந்திய தேசிய விடுதலைப் போராட்டச் சூழலில் தெய்வ பக்தியானது தேசப்க்தியாக, அனைவரையும் ஒருங்கே இணைக்கும் உணர்வோட்டமாக உருப்பெற்றமையையும் நாம் தரிசித்துள்ளோம்.

ஆன்ம நேயத்திற்கு இரு முகங்கள் உள. ஒன்று அனைத்து உயிர்களையும் நேசித்தல்; மற்றது அந்நேசிப்புக்கு எதிரான மடமைகள், வேஷங்கள், சிறுமைகள் முதலியவற்றைக் கண்டு சீறி எழுதல். உபநிடதங்களிலும் சமண–பௌத்த சிந்தனைகளிலும் 'அனைத்துயிர் நேசிப்பு', 'அஹிம்சை', ஜீவகாருண்யம் என்பனவாக வெளிப்பட்டது இதன் முதல் முகம். இதன் செயல் வடிவமாகவே கௌதம புத்தரின் 'சங்கம்' என்ற அமைப்பு உருவாயிற்று. துன்புற்ற அனைவரையும் சங்கத்தில் சரணடைய அழைத்தார் அவர் (இச்செயல் முறை நிறைவானதாக அமையவில்லை என்பதை முன்னரே நோக்கியுள்ளோம்). தமிழின் பௌத்தப் பேரிலக்கியங்களிலொன்றான மணிமேகலை 'அமுதசுரபி' என்ற பாத்திரமேந்திப் 'பசிப்பிணி' தீர்க்கமுயன்ற மணிமேகலை என்ற துறவியை எமக்கு அறிமுகம் செய்கிறது.

தமிழ்மண்ணில் உருவான சித்தர் பாரம்பரியம் மேற்படி ஆன்மநேய உணர்வோட்டங்களின் தொடர்ச்சியும் வளர்ச்சியும் ஆக அமைந்ததெனலாம். திருமூலரை மூலவராகக் கொள்ளும் இச்சித்தர் மரபிலே புறநிலையான சடங்காசாரங்களை விட அகநிலையான ஈடுபாடே உயர்வானது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டது. 'அன்பே சிவம்' என்றும், ஆலயங்களுக்கு அள்ளி வழங்குவதைவிட மானுடத்தின் பசிப்பிணி தீர்த்தலே தலையாய அறம் என்றும் பேசியவர் திருமூலர். இதே மரபில் சிவவாக்கியர் புறநிலை வழிபாட்டை மறுத்து அகநிலை உணர்வை வலியுறுத்துகிறார். இவ்வாறான உணர்வோட்டத்தின் மற்றொரு பரிமாணமாகவே வட இந்திய மண்ணிலே குருநானக் (1469–1539) என்பாரின் சிந்தனைகள் உருவாயின. அவை சீக்கியம் என்ற சமயமாக வடிவு கொண்டன. தமிழ் மண்ணிலே வள்ளலார், பாரதி என்போரின் உணர்வோட்டங்களும் மேற்படி சித்தர் மரபின் தொடர்ச்சியேயாம். 'வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்' என

www.tamilarangam.net



வள்ளலாரும் 'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' எனப் பாரதியும் புலப்படுத்தி நின்ற உணர்வுகள் உபநிடதங்களிற் கால்கொண்டு சித்தர் மரபூடாகப் பேணப்பட்டு வளர்ந்து வந்த ஆன்மநேயத்தின் தொடர்ச்சிகளேயாம்.

**நிறைவை நோக்கி . . .**

தத்துவம் என்பது உண்மை பற்றிய அறிவாராய்ச்சி; வாழ்க்கையை நிறைவும் பயனும் உடையதாக்கி எதிர்காலத்துக்கு வழிநடத்தும் கடப்பாது அதற்கு உளது. இந்த அடிப்படையிலே இந்தியத் தத்துவப்பரப்பு இங்கே நோக்கப்பட்டது. இதில் தெளிந்து கொண்டவைபற்றி பின்வருமாறு சுட்டலாம்.

அ) இந்தியத் தத்துவம் தன் தொடக்ககாலத்தில் – கி.பி. 6–5 ஆம் நூற்றாண்டுகள் வரையான காலப்பகுதியில் – அறிவார்வம், சமூக அக்கறை என்பன கொண்டு திகழ்ந்தது.

ஆ) பின்நாளில் தத்துவ மைய நீரோட்டம் தர்க்கவாதத்திறன், சமய நம்பிக்கை என்பவற்றில் புகலடைந்தது.

இ) தொடக்கத்தில் புலப்பட்டு நின்ற சமூக அக்கறை சார்ந்த கூறுகள் அறம், பக்தி, ஆன்மநேயம் என்பனவாகத் தனித்தனித் தளநிலைகளில் வளர்ச்சி எய்தின.

இவ்வாறான தத்துவ வரலாற்றுச் செல்நெறியை நெறிப்படுத்துவதில் சமூகக் கட்டமைப்பின் உயர்மட்டத்தில் இருந்தோர் குறிப்பிடத்தக்க முதன்மை வகித்து வந்துள்ளனர். அதேவேளை சமுதாயக் கட்டமைப்பின் அடிமட்டத்தினரின் பங்களிப்பும் குறைத்து மதிப்பிடுவதற்கு உரியதல்ல. குறிப்பாகப் பக்திநெறி, அதனை மையப்படுத்திய மக்களியக்க எழுச்சி, அதில் புலப்பட்டு நின்ற சமநோக்கு என்பன அடிநிலை மாந்தரின் உணர்வு நிலைகளையும் தழுவியமைந்தவை என்பதை இங்கு நினைவிற்கொள்வது அவசியம்.

சமூக பயன்பாட்டு நோக்கு என்ற அடிப்படையில் இந்தியத் தத்துவப் பரப்பு முழுவதையும் – மைய நீரோட்டம், துணைநிலைத் தளங்கள் ஆகிய அனைத்தையும் – தொகுத்து நோக்கும்போது தெளிவாகப் புலனாகும் கூறுகள் இரண்டு – அவை :

அ) சமூகப் பிரச்சினைகளை இந்தியத் தத்துவம் உணர்ந்திருக்கிறது. அவற்றுக்குத் தீர்வுகாண விரும்பியிருக்கிறது. மாந்தரது உள

www.tamilarangam.net



நிலையில் மாற்றம் நிகழ்வதன் மூலம் பிரச்சினைகள் தீரலாம் என்பது அதன் முடிந்த முடிவு. அஹிம்சை, அறம், அன்பு, உண்மை, பக்தி, தியாகம் முதலியனவாக அதன் தீர்வுகள் முன்வைக்கப்பட்டன.

ஆ) ஆனால் அத்தீர்வுகள் நிலைபெற்று நின்று பயன் தருவதற்கு ஏற்ற வகையில் சமூகத்தளம் அமைந்ததா என்பதை அவை சிந்திக்க முற்படவில்லை. இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் சமூகப் பிரச்சினைகள் அனைத்துக்குமான காரணிகள் சமூகக் கட்டமைப்பின் அடித்தளமான பொருளியல், உற்பத்தி உறவுமுறை என்பவற்றில் உள்ளுறைந்திருப்பவை என்பதை மேற்படி இந்தியத் தத்துவப் பரப்பு சிந்திக்க முற்படவில்லை.

இவற்றை மேலும் விளக்கமாகக் கூறுவதானால் சமூக மாந்தரின் துன்ப – துயரங்கள் நீங்க வேண்டும் எனக் கௌதம புத்தரும் விரும்பினார். வள்ளுவரும் விரும்பினார். திருமூலரும், இராமானுசரும், பஸவண்ணரும் விரும்பினர். வள்ளுவருக்கு வறுமைக்குக் காரணமானவர்கள் மீது கடும் சீற்றமே ஏற்பட்டுள்ளது என்பதை மேலே நோக்கியுள்ளோம். ஆனால் சமுதாயத்தைச் சுரண்டலுக்கு எதிரான வகையில் மாற்றியமைப்பதன் மூலமே நிலையான தீர்வுக்கு வழிகள் அமைக்கலாம் என்பதை இவர்கள் உணர்ந்திருக்கவில்லை. அது அவர்கள் குறையல்ல. அவர்களின் வரலாற்றுக் கட்டங்களில் அத்தகு சமுதாய வரலாற்றுணர்வு உருப்பெற்றிருக்கவில்லை.

இந்திய மண்ணில் மட்டுமல்ல, ஏனைய அனைத்துலக நாடுகளின் நிலையும் இதுதான். சமுதாயத்தைச் சுரண்டலுக்கு எதிரான வகையில் மாற்றியமைப்பதன் மூலமே அதன் பிரச்சினைகளுக்கு நிலையான தீர்வு காணமுடியும் என்ற கருத்து உருவாக்கப்பட்டு முன்மொழியப்பட்டதே கி.பி. 19–ம் நூற்றாண்டில்தான். இதனை முன்மொழிந்த வகையிலேயே அனைத்துலக தத்துவ வரலாற்றில் மார்க்சியம் என்ற பொதுவுடைமைத் தத்துவம் மாபெரும் திருப்புமுனையாக அமைந்தது என்பதை நாம் இத்தொடர்பிற் கவனத்திற் கொள்வது அவசியம்.

ஜெர்மனியரான கார்ல் மார்க்சும், பிரித்தானியரான பிரடெரிக் ஏங்கல்சும் தம் ஆழ்ந்த ஆய்வுப் புலமையூடாக உருவாக்கி வழங்கிய அத்தத்துவம் சமூகம், அரசியல், பொருளாதாரம் மற்றும் தத்துவம் ஆகியவற்றில் ஓர் அறிவியல்பூர்வமான பார்வையையும் விளக்கத்தையும் முன்வைத்தது. உலகாயதத்தின் அடிப்படையில் இயக்கவியல்

www.tamilarangam.net



அணுகுமுறையில் கட்டியமைக்கப்பட்ட அத்தத்துவம் மனித சமூகம் இவற்றை உருவாக்கிப் பேணிநின்றி சிந்தனைகள் அனைத்திலும் சிகரமாக அதிகபட்ச நம்பகமானதாகத் திகழ்வது. இந்திய மண்ணிலே உபநிடத ஞானியரும், கௌதம புத்தரும் வள்ளுவரும் உணர்வுநிலையிற் புலப்படுத்தி நின்ற மனிதநேயத்தை – சமூக அக்கறையை – அறிவியல்முறைமையிற் செயல் வடிவாக்க வகை செய்யும் தத்துவம் இது. அவ்வகையில் இந்தியத் தத்துவ மரபை உரியவாறு உணர்ந்தோரால் உள்வாங்கிக் கொள்ளப்படத்தக்க உயர்தகுதிப்பாடு இதற்கு உண்டு. ஆனால் அவ்வாறு நிகழவில்லை. இம்மண்ணில் அறிமுகமாகி எழுபதாண்டுகட்கு மேலாகியும் இன்னும் இது உரிய வரவேற்பைப் பெறவில்லை. ஏன்?

முதன்மைக் காரணம், இது ஒரு இறைமறுப்புத் தத்துவம் என்பதாகும். பல நூற்று ஆண்டுகளாக இறை நம்பிக்கையில் ஊறித் திளைத்து அதன் அடிப்படையில் 'கலை – பண்பாட்டு'ப் பாரம்பரியங்களைப் பேணி வந்துள்ள மக்கள் சமூகத்துக்கு மார்க்சியமென்றால் இறை நம்பிக்கைக்கு எதிரானது என்ற கருத்துப் படிமமே உள்ளுறைந்திருக்கிறது. அதனடிப்படையில் நமது மண்ணின் கலை – பண்பாட்டுப் பாரம்பரியங்களுக்கு எதிரான தளத்திலேயே மார்க்சியம் நிற்பதாக அவர்கள் நினைக்கின்றனர். இதனால் மார்க்சியத்தின் செழுமையான கூறுகள் பல இம்மக்களுக்கு உரியவாறு அறிமுகமாகவில்லை. மார்க்சியத்தின் அரசியல், பொருளியல், தொழிற்சங்கச் செயற்பாடுகள் முதலியன தொடர்பாக விரிவாகச் சிந்தித்துச் செயற்பட்டு வந்துள்ள இந்தியாவின் மார்க்சிய அறிஞர் பலர், அதன் சமூக பண்பாட்டுக் கூறுகளுடன் அருகே வைத்து ஒப்புநோக்கி, மக்கள் மத்தியில் எடுத்துரைக்க முற்பட்டதாகத் தெரியவில்லை. அவ்வாறு எடுத்துரைக்க முற்பட்ட முயற்சிகள்கூட உரியவாறு பொதுமக்கள் மத்தியில் அவர்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் சென்று சேரவில்லை.

இன்னும் குறிப்பாகச் சொல்வதானால் மார்க்சியத்தின் 'அறம்' பற்றி இம்மண்ணில் தெளிவான கருத்துக்கள் முன் வைக்கப்படவில்லை. மார்க்சியத்தில் 'அறம்' என ஒரு கூறு உளதா எனப் பலரும் வியப்புடன் வினா எழுப்பும் நிலையும் இங்கு உளது என்பதைச் சுட்டிக் காட்ட விழைகிறேன். மார்க்சியத்தின் அடிப்படையே அறம்தான். சமூக முரண்பாடுகளுக்கான காரணிகளான சுரண்டல் மனப்பாங்கு, உடைமையுணர்வு முதலியவற்றைக் களைந்தெறிய வேண்டும் என்ற வகையில் கார்ல்மார்க்சுக்கு எழுந்த அறச்சீற்றமே மார்க்சியம் என்ற சமூக அறிவியல் தத்துவத்தின் வேராகும். இந்த அடிப்படையில் மார்க்சியத்தில்

www.tamilarangam.net



விரவியிருக்கக்கூடிய அறக்கருத்துக்கள் இன்னும் நம் மத்தியில் திரட்டித் தொகுத்துரைக்கப்படவில்லை என்பதை நாம் மனதில் இருத்த வேண்டும். (இத்தொடர்பில் தமிழர் மத்தியிலான பலவீனமான ஒரு அம்சத்தையும் இங்கு சுட்டுவது பொருந்தும். அதாவது மார்க்சியத்தின் முக்கிய மூலப்படைப்பாக்கமான டாஸ்காபிடல் – மூலதனம் – இன்னும் தமிழில் முழு நிலையில் அறிமுகமாகவில்லை. நாம் மார்க்சியத்தை முழு நிலையில் தெரிந்து தெளிந்து கொள்ள இன்னும் எத்தனை தூரம் கடக்க வேண்டியுள்ளது என்பதை இது உணர்த்தும்).

மார்க்சியத்தின் அறம்சார் கூறுகள், இந்திய மண்ணில் பாரம்பரியமாகப் பேணப்பட்டு வந்துள்ள அறம், பக்தி, ஆன்மநேயம் முதலிய பண்பாட்டு விழுமியங்கள் அனைத்தும் அருகருகே வைத்து ஒப்பு நோக்கப்படுவதன் மூலமே இந்திய மண்ணுக்கான பொருத்தமான தத்துவத்தளம் ஒன்றை உருவாக்க முடியும். அதை விடுத்து இந்த மண்ணின் பாரம்பரியச் சிந்தனை வளத்தைப் புரிந்து கொள்ளாமல் மார்க்சியத்தை அப்படியே இங்கு இறக்குமதி செய்வதாலோ அன்றேல் இந்த மண்ணின் சிந்தனைகளுக்குள்ளே எல்லாம் அடங்கியுள்ளன எனக் கண்ணை மூடிக் கொண்டுவிடுவதாலோ சமுதாயத்துக்கு நன்மை புரிய முடியாது. இத்தொடர்பிலே, லெனின் அவர்கள் இளைஞர் கழகங்களின் பணிகள் தொடர்பான உரையொன்றிலே சுட்டியுள்ள கருத்தைப் பொருத்தம் கருதி எடுத்துக் காட்ட விழைகிறேன்.

> "மனித குலத்தின் வளர்ச்சி அனைத்தினதும் விளைவாகத் தோற்றுவிக்கப்பட்ட கலாச்சாரத்தைப் பற்றிய துல்லியமான அறிவைக்கொண்டும், இந்தக் கலாசாரத்தை மாற்றியமைப்பதன் மூலமும்தான் நாம் பாட்டாளி வர்க்க கலாசாரத்தைத் தோற்றுவிக்க முடியும் என்பதைத் தெளிவாக உணர்ந்தால் ஒழிய இப்பிரச்சினைக்கு நம்மால் தீர்வு காண இயலாது. பாட்டாளி வர்க்க கலாசாரம் மாயமாய் வெற்று வெளியினின்று தயாரிக்கப்படக் கூடியதல்ல. கம்யூனிசக் கலாசார நிபுணர்கள் எனத் தம்மை அழைத்துக் கொள்வோர் கண்டுபிடித்துக் கொடுத்து விடக் கூடியதுமல்ல. அவ்வாறு பெறலாம் என்பது அபத்தப் பேச்சு. முதலாளித்துவ சமுதாயம், அதிகார வர்க்க சமுதாயம் ஆகியவற்றின் ஆதிக்கத்தில் மனித குலம் சேமித்து வந்திருக்கும் அறிவுக் கருவூலத்தின் தர்க்கரீதியான வளர்ச்சியாகவே பாட்டாளி வர்க்கக் கலாசாரம் இருக்க முடியும் . . . . . "

(லெனின் நூல் திரட்டு – 4 : பக் : 216)

www.tamilarangam.net



புதிய பொருத்தமான கலாசாரத்தைக் கட்டியமைக்க முயலும்போது பாரம்பரிய கலாசாரம் பற்றிய தெளிவு எந்த அளவுக்கு அவசியமானது – தவிர்க்கவியலாதது – என்பதை லெனின் அவர்களது மேற்படி கூற்று உணர்த்தி நிற்கிறது என்பது தெளிவு.

மார்க்சியத்தைப் பற்றிய தெளிவுடன் இந்தியச் சமுதாயத்தை கட்டியமைக்க முற்படும்போது அதற்கான கருத்தியல்களை வழங்கும் ஆற்றல் இந்தியத் தத்துவ மரபில் நிறையவே உளது என்பது தெரியவரும். உபநிடதங்கள், குறள் என்பவற்றில் எண்ணக் கருக்களாக அமைந்தவை மட்டுமின்றி மைய நீரோட்ட தத்துவங்களான அத்வைதம் விசிட்டாத்வைதம் முதலியவை கூட இவ்வகையில் பயன்படவல்லன. குறிப்பாக அத்வைதத்தை, அதன் உலகம் உயிர் என்பவற்றை மறுக்கும் பகுதிக்கு முதன்மை தராமல் அதனை அனைத்தையும் பிரம்மமாகவே காணும் கருத்தியலாகக் கொள்ளும்போது சமநிலை நோக்காக அது புலனாகும். அவ்வகையில் மார்க்சியம் காணவிழையும் சமத்துவத்துடன் நெருங்கி வரும் தத்துவமாக அது அமைந்துவிடும். இவ்வகையிலே அத்வைதத்துக்கும் அதன் மூலாதாரங்களான உபநிடத சிந்தனைகளுக்கும் உள்ள பயன்பாட்டு வளம்தொடர்பாக ஒரு வரலாற்றுக் குறிப்பை இங்கு சுட்ட விழைகிறேன்.

கி.பி. 18, 19–ம் நூற்றாண்டுகளில் இந்திய தேசியத்தைக் கட்டி எழுப்புவதற்கான தொடக்க நிலைப் பணிகளை மேற்கொண்டவர்களான ராஜாராம் மோகன்ராய் சுவாமி விவேகானந்தர் முதலியவர்களுக்கு இந்திய பல்வேறு மொழி, இன பண்பாட்டுக் கூறுகளையும் ஒருங்கிணைத்துச் சிந்திப்பதற்குத் தென்பட்டது அத்வைத தத்துவமாகும். ராஜாராம் மோகன்ராய் அவர்கள் தனிப்பட்ட தெய்வ வழிபாடுகளுக்கு அப்பால் பிரம்மம் பெற முழுமையை நோக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்து வலியுறுத்தியவர். அதன் அடிப்படையில் அனைத்துலக சமயம் (Universal Religion) பற்றியும் சிந்தித்தவர். இவ்வாறான எண்ணங்களின் இயக்கநிலைச் செயற்பாடாக அமைந்ததே அவர் நிறுவிய பிரம்ம சமாஜம். விவேகாநந்தர் அவர்கள் அத்துவதத்தைச் செயன்முறை வேதாந்தமாகக் கொண்டவர். அதில் சங்கரர் புலப்படுத்தி நின்ற வர்க்க அவமதிப்புக் கூறுகளை மறுத்து அதனை அனைத்து மக்களின் ஆற்றலையும் தாண்டி வளர்க்கும் கருவியாகப் பயன்படுத்தியவர் அவர். 1893–ல் அமெரிக்காவில் சிக்காகோவில் நடைபெற்ற அனைத்து மதப் பேரவையிலே இந்தியச் சிந்தனைச் சாறாக அத்வைத வேதாந்த தத்துவத்தையே அவர் முழங்கியவர். இவரின் செயல்திறனால் உருவாகி, இராமகிருஷ்ணமிஷன் என்ற பெயரில் அனைத்துலகிலும் சமூக சேவை புரிந்து நிற்கும் நிறுவனம்

www.tamilarangam.net



அத்வைத வேதாந்தத்தளத்தில் உருப்பெற்றதாகும். இந்த நூற்றாண்டிலே, தேசப்பிதா எனப்படும் காந்தியடிகள் இந்திய மக்கள் அனைவரையும் ஓரணியில் திரட்டுவதற்கு உபநிடதங்கள், ஸ்ரீமத் பகவத்கீதை என்பன அடிப்படைகளாக அமைந்தன என்பதும் இத்தொடர்பிற் சுட்டத்தக்கது. தவத்திரு. குன்றக்குடி அடிகளார் மார்க்சியத்தோடு சைவசித்தாந்தத்தை அருகில் வைத்து நோக்க முயன்றுள்ளமையும் நமது கவனத்துக்கு உரியது.

எனவே இன்று மார்க்சியத்தின் பொதுவுடைமைச் சிந்தனையுடன் மிக நெருங்கிச் செயல்வடிவம் பெறக்கூடியனவாகவுள்ள இந்திய தத்துவ மூலங்களைத் தெரிந்து, தெளிந்து கொள்வதும் அதற்கேற்ப அவற்றை வளர்த்தெடுப்பதும் சாத்தியமான செயற்பாடுகளேயாம். இந்திய மண்ணில் இன்று முனைப்புற்றுவரும் இந்த அடிப்படைவாதத்துக்கு இந்தியத் தத்துவப் பரப்பு அடிமைப்பட்டு விழாமல் பேணிக் கொள்வதற்காகவும் இவ்வாறு சிந்தித்துச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது.

இன்று நாம் உலக மயமாக்கல் சூழலில், நுகர்வோர் கலாச்சாரத்தால் அந்நியப்பட்டுக் கொண்டிருக்கும் சமூக மாந்தரின் மத்தியில் மேற்படி தத்துவங்கள் பற்றிப் பேசுகிறோம். ஏன்? அவர்களை மீட்டெடுத்து, சமுதாய நலனை நோக்கி அவர்களது செயல்முறைகளைத் திசை திருப்பவேண்டும் என்பதற்காகத்தான். அதற்கேற்ற தத்துவத் தளங்களை உரியவாறு கண்டறிந்து காட்டவேண்டிய கடப்பாடு எமக்கு உளது.

இச்சூழலில் மேற்படி சமூக மாந்தரை மேலும் அந்நியமாக்கும் வகையிலும் பல சிந்தனைகள் முளைவிட்டு வருகின்றன என்ற உண்மையையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். உண்மை, நன்மை, அறம், உன்னதம் முதலிய விழுமியங்களை மறுப்பதும், கடந்த கால வரலாற்றினின்று மனிதனைத் தனிமைப்படுத்துவதுமான எண்ணங்கள் நம்முன் வைக்கப்பட்டுள்ளன. இவை முன் வைக்கப்படுவதன் உள்நோக்கம் என்ன? இவை மனிதரை மேலும் அந்நியப்படுத்தி விடும் நச்சுத்தன்மை வாய்ந்தன என்ற உண்மையை இவர்கள் உணர்ந்து கொண்டுதான் இவ்வாறு செயற்படுகிறார்களா? அல்லது அறியாமையாலா? எம்மால் விமர்சிக்கப்பட வேண்டிய முக்கிய பிரச்சினைகள் இவை என்பதை மட்டும் இங்கு முன் வைக்கிறேன்.

**நிகழ் 32**
**மே 96**

www.tamilarangam.net



# தரம்பால் : நாகரிகத்தின் அடிப்படைகளை நோக்கிய ஒரு பயணம்

**- ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன்**

1965–ல், தனது 43வது வயதில், தரம்பால் ஒரு புது வாழ்க்கையை மேற்கொண்டார். சாதாரணமாக ஒருவர் தனது முப்பதாவது வயதுக்குள் ஈடுபடாத துறையில் அதற்குப் பிறகு நுழைந்து பணியாற்றுவது என்பது அபூர்வம். அதிலும் ஆராய்ச்சி போன்ற துறைகளில் ஒரு குறிப்பிட்ட வயதுக்கு மேல் நுழைந்து முன்னேற்றம் காண்பது அரிது. சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று படிப்பை பாதியிலேயே கைவிட்ட நூற்றுக்கணக்கான இளைஞர்களைப் போலவே தரம்பாலும் கல்லூரிப் படிப்பை கைவிட்டு 1942 ஆகஸ்ட் போராட்டத்தில் பங்கேற்றார். சுதந்திரம் வந்தவுடன் பெரும் மாற்றங்கள் நிகழும் என்று பலரைப் போலவே எதிர்பார்த்து கொஞ்சம் ஏமாற்றம் அடைந்தார். இந்தியாவை புனராக்கம் செய்யும் பணியில் உற்சாகத்துடன் ஈடுபட்ட எத்தனையோ நபர்களைப் போலவே தரம்பாலும் தன் பங்கை ஆற்ற விரும்பி ரிஷிகேசத்தின் அருகே கூட்டுறவு கிராமம் ஒன்றை உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டார். கிராம பஞ்சாயத்துகள் மூலம் அரசியல் அதிகாரம் பெரும்பான்மை மக்களைச் சென்றடைய வேண்டும்; கிராம சுயராஜ்யம் என்ற கனவை நனவாக்க வேண்டும் என்று விரும்பிய குழுக்கள், அமைப்புகள், நிறுவனங்கள் முதலியவற்றில் தன்னை முழுவதும் ஈடுபடுத்திக் கொண்டார். அகில இந்திய பஞ்சாயத்து பரிஷத் என்ற அமைப்பின் இயக்குனராக பல ஊர்களுக்கு சென்று பஞ்சாயத்து அமைப்பு செயல்படும் முறையை ஆராய்ந்தபோது தரம்பாலுக்கு ஏற்பட்ட அனுபவங்கள் அவரை புதிய பாதையில் கொண்டுவிட்டன. உதாரணமாக : ராஜஸ்தான் பகுதியில் ஒரு கிராமத்தில் மக்கள் தங்களுடைய பல தேவைகளை மரபு ரீதியான பழைய பஞ்சாயத்து அமைப்பை வைத்தே நிறைவேற்றிக் கொண்டிருந்தது தெரிந்தது. வேறு பல கிராமங்களில் மக்கள் தங்களுடைய அமைப்புகளையும் அரசு சார்ந்த, அதிகார பூர்வமான அமைப்புகளையும் துல்லியமாக வேறுபடுத்திக் கண்டது தெரிந்தது. ஒரிஸ்ஸாவின் சில பகுதிகளில் 'சமுதாய கிராமங்கள்' என்பவை சமீப காலம் வரை இருந்தது தெரிந்தது.

தமிழ்நாட்டின் பலபகுதிகளில், குறிப்பாக தஞ்சாவூர் மாவட்டத்தில் இத்தகைய 'சமுதாய கிராமங்கள்' ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்புவரை செயல்பட்ட விவரங்கள் கிடைத்தன. மொத்தத்தில் தரம்பாலுக்கு கிடைத்த தகவல்கள், ஏற்பட்ட அனுபவங்கள் முதலியன இந்திய சமூக வாழ்க்கை

www.tamilarangam.net



பற்றி அவர் அறிந்துள்ளது மிகவும் சொற்பமே என்பதை மீண்டும் மீண்டும் வலியுறுத்துவதாக இருந்தன. இந்திய சமூக வாழ்வின் அடிப்படையான அம்சங்கள் என்ன, இந்திய மனம் எவ்வாறு சிந்தித்து செயல்படுகிறது என்ற கேள்விகளுக்கு விடை காண்பதன் மூலம் இந்தியாவின் சமகாலப் பிரச்சினைகளுக்கு வழிகாணமுடியும் என்ற எண்ணம் தரம்பாலுக்கு வலுவடையத் தொடங்கியது.

இந்திய நாகரிகத்தின் அடிப்படைகளை எவ்வாறு அறிவது? வேத, உபநிஷத்துகளில் தொடங்கி இந்திய தத்துவம், சமயம், சாஸ்திரங்கள் என்று போகலாம். ஆனால் அதற்குத் தேவையான சமஸ்கிருத மொழியறிவு தரம்பாலுக்கு இருக்கவில்லை. தாய்மொழியான இந்தியும், சுமாரான ஆங்கில அறிவும் தவிர அவருக்கு வேறு திறமைகளோ, சிறப்பான பயிற்சியோ இருக்கவில்லை. கல்வெட்டுக்கள், அகழ்வாராய்ச்சிகள் என்று அறிந்து கொள்ளலாம். ஆனால் அதற்குத் தேவையான பயிற்சியும் திறமையும் தரம்பாலுக்கு இருக்கவில்லை. ஆனால் விடாமுயற்சியும், தான் பார்த்து கேட்டுபடித்து அறிந்தவற்றை பல கோணங்களிலிருந்து ஆராய்ந்து பார்க்கும் திறமையும் இருந்தன. ஆங்கில ஆதிக்கத்திற்கு முற்பட்ட இந்திய சமூகம் பற்றிய தகவல்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் ஆவணக் காப்பகங்களில் பிரிட்டிஷ் அதிகாரிகளும் மற்றவர்களும் எழுதி வைத்திருந்தவற்றை ஆராயத் தொடடங்கினார். ஒரு குறிப்பிட்ட தலைப்பில் என்று ஆய்வு மேற்கொண்டதால் பல்வேறு விஷயங்களையும் ஒரே சமயத்தில் திரட்டுவதோடு அவற்றை ஏதோவிதத்தில் ஒழுங்குபடுத்திக்கொண்டு, தொகுத்துப் பார்க்க வேண்டியதாயிற்று. தரம்பால் ஆவணங்களிலிருந்து கடந்த 25 ஆண்டுகளாக எடுத்துள்ள குறிப்புகளை மட்டும் கணக்கிட்டால், தட்டச்சு செய்த 6–8 பெரிய பெட்டிகளில் நிரப்பும் அளவுக்கு தாள்கள் இருக்கும். 1750 லிருந்து 1947 வரை பிரிட்டிஷ் ஆட்சியில் அதிகாரிகள் தயாரித்த அறிக்கைகள், குறிப்புகள், ஆவணங்கள் என்று எல்லாவற்றையும் நன்றாக அறிந்தவர்கள் யாராவது இருந்தால் அதுதரம்பால்தான். இந்திய ஆவணக் காப்பகங்களில் என்று இல்லாமல், பிரிட்டிஷ் மியூசியம், இந்தியா ஆபீஸ் ரெகாட்ஸ் என்று இங்கிலாந்திலுள்ள பல ஆவணக் காப்பகங்களிலும், நூலகங்களிலும் தரம்பால் தகவல்களைத் திரட்டியுள்ளார். தவிர தனியார் வசம் உள்ள தகவல்கள், குறிப்புகள், கடிதங்கள் என்பவற்றையும் விட்டு வைக்கவில்லை. மொத்தத்தில் காலனிய ஆட்சிகால வரலாறு பற்றியும் அதற்கு சற்று முந்திய வரலாறு பற்றியும் தரம்பால் தெரிந்து வைத்துள்ள அளவுக்கு வேறு யாரும் அறிவார்களா என்பது சந்தேகமே.

இந்திய சமூக வாழ்க்கையைப் பற்றிய ஆர்வம் தரம்பாலை மற்ற சமூகங்களைப் பற்றியும் அறிந்துகொள்ள தூண்டியது. குறிப்பாக ஐரோப்பிய

www.tamilarangam.net



வரலாறு தரம்பாலைக் கவர்ந்தது. ஐரோப்பிய அரசு ஆட்சி முறை, கல்வி, தொழில், விஞ்ஞானம் என்று ஐரோப்பிய சமூக அமைப்பு பற்றிய உண்மைகளை இந்திய சமூக வாழ்வின் தன்மைகளோடு ஒப்பிட்டுப் பார்ப்பது தவிர்க்கவியலாததாகியது. ஐரோப்பிய நாகரிகத்தின் உந்து சக்தி என்ன? மற்ற நாடுகளை, நாகரிகங்களை அடிமைப்படுத்தி ஆட்சி செலுத்த உதவிய கலாச்சாரக் கூறுகள் எவை, ஏன் இந்தியா போன்ற சமூகங்கள் ஐரோப்பியப் பாதையில் செல்லவில்லை போன்ற பல்வேறு கேள்விகள் மிகவும் இயற்கையாக எழுந்தன. கடந்த 25 ஆண்டுகளாக தரம்பால் இந்த கேள்விகளுக்கும் இன்னும் பல கேள்விகளுக்கும் விடைகளைக் காண ஆவணங்களை மட்டுமல்லாமல் இலக்கியம், புராணம் என்று பல்வேறு ஆதாரங்களையும் கவனித்து வருகிறார். இந்திய சமூகத்தின் கரு என்ன என்ற கேள்வியை தரம்பால் வெறும் பண்டிதத்தனமாக எழுப்பவில்லை. இந்தியாவின் சமகாலப் பிரச்சினைகளுக்குத் தீர்வாகவும், நாம் செல்லவேண்டிய பாதையைப் பற்றிய தெளிவு பிறக்கவும் இத்தகைய ஆய்வின் தேவை இருப்பதாக தரம்பால் கருதுகிறார். அவர் இந்திய வரலாற்றில் நாட்டம் கொண்டது நாம் இழந்துவிட்டதாகக் கருதப்படும் பொற்காலத்தைப் பற்றி நமக்கு நினைவூட்டுவதற்காக அல்ல. தரம்பால் ஒரு கட்டுரையில் குறிப்பிடுவதுபோல நமது தனிவாழ்க்கையில் மட்டும் அல்ல வரலாற்றிலும் இழந்துவிட்டவற்றை திரும்பப் பெறுவது அசாத்தியமே. ஆனால் நம்மைப் பற்றிய அறிவு நாம் செல்லவேண்டிய பாதையைத் தெளிவுபடுத்தும். இன்றுள்ள சிக்கலான உலக அரசியல் சூழலில் இந்திய நாகரிகம் தன்னை முற்றிலும் இழந்துவிடாமல் இருக்க வேண்டுமானால் நம்முடைய சிறப்புகளை மட்டுமல்லாமல் நமது பலகீனங்களையும் அறிய வேண்டும்.

தரம்பாலின் முதல் நூல் இந்திய விஞ்ஞானம் பற்றிது. 'பதினெட்டாம் நூற்றாண்டில் இந்திய விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பம் என்ற தலைப்பில் 1971–ல் இந்த நூல் வெளிவந்தது. இந்த நூலின் சிறப்பு என்று இரண்டு கருத்து கூறலாம். ஒன்று, அதுவரை பரவலாக அறியப்பட்டிருந்த துறைகளைத் தவிர வேறு பலதுறைகளில் இந்தியாவின் சாதனைகள் என்ன என்பதை விளக்கியது. மற்றொன்று, முழு முழுக்க ஐரோப்பிய பயணிகள், ஆங்கில அதிகாரிகள் முதலியவர்களின் குறிப்புகளிலிருந்து காலனிய ஆட்சிக்கு சற்று முன்புகூட நம் விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகள் எந்த மட்டத்தில் இருந்தன என்பதை விளங்கியது. இந்த நூலுக்கு தரம்பால் எழுதியுள்ள முன்னுரையில் பல முக்கியமான கேள்விகளை எதிர்கொள்கிறார். ஐரோப்பிய வரலாற்றில் ஓர் இருண்டகாலம் இருந்ததால் இந்தியாவிலும் ஓர் இருண்ட காலம்

www.tamilarangam.net



இருந்திருக்க வேண்டும் என்ற நம்பிக்கையில் இந்திய விஞ்ஞானம் மட்டுமல்ல இந்திய சமூகமும் தேங்கிப் போயிருந்தது என்று பல அறிஞர்கள் கூறிவந்ததை தகுந்த ஆதாரங்களுடன் மறுக்கிறார். இந்திய நாகரிகம் ஏன் அடிமைப்பட்டது என்ற கேள்விக்கு விடையாக சொல்லப்படும் காரணங்களில் ஒன்று இந்திய விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பெரும் வளர்ச்சி பெற்றிருந்த ஐரோப்பிய விஞ்ஞான தொழில் நுட்பத்தினால் தோற்கடிக்கப்பட்டன என்பதாகும். காலனிய ஆட்சி தொடங்கிய பிறகும்கூட இந்திய விஞ்ஞான தொழில்நுட்ப சாதனைகள் ஐரோப்பிய சாதனைகளுக்குக் கொஞ்சமும் குறையாமல் இருந்தன என்பதை நிரூபித்து, இந்தியா அடிமைப்பட்டது வளர்ச்சியின்மையால் அல்ல என்று காட்டுகிறார். இந்தியாவின் வீழ்ச்சி இந்திய விஞ்ஞானம் வளர்ச்சியைத் தடை செய்திருக்க வேண்டும் என்று தரம்பால் கூறும்போது காலனியத்தின் விளைவாகத்தான் விஞ்ஞான, தொழில்நுட்பத்தேக்கம் ஏற்பட்டது என்பது வெளிப்படுகிறது. கணிதம், வானியல் தவிர வேறு துறைகளில், குறிப்பாக தொழில்நுட்பத்தில் நம் சாதனைகள் எதுவும் இருக்கவில்லை என்ற பரவலான கருத்தை மாற்றும் வண்ணம் இந்த நூலில் பல தகவல்கள், கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இந்தியாவில் 1800 வரை பழக்கத்திலிருந்த அம்மைத் தடுப்பு முறை பற்றியும் இந்திய எஃகு பற்றியும், செயற்கையாக ஐஸ் தயாரித்த தொழில்நுட்பம் பற்றியும் அதுவரை அறிஞர்கள்கூட கேள்விப்பட்டிராத உண்மைகள் இந்த நூலில் இடம் பெற்றுள்ளன. ஆனால் நம் பண்டிதர்களின் மௌனம் காரணமாக இந்த நூல் வெளிவந்த பத்தாண்டுகள் வரை சரியாக விவாதிக்கப்படாமலே இருந்தது. இந்த நூலுக்கு சரியான விமர்சனம்கூட இந்திய விஞ்ஞான சஞ்சிகைகளில் வரவில்லை.

மகாத்மா காந்தியின் போராட்ட முறைகளின் வெற்றிக்கு அவர் ஏதோ விதத்தில் இந்திய மரபிலிருந்து அப்போராட்ட முறைகளை உருவாக்கியதுதான் என்ற திடமான நம்பிக்கை தரம்பாலுக்கு இருந்தது. ஆவணங்களில் அதற்கான ஆதாரங்கள் கிடைத்தபோது தரம்பால் மிகவும் வியப்படையவில்லை.

வங்காள மாகாணத்தில் பிரிட்டிஷ் அரசு 1810 வாக்கில் விதித்த வரியை எதிர்த்து நடந்த போராட்ட விவரங்களை 'ஒத்துழையாமை இயக்கமும் இந்திய மரபும்' என்ற நூலில் தொகுத்துள்ளார். ஜெயப்பிரகாஷ் நாராயணனின் முன்னுரையுடன் இந்த நூல் 1971–ல் வெளிவந்தது. தங்களால் நியாயமற்றது என்று கருதப்பட்ட வரியை எதிர்த்து பல ஊர்களில் மக்கள் சத்யாகிரகம் செய்த விவரங்களும் ஹர்தால், தர்ணா போன்ற

www.tamilarangam.net



முறைகளை கடைப்பிடித்து பிரிட்டிஷ் ஆட்சியை ஸ்தம்பிக்கச் செய்த விவரங்களும் இப்போராட்டம் மற்ற ஊர்களுக்கு பரவாமல் தடுக்க பிரிட்டிஷ் அதிகாரிகள் மேற்கொண்ட முயற்சிகளும் சினிமாப் படம் போல விவரிக்கப்பட்டுள்ளன. வாரணாசியில் (காசி) சுமார் ஒரு லட்சம் மக்கள் திரண்டு அகிம்சை வழியில் போராட்டம் நடத்தியதை பிரிட்டிஷ் அதிகாரிகள் விவரிக்கும்போது காந்தியின் ஒத்துழையாமை இயக்கம் நம் கண்முன்னே தோன்றுகிறது.

1983-ல் தரம்பாலின் மற்றொரு நூல் வெளிவந்தது. 'அழகிய மரம் (The Beautiful Tree) என்ற தலைப்பிடப்பட்ட இந்த நூலில் பதினெட்டாம் நூற்றாண்டில் இந்தியாவில் இருந்த கல்வியமைப்பு பற்றிய விவரங்கள் உள்ளன. 1931-ல் மகாத்மா காந்தி லண்டனில் ஆற்றிய ஒரு சொற்பொழிவில் காலனிய ஆட்சிக்குப் பிறகு இந்தியாவில் எழுத்தறிவின்மை கூடியிருப்பதாகவும் அழகிய மரமாக இருந்த இந்தியக் கல்வியமைப்பை காலனிய அரசு உதாசீனப்படுத்தி பட்டுப்போகச் செய்ததால் இந்த நிலை ஏற்பட்டது என்றும் குற்றம் சாட்டினார்.

அழகிய மரம் என்று காந்தியால் வர்ணிக்கப்பட்ட இந்தியக் கல்வியமைப்பு எப்படி இருந்தது? 1820 களில் சென்னை மாகாணக் கவர்னராக இருந்த தாமஸ் மன்ரோ மேற்கொண்ட கணக்கெடுப்பு விவரங்கள் அனைத்தையும் தரம்பால் தொகுத்துள்ளார். 1813-ம் ஆண்டு பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் இந்தியா குறித்து பெரிய விவாதம் நடந்தது. இந்தியாவை கிறித்தவமயமாக்குவது எப்படி என்ற கேள்விக்கு பலவிதமான வழிகள் கூறப்பட்டன. இந்திய மொழிகளில் கிறித்தவ மதப்பிரச்சாரம் செய்வதா, ஆங்கில மொழியை எந்த அளவுக்கு இந்தியாவில் புகுத்துவது, இந்திய மரபு, பழக்கவழக்கங்களை மாற்ற வேண்டுமா அல்லது அவற்றுடன் சமரசமாக நடந்து கொண்டே கிறித்தவ மதப் பிரச்சாரம் செய்ய வேண்டுமா என்ற பல கேள்விகள் விவாதிக்கப்பட்டன. இந்தியாவிலுள்ள மரபுக் கல்வியமைப்பை பற்றி விவரமாக அறிந்து கொள்வதன் தேவை வலியுறுத்தப்பட்டது. ஆங்கிலக் கல்வியை புகுத்துவதற்கு முன்பு அத்தகைய விவரங்களை திரட்ட வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது. அதன்படி மாகாணக் கவர்னர்கள் இந்திய மரபுக் கல்வியமைப்பு பற்றிய விவரங்களை திரட்டுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். தாமஸ் மன்ரோ 1822-ம் ஆண்டு அத்தகைய கணக்கெடுப்பு செய்யும்படி மாவட்ட ஆட்சியாருக்கு உத்தரவிட்டான். 1822 முதல் 1825 வரை ஒவ்வொரு மாவட்டத்திலும் கணக்கெடுப்பு செய்யப்பட்டு விவரங்கள் மாகாணக் கவர்னருக்கு அனுப்பப்பட்டன. மாவட்ட ஆட்சியர் தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளிகளின்

www.tamilarangam.net



எண்ணிக்கை மொத்த மாணவர்களின் எண்ணிக்கை, மாணவர்களின் சாதி விவரங்கள் மற்றும் வேறு சிறப்பான தகவல்களை திரட்டும்படி ஆணையிடப்பட்டனர். ஒரு சில மாவட்ட ஆட்சியர் தாங்கள் முக்கியமாகக் கருதிய தகவல்களையும் சேகரித்து அனுப்பினர். பலர் தங்களுக்கு இடப்பட்ட பணியை மட்டும் செய்வதோடு நிறுத்திக் கொண்டனர். ஆட்சியர்களின் அறிக்கைகளை தொகுத்து ஆராய்ந்து தாமஸ் மன்ரோ தன்னுடைய குறிப்புகளுடன் அவற்றை லண்டனின் பார்வைக்கு அனுப்பினான்.

இந்த கணக்கெடுப்பில் வெளிப்பட்ட சில உண்மைகளை பார்ப்போம். 1822–ல் சென்னை மாகாணத்தில் 11,575 பள்ளிகள் இருந்தன. அவற்றில் கல்வி பயின்ற மாணவர்களின் தொகை 1,57,185 ஆகும். 'கல்லூரிகள்' என்று ஆங்கில அதிகாரிகளால் வர்ணிக்கப்பட்டவை மொத்தம் 1094 அவற்றில் 5431 மாணவர்கள் உயர்கல்வி கற்றார்கள் என்று தெரிகிறது. சென்னை மாகாணத்தின் நிலையை அன்றைய இங்கிலாந்துடன் ஒப்பிட்டு பார்ப்பது சுவையாக இருக்கும். 1800 வாக்கில் இங்கிலாந்தின் மக்கள் தொகையும் சென்னை மாகாணத்தின் மக்கள் தொகையும் கிட்டத்தட்ட சமமாகும் இங்கிலாந்தில் பள்ளிகளில் கல்வி பயின்ற மாணவர்களின் தொகை சுமார் 75000. சென்னை மாகாணத்தில் அதே காலத்தில் அத்தொகை இரண்டு மடங்காக இருந்தது. ஆனால் இங்கிலாந்தில் 1805–க்குப் பிறகு கல்வியில் பெரிய மாற்றங்கள் நிகழ்கின்றன. 1851 வாக்கில் மாணவர்களின் தொகை 21,44,337 என்றாகிறது. ஆனால் சென்னை மாகாணத்தில் 1879 – 80 வாக்கில் மாணவர்களின் தொகை 2,68,379 மட்டுமே. இங்கிலாந்தில் 1800 வாக்கில் 3363 பள்ளிகள் மட்டுமே இருந்தன. சென்னையில் அத்தொகை குறைந்த அளவு மூன்று மடங்காக இருந்தது. ஆனால் இங்கிலாந்தில் 1851–ல் பள்ளிகளின் எண்ணிக்கை 46,114 ஆக உயர்ந்தது. சென்னையில் 1879 – 80 ல் மொத்தம் 10553 பள்ளிகள் மட்டுமே இருந்தன. அதாவது 1822 ல் இருந்த எண்ணிக்கையைவிட குறைந்த எண்ணிக்கையிலான பள்ளிகள்!

இந்த கணக்கெடுப்பில் மிகவும் வியப்பை அளிக்கும் உண்மைசாதிவாரியாக மாணவர்களின் எண்ணிக்கையாகும். ஒவ்வொரு மாவட்ட ஆட்சியரும் மாணவர்களை பிராமணர், ஷத்திரியர், வைசியர், சூத்திரர், இதர ஜாதியினர், முஸ்லிம்கள், கிறித்தவர் என்று பிரித்து தகவல்களை அனுப்பினர். மேற்குறிப்பிட்ட பிரிவுகள் சாதிகள் என்பதைவிட வர்ணங்கள் என்பது சரியாக இருக்கும். க்ஷத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற பிரிவுகளில் அவர்கள் யாரையெல்லாம் சேர்த்துக்கொண்டனர் என்ற

www.tamilarangam.net



விவரங்கள் இல்லை. அதேபோல சூத்திரர் அல்லாத பிரிவு என்று அவர்கள் குறிப்பிடுவது தீண்டத்தகாதவர்களையா அல்லது வேறு சிலரையா என்ற கேள்விக்கும் பதில் கிடைப்பதில்லை. மாவட்ட ஆட்சியர் யாரையெல்லாம் சூத்திரர்கள் என்று கருதினார்களோ அவர்களுடைய எண்ணிக்கை உயர் ஜாதியினராகக் கருதப்பட்ட மற்ற மூன்று பிரிவுகளைக் காட்டிலும் மிக அதிகமாக இருக்கிறது. குறிப்பாக தமிழ் பேசும் மாவட்டங்களை மட்டும் எடுத்துக் கொண்டால் (அதாவது இன்றைய தமிழ்நாடு) சூத்திர மாணவர்களின் சதவிகிதம் 60க்கு மேல் வரும். பார்ப்பனர் கோட்டை என்று கருதப்பட்ட தஞ்சாவூர், திருச்சி, திருநெல்வேலி மாவட்டங்களின் மொத்த மாணவர் தொகை 36,877 ஆகும். இதில் பார்ப்பன மாணவர்களின் எண்ணிக்கை 6031 மட்டுமே, அதாவது 16 சதவிகிதம். சென்னை மாகாணத்தில் நடந்த கணக்கெடுப்பு பற்றி தாமஸ் மன்ரோ 1856–ம் ஆண்டு, மார்ச் மாதம் எழுதிய குறிப்பில் இரண்டு செய்திகளை முடிவாக கூறுகிறார் :

1. ஒரு ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு பள்ளிக்கூடம் இருந்ததாகக் கொள்ளலாம்.

2. பள்ளி செல்லும் வயதுடையவர்களில் (அதாவது 5 வயது முதல் 15 வயது வரை உள்ளவர்கள்) மூன்றில் ஒரு பங்காவது பள்ளிகளில் கல்வி பயின்றார்கள் என்பது நிச்சயம்.

சென்னையில் நடந்த கணக்கெடுப்பை போன்ற கணக்கெடுப்புகள் பாம்பாய், வங்காளம் பஞ்சாப் போன்ற இடங்களிலும் நடந்தன. சென்னை மாகாணத்தில் கிடைத்தது போன்ற தகவல்களே அம்மாகாணங்களிலும் கிடைத்தன. குறிப்பாக வங்காளத்தில் 1830 வாக்கில் வில்லியம் ஆதம் என்பவன் செய்த கணக்கெடுப்பில் வங்காளம் முழுவதும் சுமார் ஒரு லட்சம் பள்ளிக்கூடங்கள் இருந்தன என்று கூறப்பட்டது. ஆதம் எழுதிய அறிக்கையில் பள்ளிக்கூடங்களில் கல்வி போதித்த ஆசிரியர்களின் சாதிவிபரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. மிகவும் தாழ்ந்த ஜாதிகள் எனப்படும் பிரிவுகளிலிருந்தும் கணிசமான எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருந்தார்கள் என்பது தெரிகிறது. சண்டாளர் என்ற பிரிவிலிருந்தும் சில ஆசிரியர்கள் இருந்தார்கள் என்று ஆதம் அறிக்கை கூறுகிறது! அழகிய மரமாக இருந்த இந்தியக் கல்வி அமைப்பு பட்டுப்போனது எவ்வாறு? விளைச்சலில் ஐம்பது சதவிகிதம் வரியாக வசூலிக்கப்பட்டது முதல் கிராமங்களின் வீழ்ச்சி தொடங்குகிறது. கோயில்கள், குளங்கள், சத்திரங்கள் என்று பல கிராம அமைப்புகள் தகர்ந்தன. பள்ளிகூடங்களும் கொஞ்சங் கொஞ்சமாக ஆதரவின்றி மறைந்தன.

www.tamilarangam.net



1985 வாக்கில் தரம்பால் கண்டெடுத்த மற்றொரு முக்கியமான ஆவணமும் தமிழ்நாடு சம்பந்தப்பட்டதுதான். செங்கல்பட்டு மாவட்டத்திலுள்ள 2000 கிராமங்களைப் பற்றிய விவரங்கள் அடங்கிய ஆவணங்களை 1970 வாக்கிலேயே தரம்பால் பார்த்திருந்தார் என்றாலும் அவற்றின் முக்கியத்துவம் புரியாமல் இருந்தார். அதே ஆவணங்களை 1980 வாக்கில் மீண்டும் பார்த்தபோது சில கேள்விகள் எழுந்தன. பல நண்பர்களுடன் விவாதித்து, ஆவணங்களை மீண்டும் முண்டும் ஆராய்ந்து, மிகவும் ஆச்சரியமான முடிவுகளுக்கு வந்தார்.

1760 களில் மேஜர் பர்னாட் என்பவன் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனிக்காக செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரு கணக்கெடுப்பு செய்தான். இப்பகுதி அப்போது ஆற்காடு நவாப்பின் ஆளுகைகுள்ளிருந்தது. ஆற்காடு நவாப் செங்கல்பட்டு மாவட்டத்தை ஜாகீராக பிரிட்டிஷ் வசம் ஒப்படைத்திருந்தான். அதாவது செங்கல்பட்டு பகுதியில் வரிவிதித்து அதை வசூல் செய்யும் உரிமையை கிழக்கிந்திய கம்பெனி பெற்றிருந்தது. தங்கள் ஆட்சிக்குள் முழுமையாக வரப்போகும் செங்கல்பட்டு மாவட்டத்தைப் பற்றி அறிந்துகொள்ள மேஜர் பர்னாட் என்பவனை பிரிட்டிஷ் அரசு நியமித்தது.

மேஜர் பர்னாட் விட்டுச் சென்றுள்ள குறிப்புகள், தகவல்கள் முதலிய காலனிய ஆட்சிக்கு முன்பு இந்திய சமூக அமைப்பு இயங்கிய விதத்தை துல்லியமாக விளக்குகின்றன. மேலும் இந்தியாவில் இன்றுவரை எந்த பொருளாதார, சமூகவியல் ஆய்வும் மேற்கொள்ளாத அளவுக்கு தகவல்கள் திரட்டப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் மக்கள் தொகை, நிலம், நன்செய், புன்செய், தரிசு, குளம், குட்டை, கோயில்கள், சாலை, பயிர் செய்யப்பட்ட தானிய வகைகள், கிராமத்தில் நிலவிய தொழில்கள், கிராம வீடுகளின் அமைப்பு என்று ஏராளமான தகவல்களைத் தருகிறது. கிராமத்தின் மொத்த விவசாய உற்பத்தியில் பொதுப் பணிகளுக்காக கலாச்சார – சமய அமைப்புகளுக்காக, கிராம ஊழியர்களுக்காக என்று சுமார் 60 – 80 நபர்கள், நிறுவனங்கள், அமைப்புகள், பணிகள், தொழில்கள் முதலியவற்றுக்கு ஒதுக்கப்பட்ட அளவுகள் பற்றிய முழுவிவரம் கிடைக்கிறது.

பர்னாட் தொகுத்துள்ள விவரங்களைக் கொண்டு சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்பு இந்திய சமூகம் எந்த அடிப்படையில் இயங்கியது என்ற கேள்விக்கு விடைகாண முடியும். இந்திய கிராம அமைப்பில் எவை பிரதானமாக இருந்தன, யாரெல்லாம் முக்கியமாக கருதப்பட்டனர். கிராமங்களுக்கிடையே என்ன உறவு இருந்தது. கிராமங்களுக்கும் மத்திய மாநில அரசுக்கும் இருந்த உறவு எத்தன்மையது போன்ற கேள்விகளுக்கு பர்னாட் தொகுத்துள்ளவை பதில் அளிக்கமுடியும்.

www.tamilarangam.net



கிராம விவசாய உற்பத்தியில் சுமார் 25–30 சதவிகிதம் பொதுப்பணிகளுக்கும், சமய கலாச்சார நிறுவனங்களுக்கும் கிராம ஊழியர்களுக்கும் ஒதுக்கப்பட்டது. உற்பத்தியில் 15–20 சதவிகிதம் கிராமத்திற்கு உள்ளே இருந்த நபர்கள், அமைப்புகள், பணிகள் முதலியவற்றிற்கும், சுமார் 5–10 சதவிகிதம் கிராமத்திற்கு வெளியே இருந்த அமைப்புகள், நபர்கள் பணிகள் முதலியவற்றிற்கு செலவிடப்பட்டதாகத் தெரிகிறது. இன்று வரிப்பணத்தில் மக்கள் நலனுக்காக, பொதுப் பணிகளுக்காக என்று செலவிடப்படும் தொகையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது செங்கல்பட்டு கிராமங்கள் செய்த ஒதுக்கீடுகள் சிறப்பாகவே தோன்றுகின்றன. உதாரணமாக, செங்கல்பட்டு கிராமங்கள் சராசரியாக உற்பத்தியில் ஏழு சதவிகிதம் நீர்ப்பாசனத்திற்காக ஒதுக்கின. இன்று தமிழ்நாட்டின் நிதி அறிக்கையில் நீர்ப்பாசனத்திற்காக அந்த அளவு ஒதுக்கப்படுகிறதா என்பது சந்தேகமே. மேலும், செங்கல்பட்டு கிராமங்கள் ஒவ்வொரு சிறிய பணிக்கும் ஒதுக்கீடு செய்துள்ளது மிகவும் கவனமாக திட்டமிடப்பட்டுள்ளதை காட்டுகிறது. கோயில் விளக்குக்காக, நந்தவனத்திற்காக, தண்ணீர்ப்பந்தலுக்காக, தேவாசிக்காக என்று ஒவ்வொரு சிறிய செயலும் கவனம் பெற்று அதற்கான ஒதுக்கீட்டைப் பெற்றது. நாம் கொஞ்சமும் எதிர்பாராத தகவல் உள்ளன. கிராமத்தின் முக்கியப் பணிகளான காவல், கம்புகட்டி, அளவுக்காரன் முதலியவற்றை செய்தவர்கள் பறையர்கள் என்று தெரிகிறது. அதற்காக அவர்களுக்கு கிடைத்த ஊதியம் பஞ்சாங்கம் செய்து பிழைத்த பிராமணர்கள் பெற்ற ஊதியத்தைவிட பல மடங்கு அதிகமாகத் தெரிகிறது. 2000 கிராமங்களிலும் வண்ணான், நாவிதன் முதலிய பணியாளர்கள் பஞ்சாங்கம், பௌராணிகர், வேதவிருத்தி என்ற பிராமணர்களைவிட அதிக தானியம் பெற்றது இந்திய கிராமங்களைப் பற்றி நாம் இதுவரை நினைத்து வந்துள்ளதை கேள்விக்குள்ளாக்குகிறது. அதேபோல அம்மன் – பிடாரி கோயில்களுக்காக கிராம உற்பத்தியிலிருந்து அளிக்கப்பட்ட தானியங்களின் அளவு சிவன், பெருமாள் கோயில்களுக்கு கொடுக்கப்பட்ட தானியங்களின் அளவைவிட கொஞ்சம் அதிகம் தவிர மானியங்களைப் பெற்றவர்கள் பெரும்பாலும் பிராமணர்கள், கோயில்கள் மடங்கள், சத்திரங்கள் என்ற கருத்தை மாற்றும் வண்ணம் மானியதார்களின் பட்டியலில் பறையர்களும், தேவதாசிகளும் ஏனைய தொழிலாளிகளும் இடம் பெறுகின்றனர். ஒவ்வொரு கிராமமும் அப்பகுதியிலுள்ள புகழ்பெற்ற கோயில்களுக்கும் பெரும் பண்டிதர்களுக்கும் உற்பத்தியிலிருந்து ஒரு தொகையை கொடுத்துள்ள விவரங்கள் உள்ளன. உதாரணமாக, காஞ்சி வரதராஜபெருமாள் கோயிலுக்கு செங்கல்பட்டு பகுதியில் சுமார் ஒரு ஆயிரம் கிராமங்களாவது ஒதுக்கீடு செய்துள்ளதை அறியமுடிகிறது. அதேபோல கும்பகோணத்திலிருந்த புகழ்பெற்ற பண்டிதர்கள் சிலர் 400 – 500

www.tamilarangam.net



கிராமங்களிலிருந்து ஆதரவு பெற்று வந்துள்ள விவரங்கள் தரப்பட்டுள்ளன. தரம்பாலின் பார்வையில் இந்திய சமூக, கலாச்சார அடிப்படைகள் எவை என்ற கேள்வி எழுகிறது. மிகவும் சுருக்கமாகக் கூறினால் : வேறெந்த சமூகத்திலும் கலாச்சாரத்திலும் காணாத அளவுக்கு இந்தியாவில் சமூக நியாய / நீதி உணர்வு இருந்திருக்கிறது. ஜாதியை அடிப்படையாகக் கொண்ட இந்திய சமூகத்திலா என்று உடனே கேள்வி எழும். தரம்பாலின் பதில் : ஆம். ஜாதியமைப்பு இருந்தாலும் இந்திய சமூகம் சமத்துவ வேட்கை கொண்டிருந்தது என்பதைவிட ஜாதி போன்ற அமைப்பு இருந்ததால்தான் அத்தகைய சமூகநீதியுணர்வு சாத்தியமாயிற்று என்று தரம்பால் கூறுவார் என்று நினைக்கிறேன். கடந்த 50 – 100 ஆண்டுகளாக நம் அறிவாளிகளிடையே சமத்துவம் என்ற கருத்தாக்கம் வேரூன்றியுள்ளது. ஐரோப்பிய சிந்தனையாளர்களின் நூல்கள் அதற்குப் பெரும் காரணம் என்பது மறுக்கமுடியாது. ஆனால் ஐரோப்பிய அடிப்படை என்பது காலங்காலமாக தனி மனித சுதந்திரம் என்பதாகவும் ஒரு சிலரின் மேட்டுக்குடியின் உன்னத வேட்கைக்காக சாதாரண மனிதர்கள் பலியிடப்பட்டாலும் அது சரியே என்பதாகவும் இருந்துள்ளதை மறந்துவிடுகிறோம். இந்தியாவில் தனிமனித சுதந்திரம் என்பது என்றுமே இரண்டாம் பட்சமாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஜாதி, குடும்பம், கிராமம் என்பவை முக்கியப்படுத்தப்படும் போது தனிமனிதசுதந்திரம் ஏற்கப்பட்டாலும் சமூக வாழ்க்கை என்பதில் அதற்கு இரண்டாவது இடம்தான் கொடுக்கப்பட்டது. விளைவு? தனிமனித சாதனைகள், உன்னதங்கள் ஊக்குவிக்கப்படவில்லை.

உன்னதங்களுக்கு சாதாரண வாழ்க்கையை பலியாக்காமல் சமூக அமைப்பை சாதாரண மக்களின் சாதாரண தேவைகளுக்காக, ஆசைகளுக்காக கட்டியமைத்தது நடந்தது. செங்கல்பட்டு ஆவணங்களில் வெளிப்படும் மற்றொரு உண்மை எல்லோருக்கும் உணவு. சோம்பேறியும் சந்நியாசியும்கூட பசியாற வேண்டும். உழைக்க வேண்டும் என்ற கட்டளை உணவுடன் இணைக்கப்படாமல் இருந்திருக்கவேண்டும். சாப்பாட்டில் வஞ்சனை செய்லாகாது என்பது மிகவும் ஆழமாகப் பதிந்துள்ள நெறி. இது மேலோட்டமான 'சமத்துவம்' அல்ல. சமூக நியாயம் என்ற உணர்வின் அடிப்படையில் எழும் விவேகம். உதாரணமாக, வேலை செய்து களைத்துப்போய் வந்தவனுக்கு தண்ணீர் கொடுக்கும்போது சிறிய தம்ளரில் கொண்டுபோனால் 'அது எப்படி போதும். பெரிய சொம்பில் கொண்டுபோ' என்று அம்மா சொல்லிக் கேட்டிருக்கிறேன்.

**நிகழ் 22,**
**ஜூன் 1992**

www.tamilarangam.net



# பழைய பார்வையின் எல்லைகள்

**- ஜெயமோகன்**

முதலில் 'இந்திய தத்துவம்' என்ற வார்த்தையே இன்று விவாதத்திற்கு உரியதாக உள்ளது. நவீன மேற்கத்திய தத்துவவாதிகளில் கணிசமான ஒரு பிரிவினர் இந்திய சிந்தனை முறைமைகளை – கிழக்கத்திய சிந்தனை முறைமைகளை பொதுவாக – பயிலும்போது அவற்றின்மீது மேற்கத்திய தத்துவ அடிப்படைகளையும் கலைச்சொற்களையும் பிரயோகிப்பது தவறான ஒன்று என்று கருதுகின்றனர். (Erdmann) எர்ட்மான் (Uberweg) ஊபர்வெக் போன்ற சென்ற நூற்றாண்டு தத்துவ வரலாற்றாசிரியர்கள்கூட இந்திய சிந்தனை முறைமையைச் சுட்ட தத்துவம் என்ற சொல்லை சரியான அர்த்தத்தில் பயன்படுத்த இயலாது என்று கூறியிருக்கிறார்கள். பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் இந்திய சிந்தனை மரபை அணுகி ஆராய்ந்த ஆரம்பகால அறிஞர்களில் ஆங்கிலேயர்களும் ஜெர்மானியர்களுமே மிகுதி. இவர்கள் அனைவருமே ஒரு விஷயத்தைப் பொதுவாகக் கொண்டிருந்தனர். மேற்கத்திய தத்துவஞானம் ஹெகல், காண்ட், பிராட்லி ஆகியோரின் காலகட்டத்துடன் ஒருவிதமான அடித்தள ரீதியான முழுமையை அடைந்துவிட்டிருந்தது என்றும் அதற்கு மேல் எழும் அத்தனை தத்துவ ஆய்வுகளும் அவற்றின் அடிப்படையில் மேற்கொண்டு தொடர வேண்டியவைதான் என்றும் இவர்கள் நம்பினர். எனவே இவர்களுடைய இந்திய சிந்தனை ஆய்வுகளின் அடிப்படை மேற்கத்திய தத்துவ ஞானமே ஆயிற்று. இந்திய தத்துவ ஞானத்தின் கல்வித்துறை சார்ந்த வடிவை இன்றும் நிர்ணயித்து வம் ஷெர்பாட்ஸ்கி (Stcher batsky), க்ளாஸென் ஏப் (Glasenapp), எட்கார்ட்டன் (Edgarton), கீத் (Keith), ரிச்சர்டு கார்பே (Richard Garbe), ஜெகோபி (Jaccobi) முதலிய மேற்கத்திய அறிஞர்களும் டாக்டர் ராதாகிருஷ்ணன், ஹரியண்ணா, தாஸ்குப்தா முதலிய இந்திய அறிஞர்களும் பொதுவாக அவர்களைப் பின்பற்றியே செயல்பட்டனர். விளைவாக நவீன இந்திய சிந்தனைகள் ஆய்வுகள் வழியாக இந்த நூற்றாண்டில் நூல்வடிவம் பெற்றபோது அவை பெருமளவு செமிட்டிக் கருத்துருவங்களினாலும் வார்த்தைகள் வழியாகவும்தான் 'திரும்பக்' கூறப்பட்டன. மேற்கத்திய – செமிட்டிக் – சிந்தனை மரபு எனும் கண்ணாடியில் பிரதிபலிக்கும் பிம்பத்தின் மூலமாகவே இந்திய கல்வித்துறை இந்திய சிந்தனை முறைமைகளை காண்கிறது. எனவே அதன் ஒவ்வொரு செயல்பாடும் அடிப்படையான பிசகுகளைக் கொண்டிருக்கிறது.

www.tamilarangam.net



அடிப்படையான சிந்தனை மரபு இருவிதத்தில் சமகால விரிவாக்கம் உள்ளது. ஒன்று அதன் கல்வித்துறை விளைவு. இன்னொன்று அதன் வெகுஜனவாழ்வியல் வடிவம். இந்திய சிந்தனையின் மரபு இயல்பாகவே நம் வெகுஜனப் பிரக்ஞையை நிறைத்து ஆள்கிறது. ஆனால் கல்வித்துறை சார்ந்த அனைத்துக் கண்ணோட்டங்களும், அக்கண்ணோட்டங்கள் வழியாக தன் பெரும் பகுதியை உருவாக்கிக் கொண்டுள்ள நவீன அறிவுத்துறையும், முற்றிலும் வேறுபட்ட ஒரு உலகில் தங்கள் பாட்டுக்கு இயங்கிக் கொண்டுள்ளன. இப்பிளவு காரணமாக இன்றைய கல்வித்துறையாளனுக்கோ அறிவுவாதிக்கோ வெகுஜனப் பிரக்ஞையுடன் உரையாடவே முடியாதபடி ஆகிவிட்டிருக்கிறது. அனைத்தும் மக்களுக்காக என்று கோஷமிடும் மார்க்ஸியர்கள்கூட இயங்க முடிகிறதேயொழிய எவ்வகையிலும் வெகுஜன மனத்துடன் பேச மொழியின்றியே இருக்கிறார்கள்.

இன்றைய இந்தியக் கல்வித்துறையின் அமைப்பு முற்றிலும் காலனியாதிக்கவாதிகளினால் உருவாக்கப்பட்டது. எனவே, அடிப்படையான மாறுதல்கள் அதற்குள்ளே இருந்து வருமென எதிர்பார்க்க இயலாது. இந்நிலையில் இந்திய அறிவுத்துறை கல்வித்துறையின் பாதிப்புகளை முடிந்தவரை உதறிவிட்டுச் செயல்பட வேண்டும். ஆனால் நவீன யுகத்தின் சிக்கல் மிகுந்த சிந்தனைத் தேவைகளுக்கு ஈடுகொடுக்க கல்வித் துறையால் மட்டுமே வழங்கச் சாத்தியமான கட்டுப்பாடு மிகுந்த முழு மூச்சான கவனமும் உழைப்பும் தேவை. இந்த முரண் எளிதில் அவிழக்கூடுமெனத் தெரியவில்லை. வழக்கம்போல இந்தியச் சிந்தனை முறைமைகளின் தனித்தன்மைகள் பற்றி முதலில் கூறியவர்கள் மேற்குநாட்டவர்கள். அதனடிப்படையில் இன்று சில புதுக் கருத்துருவாக்கங்கள் நிகழ்ந்து வருகின்றன. ஆனால் பொதுவாக இந்தியக் கல்வித்துறை மேற்குமீது கூச வைக்குமளவு தாழ்வுணர்வு கொண்டதாகவே உள்ளது. அதன் விளைவே இந்திய சிந்தனைச் செயல்பாடுகள் மீது மேலும் மேலும் ஒட்டுண்ணிகளே இன்று தொடங்கவிடப்படுகின்றன. விதிவிலக்குகள் சொற்பமெனினும் அவையே முக்கியமானவை.

தத்துவம் என்ற சொல்லானது செமிட்டிக் சிந்தனை முறையின் ஒரு பகுதியான தருக்க அமைப்பை குறிப்பதாகும். இந்திய சிந்தனை முறைமையைக் குறிக்க அச்சொல்லை (Philosophy) உபயோகிக்கலாகாது என்று எர்ட்மான் குறிப்பிடுகிறார். மெய்யியல் (Theology) என்ற சொல்லை

www.tamilarangam.net



பயன்படுத்தலாமென சிலர் கருதுகிறார்கள். இச்சொல்லோ மேலும் செமிட்டிக் தன்மை உடையது. நிர்ணயிக்கப்பட்ட சிந்தனைத்தளம் உடைய செமிட்டிக் மதங்களின் பாற்பட்டது. நிர்ணயங்களை மறுக்கும் பல கூறுகளின் தொகுப்பாகிய இந்தியச் சிந்தனை மரபுக்கு இது பொருந்தாது. கருத்தாக்கதொனி (Ideology) என்று சிலர் குறிப்பிடுகிறார்கள். இந்திய சிந்தனை மரபு கருத்துக்களை விடவும் வாழ்வியலைப் பெரிதும் சார்ந்தது. அதற்காக பேரா போட்டர் (Pro Potter) குறிப்பிடுவதுபோல் ஆய்வுமுறைமைகள் (Speculatibve Patterns) என்ற சொல்லும் முழுமையானதல்ல. தாந்திரிக ஆராய்ச்சியாளரான அதிகானந்த பாரதி (Agehananda Bharathi) உளவியல் பரிசோதனை ஆய்வுமுறை (Psycho Experimentall Speculations) என்ற சொல்லைப் பயன்படுத்துகிறார். இது விளக்கமேயொழிய சொல்லோ உபகரணமோ அல்ல. கீழைச்சிந்தனை ஆய்வில் அடிப்படைகளைப் பற்றி நிகழும் இவ்விவாதம் கல்வித்துறைப் பயிற்சி இல்லாதவனும், படைப்பிலக்கிய தளத்தில் நின்று இவற்றை அணுகுபவனுமாகிய என்னைப் போன்ற வாசகனுக்கு மிரட்சியைத் தருவதாகும். அதேசமயம் நவீன இந்திய சிந்தனைத்துறையில் இன்று செயல்பாடு என்பதே மொழிபெயர்ப்புப் பணிதான், அல்லது மேற்கத்திய கருத்துகளுக்கு இந்திய மாதிரிகளை உண்டுபண்ணுவதுதான் என்று கருதப்படும் அபத்தங்களுக்கு இந்தியக் கல்வித்துறையின் கோழிமுட்டைக்கு வெளியே மதிப்பு இல்லை என்று மட்டும் உறுதியாகத் தெரிகிறது.

பல அடிப்படையற்ற கருத்துருவங்கள் இங்கு மிக முக்கியமானவைகளாக ஆகி, நம் சிந்தனையை ஆளும் நிலையே உருவாகிவிட்டிருக்கிறது. முக்கியமான மதம் என்ற சொல். இந்திய சிந்தனை மரபைச் சுட்ட மதம் (Religion) என்ற சொல் பயன்படுத்தப்படும் போது அது கேலிக்குரிய அபத்தமாகவே ஆகிவிடுகிறது என்று நவீன ஆசிரியர்கள் பலர் குறிப்பிடுகிறார்கள். இன்றும்கூட சட்டபூர்வமான ஹிந்துமதம் என்பது முஸ்லீம், சீக்கிய, கிறிஸ்தவ, பௌத்த, ஜைன, பார்சி மதத்தினரல்லாதவர்களின் மதம் என்ற பொதுக் குறிப்பாகும். பாறையைக் கும்பிடும் பழங்குடிகள் முதல் பிராமணர்கள் வரை எல்லாரையும் தொகுக்கும் இந்தப் பொதுப் பெயருக்கு எவ்விதமான சமூகவியல், தத்துவயியல், அரசியல் அடையாளமும் இல்லை. செமிட்டிக் சொல்லான மதம் 'ஸ்தாபனமயமாக்கப்பட்ட' நம்பிக்கை என்றே பொருள்படுகிறது. இதற்கிணையான பொதுக்குறிப்புகளும் செமிட்டிக் அர்த்தமுள்ள சொற்களும்தான் நமது அறிவுத்துறையின் அடித்தளத்தையே இன்று அமைத்துள்ளன. இந்த தவற்றிலிருந்து விதிவிலக்குகள் அனேகமாக

www.tamilarangam.net



இல்லை. சகல இந்திய கருத்து மரபுகளையும் முழுமையாக எதிர்த்து அழிப்பதே முற்போக்கு என நம்பும் 'தீவிர கம்யூனிஸ்டு'கள் முதல் ஹிந்து சாம்ராஜ்யம் அமைக்கத் துடிக்கும் ஆர்.எஸ்.எஸ். வரை அனைவருமே முழுமையாக செமிட்டிக் கருத்துத் தளத்திலேயே செயல்படுகின்றனர். முதல்சாரார் செமிட்டிக் கருத்துருவங்களின் சிறப்பை உள்ளுருகி உணர்ந்து ஏற்பவர்கள். இரண்டாம் தரப்பினரோ தூய ஹிந்து – இந்திய – மரபு பற்றி தொடர்ந்து பேசுபவர்கள். ஆனால் அவர்களுக்கு மரபு மீது உள்ளது இயல்பான 'பற்று' அல்ல, மாறாக மாக்ஸ்முல்லர் முதல் தொடங்கியதான ஒரு செமிட்டிக் தத்துவ தளத்தில் நின்றபடி இந்திய மரபைப் பார்த்துக் கொள்ளும் 'வியப்பு' தான். மதம், ஸ்தாபனம் முதலிய மேற்கத்தியக் கருத்தாக்கங்களை ஏற்றுக் கொள்வதில் மட்டுமல்ல, மரபை அலசி அறியப் பயன்படுத்தும் ஒவ்வொரு உபகரணத்திலும் இவர்கள் தங்கள் செமிட்டிக் அறிவுத் தளத்தையே வெளிப்படுத்துகின்றனர். அனைத்திற்கும் மேலாக தாக்கும் தன்மை உடையதும், 'விறுவிறுப்பானதுமான' தேசியம் என்பது கலப்பில்லாத ஒரு செமிட்டிக் கருத்துவடிவமேயாகும். நீண்ட அறுபது வருடகால ஈடிணையற்ற நிறுவன உழைப்புக்குப் பிறகும் சிற்சில உணர்ச்சியலைகளைத் தவிர வேறு எவ்விதமான பாதிப்பையும் இந்திய சமூக மனத்தில் இவர்களால் ஏற்படுத்த முடியாது போனதற்குக் காரணம் இதுவேயாகும். (தனிப்பட்ட அனுபவங்களின் அடிப்படையில் இந்த விஷயம் பற்றி விரிவான ஆய்வுக்குறிப்புகள் எழுதும் எண்ணம் உண்டு.)

நம் சூழலில் ஆக்ரமித்து நிறைந்து, நம் சிந்தனை உழைப்புகளை முழுக்க வீணாக ஆக்கும் இந்த விஷத்திற்கு எதிரான போராட்டம் எளியதல்ல. பற்பல மனங்கள் வழியாகப் படிப்படியாக உருவாகி வரவேண்டிய ஒன்றாகும் அது. ஒருவகையில் உணர்வு மற்றும் கலாச்சார ரீதியாக பலவந்தப்படுத்தப்பட்டு சீர்குலைக்கப்பட்ட ஒரு மரபின் புத்துயிர் பெறும் செயல் ஆகும் அது. அடிமைத்தனத்தின் சுவடுகளை மனங்களில் இருந்து அழிப்பது எளிய விஷயமல்ல. மானசீக காலனியடிமைகள் மண்டிய நம் அறிவுச் சூழலில் இம்மாற்றம் நிகழ இன்னும் பல காலமாகக் கூடும்.

மார்க்ஸிய அணுகுமுறை ஆரம்பமுதலே முற்றிலும் செமிட்டிக் சிந்தனைத்தளம் சார்ந்ததாகவே உள்ளது. ஒரு தூய செமிட்டிக் தத்துவமான மார்க்ஸியம் இங்கு வந்தபோது இங்கு ஏற்கனவே புழங்கிய செமிட்டிக் உபகரணங்களையே கையாண்டு மேலே பேச ஆரம்பித்தது இயல்பான ஒன்றுதான். இதனால்தான் மொத்தமாக மார்க்ஸிய அணுகுமுறையே இந்திய மனத்தை தொடமுடியாமல் ஒரு தனித்த

www.tamilarangam.net



அறிவுத்துறையாகவே, நம் கல்விப் பேரமைப்பு போல வெகு ஜனங்களின் பிரக்ஞைக்கு மேல் மிதக்கும் ஒன்றாகவே, இன்றும் உள்ளது.

நமது மக்களில் கணிசமானவர்களுக்கு ஒருவிதமான இரட்டை வாழ்வு உள்ளது. கல்வி, அலுவலகம், கட்சி, தொழிற்சங்கம் முதலியவை சார்ந்து ஒரு வாழ்வு முகம்; குடும்பம், அந்தரங்க வாழ்வு சார்ந்து ஒரு முகம். இவ்விரு முகங்களையும் பரஸ்பரம் மோதவிடாமல் கொண்டு போகும் திறனை அவன் இந்திய அறிவுஜீவிகளிடமிருந்து கற்றுக்கொண்டிருக்கக் கூடும். என் அலுவலகத்தில் எந்த ஜாதிப் பெயரும் உச்சரிக்கப்பட முடியாது; அது அநாகரீகம் என்று கருதப்படும். தொழிற்சங்க மேடையில் அல்லது கட்சிக்கூட்டத்தில் ஜாதிமதக் குறிப்புகள் எவ்வகையிலும் குறிப்பிடப்படக்கூடாது. ஆனால் ஒருவர்கூட மீதியின்றி அனைவருமே தங்கள் ஜாதிமத மனோபாவத்தை இம்மிகூட பிசகாமல் பின்தொடர்பவர் களாகவே உள்ளனர். அது வேறு விஷயம் – இது வேறு விஷயம் என்று சர்வ சாதாரணமாகக் குறிப்பிடுகின்றனர். இந்தியாவில் எங்குமே கலப்பு மணம் இன்றும் ஒரு ஒழுக்கக்கேடாகவே பார்க்கப்படுகிறது. ஒரு தொழிற்சங்கம் ஒரு கலப்புமணத்தை வெற்றிகரமாக நடத்திக் கொடுக்கும். அதன் உறுப்பினர் எவரும் தங்கள் அந்தரங்கத்தில் அதை ஏற்கமாட்டார்கள் எனினும்கூட. பல வருட தொழிற்சங்கப் பயிற்சியும், மார்க்ஸியச் சார்பும் ஒரு தோழரின் அந்தரங்க வடிவமைப்பில் எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்தியிருப்பதாகத் தெரியவில்லை. அது பெரும்பாலும் பழங்குடித்தன்மை கொண்ட மரபுகள், நம்பிக்கைகளினால்தான் பூரணமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. (சுய அனுபவம் சார்ந்த குறிப்புகள் இவை).

நவீன உலகின் லௌகீகச் சவால்களுக்கு ஏற்ப ஒருவர் கொள்ளும் சமரசமே அவருடைய பொதுமுகம். அவர் உண்மையில் அவருக்கே உரிய சுயமுகம் வேறு வைத்திருக்கிறார். லௌகீகமான நவீன இந்திய ஸ்தாபனங்களின் சிக்கல் மிகுந்த நடைமுறைகளை எதிர்கொள்ளும் சவால் குறையக்குறைய இந்த பொது முகம் மங்கலாக ஆகிறது. அடித்தளத்தில் வெகுஜனங்கள் எனப்படும் பெரும்பான்மை எவ்வகையிலும் இந்திய அறிவுத்துறையாலோ கல்விமுறையாலோ தீண்டப்படாமல் மரபின் சமகால நீட்சியாக மட்டும் நின்று கொண்டிருக்கிறது. இந்த இரட்டைநிலை பற்றி தத்துவ முன் இறுக்கம் இன்றி இந்தியச்சூழலை ஆராயப் புகுந்த அறிஞர்கள் தொடர்ந்து குறிப்பிடுகிறார்கள்.[1] பொதுவான மைதானங்களில் தேவைக்கேற்ப முகமற்ற ஆள்கூட்டமாக கூடி நடித்து, பிறகு மரபும் கடந்த காலமும் தங்களுக்கு என்று செய்து அளித்துள்ள அறைகளுக்குள் திரும்பி

www.tamilarangam.net



விடுகிறவர்களாக பி.கெ. பாலகிருஷ்ணன்[2] இந்திய சமூகத்தை குறிப்பிடுகிறார். நமது அறிவுச்செயல்பாடுகள் கிட்டத்தட்ட அனைத்துமே இந்த மைதானங்களில் தொடங்கப்பட்டு மைதானங்களிலேயே முடிவடைகின்றன.

எம்.என். ராயில் இருந்து தொடங்க வேண்டும். இந்திய சிந்தனை மரபை ஆய்வு செய்ய மேற்கத்தியக் கூறுகளையும் இயங்குமுறை பொருள்முதல்வாத அடிப்படைகளையும் பயன்படுத்திய வழிகாட்டி அவர். தொடர்ந்து இந்திய அறிவுத்தளத்தின் மிக முக்கியமான ஒரு குரலாக இது உள்ளது. இந்திய மரபில் உள்ள மானுட விரோதமான கூறுகள் பலவற்றை கடுந்தாக்குதல் மூலம் செயலிழக்கச் செய்து தற்காப்பு நிலைக்கு தள்ளிவிட்டது இது. அறிவுத்துறையின் உள்ளே மிகப்பெரிய ஆளும் சக்தியாகவும் ஆகிவிட்டது. ஒரு கோணத்தில் இது ஒரு சாதனையேயாகும்.

ஆனால் ஒரு கட்டம் முடிந்துவிட்டது. மார்க்ஸிய ஆய்வுகள் இதுவரையிலான வெற்றி தோல்விகளை கணக்கிலெடுத்துக் கொண்ட, போதாமைகளை உணர்ந்து, மேலும் விரிவான அடுத்த தளத்திற்கு நகரவேண்டிய காலம் வந்துவிட்டது. அவர்களுடைய செமிட்டிக் உபகரணங்களின் தோல்வியையே ஒவ்வொரு வெகுஜன எதிர்வினையும் கூறிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு தோல்விக்குப் பிறகும் அவர்கள் இன்னொரு செமிட்டிக் உபகரணத்தையே எடுத்துக்கொண்டு வருகிறார்கள். இந்நிலையில் இப்படியே அதிகநாள் நீடிக்க இயலாது என்ற நிலை உருவாகி வருகிறது.

தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவின் 'இந்தியத் தத்துவ இயலில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும்' முந்தைய காலகட்டத்தைச் சார்ந்தது. எழுபதுகளில் எழுதப்பட்ட இந்நூல் அறுபதுகளிலேயே தொடங்கிவிட்ட மேற்குறிப்பிட்ட பிரக்ஞை பற்றி தெரியாமலேயே செயல்படுகிறது. இதன் மார்க்ஸியப் பிரக்ஞை மிக எளியது. அடித்தளத்தை நேரடியாக, இணையாக, மேற்கட்டுமானத்துடன் பொருண்மையை முன்னிலைப்படுத்தும் மேலை மார்க்ஸிய கருத்துகள் பற்றிய எவ்விதமான பிரக்ஞையும் இல்லாமல் படைக்கப்பட்டது. ஒவ்வொரு கலாச்சாரச் சலனத்துக்கும் அடியில் பொருளாதாரக் காரணிகளை தேடி 'அடைந்து' நிறுவ முயல்வது. எனவேதான் விரிவான தகவல் சேகரிப்பும் தொகுப்பும் இந்நூலுக்காக செய்யப்பட்டிருப்பினும்கூட எழுதப்படுவதற்கு முன்பேயே பழைமையாகி விட்டிருக்கிறது இது.

www.tamilarangam.net



இந்நூலின் வகைப்படுத்தல்களை பொதுவாக நமது மார்க்ஸியர்கள் அனைவருமே ஏற்பதையே அவர்களின் எழுத்துக்களிலிருந்து நாம் காண்கிறோம். மேலை மார்க்ஸிய கோட்பாடுகளின் பெயர் உதிர்ப்புகள் நடைபெறுகின்றனவேயொழிய நடைமுறை அணுகுமுறை முற்றிலும் பழைமையானதாகவே உள்ளது. எனவே தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவை நமது கோ. கேசவன்கள், அ. மார்க்ஸ்கள்[3] தோத்தாத்ரிகள் போன்ற மற்ற அனைவருக்கும் அடிப்படை வகுத்தளித்தவர் என்று கூறலாம்.

இந்திய சிந்தனை மரபு மீதான இதன் முடிவுகளை கீழ்க்கண்டவாறு எளிமையாக வரிசைப்படுத்தலாம்.

1) இந்திய சிந்தனைக்களம் என்பது இந்திய தத்துவம்.

2) கருத்துமுதல்வாத மரபு, பொருள்முதல்வாத மரபு எனும் இரண்டு மரபுகள் பரஸ்பரம் போராடியபடி இங்கு நிலவின.

3) கருத்துமுதல்வாத மரபு உலகியலை மறுக்கும் தன்மை உடையது. எனவே அது சுரண்டல் வர்க்கத்தினால் சுரண்டப்படுபவர்களை ஏய்ப்பதற்காக உருவாக்கப்பட்டது.

4) பொருள் முதல்வாத மரபுதான் இயல்பான வெகுஜன சிந்தனை. எனவே அது சுரண்டல் அமைப்புக்கு எதிரானது. கடைசியில் அது நசுக்கப்பட்டது.

5) நவீன இந்திய சிந்தனையில் இவ்விரு கூறுகளும் முதலாளித்துவ உலகுக்கேற்ப மாற்றங்களுடன் தொடர்கின்றன.

6) நவீன தொழிலாளி வர்க்கம் தங்கள் மரபிலிருந்து பொருள்முதல்வாதிகளின் எதிர்ப்பை மீண்டெடுத்து சுயமாக்கிக் கொள்ள வேண்டும்.

தேவிபிரசாத்தின் ஆய்வுகளின் இரண்டு அடிப்படைகளை பிற இந்திய, மார்க்ஸிய ஆய்வாளர்கள் எப்படி நிராகரிக்கிறார்கள் என்பதை மட்டுமே இங்கு குறிப்பிட்டால் போதுமானது. மற்றபடி இந்நூல் முன்வைக்கும் தருக்கங்களை ஒரு மதிப்புரையில் எதிர்கொள்ள இயலாது.

தத்துவ ஆய்வு என இந்திய சிந்தனை முறைமைகளை தனியாக எடுத்து, அவற்றிற்குள் நின்றபடி அவற்றின் கூறுகளைப் பிரித்து எடுப்பதும் முரண்களை அலசுவதும் சிறப்பான ஆய்வு அல்ல என்று டி.டி. கோசாம்பி

www.tamilarangam.net



கருதுகிறார். இந்திய உபகண்டத்தில் பழங்குடி இனங்களின் கலப்பு, உற்பத்திச் சமூக உருவாக்கம் ஆகியவற்றின் விளைவாகவே பல்வேறு முகம் கொண்ட ஒரு கலாச்சார கட்டமைப்பும், சமூக அமைப்பும் உருவாயிற்று என்பதை கோசாம்பி விரிவாக நிறுவுகிறார். இந்திய சிந்தனை முறைமைகளை முழுக்க மிக விரிவான இந்த பரிணாமத்தின் உடன் விளைவுகளாகப் பார்த்து இவற்றின் ஒவ்வொரு கூறுகளுடனும் அவற்றை சம்பந்தப்படுத்தி அவர் ஆய்வு செய்கிறார். எனவே தேவிபிரசாத் 'தத்துவம்' சார்ந்த உபகரணங்களை மட்டும் பயன்படுத்தி இந்திய சிந்தனையை ஆய்வு செய்வதை கோசாம்பியின் வழிவந்த நவசரித்திர ஆசிரியர்கள் ஏற்கவில்லை. இந்நூல் வெளிவந்தபோதே அவர்களிடமிருந்து விரிவான எதிர்ப்பை பெற்றதாகும்.

தேவிபிரசாத் சட்டோபாத்யாயாவின் இவ்வாராய்ச்சிக்கு அடித்தளமான ஒரு முன்முடிவு உண்டு. மானுட இனத்தின் 'இயல்பான' பிரக்ஞைநிலை பொருள்முதல்வாதமே என்பதாகும் அது. ஆதிப்பொருள்முதல்வாதம் (Proto Meterialism) என்ற இந்த கருத்தாக்கம் லூயிஸ்மார்கன் காலத்து மானுடவியலின் சிருஷ்டி. இதை தன்னுடைய 'லோகாயதம்' [4] என்ற முந்தைய நூலில் குறிப்பிடும் தேவிபிரசாத் சட்டோபாத்யாயா சுரண்டலமைப்புக்கு பிறகுதான் கருத்துமுதல்வாதம் உருவாயிற்று என்பதை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகிறார். இந்தக் கூற்றை மிகத் தீவிரமாகக் கண்டிக்கும் கெ. தாமோதரன் [5] இது மார்க்ஸிய அணுகுமுறையின் எளிமைப்படுத்தப்பட்ட வடிவம் என்று நிராகரிக்கிறார். இவ்விரு கருத்துநிலைகளின் சமூகப் பயன்பாடுகள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எப்படி இருந்தன என்ற அளவில் மட்டுமே ஆய்வாளன் திட்டவட்டமாக ஏதாவது கூற முடியும் என்றும் அவற்றின் உருவாக்கம் பற்றிய முடிவுகளனைத்துமே அதிகபிரசங்கித்தனம் ஆகிவிடும் என்றும் குறிப்பிடுகிறார். கிட்டத்தட்ட இக்கருத்தை ஆதிசங்கரரின் அத்வைதம் பற்றிய தன் ஆய்வுரைகளில் இ.எம்.எஸ். நம்பூதிரிப்பாடுகூட முன்வைக்கிறார் இன்று.[6] ஆதிப்பவுதிகவாதம் போன்ற எளிய கருத்தாக்கங்கள் நாற்பது வருடங்களுக்கு முன் குளோட் லெவிஸ்ட்ராஸின் 'இயற்கை மனம்'[7] போன்ற நூல்கள் வெளிவந்தபோதே விரிவாக மறுக்கப்பட்டுவிட்டன. இந்திய மொழிகளில் இவற்றுக்கு விரிவான எதிர்வினைகளும் கூட அப்போதே வந்துவிட்டன. தேவிபிரசாத்தின் உலகில் அவை நுழையவேயில்லை.

முற்றிலும் போதாமலாகிவிட்ட உபகரணங்களால் நடத்தப்பட்ட இந்த ஆய்வின் முடிவுகளனைத்துமே அதற்கேற்ப பலவீனமானவையாக இருப்பது

www.tamilarangam.net



இயல்பான விஷயம் மட்டுமே. கே. தாமோதரனின் இந்திய சிந்தனை ஆய்வுநூல் அடிப்படைகள் பல பழசாகிவிட்டாலும்கூட, நிதானமும் ஒருங்கிணைவுமுள்ள அணுகுமுறை காரணமாக ஒரு பாடநூல் என்ற மரியாதையை தக்கவைத்துக் கொண்டுள்ளது. இந்நூல் அந்த தகுதியும் இல்லாமலிருக்கிறது.

**குறிப்புகள் :**

1. டாக்டர் எம். கங்காதரனின் இந்திய அறிவுஜீவியின் இரட்டைவேடம் என்ற கட்டுரையை கனவு 12 இதழில் நான் மலையாளத்திலிருந்து மொழி பெயர்த்திருக்கிறேன்.

2. பி.கெ. பாலகிருஷ்ணன், 'நாராயணகுரு' ஆய்வுத் தொகைநூல், மலையாளம்.

3. மிகச்சமீபத்தில் மௌனி பற்றி அ. மார்க்ஸ் எழுதிய விமரிசனம்கூட (கனவு 19) இந்த தளத்தில்தான் செயல்படுகிறது. பிரதி சமிக்ஞைகள் முதலிய சில புதிய கலைச்சொற்களைத் தவிர்த்தால் அது வழக்கமாக கதைக் களத்தில் நடக்கிறதா வீட்டில் நடக்கிறதா, கதாநாயகி கறுப்பா வெளுப்பா என்பது போன்ற ஆராய்ச்சியேயாகும். ஏற்கனவே பதிக்கப்பட்ட முத்திரைகளை மீண்டும் நிறுவ தேவையான சான்றுகளைத் தேடிப்பிடிக்கும் பழைய பாணியே மார்க்ஸின் பாணியாகும். அது தமிழ் சித்தாந்த விமரிசனத்தின் நோய், எளிதில் விடாது. மவுனியின் தத்துவ வாழ்க்கை நோக்குகள் முற்றிலும் பிராமணியம் சார்ந்தவை, முற்றிலும் நிலப்பிரபுத்துவகட்ட சுரண்டல் வர்க்கத்துக்கு உரியவை, அடித்தளமக்களுக்கு எவ்வகையிலும் பங்கற்றவை போன்ற முடிவுகளுக்கு முதலிலேயே வந்துவிட்டிருக்கிறார் அவர். தேவிபிரசாத்துக்கு தமிழ்சீடர்களே அதிகம் என்று தோன்றுகிறது.

4. Lokayata, Devlprasad Sattobatyaya, பக்கம் 96, பக்கம் 228, பக்கம் 229.

இந்தியத் தத்துவயியலில் . . . நூலிலும் இவ்வடிப்படை தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது.

5. Indian Thought IInd Chapter

6. சங்கரனின் ஜயந்திவிழாவின் போது ஆற்றிய உரையும் தொடர்ந்து நடந்த விவாதங்களும் இங்கு குறிப்பு.

7. The Savage Mind - Clande Levl - Strauss.

**நிகழ் 24,**
**டிசம்பர் 92**

www.tamilarangam.net



# பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழகத்து உலகாயதம்

**- டாக்டர் கி. முப்பால்மணி எம்.ஏ., பிஎச்.டி.**

**முயற்சி :**

மத்திய கால உலகாயதத்திற்கும், இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இயக்கவியல் வரலாற்றியல் பொருள் முதல்வாதம் மொழிந்த உலகாயதத்திற்கும் இடைப்பட்ட நிலையில் இருந்த பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிலவிய உலகாயதத்தினை எடுத்துக்கூற இந்தக் கட்டுரை முயல்கிறது. அதே நேரத்தில் புதியதாகக் கண்டெடுக்கப்பட்ட ஆதாரத்தினை முன்வைக்கிறது.

**கிறித்துவ உரைகள் :**

1750 – 1840 காலப்பகுதி சார்ந்த கிறித்தவ உரைகள் அப்போதைய அறிவியல் கண்டுபிடிப்புகளை உள்ளடக்கியிருந்தன. தொலைநோக்கி, நுண்ணோக்கிகள் மூலம் அறியப்பட்ட அண்டவெளி, நுண்ணுயிர்கள் பற்றிக் கூறின. சூரிய மையத்தைக் கொண்ட பிரபஞ்சத்தை எடுத்துரைத்தன. வியாழன் கிரகம் நான்கு உபகிரகங்களைக் கொண்டிருந்ததைப் பேசின (சத்தியவேதபரிட்சை 81). 1800 ஆம் ஆண்டு தொடக்கத்தில் 55 மூலகங்கள் காணப்பட்டிருந்தன. நான்கு கண்டங்கள், கடல்கள், மலைகள், ஆறுகள் பற்றிய விபரங்கள், பூமியின் வரலாற்று யுகங்கள் பேசப்பட்டன. மனிதர், பட்சிகள், மச்சம், மிருகம் ஆகியன வஸ்துகள் என உரைத்தன. வஸ்துக்களானவை அளவு, பிரமாணம், கண்டிப்பு, பகுப்பு, வகை. இலட்சணம், மாற்றம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதைக் கோடிட்டன (மேலது 26, 32). இந்த உலகத்தின் இருப்பு, கிரமம், சத்தியத்தன்மை ஆகியன பிரத்தியட்சமாய்ப் பேசப்பட்டன. உலக வஸ்துக்களின் குணங்கள் மாறுவன; பாரம்பரிய முறையில் இருப்பவை; பிறப்பு அழிவு உடையன என்ற முறையில் தனிப்பட்ட வஸ்துகள் என்றும் நித்தியமானவை அல்ல; வஸ்துகளில் கடவுள் இல்லை, அவைகளுக்கே உரிய வஸ்துத்தன்மைகள் மட்டுமே உள்ளன. "உலோக வஸ்துக்களின் குணங்கள் பலமுறை மாறுகிறதல்லவோ? ஆதலால் மாறுகிற குணமில்லாத சுவாமி அந்தந்த வஸ்துக்களில் குணப்பிரகாரமாய் இருப்பது எப்படி" என வினவப்பட்டது (மேலது – 45). 1800 களில் பஞ்சபூதங்கள் பற்றி நுணுக்கம் இல்லை; 1742 இல் பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் இயற்கைப் பொருளாய் இராமல்

www.tamilarangam.net



சேர்க்கைப் பொருளாய் இருக்கின்றன (வேத அகராதி–230). ஐந்து பூதங்களில் ஒன்று (ஆகாயம்) அறியப்படாத வஸ்துவாகவே இருக்கின்றது. மற்றை நான்கும் தாங்களே மூலபதார்த்தங்களாய் இராமல் வேறு மூலபதார்த்தங்களால் உண்டாயின (சமயபரிட்சை – 138) என உரைத்தன. 1840 களில் 58 மூலகங்கள் அறியப்பட்டிருந்தன. மனித உடலின் மூளை, நரம்புகள், ரத்த ஓட்டம் பற்றி நெருங்கிக் கூறின. இந்த உலகமும், எல்லா வஸ்துக்களும் மனிதனின் பயன்பாட்டிற்கு எனவும், "எல்லா வஸ்துக்களிடத்திலும் பிரயோசனம் தோன்றுகிறது ஒழிய, பிரயோசனம் இல்லாத வஸ்து யாதொன்றும் இல்லை. உலகத்தில் காணப்பட்ட வஸ்துக்கள் எல்லாம் மனிதர்களுக்காகப் படைக்கப்பட்டது" எனக் கிறித்தவ உரைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டு முழுவதும் உரைத்துக் கொண்டிருந்தன (சத்யவேதபரிட்சை – 89)

**நேர்க்காட்சிவாதம் பரவுதல் :**

அப்போதைய நேர்க்காட்சிவாதப் பயிற்சி பெற்றவர் இங்கு வணிகத்துறையில் இராணுவப்பதவிகளில், அரசு மற்றும் நிர்வாகப் பொறுப்புகளில், கல்வி நிறுவனங்களில், ஆட்சியில் இருந்தனர். ஹியூம், ஜெரோம்பெந்தம், ஜே.எஸ்.மில், ஹெர்பர்ட்ஸ்பென்சர், ஹக்ஸ்லி, பெயின் வழியான விளக்கங்களில் நேர்க்காட்சி வாதம் ஒரு பக்கம் ஆத்திகத்தையும், இன்னொருபக்கம் பகுத்தறிவு நாத்திகத்தையும் பெற்றிருந்தது. பயன்வழிநோக்கம், நேரடி புலன்காட்சி, கேள்வி, செயல்முறை அனுபவங்கள் ஆகியவற்றைக் கொண்டு நேர்க்காட்சிவாதம் இங்கிலாந்தில் மரபு, நியதி, சாஸ்திரம், நம்பிக்கை, பழக்கவழக்கங்களைக் கேள்விக்குட்படுத்தியது. இது இங்கும் பரவியது; இங்கிருந்த சமயநெறி சார்ந்தவைகளை எதிர் வினாவிற்குட்படுத்தியது. புராணம், சாஸ்திரம், ஆகமம் கூறும் மோசப்புரட்டுகள் மாய, நேர்க்காட்சி, கேள்வி, அனுபவத்தால் பேசுவது இங்கும் வழக்கில் தொடங்கி நடந்தது. (இந்துமத ஆசார ஆபாசதரிசினி–3). கூடவே சந்தேக மரபுகொண்ட நாத்திகவாதமும் தொடர்ந்தது. ஜே.எஸ்.மில் பொருளைப் புலனறிவின் சாத்தியப்பாடுகளில் கரைத்ததுவும், ஒன்றேயான எல்லையற்றதிலிருந்து எல்லைக்குட்பட்ட உலகப் பன்மைப் பொருள்கள் தோன்றி வருகின்றன; உறுதியான முதற்காரணத்தைச் சார்ந்து, புரியமுடியாத ஒரு சக்தியின் வெளிப்பாடுகளாக எல்லாம் உள்ளன என்ற ஸ்பென்சரின் பொருளியக்க முறையியலும், யாந்திரீக விளக்கமும் இங்குச் சந்தேக மரபை ஊக்குவித்தன. நேர்க்காட்சிவாதத்தின் இஷ்டசித்தி, அஷ்டநிவர்த்தி நோக்கம் இங்கு வேரூன்றியது. (தத்துவ போதினி, ஜூன் 1864). உணர்வுகளின் தொகுப்பாகப் பிரக்ஞையின்

www.tamilarangam.net



நிலைமையாக மனித மனத்தை நேர்க்காட்சிவாதம் விவரித்தது. தனிமனிதனை மையப்படுத்திக் கொண்டு தனது கருத்தை அது விளக்கியது; நிகழ் காலத்தை மட்டும் முதன்மைப்படுத்திக் கொண்டு, மரபு, நம்பிக்கை, பழக்கவழக்கம், நியதிகளை எதிராக்கியது.

**பௌதிகவாதம் :**

1870 களில் இங்கு டார்வின் கூறிய பரிணாமக் கோட்பாடு பரவியது. உயிர்களின் தோற்றம், மாற்றங்களுக்கு டார்வின், கடவுள் கொள்கையை அனுசரிக்கவில்லை. இதனோடு பொருள்களின் இயக்கம், மாற்றம், திரிபு ஆகியன அவைகளின் சுயசெயல், தன் செயல் என்ற விளக்கமும் பரவியது. இது மரபாக இங்கு இருந்த சுபாவவாதத்திற்குத் தொடர்ச்சியாகவும், நூதன விளக்கமாகவும் விளங்கியது. ஒன்றிலிருந்து ஒன்றுதோன்றும் இயக்கத்தை இது கோடிட்டது. தனக்குத் தானே பொருளின் போக்கில் அனைத்தும் உண்டாகியுள்ளன. இயற்கையில் உள்ள பேதங்கள் பொருள்களின் போக்கு ஆகும் என்ற சிந்தனை உறுதிபெற்றது. இன்பம், துன்பம், சினம், சாந்தம், விருப்பு, வெறுப்பு ஆகியவை மனித அகவயமானவை. இவைகளிலிருந்து சுதந்திரமாக உலகம், பூதியம் / வஸ்து அல்லது பொருள் புறவயமாக உள்ளன. பொருள், கவர்ச்சி, சேர்தல், பிரிதல் குணங்கள், அளவு, சக்தி, ஆற்றல், இயக்கம், மாற்றம் ஆகியனபற்றிய புறநிலைப் பரிசீலனை விதந்துரைக்கப்பட்டது. இந்தப் பரிசீலனையில் கடவுள் இடம் பெறவில்லை. பொருள், புலனுணர்ச்சி, அறிவு ஆகியவற்றின் தொடர்புகள் பேசப்பட்டு பொருளின் உண்மை நிலையையும், புலனுணர்ச்சியின் நம்பகத்தன்மை, மனித அறிவு புறநிலையிலிருந்து உண்டாவது, இயல்வது ஆகியன முன்னிலைப்படுத்தப்பட்டன. 1880 களில் இப்படியான பௌதிகவாதம் materialism இங்குப் பொலிவு பெற்றது (ஆஸ்திக மதசித்தாந்தம், ஆபாச ஞான நிரோதம்).

**சமூக வரலாறு :**

1860 களில் இங்கு சமூக வரலாறாகப் பெண்வழி சமுதாயம், வேட்டை மற்றும் கால்நடை மேய்ப்புச் சமூகம், நிலஉழவுச்சமூகம், புராதன பொதுவுடைமை நிலை, தனிச்சொத்து – சுவத்துவம் – அரசு ஆகியவற்றின் தோற்றம் பற்றிய எடுத்துரைத்தல் இதழ்களில் நிகழ்ந்தது (தத்துவபோதினி ஜூன் 1864, நவ. 1865). குழுமணம் நிலவிய பூனலூவா குடும்பம் பற்றி பெ. சுந்தரம்பிள்ளை அறிந்திருந்தார். இப்படியான சமூகஞானம் அப்போதைய பௌதிகவாதம் / உலகாயதத்திடமிருந்து தனித்தே நிலவியது.

www.tamilarangam.net



**"இயற்கைத் தத்துவம்" :**

1853 தொடங்கி அமெரிக்கத் திருச்சபையாளரால் 'இயற்கைத் தத்துவம்' ஒன்று உரைக்கப்பட்டது. மனிதன், பகுத்தறிவு, ஆற்றல், செயல் இவற்றின் மேம்பட்ட நிலை, உலகம், இயற்கைப் பொருள்களின் அழகு, மனிதனால் அவை அழகாக்கப்படுவது, அர்த்தப்படுத்தப்படுவது, பலவகைப்படுத்தப்படுவது, உயர்த்தப்படுவது, அவைகளின் இன்பத்தில் மூழ்கித்திளைப்பது, மனிதனால் இயலாதது ஒன்றும் இல்லை எனச் செயல்படுவது ஆகியவற்றை அந்தத் தத்துவம் உயர்த்திப் பேசியது (Art And Science 204 - 209). அமெரிக்க நிலத்தை மையப்படுத்திப் பேசப்பட்ட பேச்சு இங்கும் பரவியது; உணர்ந்து ஏற்கப்பட்டிருந்தது (ஆஸ்திக மத சித்தாந்தம் – 177).

**புதிய அறிவியல் :**

1857 தொடங்கிப் பல்கலைக் கழகக் கல்வி புவியியல், இயற்பியல், இரசாயனம், உயிரியல், வானயியல் ஆகிய துறைகளில் நவீன செய்தி அளித்தது. பூமியின் தன்மை, வரலாறு, புவனகோசங்களின் கதிகளைப் புவியியல், வானியல் உணர்த்திச் சூரிய மையம், எட்டுகோள்கள், ஈர்ப்பு, தூரம் பற்றி விளக்கின. வேதியியல் துறையில் மூலகங்களின் பண்பு, அளவு, நிறை, சேர்க்கை, பிரிதல், நூதன பொருள் உருவாதலை விளக்கியது. 1864 இல் 55 எனவும், 1885 இல் 67 எனவும், 1900 த்தில் 81 எனவும் மூலகங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தன. ஒளி, வெப்பம், காந்தப்புலம், மின்சாரம் மற்றும் சக்தி ஆற்றல் பற்றி இயற்பியல் விவரித்தது. பஞ்ச பூதங்களில் ஆகாயம் ஒரு மூலபதார்த்தமே அன்று; தீ என்பது கூட அப்படியே என அது விளக்கியதால் பஞ்சபூதக் கோட்பாடு சிதைவுற்றிருந்தது. 1865 நவம்பரில் மின்சாரம் பற்றிய அறிமுகம் சென்னையில் நடந்தது (தத்துவபோதினி டிச. 1866). நீராவி இயந்திரம், மின்தந்தி, நீர் அழுத்தத்தால் இயங்கும் பஞ்சுப் பொதி இறுக்கும் இயந்திரம் ஆகியன நடப்பில் இருந்தன. உயிரற்ற பொருள்களில் உள்ள மூலபதார்த்தங்களே உயிருள்ள பொருள்களிலும் உள்ளன என்ற உண்மையோடு உயிரியல் துறை விலங்கு, தாவரங்களை விளக்கியது.

அச்சுக்கூடம், புகைப்படச்சாலை, நீராவி இயந்திரங்கள், மின்தந்தி, பருத்திஆலை, டார்பிடோ, துப்பாக்கி, பீரங்கி போன்ற போர்க்கருவிகள், கடிகாரம், பஞ்சை இறுக்கி மூட்டையாக்கும் இயந்திரம் (பஞ்சுஸ்கிரு), ஒரு மணியில் 15,000 ஆணி செய்யும் அமெரிக்க இயந்திரம் சார்ந்த தொழில்கள் இயற்பியலாதி கல்வி அறிவைக் கோரின; நிலைநிறுத்தின. 1864 தொடங்கி

www.tamilarangam.net



இதழ்களும் பதார்த்த சாஸ்திரம், அர்த்தசாஸ்திரம் என வேதியியலையும், மூலதனம், லாபம், கூலி அடங்கிய பொருளாதாரத்தையும் விவரித்தன. ஆனாலும் புதிய கண்டுபிடிப்புகள் இல்லாமல், உழவுக்கும், தொழில்துறைக்கும் இணக்கப் பொருத்தம் இல்லாமல் இங்கிருந்து பண்டங்கள் இங்கிலாந்து சென்று செய்பொருள்களாகி மீண்டும் இங்கு வந்தன. இதனால் அந்த நாட்டுத் தொழிலதிபர், வணிகர், தனிநபர் வணிக சுதந்தரம் பெற்று இங்கிருந்து புறநிலை வாழ்வோடு உறவு பூண்டு ஆட்சி செய்தனர். சுவத்துவம், சுவார்த்தம் (சுயசொத்து, சுயநலம்) இரண்டும் புறவாழ்வின் ஒழுக்கங்களாக மேலோங்கின. அப்போது கற்பிக்கப்பட்ட தர்க்கம்கூட தனிப்பட்டவைகளிலிருந்து பொதுவானதை அனுமானிக்கும் நேர்க்காட்சி வாத முறைமையை எடுத்தோதியது. இது பொருள்கள் தமக்குத்தாமே இருப்புக் கொண்டு வாழ்கின்றன என்ற நிபந்தனையைக் கொண்டிருந்தது.

**சபையும் இதழ்களும் :**

இவை அனைத்தும் சேர்ந்து 1870 காலத்திய படித்தவர்களை உருவாக்கியிருந்தன. நேர்க்காட்சி மற்றும் பௌதிகவாதங்களின் முறையே அறியொணா மரபு, நாத்திகப்பக்கங்கள் அவர்களிடம் வேரூன்றியிருந்தன. (Indiasneed-126) இவர்களிடையே உலகாயதம் கொண்டோர் இருந்தனர். அப்போது இருந்தவர்கூடி, சென்னையில் சபை ஒன்றை நிறுவினர் (முதற்குறளுண்மை 4). இந்தச் சபை 1878–1892 ஆண்டுகளில் இருந்தது. அந்தச் சமயத்தில் சென்னையில் சில ஆசார சீர்திருத்த சபைகள், இலக்கிய கழகங்கள், சுதேசி கழகங்கள் இருந்தன. 1884 பிப்ரவரியில் வைஸ்ராய் ரிப்பன் பிரபு சென்னைக்கு வந்தபோது இவை வரவேற்புரை அளித்தன. ஆனால் இந்த நாத்திகசபை உரை அளித்ததாகத் தெரியவில்லை. இந்த சபையினர் 1878–1881 களில் "தத்துவவிசாரணி" இதழை நடத்தினர். 4–12–1881 இதழில் அப்போதைய உப்புவரியை எதிர்த்துக் கடுமையாக எழுதினர். "உயிர்வாழ உப்பு தேவை. உப்புக்கு வரி என்றால் அது உயிருக்கு வரிதானே?" என்று "தத்துவவிசாரணி" மூலம் கேட்டனர். அப்படிப்பட்ட நாத்திக சபையினரே அதே இதழைத் "தத்துவவிவேசினி" என்ற பெயரில் 1882–1886 களில் நடத்தினர். 1882 இல் டி. முனுசாமி, 1885 இல் சோமையா ஆகியோர் பத்திராதிபராக இருந்தனர். "திங்கர்" என்ற ஆங்கில இதழையும் பின்னவர் நடத்தினார் (19ஆம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள் 103, 107, 116, 223). "தத்துவவிவேசினி" 1892 க்கு முன் நின்றுவிட்டதாகத் தெரிகிறது. அந்த நாத்திக சபை பற்றிய குறிப்பும் தெரியவில்லை.

www.tamilarangam.net



**முன்வரலாறு :**

18–ஆம் நூற்றாண்டில் உலகாயதம் நான்கு பூதக்கோட்பாட்டுடன் இருந்தது. மேலும் உழவு, பசுக்காவல், வாணிகம், செங்கோல் முறைமை முதலியனவாக ஆன்றோர் காட்டிய நெறியினின்று இம்மை இன்பங்களை நுகர்ந்து வாழ்தல் உறுதிப்பயன் எனக்கூறி, முயற்சியால் பொருள் ஈட்டுவதை உடன்பாட்டுடன் மேற்கொண்டது (சிவஞானமாபாடியும், அவையடக்கம், சூத். 1, அதி. 2). இம்மையில் மங்கையரை மணந்து, உண்டு, உடுத்து வாழ்வதைப் போற்றியது. கடவுள், மறுபிறப்பு, மேலுலகம் பற்றிய நம்பிக்கைகளை மேற்கொள்ளாதும் இருந்தது.

அப்போது ஐரோப்பாவில் நான்கு பூதக்கோட்போடு, அறிவியல் நுணுக்கங்களால் கைவிடப்பட்டிருந்தது. ஆகாயமும், தீயும் மூலப்பொருட்களே அல்ல. காற்று, நீர், மண் ஆகியன கலப்புப் பொருள்கள் என்ற அறிவு மேம்பட்டிருந்தது. பேருலகம், சிற்றுலகம் பற்றிய விபரங்கள் துல்லியமாக எட்டப்பட்டிருந்தது. புவியீர்ப்பு, கவர்ச்சி, விலகல், அழுத்தம் பற்றி அறியப்பட்டிருந்தன. 1774 க்குப்பின் வேதியியல் விஞ்ஞானிகள் பொருள் அழியாமை உண்மையை உறுதிப்படுத்தியிருந்தனர். சக்தியின் நித்தியத்துவம், மாற்றம் பற்றி இயற்பியல் விஞ்ஞானிகள் எடுத்துக் கூறியிருந்தனர். இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கிருந்து இங்கு வந்து சமயப் பிரச்சாரம் செய்த கிறித்தவச் சபையினர் பொருள்கள் அளவு, வடிவம், குணம், மாற்றமுடையன; மனிதர் முதலான உயிருள்ளவைகளும், சூரியன் முதலான உயிரற்றவைகளும் பொருள்கள் என்றனர். இவை இணக்கம், பொருத்தம் கொண்டுள்ளவை. இவைகள் கடவுளால் படைக்கப்பட்டவை, பிறப்பு அழிவு உடையன; இம்முறையில் பொருள்கள் உண்மையானவை ஆனால் சித்தியமானவை அல்ல, பஞ்சபூதத்தால் ஆனவை என உரைத்தனர் (சத்திய வேத பரிட்சை 79). ஆனால் இவை எல்லாம் தானாய் நடவா. கடவுளால் உண்டாக்கப்பட்டவை என்றனர் (மேலது–24). இப்படிச் சொல்வதன் மூலம் இங்கிருந்த பொருளின் தன்செயலை வற்புறுத்தும் உலகாயத சுபாவவாதத்தையும் மறுத்தனர். மேலும் பொருள்களின் இணக்கம், பொருத்தம், இசைவு, வடிவப்பிரமாணம் ஆகியவைகள் கடவுளால் தரப்பட்டவை என்றனர்; தொடர்ந்து சைவ, வைணவங்களை மறுக்கும் போக்கில் இரு பொருள்கள் ஓரிடத்தில் இருப்பதில்லை, ஒரு பொருளில் இன்னொரு பொருள் நுழையாது எனவும் கூறினர். ஆனால் இருபொருள்கள் சேர்க்கை பற்றிப் பேசவே இல்லை. இப்படி உலகாயதத்தின் சுபாவ தன்செயல் கொள்கை திருச்சபையாளரால் மறுக்கப்பட்டது. மேலும் கடவுளுக்கு நிகழ்காலம் மட்டுமே உண்டு. இப்போது, அப்போது, எப்போதும்

www.tamilarangam.net



என்கிற காலக்குறிப்புச் சொற்கள் நமது புத்தியில் மட்டும் செல்லும் எனத் திருச்சபையாளர் அன்று கூறியது குறிப்பிடத்தகுந்ததும் ஆகும். உலகாயதத்தின் சுபாவ வாதச்சுயசெயல், தானாய் நடக்கும் தன்செயல் கொள்கைகள், சர்வத்தின் நித்திய உறுதித் தன்மை அப்போது வெளிமரபாளராலும் தெளிவாக உணரப்பட்டிருந்தது.

உலகாயதம் உலக இனிமை, மற்றும் ஆண், பெண், உறவு, நிதிப்பொருள்தேடுதல், சேர்த்தல், அறிவு நிலையில் புலன் உணர்ச்சியின் நம்பகத்தன்மை ஆகியவற்றை ஏற்றிருந்தது. 1835க்குப் முன்னும் பின்னும் இங்குப் பரவிய நேர்க்காட்சி வாதம் பொருளிடம் தன்மைப் பற்றையும், கடவுள்மேல் சந்தேகமரபையும், புராண இதிகாச சாஸ்திரங்கள்பால் அனுசரணையற்ற தன்மையையும் மேற்கொண்டிருந்தது. ஆதலால் உலகாயதமும் சந்தேக மரபுடையது. ஒன்றும் இல்லை என்று சாதிக்கும் நாஸ்தீக மதம், தனது புத்தியைத் தெய்வமென்று வணங்குவது எனக் கிறித்தவரால் கருதப்பட்டு எடுத்துப் பேசப்பட்டது (வேத அகராதி – 73, 235). இந்தப் பேச்சு பிரம்மசமாஜிகளுக்குள்ளும் பிறகு பரவியது.

இப்போது பஞ்சபூதங்கள் ஒவ்வொன்றும் இயற்கைப்பொருளாய் இராமல் சேர்க்கைப் பொருளாய் இருக்கின்றன. (வேத அகராதி 230), ஐந்து பூதங்களில் ஒன்று (ஆகாயம்) அறியப்படாத வஸ்துவாகவே இருக்கின்றது; மற்றை நான்கு வேறு மூலபதார்த்தங்களால் உண்டாயின எனக் கிறித்தவர் உரைத்தனர் (சமயபரிட்சை–138). 1840களில் வேதியியல் விஞ்ஞானிகள் உரைத்த மூலபதார்த்தங்களால் நீர், காற்று, மண் என்பவை ஆகியுள்ளன என்ற உண்மை இங்கும் உறுதிப்பட்டது. 1857க்குப்பிறகு பல்கலைக் கழகக் கல்வி நிறுவப்பட்டதால் இயற்பியல், வேதியியல், உயிரியல், புவியியல் துறைஅறிவு இங்கு மேம்பட்டது. பொருள், சக்தி, அளவு, குணம் இயக்கம், பரிணாமம் பற்றிய கருத்துக்கள் இங்கு முன்னிலைக்கு வந்தன. நான்கு பஞ்சபூதக் கோட்பாட்டிற்கும் மேலாக வஸ்துபொருள் கோட்பாடுகள் வந்து நின்றன. பொருள்கள் உண்மையாக இருப்பவை, இவைகளுடைய படிமங்களே கருத்துகள் என்ற அடிப்படையில் தர்க்கமுறையும் விளக்கியது (Art and Science - 36)

1864 இல் இந்த அடிப்படைகளில் பிரம்ம சமாஜிகள் பொருள் விளக்கம் தந்து தமது தத்துவபோதினி இதழ்களில் எழுதினர். 1879–க்கு முன் பொருளின் செயல், சேர்க்கை ஆகியவற்றைக் கடவுளின் செயல் என விளக்கம் தந்தனர். அப்போது நாகப்பட்டினத்திலும், சென்னையிலும்

www.tamilarangam.net



இருந்த நாத்திகர் கடவுள் செயல் என்ற விளக்கத்தை மறுத்து, பொருளின், இயற்கையின் தனக்குத்தானே ஆகிய சுயசெயல் விளக்கத்தைக் கூறினர். சென்னையில் இருந்தவர் "தத்துவ விசாரணி" யில் எழுதினர். பொருளின் சுயஇயக்கம், தன் செயல், பண்பு, சக்தி, மாற்றம் என்பவற்றிற்குச் சுபாவவாத விளக்கம் தந்தனர். இப்போது தமிழகத்து உலகாயதிகள் முழுமையாக நான்கு பூதக்கோட்பாட்டை விட்டு பொருளியக்கக் கோட்பாட்டிற்கு வந்திருந்தனர். பொருளின் இயல்பாகச் சக்தியைப் பேசினர். அதேபொழுதில் பொருள்கள் சேர்தல்—பிரிதல், கவர்ச்சி விலகல் காரணமாகப் பலவகைப்பட்டவைகளாக, பண்புகளுடையனவாக உள்ளன என விளக்கினர். சக்தியின் பல வெளிப்பாடு அல்லது பல வடிவங்கள் என விளக்கவில்லை. மேலும் கூடவே பொருள், சக்தி இரண்டும் பிரிவற்றவை எனவும் உணர்ந்திருந்தனர். ஆனால் பிரம்மசமாஜிகள் பொருள்வேறு, சக்தி வேறு எனக் காம்டி, ஜே.எஸ்.மில் கூறியிருந்த நேர்க்காட்சி வாத விளக்கத்தை அனுசரித்தனர். அப்படி அனுசரித்ததோடு, சக்தி என்பதற்குக் கடவுள் சக்தி என விளக்கம் அளித்து, கடவுள் பொருளை, இயற்கையை இயக்குவதாக உரைத்தனர். அதேசமயம் கடவுள் சக்தி வடிவில் பொருளின் உள்ளே நின்று விளங்கி இயக்குவதில்லை என்பதையும் உணர்வோடு பற்றி இருந்தனர். இது கிறித்தவ பாதிப்பும் ஆகும் (ஆஸ்திகமத சித்தாந்தம் 118).

அப்போது இங்குப் பயிற்சியில் இருந்த இயற்கைத் தத்துவமானது விளைவுகளைக் கொண்டு காரணங்களை, மூலநிலையை அறியும்வரை செல்லுதல் என்னும் நியூட்டன் கருத்தைக் கொண்டிருந்தது. இதன் தொடர்ச்சியாக 1870 களில் ஸ்பென்சரின் பரிணாமக் கோட்பாடு இங்குக் கற்கப்பட்டது. அனைத்து வெளிப்பாடுகளும் முடிவாக நிலையான ஒற்றை மூலத்தைச் சார்ந்துள்ளன, அது அறியமுடியாதது என்ற கொள்கையை ஸ்பென்சர் கொண்டிருந்தார். இதைச் சற்று இலகுவாக்கிப் பொருள் பலவாகும் இயக்கத்தில் உள்ளது, இது நிர்ணயமற்ற குழப்பமான ஏக நிலையிலிருந்து, நிர்ணயமான இணக்கமுள்ள பன்மை நிலைக்கு வரும் இயக்கத்தில் உள்ளது என்றார். இதுவே பரிணாமம் என விளக்கினார் (A History of British Philosophy - 270). இது நேர்க்காட்சிவாதத் தன்மையானது. இதன் விளக்கமாக "ஒரு காலத்தில் ஏகாண்டபிண்டமாக இருந்தும், பிறகு வேறு, வேறு துண்டு துண்டாண்டங்களாகப் பிரிந்தும், சிலகாலம் பயங்கரமான அக்கினிச் சுவாலைகளால் சூழப்பட்டும், பிறகு கந்தமூல, கிருமி கீடாதிகளால் சூழப்பட்டும், பிறகு மிருகமாதிமானவ ஜாதிகளால் வசிக்கத்தக்க இவ்விர உலகங்களாகி, அப்போதிருக்கும் படியான பெயர்களைப் பெற்றதாகவும் சில நாஸ்திகர் சொல்வர்"

www.tamilarangam.net



(ஆஸ்திகமத சித்தாந்தம் – 50). ஆனால் அப்போதைய உலகாயதம் இங்கு இதனைக் கூறவில்லை. அது டார்வின் கண்டுரைத்த பரிணாமத்தைப் போற்றியது. ஒன்றிலிருந்து ஒன்று தோன்றும் பரிணாமத்தை அனுசரித்தது. காரணகாரிய சங்கிலித் தொடர் கோட்பாட்டை மேற்கொண்டிருந்தது. ஒற்றை மூலத்தத்துவத்தை ஏற்கவில்லை. அப்போது 1867இல் சென்னை மாநிலக் கல்லூரி பேராசிரியர் டன்கன் ஸ்பென்சரின் First Principles நூலைப் பதிப்பித்திருந்தார்.

1885இல் பேரா. பெ. சுந்தரம்பிள்ளை பொருள்களில் உள்ள அணுக்களின் ஒடுக்க பேதங்களால் வெப்பம், ஒளி, மின்சாரம் முதலான குணங்கள் நேர்வதாகக் கருதினார் (நூற்றொகை விளக்கம் – 26). இருபொருள்களின் சேர்க்கை கோட்பாட்டின்படி தனது அணுக்கள் ஒன்றோடு ஒன்று கூடியும் பிரிந்தும் வேற்று வேற்று மாற்றங்களை அடையும் என்பதாக உலகாயதிகள் கொண்டிருந்தனர் (ஈச்சுர நிச்சயம் – 173). ஜலத்தை மின்மயாதி சக்திகளால் பிரித்திடில் ஜலத்தோடு சிறிதும் ஒற்றுமையற்ற ஜலஜனகவாயுவும், அனலன் என்னும் மற்றொரு வாயுவும் வெளிப்படும். இவற்றிற்கும் முன்பிருந்த ஜலம் மறைந்து நூதனமாக இரு புதுப்பொருள்கள் அதற்குப் பதிலாகத் தோன்றின. மறுபடியும் இவ்விரண்டு வாயுக்களையும் கலந்திடில் அவை மறைந்து முன்னிருந்த ஜலம் வந்து தோன்றும் (நூற்றொகை விளக்கம் – 28). அணுக்கள் சரி முறைப்படி புணரும். இது ஐக்கியமுயக்கம், இதில் சேர்வது, பிரிவது, சரிமுறை அளவு. புதிய பொருள் தோற்றம், மீண்டும் பழைய நிலை அடைதல் என்ற சுழற்சி நிலையைப் பேரா. சுந்தரம் பிள்ளை இதில் கண்டுணர்ந்தார். உலகாயதிகள் "பௌதிக அணுக்களிலிருந்து அவற்றிற்குரிய அளவைப்படி கலந்து பஞ்சபூதங்களும், அவற்றின்கணுள்ள வரையறை கடந்த கிரம ஒழுங்குகளும், அவை ஒவ்வொன்றினும் அளவைக்கடங்கா சிருட்டிபேதங்கள், பிற இயற்கைச்சிரமங்களும்" நிகழ்வதாகக் கண்டனர் (ஈச்சுர நிச்சயம் – 137). பொருளின் சக்தி வெளிப்பாடு, அதனால் பொருளின் அனந்தமான வடிவங்கள் என்னும் கொள்கை ஒருபக்கம் இருக்கும்போதே பொருள்கள் அளவு முறைப்படி சேர்தல், பிரிதல் அதனால் ஆனந்தமான சிருஷ்டி பேதங்கள் தோன்றுவதான இந்தக் கொள்கையும் இருந்தது!

நான்கு பூதங்கள் சேர்வதால் உயிர், அறிவு தோன்றுகின்றன என்பது தொல்காலமாக இருந்து வரும் உலகாயதக் கருத்து. இது 1856க்குப் பிறகு பல்கலைக் கழகக் கல்வி தோற்றம் பெற்றபின் புதிய பரிமாணங்களை எய்தியது. உயிர்ப் பொருளுக்கும், உயிரற்ற பொருளுக்கும்

www.tamilarangam.net



உரிய மூலகங்கள் ஒன்றே, ஒரே வகையான மூல பூதங்களால் ஆனவையே என்ற உண்மையை வேதியியலும், உயிரியலும் கூறின. இதுகண்டு அப்போதைய உலகாயதச் சடத்திலிருந்து உணர்வு, அசேதனத்திலிருந்து சேதனம், அசித்திலிருந்து சித்து தோன்றுவதாகவும் மேலெடுத்து உரைத்தனர். 1880–1882 இல் பிரம்மசமாஜிகளும், சித்தாந்த சைவரும் இதை மறுத்துப் பேசினர். மூலபூதங்களைக் கொண்டு சேர்த்து ஓர் உயிரை உருவாக்கிக் காட்டும்படி உலகாயதிகளைச் சைவர் நிர்ப்பந்தித்து வினவினர் (அபாசஞான நிரோதம்–17, நூற்றொகை விளக்கம் – 34). உலகாயதிகள் அப்போது உயிர்களின் பரிணாமப்போக்கையே உரைத்துக் கொண்டிருந்தனர். தனியாக உயிர் என ஒன்று இல்லை, அது உடலின் குணம் எனக் கூறினர் (ஆபாசஞான நிரோதம்–16). இது வெகுகாலமாக உள்ள விவாதமே. இயற்கை தனது பொருள்களிலிருந்து உயிரை உண்டாக்க பல கோடியாண்டுகள் எடுத்துக் கொண்டதை, உலகாயதிகள் ஒரே ஒரு நாளில் செய்துகாட்ட நிர்ப்பந்திக்கப்பட்டனர் (இயற்கையின் இயக்கவியல் 311).

அதேகாலப் பகுதியில் புவியியல், தொல்லுயிரியல், இயந்திரவியல், வேதியியல் ஆகியன உணர்வுகளுக்குப் புறத்தே பொருள்கள் உள்ளன: ஆசை, கோபம், விருப்பு, வெறுப்புகளுக்கு வெளியே பொருள்கள், உலகு உள்ளன; கருத்துக்கள், உணர்வுகள், அறிவு புற உலகால் ஏற்படுகின்றன என உரைத்தன. ஆனால் பொருள்கள், புலனுணர்வு, அறிவு என்ற வரிசையில் புலனுணர்வுகளுக்கு முதன்மை தந்து நேர்க்காட்சிவாதம் உரைத்தது. "வெளியில் இருக்கும்படியான ஓர் மாம்பழம் இருப்பதாக எப்படிச் சொல்லக்கூடும்? தான் அறிவதெல்லாம் கூடி, எனக்குள் இருக்கும் இந்திரிய ஞானமல்லவா? எனது இந்திரிய ஞானத்திற்கு வெளியிலும், எனக்கு வெளியிலும் ஒரு பழம் இருப்பதைப் பார்ப்பதாகச் சொல்லக்கூடுமோ? கூடாதல்லவா! ஆகவே எனது இந்திரிய ஞானத்தால் இயற்கை அறிவை இயங்கச் செய்வதே ஜடப்பொருள்" (ஆஸ்திக மதசித்தாந்தம்–95). இப்படி நேர்காட்சிவாதம் இருக்க, உலகாயதம் 1886 இல் உலகம், பொருள்கள் – வஸ்து என்பன சத்து மற்றும் முதற் பொருள் ஆகும்; அறிவுஒருகட்டத்தில் தோன்றி, இருந்து, நீங்கும்; ஆகவே உலகம் முன்னது, அறிவு பின்னது ஆகும் என உரைத்தது; தொடர்ந்து உலகு சத்துப்பொருள் என எழுதியது. இதை எதிர்த்துச் சங்கர அத்வைதம் சார்ந்த நமச்சிவாய செட்டி சுதேசமித்திரன், பிரம்மவித்யா இதழ்களில் இந்து என்று பெயரில் "உலகம் சத்தா? அசத்தா?" என வினவி, உலகம் அசத்து என விவரித்துப் பொய் என முடித்தார். இதை மறுத்து உலகாயதம் சார்ந்த

www.tamilarangam.net



சோமையா "தத்துவவிவே சினி" இதழில் ஹிதோபதேசி என்ற பெயரில் "உலகம் அசத்தா? சத்தா?" என எதிர்வினா எழுப்பிச் சத்து என விவரித்து என்றுமுள்ள உண்மை என முடித்தார். (26.9.1886 இதழ்).

**இணைப்புக்கண்ணி :**

"உலகம் அசத்தா? சத்தா?" என்ற அந்தக்கட்டுரை உலகாயத வரலாற்றில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிடைக்கப்பெறும் அரிய ஆதாரம் ஆகும். 1870 களில் உருவாகிய பல்கலைக் கழகக்கல்வி, அறிவியல் துறைகளின் போதனை, அதனுடைய சாதனை ஆகியவற்றின் விளைவாகவும், ஆத்திகருடைய மறுப்புரைகளுக்குப் பிரதிபலிப்பாகவும் திகழ்வது ஆகும். அப்போது வாழ்ந்த உலகாயதி ஒருவரால் எழுதப்பட்டது என்ற முறையில் விதந்து எடுத்துக்காட்டுதற்குரியதும் ஆகும். மத்திய காலம் மற்றும் இருபதாம் நூற்றாண்டு உலகாயதங்களுக்கு இடைப்பட்ட இணைப்புக்கண்ணி ஆகும். நிலம், உழவு, தனம், குடும்பம், சந்ததி என வாம் சம்சாரிகளால் அனுசரிக்கப்பட்டுக் காலந்தோறும் சமய நெறியாளர்களால் மறுக்கப்பட்டது. 1800 க்கு முன்னும் பின்னும் கிறித்தவர்களாலும், பிரம்மசமாஜிகளாலும், சைவர்களாலும் நிராகரிக்கப்பட்டு வந்தது. நேர்க்காட்சிவாதிகளுடைய ஒற்றை மூலப்பரிணாமக் கொள்கையாலும், புலனுணர்வை முதன்மையாக்கும் போக்காலும், அனுபவவாதத்தாலும் ஓரங்கட்டலுக்கு ஆளானாலும், உலகாயதத்தின் உயிர்ப்பு வீச்சுடையதாகவே இருந்தது. பொருள், மூலகாரண சக்தி, வெளிப்பாடு, பன்மைத் தோற்றங்கள் என்ற கருத்தமைப்புக்கு மாறாகப் பொருள், சேர்க்கை–பிரிதல், கவர்ச்சி–விலகல், பன்மைத்தன்மை என்ற கோட்பாட்டைக் கொண்டு விளங்கியது. அந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து கிறித்தவச் திருச்சபையாளர் ஒருபொருள் இன்னொரு பொருளுக்குள் நுழையாது, ஒரு இடத்தில் இருபொருள் இருக்காது எனக் கூறிவந்தனர். ஆனால் வேதியியல் இருபொருள் சேர்வது, இரண்டும் மாறுவது, ஒரு பொருளாவது என்ற கொள்கையை உறுதிப்படுத்தியது. இதை உலகாயதம் ஏற்று வளப்படுத்திக் கொண்டது. பொருளின் பண்பு மாற்றத்தை உடன் கொண்டு பன்மைத்தோற்றத்தை விளக்கியது. திருச்சபையினரும், நேர்க்காட்சிவாதிகளும், "இயற்கைத்தத்துவாளரும்" நிகழ்காலத்தைப் பெரிதுபடுத்தி அதிலேயே பொருளை, உணர்வை, அறிவை, கடவுளை ஆழ்த்தினர். உலகாயதம் முக்காலத்தைப் பொருளியக்கத்தோடு சேர்த்துக்காட்டியது. இனம்புரியாத ஒற்றைமூலத்திலிருந்து தொடங்கி பொருள் சென்று பல்கித்தேய்வதான ஒரு காட்சியை ஸ்பென்சரின் தத்துவம் தோற்றுவித்தது. இப்படியான இந்தச் சந்தர்ப்பத்தில் "உலகம் அசத்தா?

www.tamilarangam.net



சத்தா?" என்ற கட்டுரை உலகாயதிகளால் பிரசுரிக்கப்பட்டது. சம்சாரிகள் உலகாயதிகளாக இருப்பது எதார்த்தம். மேலும் "உலகத்தார் ஒரு பொருளின் அல்லது பல பொருளின் கூடுதல், அல்லது திரிதல், அல்லது ஒரு பொருள் மற்றொரு பொருளாகத் தோற்றுதலாகிய இவைகளையே மற்றொரு பொருளாகச் சொல்லுகிறார்களேயன்றி, மற்றப்படி வேறு பொருள் உண்மைப்பொருளிலிருந்து வந்ததாய்க் காட்டுகின்றாரில்லை ... காரணத்தின் கூட்டம் அல்லது மாறுதல் அல்லது மற்றொரு தோற்றமாகிய குணம் அல்லது தொழிலையே பொருளாகச் சொல்லுகிறார்கள். உலகத்தார் கொண்ட கொள்கைக்கும், வேதாந்தவிசாரணைக்கும் வெகுபேத மிருக்கிறது" (துவிதாத்வைதவாதம் – 10). சங்கர அத்வைதிகள் காட்டும் உலகத்தாருக்கும், உலகாயதிகளுக்கும் வித்தியாசமே இல்லை. பேரா. சுந்தரம் பிள்ளை காட்டும் உழவர்கள் குறிப்பிடத்தக்கவர். அவர்களுடைய சூழ்ச்சியையும், அனுமானிக்கும் அளவையையும், முன், பின் கூட்டிக்காரணகாரியக் கொள்கைகள் காட்டுதலையும் அவர் பெருமைப்படுத்துகிறார் (மனோன். 3.2.205). அவர்கள் நடப்பதைக் கொண்டு நடக்க இருப்பவைகளையும், அதில் தமது பங்கையும், தாம் செய்ய வேண்டியவைகளையும் உறுதி செய்கின்றனர். அவர்கள் கருதியதுபோலவே பிறகு நடப்பும் உள்ளது. இவர்கள் சம்சாரிகள். மரபாகவே இவர்கள் உலகாயத இயல்புடையவர்கள். இந்த வேர்களிலிருந்தும், அப்போதைய உலகாயத சபையினர் விளங்கினர்.

கிறித்தவத் திருச்சபையினர் உலகு பொருள்கள் சூன்யத்திலிருந்து, ஒன்றுமில்லாமையினின்று கடவுளால் உண்டாக்கப்பட்டவை என அந்த நூற்றாண்டு நெடுக உபதேசித்தனர்.

பொருள்கள் ஒருகாலத்தில் தோன்றி இன்னொரு காலத்தில் அழிவன. காலத்தால் வேறுபாடு உறுவன. கண்டிப்பு, பகுப்பு மாற்றம் பெற்றவை; இவையும் அழிவுக்குரியன. பொருள்கள் இடத்தில் நிலவுபவை உலகுப் பொருள்கள் அளவு, வகை இலட்சணம் உடையவை; பிரமாண இயக்கம் கொண்டவை; இந்த விதியும், செயலும் கொண்ட இயக்கம் பொருள்களுக்குத் கடவுளால் தரப்பட்டவை. உண்டாக்கப்பட்ட இவைகளுக்குள் கடவுள் இல்லை. கடவுளினின்று வேறாகவே உள்ளவை. இப்படிக் கொள்வதால் உலகு தொடர்பான விஞ்ஞானங்களைத் தமக்கேற்ப அனுசரிக்க வசதியும் ஏற்பட்டது. இவைகளை மேற்கொண்டு இங்கிருந்த தத்துவங்களை மறுத்தபடி ஆட்சியில் இருந்தனர். கூடவே நேர்க்காட்சி வாதக் கொள்கைகள் இங்கு ஆட்சியாளரிடையே வாழ்ந்து பொருளைப் பற்றிய சந்தேக மரபைக் காட்டி கொண்டிருந்தது.

www.tamilarangam.net



"தத்துவவிவேசினி" இதழில் அதன் சபையினர் பொருளின் இருப்பிற்கும் நிலவுதலுக்கும் அதன் தானாய், தனக்குத்தானே நடக்கும் தன்மையை முதன்மை இயல்பாக கூறினர். அதனுடைய புறநிலைத் தன்மையில் உறுதி கொண்டிருந்தனர்.

1886 ஆகஸ்டுக்கு முன் இவர்கள் உலகில் இருக்கும் பற்பல பொருள்கள் காரியப்படுகின்றன; அக்காரியங்கள் காரணமாக நின்று இன்னொரு காரியப் பொருளைத் தருகின்றன. இதைப் பார்த்திருக்கிறோம். ஆனால் உலகம் காரியப்படுவதை நாமேனும், நம்முன்னோரேனும் கண்டதும் இல்லை, கேட்டதும் இல்லை; காண்பது இந்த உடலால் அன்றி ஆகாது; கேட்பது ஏனையோர் கூறக் கேட்க வேண்டியது; கூறுதல் என்பதானது காண்பது இல்லாமல் எங்ஙனம் இயையும்! காண்பது உடலோடு கூடியே நிகழ்வது ஆகும்: உலகம் இல்லாவிட்டால் உடல் இல்லை உலகம் இல்லை என்று உடல் இல்லாமல் இன்னொன்று இருந்து கண்டவரை நாம் கண்டதில்லை; ஆதலால் உலகம் எப்போதும் உள்ளது. இது காரியம் அன்று, காரணமே எனத் தம்போக்கில் கூறினர். 1880இல் இப்படிக் கூறியதாகத் தகவல் இல்லை. இக்கூற்று உலகாயத வரலாற்றில் குறிப்பிடத் தகுந்தது ஆகும். பூகர்ப்பவியலும், தொல்லுயிர் ஆய்வும் இங்கு இல்லாத நிலையிலும், அல்லது அவை பற்றிய நூலறிவும் ஆழப்படாத நிலையிலும் (நூற்றொகை விளக்கம் – 49) இப்படிக் கூறப்பட்டது. கான்ட் எழுதிய ஒளி முகிற்படல் விளக்கம் இங்கு ஏற்கனவே பிரம்ம சமாஜிகளால் எடுத்துக் காட்டப்பட்டிருந்தது (ஆஸ்திகமத சித்தாந்தம் – 50). இருந்தாலும் இங்கிருந்த உலகாயதசபையினர் அதை அனுசரிக்கவில்லை. கிறித்தவச் சபையினரும், சைவசித்தாந்திகளும் உலகைக் காரியப்பொருள் என விளக்கினர்; அவர் விளக்கப்படி காரியப்பொருள் – படைக்கப்பட்ட பொருள்கள் அழியும். இந்த விளக்கத்தையும் அந்த உலகாயத சபையினர் ஒப்பவில்லை. இந்த உலகமானது, கோடிக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் ஒருநிலையிலிருந்து, காலம் செல்லச்செல்ல இப்போதுள்ள ஸ்தியை அடைந்துள்ளது. அதன் போக்கில் உடல் உருவாகி வந்தது. இதனுடைய வரலாற்றை டார்வின் விளக்கிய பரிணாம அளவில் மட்டும் ஏற்றிருந்தனர். உலகம் இருந்தாலே உடல் தோன்ற இயலும், உடல் இல்லை எனில் உலகை அறிய இயலாது. வேறு ஒருவர் கடவுள் இருந்து கண்டதாகக் கூறுவதை இவர்கள் ஏற்கவில்லை. ஆகவே உலகம் என்றும் உள்ள காரணப் பொருள்; உண்மையானது. இது கேட்ட சங்கர அகவய அத்வைதிகள் உடனே மறுத்தனர். ஓரிடத்தில் இருபொருள் இருக்காது என்ற கிறித்தவ உரையைப் பின்பற்றியபடி, காரணம் மட்டும் உண்மை, காரியம் பொய், காரணகாரியச் சங்கிலித் தொடர் என்பது இல்லை எனத் தமது விவர்த்தவாதப் பார்வையில்

www.tamilarangam.net



உலகாயதத்தை மறுத்தனர் (சுதேசமித்திரன் 23–8–1886). உலகாயத சபையினர் "தத்துவ விவேசினி" 26–9–1886 இதழில் சங்கர அகவய அத்வைத நெறியினரை நிராகரித்து "உலகு அசத்தா?" என வினவிச் சத்து – உண்மை எனக்காட்டினர்.

**அகச்சான்றுகள் :**

"உலகம் அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கென ஓர் சொரூபமின்றி, முக்காலத்து நிகழும் எல்லாச் சொரூபங்களும் தாமாய்க்குருத்துவம், இயக்கம் ஆகருஷிணம், திரிவு முதலியவற்றை அபின்னமாய் யாண்டும் உடைய உண்மைப் பொருள். இதுவே சத்து என்றும் சொல்லப்படும்" என்பது உலகாயத விளக்கம். குருத்துவம் – பளு, எடை. இதில் நிலக்கரி உலோகமா, கல்லா என அறிய இவை ஒவ்வொன்றினுடைய அணு தரும சம்பந்த ஆற்றலைக் கொண்டு இது, இது எனத் துணியவேண்டும்; பிறபொருள்களுடன் சேர்தற்குரிய தனிப்பட்ட இயல்பு. ஆற்றலைக் கொண்டு முடிவு செய்யவேண்டும் என்றனர். இவ்வாறாகப் பொருளின் இயல்பை விளக்கிவிட்டு அதன் அழியாத தன்மையை எடுத்துக் காட்டினர். உற்பத்தி என்பது முதற்காரணம் இல்லாது உண்டாவது; இதை வைதிகிகள் சிருஷ்டி என்பர். உருத்திரிதல் என்பது ஒரு உருவம் இன்னொரு உருவமாய்த் திரிவது. குடம் என்பது பொன், செம்பு, பித்தளை, மண் என்பனவற்றால் செய்யப்படும். குடம் என்பது ஒருவகை உருவிற்குத் தமிழ் நாட்டார் வைத்துள்ள கற்பிதப் பெயர்! குடம் மாறும் ஆனால், தங்கம், செம்பு, பித்தளை, மண் என்பன மாறாதவை, அழியாதவை என்றனர். இப்படிக் கூறுவதன் மூலம் இருபொருள் ஒரு இடத்தில் இருக்காது என்ற உரைக்கு பதிலுரை தந்தனர். மண்குடம் என ஒரு பொருளைக் காட்டும்பொழுது மண்ணும், குடமும் என்ற இரு பொருள்கள் ஓரிடத்தில் இருப்பதாகக் கூறத் தொடங்கி, சங்கர அகவய அத்வைதிகள் குடமாக வளைந்து குவிந்து உருண்டு இருத்தல் என்பதுகூட பொய், அப்படி எதுவும் இல்லை என்று கூறி, அணுக்கள்கூட இல்லை, மண்ணணு, தங்கஅணு என்றவை கூட இல்லை என்றனர். பொருள் இல்லை என்ற முடிவும் கூறினர். இதனோடு கூடவே குடம் என்பது வளைவு, குவிவு எனக் குயவனால் செய்யப்படும் குணவேற்றுமை மட்டுமே, இல்லாத பொருளை ஆக்கவில்லை என்பதும் அகவய அத்வைதிகள் உரை ஆகும். ஆனால் இந்தக் குணவேற்றுமை விளக்கத்தில் வடிவ வேற்றுமையையே கண்டனர். காரணத்தை மட்டும் நிலைப்படுத்திப் பேசி வந்தனர்; இதிலும் கூட வஸ்து, பூதியம், பொருள் தன்மையற்ற காரணமாகக் காட்டுவதில் ஆழ்ந்து ஈடுபாடு கொண்டிருந்தனர்; ஆனாலும் நேர்க்காட்சி வாதம் அப்போது கூறிக்

www.tamilarangam.net



கொண்டிந்த பன்மையாகச் சிதறிவிரியும் ஒற்றை மூலத்தத்துவக் கோட்பாட்டை (First Principles) அவர்கள் ஏற்கவும் இல்லை.

சங்கர அகவய அத்வைதத்திற்குப் பொருள் அழியாமை / நிலைத் தன்மையைப் பதிலுரையாகக் கூறிய இங்கிருந்த உலகாயதசபையினரின் கருத்தமைப்பு ஐரோப்பிய உலகாயதரின் கருத்தமைப்போடு ஒப்பு காண்பதற்குரியது ஆகும். "கட—ம ஒர்வகை உருவிற்குத் தமிழ்நாட்டார் சொற் சுருக்கமாய் வைத்துக் கொண்ட கற்பிதப்பெயரேயல்லது வேறல்ல. இந்தக் கடம் / குடம் மண்ணாயிருந்தாலும் கடம்தான், பொன்னாயிருந்தாலும் கடம்தான், செம்பாயிருந்தாலும் கடம்தான், பித்தனையாய் இருந்தாலும் கடம்தான். கட உருவம் மாறினும் வஸ்துவாகிய மண், செம்பு, பித்தளை இவைகள் மாறவும் மாறா, அழியவும் அழியா" (தத்துவவிவேசினி). நகேலி என்ற ஜெர்மானியருடைய கூற்றை மறுக்கும் போக்கில் ஏங்கெல்ஸ் "பல்வேறு, யதார்த்தமாகவே இருக்கிற வஸ்துத்தன்மையுள்ள பொருள்களும், இயக்கத்தின் வடிவங்களும் மட்டுமே (புலன்களுக்கு) அதற்கு உட்பட்டு வந்துள்ளன. வஸ்துத் தன்மையுள்ள பொருள்களின் ஒட்டுமொத்தமே வஸ்து; இந்தக் கருத்து அதிலிருந்து சூக்குமப்படுத்தப்பட்டதாகும்" எனக் கூறியதோடு, மாம்பழத்தைத்தான் சுவைக்கிறோம், பழத்தைச் சுவைக்க முடியாது என்ற ஹெகலின் கூற்றைக் கூட ஏற்காது இருந்தார். (இயற்கையின் இயக்கவியல் 369). "தத்துவவிவேசினி" இதழாளரான சோமையா "குடம் என்பது கற்பிதமானது" என்று சிந்தனை மூலம் பொதுமைப்படுத்தும் சிந்திப்பைப் பேசுகிறார். ஏங்கெல்ஸ் அதைச் சூட்சுமப்படுத்துதல் என்கிறார். மற்றபடி கற்பிதமானது என்பது இல்லாத ஒன்றைக் கற்பித்தல் என்ற அர்த்தத்தில் சோமையாவால் மேற்கொள்ளப்படவில்லை!

பொருளின் அழியாமையோடு தொடர்புடையது காரண காரிய நிலைகள்; பொருள் இவ்விரண்டிற்கும் நியதமாய் உள்ளது. அப்போதய உலகாயத சபையினர் காரணகாரிய சங்கிலித் தொடரை எடுத்துக்காட்டினர். ஒருபொருள் காரணநிலையில் இருக்கும் போது, அது அதற்குமுந்தைய இன்னொன்றின் காரியமாயும் உள்ளது. காரணத்தை மட்டும் நோக்கும்போது, காரியம் இன்மையாகவும், காரியத்தை மட்டும் நோக்கும் காரணம் இன்மையாகவும் தோன்றும். ஆனால் உலகத்துத் தர்க்கவாதிகள் "ஒன்றைக் காரணமென்றும், மற்றொன்றைக் காரியமென்றும் குறிப்பது சொரூபத்தை நோக்கியே அல்லாமல் வஸ்துவை அல்ல" (தத்துவவிவேசினி). இதை இங்கிருந்த உலகாயதர் உணர்ந்திருந்தனர்! காரணத்தின்

www.tamilarangam.net



வடிவமாற்றமே காரியம். அதனுடைய உட்பொருள் மாறுவதற்குத் தர்க்கவாதிகள் முக்கியத்துவம் அளிக்கவில்லை. ஐரோப்பியக் களத்திலும் அப்படியே. இதை எடுத்துக்காட்டி ஏங்கெல்சும் தமது இயக்கவியல் சிந்தனை முறையைப் புலப்படுத்தினார் (இயற்கையின் இயக்கவியல் – 73). இங்கிருந்த உலகாயதிகள் பொருள் எக்காலத்தும் உள்ளதாகும் என்பதைப் புலப்படுத்தவே அதிக முயற்சியில் ஈடுபட்டனர். மற்றபடி காரணத்தினின்றும் குணமாற்றமும், உட்பொருள் மாற்றமும் பெற்றது காரியம் என்பதற்குச் சுண்ணாம்பு, மஞ்சள் சேர்ந்தவிடத்துச் சிவப்புதனிமம் தோன்றுவது போன்று, பூதச் சேர்க்கையின்கண் அறிவு உண்டாகும் என்ற மரபான விளக்கத்தையே சார்ந்திருந்தனர். காரணத்திற்கும், காரியத்திற்கும் உட்பொருள் – தருமவேற்றுமை உண்டு என மட்டும் உணர்ந்திருந்தனர் எனலாம்!

இதைத் தொடர்ந்து அப்போதய உலகாயதிகள் அறிபடுபொருள் முன்–அறிவு பின், உலகம் முன்–அறிவுபின் எனவும் விவரித்தனர். பொருள், உலகம் என்றும் இருப்பது, அறிவு என்பது உடல் கருத்தரிக்கும் காலத்தும், பிரேதமாகும் காலத்தும் அறிவோடு கூடிய ஞான்றும் இருக்கின்றதாகவும், அறிவு இடை நடுவில் மாத்திரம் இருந்து நீங்குவதாகவும் காணப்படுகின்றமையான் அறிபடு பொருளே முன்பு எனவும், அறிவு பின்பு எனவும் ஆகின்றன; அறிபடு பொருள் என்றும் இருக்கவும் அறிவு ஒரு போது தோன்றி நசிக்கவும் காண்கையால் அங்ஙனம் கூறப்பட்டது (பிரம்மவித்தியா 31–8–1887). ஒருவருடைய வாழ்நாளில் சரீர அவயவத்தாலும், கல்வியானும், பழக்கத்தானும் அறிவு பெறப்படுகிறது. தொடர்ந்து, சரீரத்தில் அறிவு தனியாக இல்லாமல் அபின்னமாய் / பிரிந்து நிற்காமல் காணப்படுகின்றது. 1879 இலேயே நாம் பதார்த்தங்களைப் பார்க்கும்போது அவைகள் கண்ணில் பிரதிபலிக்க அப்படி ஜொலிக்கும் பதார்த்த உணர்ச்சி பார்வை நரம்புகளின் வழியாய் மூளைக்குச் சென்று மூளையில் மோத, பதார்த்தங்கள் இன்னின்ன வர்ணங்கள் உடையனவென்று மனதிற்குத் தெரிவிக்கிறது என இங்கு அறிந்திருந்தனர் (ஆஸ்திகமத சித்தாந்தம்– 37). இதை உலகாயத சபையினரும் ஏற்றிருந்தனர் (ஈச்சுரநிச்சயம் – 144). புறப்பொருளில் வியாபிக்கும் ஒளிகண்ணுள் பிரதிபலித்தால் அப்பொருள் தோற்றங்கள் நமக்குவிடயமாகும் என அறிந்திருந்தனர் (துவிததேத்துவிதவாதம் – 21). அந்த சமயத்தில் சங்கர அத்வைதிகள் "கண் அறிவதெல்லாம் பிரதிபிம்பத்தையே ... தோற்றம் வெளியில் உள்ளது. போலித்தோற்றம் கண்ணில் உள்ளது; நமக்கு விடயமாவது யதார்த்தத் தோற்றமன்று; போலித் தோற்றமாக" என்றனர்

www.tamilarangam.net



(மேலது). இதுகூறி அவர்கள் நேர்க்காட்சிவாதப் புலனுணர்ச்சி முதன்மை மரபின் பேச்சையும் மேற்கொண்டனர் (மேலது).

"தத்துவேவிவேசினி" இதழினர் ஒரு பொருளை நிறுவும்போது அப்பொருளுக்கு இலக்கணம் கூறித் தொடங்கினர். உலகம் அல்லது பூதியம் அல்லது வஸ் என்பதற்கு முதலில் இலக்கணம் கூறினர். இந்த இலக்கணத்தில் அறிவியல் கருத்துக்களைத் துணையாகக் கொண்டனர். இயக்கம், குருத்துவம் பளு ஆகருஷணம், கவர்ச்சி, திரிபு ஆகிய இயற்பியல், வேதியியல் துறைசார்ந்த கருத்துக்கள். பிறகு சத்து / உண்மைக்கு இலக்கணம் கூறிப் பொருத்திக் காட்டினர். தனிப்பட்டவைகளிலிருந்து தொடங்கி பொதுமைக்குச் சென்று, அதனையே நிலைப்பிடமாகக் கொள்ளாமல் மீண்டும் தனிப்பட்டவைகளுக்கு வந்து முடித்தனர். தங்கம், பித்தளை, செம்பு, மண் என்பனவே நிலையானவை. இவை குடமாக உருமாற்றம் பெற்றால் அது பொதுநிலையே, குடம் என்பது கற்பனையில் கொள்ளப்பட்ட நிலையே. அதிலேயே, அவர்கள் நிற்கவில்லை; மீண்டும் தனிப்பட்டவைகளுக்கு வந்து பொருளை நிச்சயப்படுத்தினர். இதனை மேலும் உறுதிசெய்ய நியாயங்களை மேற்கொண்டனர். சர்வநிலை, சம்பவநிலை பாரிசேட நிலை, சகலநிலை நோக்கில் பரிசீலித்து இனம் கண்டனர். வெறும் தோற்றம் / வடிவநிலை மாற்றத்தை மட்டும் கணக்கில் கொள்ளாது, பொருள் நிலையைக் கவனித்துப் பேசினர். புறத்திலிருந்து அகத்திற்குச் சென்று மீண்டும் புறத்திற்கு மீளல், பருமையிலிருந்து கற்பனைக்குச் சென்று மீண்டும் பருமைக்கு மீளல்; என்ற முறையியலை மேற்கொண்டிருந்தனர். பொருள்முதலை மேம்படுத்தினர்.

**புறச்சான்றுகள் :**

அகநிலைச் சான்றுகள் மட்டும் அல்லாமல் புறநிலைச் சான்றுகளும் "தத்துவவிவேசினி" பற்றி உள்ளன. யாழ்ப்பாணம் சபாரத்தின முதலியார் தமது 22வது வயதுக்கு முன்பிருந்தே இந்த இதழை வாசித்துத் தமது கண்டனங்களை யாழ்ப்பாணம் "உதயபானு" இதழ்களில் கடிதவாயிலாகப் பிரசுரித்து வந்தார். அப்போது 1880க்கு முன்பின் அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் பௌதிகவாதம் தலையெடுத்திருந்தது. இங்கிலாந்திலும் விருத்தி பெற்றிருந்தது. இங்கும் பரவியது. அதை மறுக்க அவர் விழைந்தார். அப்போது இங்கிலாந்தில் கிறித்தவ மறுப்பாளராகப் பிரபலப்பட்டிருந்த சார்லஸ் பிராட்லா என்பவர் நாத்திகராகப் பேசப்பட்டார். விக்கிரக ஆராதனை மறுப்பாளராக மட்டும் இல்லாமல் உடைப்பாளராகவும், கிறித்தவ நம்பிக்கை, பழக்கவழக்கங்களை எதிர்ப்பவராகவும் இருந்தார்.

www.tamilarangam.net



இவர் டார்வினை அனுசரிப்பவராகவும், சடத்திலிருந்து சித்து தோன்றுவதை ஏற்றவராகவும் இருந்ததாகத் தகவல் எதுவும் இல்லை. அவருடைய கருத்துகளைத் தத்துவவிசாரணி, தத்துவவிவேசினி பிரதி, பாதித்தாகச் சபாரத்தின முதலியார் கருதினார் (ஈச்சுர நிச்சயம் முகவுரை). 1879 இல் பிரம்மசமாஜியான சே.ப. நரசிம்மலு டார்வின் கோட்பாட்டைத் தனியாகவும், உலகாயதத்தைத் தனியாகவும் பேசி அவைகளுடைய நாத்திகத் தன்மைகளை மறுத்து உரைத்தார். 1880–1885 காலப்பகுதிகளில் எழுதப்பட்ட "உதயபானு" இதழ் கடிதங்கள் 1896 இல் "ஈச்சுர நிச்சயம்" என்ற நூலாகச் சபாரத்தின முதலியார் வெளியிட்டார். இதில் இங்குள்ள உலகாயத சபையினர் டார்வின் பரிணாமத்தை அனுசரிப்பதைக் காட்டுகிறார். அதனால் சென்னை "தத்துவவிவேசினி" இதழ் மற்றும் சபையினர் பிராட்லாவைப் படித்திருக்கலாம்; ஆனால் பின்பற்றியதாகக் கொள்ள இயலவில்லை. மேலும் அந்தச் சபையினர் டார்வின் கோட்பாட்டில் தம்போக்கில் நின்றதாகக் கொள்ள ஈச்சுர நிச்சய நூலே சான்றளிக்கிறது.

குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான், இயற்கை நிலைமைகளுக்கு ஏற்ப உயிர்ப் பொருள்கள் தமது உறுமைப்பமைதி பெற்றன, ஜீவராசிகளின் தோற்றம் மற்றும் பரிணாமத்திற்குக் கடவுளின் பங்கு இல்லாமை என்பன பற்றி டார்வின், ஹக்ஸ்லி, டிண்டல் வழி இங்கிருந்தவர் கூற்றுத் தம் உலகாயதத்தை வளப்படுத்திக் கொண்டனர். ஒன்றிலிருந்து இன்னொன்று, ஒன்று வேறொன்று எனப் பரிணமிப்பது குறித்த உலகளாவிய சான்றும், விபரமும் பெற்றனர். இந்தப் பக்குவத்தை 1880–1885 காலப்பகுதியில் எய்தினர். அப்போதைய சைவ சித்தாந்திகள் "இப்போது காணப்படும் சிருட்டிபேதத் தொகை ஆதிக்கண்ணும் உண்டு என்பதுவும்" இப்படி அமைக்கக் காரணகர்த்தன் வேண்டும் என்பதுவும் தெற்றெனப் புலப்படும் என்றனர். கிறித்தவத் திருச்சபையினர் தமது மறைநூலுக்கு மாறான, பரிணாமத்தை நிராகரித்தவண்ணம் இருந்தனர்.

23–8–1886 சுதேசமித்திரன் இதழில் சங்கர அகவய அத்வைதிகள் அணுக்கள் பற்றிப் பேசினர் (உலகம் சத்தா, அசத்தா கட்டுரை). அணுக்கள் ஒன்றுடன் ஒன்று விரவி ஒரு வஸ்துவில் உள்ளன. விரவுதல் என்றால் அருகருகே நிற்றல் முன்பின் மேல்கீழாக அணுக்கள் கூடி நிற்றல் ஆகும். ஓர் அணு இன்னொரு அணுவுடன் விரவும்போது ஒரு பக்கம் விரவி, மற்ற பக்கங்கள் விரவாது. இப்படிக்கூறி அணு என்பதும் இல்லை, அசத்து என முடித்தனர். இதை மறுத்து "தத்துவவிவேசினி" இதழினர் தமது "உலகம் அசத்தா? சத்தா?" கட்டுரையில் அணு தரும சம்பந்த ஆற்றலால் நிலக்கரியை உலோகமா, கல்லா எனத் துணிதல் கூடும் என்றனர். இதை

www.tamilarangam.net



மறுத்த சங்கர நெறியினர் நிலக்கரி, உலோகம் என்பன பரியாயபதங்கள் / பிரதிபதங்கள், சொற்கள் என்ற அளவில் பேசி, அணுக்கள் பற்றி மீண்டும் பரிசீலிக்கவில்லை. ஆதலால் உலகாயதர் கூறிய அணுதரும சம்பந்த ஆற்றல் பற்றி அங்கு அறியமுடியவில்லை. ஆயினும் சபாரத்தின முதலியாரது ஈச்சுர நிச்சயம் நூல்வழி அறியமுடிகிறது. பழங்காலம் முதல் மத்திய காலம் நெடுகிலும் நான்கு பூதங்கள் கூடுவதால் / கூட்டரவால் பலவகையான பொருள்கள் உண்டாகின்றன என்று உலகாயதம் சொன்னது. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் பிற்பகுதியில் சேர்தல் – பிரிதல், கவர்ச்சி – விலகல் ஏதுக்களால் பலவகையான பொருள்கள் உண்டாகின்றன என அப்போதைய விஞ்ஞானத்தை அனுசரித்து உரைத்தது. இதனுடைய நுட்ப நிலையாக அணுதரும சம்பந்த ஆற்றல் விளக்கம் கொண்டிருந்தது. "பஞ்சபூதப் பரிணாமமாகிய இப்பிரபஞ்சம் எப்போதும் ஒரு படியில் நில்லாது, தன் மாட்டுள்ள ஆற்றல்கள் காரணமாகத் தனது அணுக்கள் ஒன்றோடொன்று கூடியும், பிரிந்தும், வேற்று வேற்று மாற்றங்களை அடைதல் காணப்படுகின்றது" (ஈச்சுர நிச்சயம்–173). பதார்த்தத்தின் குணம் ஆற்றல்; பதார்த்தம், ஆற்றல், வடிவம் ஆகியன ஒன்றிற்கு ஒன்று காரணமாய் அநாதி தொட்டு அமைந்து விளங்குமாம். தோற்றங்கள் தத்தமக்குரிய வடிவு, குணம், செயல்களுக்கியைந்த ஆற்றலைத் தத்தம் வர்க்கத்துக்குரிய முன்தோற்றங்களிலிருந்தே கிரகிப்பனவாயினும், புறத்தாற்றல்களும் பலகாலந்தோறும் அவற்றில் சென்று தாக்குதல் பற்றி அந்தத் தாக்கம் காரணமாக அவை தமது இயற்கையில் திரிபுறும் (மேலது). இந்தத் தாக்கம் திரிபு என்ற நோக்கு அணுதரும சம்பந்த ஆற்றல் விளக்கத்தோடு கூடவே உலகாயத்தில் பொலிந்த நூதன பரிணாமமாகும். உயிர் செல்பற்றிய தகவலும், நுட்பமும் இங்கு அறியப்படாமல் இருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் சைவத்துறையினர், உயிர்ப் பொருளின் அகத்தாற்றல் திரிபுறாதது தாக்கமுறாதது என உரைத்தனர் (மேலது 174). உலகாயதிகள் திரிபுறும், தாக்கமுறும் என்றே கொண்டிருந்தனர்.

ஆற்றலின் அழியா நிலைத்தன்மை விவேகானந்தர் வருகையோடு இங்கு அறியப்பட்டிருக்கலாம். ஏனெனில் சைவத்துறைகளிலோ, சங்கர அகவய அத்வைதத்திலோ அது அப்போது மேற்கொள்ளப்படவில்லை. அவர் அதை அறிந்திருந்தார் (ஞானதீபம்சுடர் 3, 154). இயற்கை, பொருள்கள், ஆற்றல் / சக்தி, இயக்கம் என்ற வகைப்பிரிவுகள் தத்துவத்துறையில் மேலெழுந்தன. 1892 முதல் ஆகி வந்திருக்கலாம். அந்தக் கட்டத்தில் தான் உலகாயதம் தாக்கம்–திரிவு/மாற்றம் என்ற பரிமாணத்தையும் எய்தியிருந்தது. அதனால் தன்செயல், சுபாவவாத

www.tamilarangam.net



விளக்கம் கொண்டிருந்தது. சைவம் மற்றும் வேதாந்தத் துறைகள் சிவம் / பிரம்ம விளக்கம் கூறித் தம்மை நிலைநிறுத்திக் கொண்டன. மாயை, பிரகிருதி சூக்குமமான அருவநிலை, இதிலிருந்து ஆற்றல் / சக்தி, இயக்கத்துடன் இயற்கை, பொருள்கள் தோற்றம் கொள்கின்றன எனச் சித்தாந்திகள் சதுரப்பாடு கொண்டனர். பிரம்மம், பிரதிபிம்பம், இயற்கை, பொருள்கள் ஆற்றல் / சக்தி, இயக்கம், இரண்டற்ற நிலை என வேதாந்திகள் தோற்றம் கொண்டனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டு நெடுகிலும் கிறித்தவத் திருச்சபையினர் சூனியத்திலிருந்து இயற்கை, பொருள்கள் படைக்கப்பட்டன என உரைத்து வந்தனர். இதனுடைய சாயல் கொண்ட ஸ்பென்சரின் ஒற்றைமூலப் பரிணாம கோட்பாடு பொருளையும் அதன் சென்று தேய்ந்திறும் இயக்கத்தையும் இங்கு 1867 முதலே எடுத்துக்கூறிக் கொண்டிருந்தது. இனம் புரியத, சூக்குமமான முதல் ஏகத்துவத்திலிருந்து (First Principles) இனவகையான, பருமையுடைய ஒத்திணைவான பன்மை நிலைகளுக்கு ஏகும் அர்த்தத்தைப் பொருளியக்கத்திற்கு அது விவரித்தது; பிரபஞ்சத்தின் வரலாறே தோன்றுதலும் ஒடுங்குதலாகும் எனவும் கூறிக் கொண்டிருந்தது.

இதற்குச் சமாதானமுறாமல் சித்தாந்த வேதாந்தங்கள் தமது துறைகளில் நூதன ஏற்பாடு செய்து கொண்டன.

உலகாயதமும் என்றுமுள்ள இயற்கை, பிரபஞ்சம், பொருளின் அழியாநிலை, இயக்கம், மாற்றம் ஆகியவைகளை உட்கொண்டு இவைகளை முதலாகக் கொண்டு மனித அறிவை விளக்கித் தன்னைப் பொலிவுசெய்து கொண்டு நின்றது.

**இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் :**

ஆனால் சமூக வாழ்வை விளக்கும் பக்குவம் நாத்திகப் பேச்செல்லைக்குள்ளேயே நின்று கொண்டிருந்தது. கர்த்தர், சிருஷ்டிகர், கடவுள் மூலம் தரும் விளக்கத்தை அது மேற்கொள்ளவில்லை. மேலும் 1800 முதல் 1900 வரை வினை, மறுபிறப்பு பற்றிய அதன் பூர்வீக மரபாகக் கொண்டிருந்த மறுப்புக் கொள்கை உலகாயதப் பக்கத்தில் பேசப்படவே இல்லை; உலகாயதத்தை மறுத்தவரும் இவைகளைக் கூறி மறுக்கவில்லை. மாறாக வினை, மறுபிறப்புக் கொள்கைகள் கிறித்தவ மற்றும் நேர்க்காட்சிவாதம் சார்ந்த பகுத்தறிவு, நாத்திகத்தை அனுசரித்தவர்களாலேயே இந்து மத மறுப்பு நோக்கில் நிராகரிக்கப்பட்டன.

www.tamilarangam.net



அப்படி நிராகரிக்கும் போது உலகாயதத்தை யாரும் உடன்கொள்ள விழையவில்லை! சந்தேகவாத நாத்திகத்தை இங்குள்ளவர் மறுக்கும் போதும் நேர்க்காட்சி வாத நாத்திகத்தை ஒரு பக்கமும், உலகாயதத்தை இன்னொரு பக்கமும் நிறுத்தி இனம் கண்டுமறுத்தனர். உலகாயதம் காமஇன்பத்தில் மூழ்கி நெறிபிறழ்வதையும், உண்டு, உடுத்து மகிழ்வதையும் முதல் நிலையாக ஆதரிக்கிறது என யாரும் அதனைக் குற்றம் கூறவில்லை. மாறாக நேர்க்காட்சிவாதப் பயன்வழிக் கொள்கை, தான் நன்றாக இருக்கவேண்டும் என்ற தன்னயச் சுகப்பேறு ஆவல் வேதாந்திகளால் வெறுக்கப்பட்டது. மேலும் அது பிரத்தியட்சப் பிரமாணத்தை மட்டுமே ஏற்கிறது. அனுமானப் பிரமாணத்தை ஏற்பதில்லை என்பதை யாரும் ஒருகுறையாக எடுத்துக்காட்டி அந்த அடிப்படையில் அதனை நிராகரிக்கவோ, தம்மை உறுதிப்படுத்திக் கொள்ளவோ முடியவில்லை!

இயற்கை, அதன் பன்மைத்தன்மை, இயக்கம், மாற்றம், அறிவு இவைகளுக்கு உலகாயதம் கர்த்தா, சிருஷ்டிகர், கடவுளைப் பொருளாகக் கொள்ளவில்லை. இதுகுறித்தே உலகாயதம் மறுப்புக்களை எதிர்கொண்டது; இவை குறித்துத் தமது பக்கத்து உண்மைகளை வெளியிடும் முகத்தான் தன்மை உருப்படுத்திக் கொண்டது. இந்த நிலைமைகளில் வேட்டைச்சமூகம், கால்நடை மேய்ப்புச் சமூகம் நில உரிமைச் சமூகம், தனிச்சொத்து, அரசு பற்றிப் பிரம்மசமாஜிகள் 1900த்திலும் கருத்து கொண்டிருந்தனர்; இதனோடு கூடவே நான்கு பூதக்கோட்பாட்டையும் கடவுள் நம்பிக்கையுடன் சேர்த்து உரைத்தனர் (விவசாய நூல், முன்னுரை).

1920 களில் தோற்றம் பெற்ற தொழிலாளர் இயக்கம் சார்ந்த சிங்காரவேலுச்செட்டியார், சக்கரைச் செட்டியார் ஆகியோரால் இயக்கவியல், வரலாற்றியல் பொருள்முதல்வாத உள்ளடக்கம் தமிழக உலகாயதத்தின் செயல் நன்மையை ஊக்கியது. தாக்கம் – திரிவு / மாற்றம் குறித்த பரிசீலனையில் பரஸ்பர பாதிப்பு, பிரதிபலிப்புக் கொள்கைக்குரிய சந்ததியைத் தோற்றுவிக்க ஊட்டம் பெற்றது. இப்படி சமூக வாழ்வை விளக்கும் பக்குவத்தோடு மனிதனை விளக்கும் பக்குவத்தையும் எய்தியது.

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

www.tamilarangam.net



## ஆதாரங்கள்

**1. மூலநூல்கள் :**

1. ஈச்சுர நிச்சயம் – யாழ்ப்பாணம் சபாரத்தினமுதலியார் 1896
2. தத்துவவாதம் – தொகுப்பு. (சுதேசமித்திரன், தத்துவவிவேசினி கட்டுரைகள்) பிரம்மவித்யா வெளியீடு 1886.

**2. துணை நூல்கள் :**

1. ஆபாசஞானநிரோதம் – சூளை. சோமசுந்தரநாயக்கர் 1880
2. ஆஸ்திகமத சித்தாந்தம் – சே.ப. நரசிம்மலுநாயுடு 1879–1880
3. சத்தியவேத பரிட்சை – கத்தோலிக்கத் திருச்சபை சுமாராக 1780 க்குப்பின்
4. சமயபரிட்சை – புரொடெஸ்டண்ட் திருச்சபை 1858
5. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ் இதழ்கள்–அ.மா.சாமி 1992
6. முதற்குறள் உண்மை – பிரம்மவித்யா வெளியீடு 1900
7. நூற்றொகை விளக்கம் – பெ. சுந்தரம்பிள்ளை 1885
8. வேத அகராதி – ஹென்றிபவர். 1842
9. Art and Science - Rev. Joce 1852
10. A History of British Philosophy - R. Sorley 1920

**3. மேற்கோள் நூல்கள் :**

1. ஞானதீபம் சுடர்–3, விவேகானந்தர் 1894, 1896
2. இயற்கையின் இயக்கவியல் – பிரெட்ரிக் ஏங்கெல்ஸ் 1873
3. இந்துமத ஆசார ஆபாசதரிசினி – வெங்கடாசல நாயக்கர் 1892
4. சிவஞானமாபாடியம் – சிவஞான முனிவர் – 18ஆம் நூற்றாண்டு
5. தத்துவபோதினி – பிரம்மசமாஜ இதழ் 1864
6. மனோன்மணீயம் – பெ. சுந்தரம் பிள்ளை 1892
7. விவசாய நூல் – சே.ப. நரசிம்மலு நாயுடு 1900
8. India's Need - John Mourdoch 1886
9. Two Thousand years of Science - R.J. Harvey 1929

நிகழ் 30

www.tamilarangam.net



# நீதி சாஸ்திரமும் அரசியலும்

**- ஆனந்த் (தமிழில் : ஜெயமோகன்)**

## ஒன்று

'கொடியிலிருந்து பழங்களை பறிப்பதுபோல
எடுக்க வேண்டும் வரி மன்னன் மக்களிடம்'

என்கிறது அர்த்த சாஸ்திரம். எந்தெந்த விதத்தில் மன்னன் இப்படி 'பழுத்த பழங்களை' பறிக்கலாம்? கரடித் தோல் மூடிய படை வீரனை மயானத்துக்கு அனுப்பி மரங்கள் மீது ஏறியிருக்கச் செய்து அவர்கள் மூலம் ஜனங்களை பயமுறுத்த வைத்து, பிற்பாடு அந்த பேயை விரட்டுவதற்குத் தேவையான சடங்குகளை செய்யவேண்டும் என்று கூறி, அதன் பேரில் பொதுமக்களிடமிருந்து வசூல் செய்தல்; சுயம்புலிங்கங்கள், கோயில்கள் முதலானவற்றை நிர்மாணித்து, ஜனங்களை அங்குவந்து பூஜை செய்யுமாறு தூண்டி, உண்டியல் வசூல் செய்தல்; (ஜனங்களை நம்ப வைக்க மரண தண்டனைக் கைதி ஒருவனை அக்கோயிலை நிந்தனை செய்யுமாறு தூண்டி, பிறகு அவனை பாம்பு கடித்துக் கொல்ல ஏற்பாடு செய்து, அந்தச் சம்பவத்தை உதாரணம் காட்டிப் பிரச்சாரம் செய்யலாம்) வியாபாரி வேடமணிந்த ஒற்றர்களை ஜனங்களுக்கு மத்தியில், பரவச்செய்து ஜனங்களை ஏமாற்றி பணவசூல் செய்து அதை கஜானாவில் சேர்த்துக் கொள்ளுதல்; மரண தண்டனைக் கைதி ஒருவனை வைத்து அவன் ஒரு செல்வந்தனை நிந்தனை செய்யுமாறு தூண்டி விட்டு நாடகம் நடத்தி, பிறகு அந்தக் கைதியைக் கொலை செய்து, செல்வன் வீட்டில் போட்டுவிட்டு அவன் மீது கொலைப்பழி சுமத்தி, அக்குற்றத்துக்காக அவனுடைய செல்வங்களையெல்லாம் அபகரித்தல் : வேசித் தொழிலை ஊக்குவித்து, அவர்களை வைத்து, செல்வர்களைச் சுரண்டி, அந்தச் செல்வத்தில் பெரிய பங்கை வரியாகப் பெறுதல் . . . அர்த்த சாஸ்திரி வகுத்த 'பழம் பறிக்கும் முறைகள்' இப்படியே பட்டியலிடப்படுகின்றன. இவற்றை குடிமக்களின் கோபத்துக்கு இரையாகாமல் செய்யவேண்டும் என்று ஒரு கோரிக்கையை முன்வைக்கவும் அர்த்த சாஸ்திரி தயங்கவில்லை. ஆனால் இந்த அடிக்குறிப்பு ஒரு நியாயீகரணம் ஆவதில்லை என்பது மட்டுமல்ல, சிறியதோர் சால்ஜாப்பு கூட ஆவதில்லை. காரணம் இங்கு கூறப்பட்டிருப்பவர்களில் பெரும்பாலோர் குற்றவாளிகளோ, அதருமிகளோ அல்ல. வெறும் சாமானியர்கள். சுருங்கக் கூறினால் ஜனங்கள் அனைவரையும் மடி மேலே படர்ந்திருக்கும் வஞ்சினையின் பிளாட்டிங் பேப்பர்

www.tamilarangam.net



மூலமாகவே மன்னன் தன் வருமானத்தை அங்கு அடைகிறான். இன்றைய நீதிபோதத்துக்கு மட்டுமல்ல, அன்றைய நீதியுணர்வுக்கே சற்றும் ஒவ்வாத ஒரு விஷயம் இது என்பது நம்மை அசர வைக்கிறது.

ஆனால் இவ்வதிர்ச்சி சாஸ்வதமானதல்ல. தலைகுலுக்கி கண்களை நாலுதடவை மூடித்திறந்து நம்மைச் சுற்றி நடப்பவற்றைப் பார்த்தோமானால் அப்படியே ஆவியாகிப் போய் விடுகின்றது அது. புத்தனும், கிறிஸ்துவும், காந்தியும் வாழ்ந்து மறைந்த இந்த இரண்டாயிரம் வருடங்களுக்கு பிறகும்கூட அரசாங்கங்கள், அரசுத் தலைவர்கள் ஆகியவர்களின் ஆட்சி முறையானது அர்த்தசாஸ்திர காலத்தை விட்டுச் சற்றும் மேலே எழவில்லை என்று தெரிகிறது. சித்தாந்தங்கள் அல்ல, மாறாக, தேவைகளே இன்றும் அரசாங்கத்தின் வரிவசூல் உபாயங்களைத் தீர்மானிக்கின்றன. அடிமை வேலைமுறையும், வேசித்தனமும், சூதாட்டமும் – அனைத்துமே இன்றும் பணவரவு என்ற கோணம் வழியாகவே பார்க்கப்படுகின்றன. திருப்பதியும், குருவாயூரும், சாயிபாபாவும் மற்ற மதஸ்தாபனங்களும் எல்லாமே அரசாங்கத்தினால் பாதுகாக்கப்பட்டு, ஆட்சித் தலைவர்களினால் வழிகாட்டப்பட்டு, போஷிக்கப்படுகின்றன. பிடிக்காதவர்களின் 'கள்ளப்பணம்' பிடுங்கப்படுகின்றது. இன்னும் 'நாகரீகமான வழக்கு – பேச்சுவார்த்தை – வியாபார உத்திகள் போன்ற நாடகங்கள் மூலமாக விரும்பப்படாத செல்வந்தர்களின் பணம் பிடுங்கப்படுகின்றது. காவல்துறையின் 'மூன்றாம் முறை' ராணுவத்தின் 'ஒழுங்கு நிலை நாட்டல்', களையெடுப்புகள், விசாரணைகள் . . எதுவுமே மாறவில்லை. அதேசமயம் நமது நீதி போதமானது. அர்த்த சாஸ்திர காலத்தை விட்டு வெகுதூரம் முன்னேறி வந்துள்ளது. உண்மையில் நடைமுறை அரசியலும் – நீதி சாஸ்திரமும் இரு வேறு திசைகளில் நகர்ந்து வருகின்றன. இடைவெளி குறையவில்லை, மாறாக கூடிக்கூடி வருகின்றது.

இவ்விடைவெளி அதிகரித்து வருவதன் ஒரு அடையாளம் தானே, அர்த்த சாஸ்திர பண்டிதன் எவ்விதக் கூச்சமும் இன்றி எழுதி வைத்திருப்பவற்றைப் பயிலும் போது நமக்குள் ஏற்படுகின்ற வியப்பு? கௌடில்யன் மட்டுமல்ல, அவனுக்குமுன் பிருகஸ்பதியும் பரத்வாசனும், பராசரனும் இதை விடவும் அப்பட்டமான முறையில் இவ்விஷயங்களை எழுதி வைத்துள்ளார்கள் என்பது கௌடில்யன் மூலமாகவே தெரிய வருகின்றது. இன்று இன்றையப் பொருளாதாரம் பற்றி நூல் எழுத வரும் ஒருவன் இவ்விதத்தில் எழுத முனைவானா? நிச்சயமாக மாட்டான். நீதிசாஸ்திரத்திற்கும், அர்த்தசாஸ்திரத்திற்கும் இடையே உள்ள

www.tamilarangam.net



இடைவெளியைப் பற்றி நன்கு அறிந்திருந்தும் அதை ஒப்புக்கொள்ள நமக்கெல்லாம் கூச்சமாக உள்ளது. அனைவரும் அறிந்ததாக இருந்தும்கூட நிர்வாணத்தை அனைவருமே மூடிவைப்பதுபோல! நாம் பரஸ்பரம் மறைத்துக் கொள்கிறோம். அதைப்பற்றி பேசுவதை 'அசிங்கம்' என்று விலக்குகின்றோம். ஆஷ்டா பூதித்தனத்தின் முகங்கள் காலந்தோறும் பெருகி வருகின்றன.

நீதி சாஸ்திரம் சில சமயம் ஒரு கால கட்டத்தின் சமூகவியல் – பொருளாதார யதார்த்தங்களின் விளைவாக பிறக்கின்றது. சிலசமயம் அவற்றுக்கு எதிராக உயர்ந்த மனங்கள் எழுப்பிய குரலாகவும் உருவாகின்றது. அரசியல் அப்படியல்ல. அது எப்போதுமே சமூகவியல் – பொருளாதார யதார்த்தங்களின் விளைவாக மட்டுமே உருவாகி வருகின்றது. அதனால் சிலசமயம் நீதி சாஸ்திரமும் அரசியலும் பரஸ்பரம் பூர்த்தி செய்து கொள்பவையாகவும் உருவாகி வரலாம். அல்லது சிலசமயம் முற்றிலும் சுதந்திரமானவையாக, பரஸ்பரம் எதிர்ப்பவையாக அவை காணப்படலாம். எப்படி ஆனாலும் மனிதன் என்றுமே ஒரே சமயம் யுக்தியும், யதார்த்த உணர்வுமுடையவனாக இருந்து வருவதன் காரணமாக ஒவ்வொரு காலகட்டத்துக்கும் அதற்கே உரிய நீதி சாஸ்திரம், அரசியல் சித்தாந்தம் ஆகியவற்றை அவன் உருவாக்கி கொள்கின்றான். எனவே நம்முன் உள்ள கேள்வி என்னவென்றால், அரசியல் அந்தந்த கால கட்டத்து நீதிபோதத்தை எந்தளவுக்கு பின்பற்றியது என்பதோ அல்லது மாறாக எந்த அளவு எதிர்த்து நடந்தது என்பதோ ஆகும். அரசியல் சாஸ்திரத்தை நீதி சாஸ்திரம் எந்த அளவு மாறுதலடைய செய்தது என்பதுதான் இதைத் தொடர்ந்து நாம் பயில வேண்டிய விஷயம்.

அர்த்த சாஸ்திரியை எடுத்துக் கொள்ளுங்கள் நேராகப்போய் வாளைக்காட்டிப் பிடுங்கு என்று அவனும் கூறவில்லை. கட்டமான முறைகள் வழியாகவே வரிவசூல் நடைபெறுகிறது என்றாலும் அது அப்படி வெளிக்குத் தெரியலாகாது என்பதில் அவனுக்கு உறுதியான அபிப்பிராயம் உண்டு. வெளியே நின்று பார்ப்பவனுக்கு மன்னன் நீதிமானாகவும், கருணை உடையவனாகவும் தோற்றம் அளித்தே தீரவேண்டும். பிடுங்குவதையும், வஞ்சிப்பதையும் நியாயப்படுத்தாத ஒரு நீதி போதமே அன்றும் இருந்து வந்திருக்கின்றது. அது அரசியலில் சிதைவுறச் செய்யப்படுகின்றது. அப்படியானால் அந்த நீதி சாஸ்திரத்தின் மூலவடிவம் தான் என்ன?

www.tamilarangam.net



## இரண்டு

புத்தனின் காலத்தையொட்டி கிட்டத்தட்ட ஒருவித ஒழுங்குடன் தொகுக்கப்பட்டதும், கருணையுடன் கூடிய அனைத்ததிகாரம் (Benevolent despotism) என்று கூறப்படத்தக்கதுமான ஒன்று தான் சாணக்யன் காலத்து நீதிசாஸ்திரம் என்று படுகின்றது. கருணையுள்ள சர்வாதிகாரம் என்ற கருத்தின் வேர்களை, பழைய ஆதிப்பழங்குடிக் கலாச்சாரத்திலேயே காணலாம். ஒவ்வொரு கோத்திரத்திலும் அந்தக் குடியின் மிக வயதானவனும் தந்தை உறவினனுமான முதியவன்தான் தலைவனாக இருந்து வந்துள்ளான் – பிற்பாடு அந்தப் பதவி வளர்ந்து மன்னன் என்ற அமைப்பை அடைந்தபோதும்கூட தியாகங்களுக்குத் தயாராக இருப்பவனும் தந்தை வடிவினனுமான ஒருவன் என்ற நிலையே மன்னனுக்கு இருந்து வந்தது. ஜனங்களின் கருத்தை மதித்து தனது மனைவியையே தியாகம் செய்த ராமனைப் பற்றி நாம் படிக்கின்றோம். சூரியன் பூமியிலிருந்து நீரை உறிஞ்சி, வேண்டிய இடங்களில் மழையாகக் கொட்டுவதுபோல் இருக்க வேண்டுமாம் மன்னன். ஆனால் இந்த ஆதிக்கருத்துருவமானது தெளிவானதும் திட்டவட்டமானதுமான வடிவம் பெறுவது புத்தன் மூலமாகவே ஆகும். * புத்தனுக்கு முன்பும், சமகாலத்திலும் வாழ்ந்து வந்திருந்த சமூக சீர்திருத்தவாதிகள் நிறையபேர். மகாவீரன், ஆசீவகர்கள் முதலானவர்கள் கிட்டத்தட்ட இதே தத்துவங்களையே பிரச்சாரம் செய்து வந்தனர். இந்த தத்துவங்கள் சிகரத்தை அடைவது புத்தனில்தான். ஒரு யதார்த்தவாதி என்ற முறையிலும், ஒரு அமைப்புத் திறனாளர் என்ற முறையில் பெரும் வெற்றியை ஈட்டியதும் அவர் மட்டுமே. எனவே புத்தன் எனும்போது புத்தன் வரை வந்தடைந்த 'பௌத்த' பாரம்பரியமே குறிக்கப்படுகின்றது. எல்லாவிதத்திலும் ஒரு முழுமையான தார்மீகத் தலைவராக இருக்கவில்லை அல்லவா? அவருடைய நீதி சாஸ்திரத்தைப் போலவே மதமும் சரித்திரபூர்வமான உண்மைகளிலிருந்து உயிர்கொண்ட யுக்தி பூர்வமான திட்டங்களும் செயல்முறைகளும் ஆகும்.

இக்காரணத்தினால் தான் புத்த மதத்துக்கு உரியது என்று கூறப்படும் நீதி சாஸ்திரத்தையும் அதனுடைய சிதைக்கப்பட்ட வடிவமாகிய அர்த்த சாஸ்திரத்தையும் பற்றி ஆராய நாம் அவற்றுக்குப் பிறப்பு தந்த அக்காலத்து உற்பத்திமுறையைப் பற்றியும், வர்க்க அமைப்புப் பற்றியும் புரிந்து கொள்ளவேண்டியுள்ளது. சிந்துவெளி கலாச்சாரத்துக்குப் பிற்பாடு கி.மு. பத்தாம் நூற்றாண்டுகளில் கங்கை யமுனை நதிக்கரைகளில் அத்தினபுரி, இந்திரப்பிரஸ்தம், கௌஸாம்பி முதலான நகரங்கள் உருவாக ஆரம்பித்தன.

www.tamilarangam.net



மகாபாரதத்தின் காலகட்டத்துக்குப் பிறகு இந்தப் பயணமானது மீண்டும் கிழக்குப்பக்கமாய் நகரத் தொடங்கியது. நாடோடிகளான ஆரியர்கள், அவர்களிடம் தொடர்பு கொள்ள நேர்ந்த பழங்குடியினர் ஆகியோரின் வாழ்வில் பெரிய மாறுதல்களை ஏற்படுத்திய சம்பவமாகும் இது. மனிதர்கள் நிலைத்து வாழவும், விவசாயத்தைத் தொழிலாகக் கொள்ளவும் தொடங்கினார்கள். இத்துடன் சமூகத்துக்குள் உற்பத்தி யூனிட் என்பது கோத்திரம் அல்லாமல் ஆயிற்று. குடும்பமே உற்பத்தி யூனிட் என்று ஆனது. கோத்திரத் தலைவனின் இடத்தில் குடும்பத்தலைவன் வந்து சேர்ந்தான். விவசாய முன்னேற்றம் தொழில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியது. உற்பத்தி சமுதாயம் பன்முகத் தன்மை பெற்றது. இது நாணயத்தை அடிப்படையாகக் கொண்ட பொருளாதார அமைப்பிற்கு வழி திறந்தது. விவசாயம் வளர வளர சமூகம் ஒரு 'தொழில் யுகத்' தை நோக்கி இட்டுச் செல்லப்பட்டது. சுருக்கமாய் கூறப்போனால் ஹரப்பா நாகரீகம் முடிந்து ஆயிரம் வருடம் கழிந்து மீண்டும் ஒரு நகர யுகம் பிறவி எடுத்தது.

இந்த தொழில் யுகத்திற்கும் நகரக் கலாச்சாரத்திற்கும், நமது நவீனத் தொழில் – நகரக் கலாச்சாரத்துடன் ஆழ்ந்த ஒற்றுமை உள்ளது. அமைப்பிலும் தோற்றத்திலும் அல்ல, குணாம்சங்களில் விவசாய உற்பத்திப் பொருட்களின் 'மிச்சமதிப்பு' நகரங்களில் குவிவதனால் மட்டுமல்ல நகரத்தை மையமாகக் கொண்ட ஒரு பொருளாதாரக் கட்டுமானம் உண்டாவதனாலும் கூடத்தான் நகரக் கலாச்சாரம் ஏற்படுகின்றது. மனித உழைப்பில் பெரும்பகுதி விவசாயம் அல்லாத செயல்களில் செலவழிக்கப்பட்டு. பொருளாதாரக் கட்டுமானத்தில் இந்த உழைப்பு நிர்ணாயகமான முக்கியத்துவத்தையும் பெறும் நிலையில், விவசாய மிச்சம் நகரத்தில் குவிக்கப்பட்டிருக்குமானால் நிலப்பிரபுத்துவ அமைப்பின் விளைவுகளாகிய 'சோம்பல் நகரங்கள்' தான் உருவாகியிருக்கும். மகத நாட்டு நகரங்கள் 'சுகபோக சோம்பல் நகரங்களாக' இருக்கவில்லை. உலோகத்தொழில், கைத்தொழில்கள், வியாபாரம் முதலானவை கூடியிணைந்து விவசாயம் தவிர்த்த ஒரு 'இணையான பொருளாதாரக் கட்டமைப்பை' உருவாக்கினதோடன்றி விவசாயத்தின் முக்கியமான நரம்புமையமாகவும் நகரத்தை ஆக்கின. இவற்றுக்கான காரணங்களில் ஒன்று அன்று பெரும்பாலான நிலங்கள் அரசுடைமையில் இருந்தன என்பதாகும்.

அரசாங்கம் நேரடியாக விவசாயத்தில் ஈடுபட்டதற்குக் காரணம் கஜானாவை நிறைப்பது மட்டுமல்ல, இச்செயலை, தனியார் சாதாரணமாகச்

www.tamilarangam.net



செய்யமுடியாத அளவு அமைப்பு வல்லமையும் பெரும் முதலீடும் தேவைப்பட்டதனாலும் கூடத்தான். ராஜ்யமானது ஏகப்பட்ட ஜனபதங்களாகப் பிரிந்து கிடந்தது. காடுகளால் சூழப்பட்ட விளைநிலங்கள் என்ற சிறுசிறு தீவுகளால் ஆனது, ஒவ்வொரு ஜனபதமும், அப்போது விவசாய வாழ்வை வந்தடைந்திராத காட்டாளர்களும், பழங்குடிகளும் வாழும் இடமாக இருந்தது காடு ராஜாவின் தண்டனைக்குப் பயந்து காடுகளில் அபயம் தேடிய 'கலாச்சாரத்தின் அகதிகளும்' அங்கு வாழ்ந்தனர். காடுகளை வெட்டி விளைநிலங்களை உருவாக்குதல், காட்டுவாசிகளை வென்று அடிமைகளாக ஆக்கி இந்த விளைநிலங்களில் வசிக்கச் செய்து விவசாயம் செய்ய வைத்தல், கொள்ளையரை அடக்கி ஜனபதங்களுக்கு இடையேயான விவசாயப் பொருள் பரிமாற்றம் தங்குதடையின்றி நடக்குமாறு ஏற்பாடு செய்தல் முதலான வேலைகளையே இவ்வரசாங்கங்கள் செய்ய வேண்டியிருந்தது. இதற்கெல்லாம் அரசின் வலிமையின் மூர்த்த உருவங்களான மாபெரும் நகரங்கள் அவசியத் தேவையாக ஆயின. பொதுவாய் கிராமம் சார்ந்தது என்று கருதப்பட்டிருந்த விவசாயமானது இவ்வண்ணம் நகரை மையம் கொண்டதாகவும், நகரில் திட்டமிடப்படுவதாகவும் ஆயிற்று. சுகபோக கேந்திரங்களாக இருப்பதற்குப் பதிலாக உழைப்பினால் உயிர்த்துடிப்பு நிறைந்த இடங்களாக நகரங்கள் ஆயின.

விவசாயம், தொழில், சூதாட்டம் ஏன் விபச்சாரம் வரை அனைத்துமே உடைமையில் நடந்துவந்த இந்த நகரங்களில் அதிகாரம் மட்டுமல்ல சமூகத்தின் ஒவ்வொரு செயல்பாடும்கூட எத்துணை ஒரு முனைப்படுத்தப்பட்டதாக இருக்கும் என்பது எளிதில் ஊகிக்கப்படக்கூடிய விஷயமே. இத்தகைய ஒருமுனைப்படுத்தப்படுதலில் மிகவும் முக்கியமானதாக ஆவது ஒவ்வொரு மூலையையும் எட்டும், மன்னனின் கண்களும் காதுகளுமாகிய, ஒற்றர்களும். அவ்வொற்றர்களைக் கண்காணிக்கும் ஒற்றர்களும்தான். சுருங்கச் சொன்னால் அரசு முதலாளித்துவம், அரசின் சித்தாந்தம் பிரச்சாரம் இவையிரண்டையும் தவிர்த்துப் பார்த்தால் நவீன காலகட்டத்து அனைத்ததிகாரப் பொதுவுடைமை அரசுகளுக்கும், பழைய மகதபாணி அரசுகளுக்கும் பெரிய வேறுபாடு ஏதும் இல்லை. சரித்திரபூர்வமான கணிப்புகள் காட்டுவது என்னவெனில் இத்தகைய சர்வாதிகார அமைப்பின் பிறவியானது இயல்பானது மட்டுமல்ல தவிர்க்க முடியாததும்கூட என்றுதான். ஃப்யூடல் பாரம்பரியத்தின் அடிப்படையிலான விவசாய சமூகத்திலிருந்து நவீன தொழில் சமூகத்திற்கு செல்லும் பாதையில்தான் நவீன சர்வாதிகார

www.tamilarangam.net



அரசமைப்புக்கள் பிறவி கொண்டன. அதுபோலவே புராதனவிவசாயப் – பழங்குடி அமைப்பிலிருந்து உலோக உபயோகம் நகரக்கட்டமைப்பு வியாபாரம் இவைகள் சேர்ந்து கொண்டமையினால் ஏற்பட்ட புதிய சமூக அமைப்பிற்கான பாதையில்தான் பழைய சர்வாதிகார அமைப்புகள் உருவாயின. இவற்றின் தேவை தவிர்க்க இயலாதது ஆகும். பழைய மதிப்பீடுகளை அழிக்கவும் புதிய அதிகார அமைப்பை வேரூன்றச் செய்யவும் மிகவும் எளிய வழி இத்தகைய சர்வாதிகாரங்கள் மட்டுமேயாகும்.

புத்தனின் பிறப்பு இத்தகைய சர்வாதிகார நாடுகள் பிறவி கொள்ள ஆரம்பித்த காலகட்டத்திலாகும். புராதன வர்க்க அமைப்பில் திடீரென்று ஏற்பட்ட மாற்றமும் அதன் விளைவாக ஏற்பட்ட மதிப்பீடுகளின் சரிவும்தான் புத்தமதத்தின் எழுச்சிக்குக் காரணமாக அமைந்த உந்துதல்களில் முக்கியமானது. தனிநபர் உறவுகளையோ, மானுட ஒழுக்கங்களின் நீதியடிப்படையையோ அதிகம் மதிக்காததும், யந்திரத்தனமானதுமான அரசமைப்புமுறை அக்காலத்திய நீதிபோதத்தில் எதிர்வினைகளை எழுப்பியது. ஆனால் இந்த நிலையில் ஆதிக்க வர்க்கத்துக்கு எதிராக அடிமை வர்க்கத்தைத் தூண்டிவிட்டு கலகம் உண்டு பண்ணுவதல்ல மாறாக ஆதிக்க வர்க்கத்தின் நீதியுணர்வை ஸ்பரிசித்து அடிமை வர்க்கத்திடம் கருணையை உண்டு பண்ண முயல்வதே புத்தமதம் கண்டடைந்த மார்க்கம். புதிய வர்க்க அமைப்பை அழிப்பதற்குப் பதில் அதற்கு உள்ளேயே மீள்வழியைக் கண்டடைய முயன்றது அது. புதியதாகப் பிறவி கொண்ட சர்வாதிகார அமைப்பும், அதன்வர்க்க அமைப்பும் அத்தனை எளிதில் தகர்க்கப்பட இயலாதது என்றோ, தகர்க்கப்பட வேண்டியதில்லை என்றோ புத்தன் கருதியிருக்க வேண்டும். அதே சமயம் அதற்குள்ளேயே சீர்திருத்தங்கள் செய்வது சாத்தியமாகவும் தென்பட்டது. அன்றைய அரசர்களிடம் சொல்ல புத்தன் வைத்திருந்த கருத்தென்ன? "வரி வசூல் செய்வதும் கொள்ளையர்களை அடக்குவதும் மட்டும் அரசனின் வேலை அல்ல. கொள்ளையனின் கையையோ தலையையோ வெட்டி வீசி விடுவதனால் கொள்ளை இல்லாமலாகி விடாது. வறுமையே குற்றங்களுக்கு காரணம். விவசாயிகளுக்கு விதையும் நீரும் கிடைக்க ஏற்பாடு செய்க. சர்க்கார் ஊழியர்களுக்குத் தேவையான சம்பளம் தருவதன் மூலம் லஞ்சம் வாங்க வேண்டிய தேவை இல்லாமல் செய்க. போருக்குப் பதிலாக கஜானாவிலிருக்கும் பணத்தை, பொதுநல செயல்களுக்கு செலவிடுக.' புத்தனின் கருணை மத அடிப்படையில் ஆனதாக இருக்கவில்லை. சர்வ சக்தி வாய்ந்த ஒரு கடவுளில் இருந்து ஊற்றெடுப்பதான, மற்ற சில விஷயங்களில் ஒப்பிடத் தகுதியுள்ள, கிறிஸ்து

www.tamilarangam.net



மதத்தின் கருணையிலிருந்து மாறுபட்டது இது. கொடுப்பவனிடமும் பெறுபவனிடமும் அது இவ்வகையில் புதியதான சுதந்திர உணர்வை ஏற்படுத்துகின்றது. இவ்வண்ணம் தான் தெளிவான தத்துவங்கள், சட்டங்கள், செயல்முறைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான 'கருணையுள்ள சர்வாதிகாரம்' என்ற கருத்துருவம் புத்த சிந்தனையில் உருப்பெற ஆரம்பித்தது.

ஜாதி அமைப்புக்கு எதிராக புத்தன் எழுப்பிய எதிர்ப்பு அமைப்பிலும் இத்தகைய சரித்திர பூர்வமான நீதியுணர்வை நாம் காண முடியும். பழங்குடி கோத்திர கருத்தாண்மையிலிருந்து விடுபட்டு, விரிவான முறையில், உற்பத்தி வேகம் கொண்டு எழும் ஒரு சமூகத்திற்கு அவசியமானவை. 'உயர்ந்த தூய மானுட'க் கருத்தாண்மைகளே ஒழிய, ஜாதிக் கருத்தாண்மைகள் அல்ல. ஜாதி சிந்தனைகளை விட்டு எழுந்த வெறும் மானுடர்களின் குடும்பமே புதிய சமூக அமைப்பில் சிறிய பொருளாதார அடிப்படைக் கூறு. எனவே ஜாதிகளின் ஒழுக்கங்களைப் பற்றிப் பேசாமல் வெறும் குடும்பத் தலைவனின் செயல்களைப் பற்றியே புத்தர் பேசுகிறார். இப்படிப் பார்க்கும்போது புத்தனின் நீதி போதம் அன்றைய சரித்திரபூர்வமான தேவைகளுக்கு எதிரானதாக இருக்கவில்லை. அது மட்டுமல்ல அது புதிதாய்ப் பிறவி கொண்ட சமூக அமைப்புக்கு மேலும் ஊக்கம் தருவதும் உதவிகரமானதும்கூட. இதுதான் புத்தமதத்துக்குக் கிடைத்த திடீர் பேராதரவிற்குக் காரணமாக இருக்கக்கூடும். வியாபாரிகளும், செல்வந்தர்களும் அதனால் கவரப்பட்டனர். ஆனால் இதெல்லாம் ஆரம்பத்தில் நடந்தவை. மெல்ல மெல்ல ஆதிக்கவர்க்கம் அதிலிருந்து பின்வாங்க ஆரம்பித்தது, மேல் தளத்தில் கருணை கொண்ட சர்வாதிகாரம் என்ற அமைப்புக்கு உரிய ஆசாரங்களை தக்க வைத்துக்கொண்டது எனினும் வெகு சீக்கிரத்திலேயே அதிலிருந்து வித்தியாசமான ஒரு அரசியல் நடைமுறையும் கொள்கையும் செயல்முறைக்கு கொணரப்பட்டன. அதாவது முன்பே கூறிய அர்த்தசாஸ்திரத்தின் அரசியல் நோக்கு எப்படி இது இவ்வண்ணம் ஆயிற்று? மகதபாணி சர்வாதிகாரங்களுக்கு நிகழ்ந்தது பொதுவாய் மற்ற எல்லா சர்வாதிகாரங்களுக்கும் நிகழ்வதுதான். ஒரு 'அமைப்பாக' அது ஆன போது அது அதற்கே உரிய சக்திகளால் அடித்துச் செல்லப்பட்டது. யுக்தி, நீதி ஆகியவற்றின் கட்டுப்பாடுகளை உதறி மனிதனிலிருந்தும் சரித்திர நிஜங்களில் இருந்தும் அன்னியப்படுத்தப்பட்டு அது ஒரு குரூரமான கட்டளையாக மாறியது. பணமே அதன் போதையும் வலிமையுமாக ஆயிற்று. பெரிய பாவங்கள் முதல் சிறு தவறுகள் வரை எல்லாக் குற்றங்களுக்கு,

www.tamilarangam.net



தண்டனைகளுக்கு இணையாக பெரும் அபராதங்களையும் விதித்தது இந்த அமைப்பு. அவ்விதம் குற்றங்களைக்கூட பணமாக மாற்றுவதிலும், பணத்துக்காக குற்றங்கள் செய்ய வைப்பதிலும் கூச்சம் கொள்ளாததாக ஆயிற்று. அதன் தர்மபோதம் செல்வமும் அதிகாரமும் மேலும் மேலும் மையப்படுத்தப்பட்டபோது ஊழலும் லஞ்சமும் பெருகின. ஊழல்களைக் கண்டுபிடிக்க நியமிக்கப்பட்ட ஒற்றர்களின் ஊழலைக் கண்டுபிடிக்கவே மேலும் ஒற்றர்களை நியமிக்க வேண்டி வந்தது. சொந்த மைந்தர்களைக்கூட சந்தேகத்துடன் பார்த்தனர் மன்னர்கள். மேலேயிருந்து அழுத்தப்பட்ட இந்த சமூக அமைப்பிற்கான பெரும் செலவு, போருக்கான ஒரு காரணமாக ஆனது. செல்வம் குவிய நேர்ந்தது. நகரங்களின் மக்கள் மாளிகைகளில் சுகம் சுகம் என்று வாழ்ந்தபோது கிராமங்களில் தப்ப முடியாத சாதி அமைப்பினாலும், அடிமைக் கோட்டைகளில் பெரும் காவல் ஏற்பாடுகளினாலும் கட்டப்பட்ட எளிய மக்கள் எளிய இன்பங்கள்கூட அனுமதிக்கப்படாமல் உழைத்து உழைத்து உயிர்விட நேர்ந்தது. வஞ்சனையும் சதியும் மந்திரவாதமும் பக்தியும் விபச்சாரமும் அதிகார வர்க்கத்தினால் உபயோகப்படுத்தப்பட்டது. இத்தகைய ஒரு சூழலில் அதிகார வர்க்கத்துக்கு புத்தமதம் உருவாக்கி அளித்த கருணையுடன் கூடிய அனைத்ததிகாரம் என்ற பதவியின் பிரயோசனம் ஒரேயொரு விஷயத்தில் மட்டும் அடங்கிவிட்டது. அடக்கப்பட்ட வர்க்கத்தை கலகங்களில் ஈடுபடுவதிலிருந்து தடைசெய்யவும் மேலும் மேலும் ஈவிரக்கமின்றி வேலை செய்ய வைக்கவும்! புத்தனின் உபதேசத்தை ஏற்று மகத அரசர்கள் அனாதைகளையும் முதியவர்களையும் ஊனமுற்றவர்களையும் பாதுகாத்து வந்தனர். தந்தை குழந்தைகளை பாதுகாப்பது போல அல்ல. எஜமானன் கால்நடைகளை பாதுகாப்பதுபோல இதெல்லாம். புதிதாக ஏற்பட்ட உற்பத்தியமைப்பு முறையை எதிர்மறையாகவே பாதித்தன என்று கூறவேண்டிய தேவை இல்லை அல்லவா? ஆனால் சரித்திரத்தில் சாதாரணமாய் நடப்பது இதுதான். நடைமுறையிலிருக்கும் அமைப்பு உற்பத்திக்கு போதாதபடி ஆகும்போது புதியதோர் அமைப்பு உருவாகின்றது. அது உண்டாகும்போது அதை உண்டாக்கும் வர்க்கம் அவர்களுடைய சுயநலத்திற்கு அடிமைகளாகிப் போய்விடுகின்றது. அத்துடன் அவர்களுடைய செயல்களே அவர்கள் சிருஷ்டி செய்த உற்பத்தி முறைமையின் வளர்ச்சிக்குத் தடைகளாக மாறிவிடுகின்றன.

இதுதான் நமது சரித்திரத்தில் தெளிவாகக் காட்சி தரும் முக்கியமான நீதிவடிவமாகிய 'கருணை கொண்ட சர்வாதிகாரத்திற்கும்

www.tamilarangam.net



அதைத் தொடர்ந்து நடைமுறைக்கு வந்த சாணக்கிய அரசியல் சாஸ்திரத்திற்குமான அடிப்படை. இங்கு நமக்கு நீதிசாஸ்திரம் அரசியல் சாஸ்திரத்திற்கு முன்னோடியாக வந்ததென்றோ, மாறாகவே கூறும் வாய்ப்பு கிடைப்பதில்லை. ஒரே சூழலில் இருந்து பிறந்தவைதாம் இரண்டும் என்றே மிஞ்சிப்போனால் கூறமுடியும். இணையாகவே, அவற்றுக்கு இடையில் ஆரம்பத்தில் நடந்து வந்திருந்த கருத்துப் பரிமாற்றம் மேலும் நடந்து வந்திருந்தது எனில் அன்றைய சூழல்களுக்குப் பொருத்தமானதும், உற்பத்தி முறையை மேலும் வலுப்படுத்துவதுமான ஒரு அரசியல் சாஸ்திரம் கிடைத்திருக்கக் கூடுமோ என்னவோ, புத்தனின் நீதி சாஸ்திரம் புத்தமதம் என்ற ஒருங்கிணைந்த ஸ்தாபனத்தின் பிறவிக்கு இல்லாமல் ஆயிற்று. பொருளாதார அடிப்படையிலானதும், சமூகவியல் அடிப்படையிலானதுமான அதன் ஆக்கபூர்வமான – ஆனால் சிறிய – பங்கை அது ஆற்றிக்கொண்டுதான் இருந்தது என்ற போதிலும்கூட ஆசார அனுஷ்டானங்கள் கப்பிய ஒரு மதத்தின் வளர்ச்சியானது அதன் நீதிசாஸ்திர அடிப்படையை வெகுவாக பாதித்தது. அரசியல் சாஸ்திரமோ அதிகாரம் பணம் ஆகியவற்றின் ஆவேசத்தினால் வழிகாட்டப்பட்டு அதற்குரிய வழியில் விரைந்தது. கிட்டத்தட்ட ஆறு நூற்றாண்டுகளுக்குப் பிற்பாடு அசோகரின் காலகட்டத்தில் தான் மீண்டும் அவையிரண்டுக்கும் இடையே ஒரு சந்திப்பை நாம் காணமுடிகிறது. அசோகர் புத்தனின் நீதி சாஸ்திரத்தை அரசியலில் செயற்படுத்த முயற்சி செய்தார். ஆனால் அந்தக் காலம் வந்தபோதோ அவை இரண்டுமே பெருமளவு மாறிவிட்டிருந்தன. அசோகரின் சோதனை முயற்சியை சரித்திரத்தின் அபூர்வமான ஒரு நிகழ்வு என்று கொள்ளலாம். சரித்திரச் சூழல்களை விடவும் ஒரு தனிமனிதனின் ஆளுமையின் தீவிரத்தின் விளைவே அது.

## மூன்று

கருணையுள்ள சர்வாதிகாரம் என்ற கருத்தாண்மையிருந்து நீதி சிந்தனை சட்டத்தின் ஆட்சி என்ற கருத்தாண்மை நோக்கி முன்னேறியது. இது எப்போது நடைபெற்றது என்பதை திட்டவட்டமாய்க் கூறுவது சிரமமானது. அர்த்தசாஸ்திரத்தின் அரசியல் கருத்தாண்மை தொடர்ந்து ஆட்சி செய்தது என்று கருதப்படத்தக்க குப்தர் காலத்தின் கடைசிக் கட்டத்தில் நாம் குழப்பங்களும் சிக்கல்களும் மண்டிய ஒரு காலகட்டத்தை அடைகிறோம். தொடர்ச்சியாக துருக்கி – ஆப்கானிய படையெடுப்புகளின் புயல்கள் வீச ஆரம்பித்தன. வடஇந்தியாவில் ஒவ்வொரு முறையும் உயர்ந்து நின்றவற்றை முழுக்க வீழ்த்தி, கிடைத்ததையெல்லாம் சுருட்டிக் கொண்டு, கொண்டுபோக முடிவதையெல்லாம் எடுத்துக்கொண்டு, சென்றனர்

www.tamilarangam.net



அவர்கள். இதை ஒரு புதிய விஷயம் என்று கூறும்போது முன்பத்திய வெற்றி கொண்ட அரசர்களைப்பற்றி சந்தேகம் கேட்கப்படக்கூடும். மன்னர்கள் வென்றவற்றையெல்லாம் இங்குதான் செலவழிக்க வேண்டியுள்ளது. அது ஜனங்களுக்குத் திரும்பக் கிடைத்தது – ஒரு விதத்தில் அல்லது இன்னொரு விதத்தில் – புதிய ஆக்ரமிப்பாளர்களோ அவர்கள் வென்றவற்றையெல்லாம் வெளியே கொண்டு சென்றனர்.

காலம் செல்லச்செல்ல இந்தக் கொள்ளையர்கள் திரும்பிச் செல்லாமல் இங்கேயே தங்கிவிட்டனர். அவர்கள் சுல்தான்களுடம் பாதுஷாக்களுமாய் ஆயினர். கொள்ளைக்குப் பதிலாக வரிவசூலை ஆரம்பித்தனர். வசூலில் ஒரு பகுதியை நிர்மாணச் செயல்களுக்காக செலவிடவும் தயாராயினர். இதற்கிடையே இந்தப் படையெடுப்புகள் வழியாக ஏற்பட்ட தொடர்ந்த அதிர்ச்சிகள் மூலம் நமது பாரம்பரியமான 'கருணை சர்வாதிகாரம்' என்ற கருத்து அடிபட்டுப் போயிற்று. அதன் இடத்தில் தனிநபர் என்ற அதிகாரமையத்துக்கும் அப்பால் செயல்படுவதும், வடிவமற்றதுமான ஒரு மையத்தை, அதாவது சட்டம் என்ற ஒன்றை ராஜநீதியின் யந்திரமாகக் காண்பதற்கான ஆரம்ப முயற்சிகளை நாம் இக்காலகட்டத்தில் காணமுடியும். சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான அதிகாரிகள் மட்டுமே இந்த சர்வாதிகள் என்றும் அவர்களைக்கூடக் கட்டுப்படுத்துமளவு அவர்களை விட மேலானதே சட்டம் என்றும் காட்டுகின்ற பல கதைகளை நாம் இக்காலக்கட்டத்திற்கு உரியதாகக் காணமுடியும். இந்தப் புதிய சித்தாந்தத்திற்குக் காரணமான தூண்டுதல் என்ன? நீதிபோதமல்ல, நிச்சயமாக. கொள்ளையர் பரிணாமம் பெற்று சுல்தான்களாக ஆனவர்கள் இந்தச் சுல்தான்கள். பாரம்பரியம், வேத தர்மம் அல்லது தத்துவ சாஸ்திரங்கள் எவற்றின் பாரமும் அவர்கள் மீது இல்லை. அதேசமயம் அவர்களுடைய அணுகுமுறையில் குறிப்பிடத்தக்க மாறுபாட்டைக் காண்கிறோம். லாபகரமான வியாபாரங்கள் தொடங்கிய காலகட்டத்தில் பழங்குடி கோத்திரத் தலைவன் பதவி பரிணாமம் பெற்று உருவானதாகும் அரசபதவி. அதேசம்யம் சுல்தான்கள் கொள்ளையர்களின் வழித்தோன்றல்கள். அர்த்த சாஸ்திரக் கால மன்னவர்கள் தங்களை அந்த குடிமக்களின் உரிமையாளர்களாகவோ, எஜமானர்களாகவோ கருதிக் கொண்டனர்.

அவர்க்ளுடன் அதிகார வர்க்கத்தினருக்கு இருந்த உறவு இதன் காரணமாக மிகவும் உணர்ச்சிகரமானது. கருணையோ குரூரமோ ஆனால் வியாபார மனம் கொண்ட ஒரு தலைமையை நாம் சுல்தான்களிடம் காணமுடியும். வாங்குபவன் – விற்பவன் என்ற தளத்தில் ஜனங்களிடம்

www.tamilarangam.net



கிட்டத்தட்ட ஒரே நிலையில் நின்றபடி பழகும் ஒரு தன்மை இவர்களிடம் இருந்தது. இப்படிச் செய்யும்போது இருவரும் பொதுவாக வைத்துக் கொள்ள வேண்டிய சில வழிமுறைகளும், மரபுகளும், நியதிகளும் அவசியமாக ஆகின்றன அல்லவா? இந்நிலையில்தான் இரு சாராரிடமிருந்தும் சமதூரத்தில் நிற்கின்ற சார்பற்ற சட்டம் என்ற ஒன்றை உருவாக்கும் தேவை எழுகின்றது. இதனால் தெரிவது என்னவென்றால் சட்டம் என்பது எவ்வித சமத்துவப் பிரக்ஞையின் விளைவும் அல்ல என்பதே. மாறிவரும் சூழ்நிலையில் வியாபார மயமாக்கப்பட்ட மானுட உறவுகளின் தேவையைப் பூர்த்தி செய்ய எழுந்ததே சட்டம்.

மத்திய காலகட்டத்துச் சூழல்களை வைத்துப் பார்ப்பவர்களுக்கு இந்த அபிப்பிராயம் சற்று அசாதாரணமானதாய்ப் படக்கூடும். ஆனால் கொள்ளையர்களாக வந்தவர்கள் அரச வம்சங்களாக ஆன ஒரு விசேஷமான சூழ்நிலையில் தொழிற்புரட்சியும் முதலாளித்துவமும் வருவதற்கு வெகு காலம் முன்பே நமக்கு வியாபார அடிப்படையிலான அரசியலின் ஆரம்பம் தொடங்கிவிட்டிருந்தது. இந்த விசேஷத்தன்மை வாய்ந்த சூழலின் காரணமாக அது தெளிவடையவும், மேலும் உறுதியானதாக ஆகவும், உலகளாவிய மாற்றங்களின் தொடர்பும் அதன் விளைவாக உருவான காலனியிசத்தின் பாதிப்பும் ஏற்படுவதற்காகக் காத்திருக்க வேண்டி வந்தது.

உலகளாவிய அரங்கில் சட்டத்தின் ஆட்சி என்ற கருத்துக்கு உயிர் தந்தது, தொழிற்புரட்சியும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட முதலாளித்துவப் போக்குமேயாகும். நம்மைப் போல ப்யூடல் அமைப்பிலிருந்தே அந்த முறை அங்கெல்லாம் உருவாகி வரவில்லை. நிலப்பிரபுத்துவ அமைப்பில் நில உடைமையாளர்களிடம் உற்பத்திப் பெருக்கத்தில் ஆர்வமோ போட்டி மனப்பான்மையோ குறிப்பிடத்தக்க அளவு காணப்படுவது இல்லை. அங்கு ஒருவனின் செயல்மண்டலம் இன்னொருவனின் மண்டலத்தில் பரவாமல் ஒதுங்கிச் செயற்படுகின்றது. ஆனால் தொழில் புரட்சியில் அப்படியல்ல. அனைவருமே பொதுச் சந்தையில் மோதிக் கொள்ள வேண்டியிருக்கின்றது. போட்டி, வெறும் போட்டி மட்டுமல்ல; பரஸ்பரம் சார்ந்திருப்பதும்கூட. அமைப்பிற்கு உறுதியும் வயதும் அதிகரிக்கும் போதும் போட்டி என்பது ஒருவிதமான புழக்கம் ஆக மாறிவிடுகின்றது. ஒரு நிலப்பிரபுத்துவ அமைப்பில் பலவிதமான மனிதர்களுக்கு இடையேயான உறவுகள் ஆசாரங்கள், வழக்கங்கள் சடங்குகள் ஆகியவற்றின் அடிப்படையில் நிலைநிறுத்தப்படுகின்றது. அதேசமயம் முதலாளித்துவ அமைப்பில் உறவுகளின் அடிப்படை ஒரு விதத்தில் உள்ள ஒரு ஒப்பந்தம் – Contract.

www.tamilarangam.net



முதலாளியும் முதலாளியும் மட்டுமல்ல, முதலாளியும் தொழிலாளியும் கூட ஒப்பந்தங்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கின்றனர். இந்த 'சமத்துவம்' இரு கட்சிகளும் தங்களிடையே பொதுவாக அனுசரிக்கப்படவேண்டிய, அமூர்த்தமான, அதேசமயம் தெளிவுள்ளதும் தனி நபர்களுக்கு அதீதமானதுமான, சில சட்ட திட்டங்களுக்கு இட்டுச் செல்கின்றது சட்டத்தின் ஆட்சி, ஜனநாயகம், மதசார்பின்மை முதலான அனைத்தும் முதலாளித்துவ அமைப்பில் உருவாவது இவ்விதத்தில்தான். சமூக யதார்த்தங்களிலிருந்து வடித்தெடுக்கப்பட்டதும் யுக்திக்கு உகந்ததுமான ஒரு தத்துவ சாஸ்திரம்தான் புத்தனுடையது எனினும்கூட, அது ஆசார அனுஷ்டானங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு ஸ்தாபனமதத்துக்கு வழிகாட்டுவதையும் உருவாக்கியதையும் நாம் காண்கிறோம். அன்றைய சூழலில் இது வேறுமாதிரி ஆக வழியில்லை என்றாலும்கூட நடைமுறையில் மத அடிப்படையிலான ஒரு முகம், கருணை சர்வாதிகாரத்துக்கு உண்டு என்பது ஓர் உண்மையே. இதிலிருந்து வித்தியாசமாய் சட்டத்தின் ஆட்சிக்கு அப்படிப்பட்ட மத – இன – ஆன்மீக அடிப்படைகள் கிடையாது.

உலகளாவிய அரங்கில் உற்பத்தி முறையில் ஏற்பட்ட பரிணாமங்களின் விளைவை நம் நாட்டுக்குக் கொண்டு வந்தது முதலாளித்துவமோ தொழில்புரட்சியோ அல்ல. காலனியிசம் தான். காலனியிசத்தின் புயலை பழைய கைபர் கணவாய் வழியாக வந்த துருக்கி – ஆப்கன் புயல்களுடன் நாம் ஒப்பிடலாம். அவை இதன் முன்னோடிகள். மத்திய காலத்துக் கொள்ளையர் மெல்ல வியாபார முகம் கொண்ட ஆட்சியாளர்களாக ஆயினர். காலனியாட்சியினர் வந்ததே வியாபாரிகளாக. ஆனால் பெரும் வித்தியாசம், முதல் வகையினர் இங்கு வந்து வசித்து இந்தியர்களாகவே ஆயினர்; இரண்டாம் வகையினர் எத்தனை விரிவடைந்த போதும்கூட அன்னிய நாட்டினராகவே தொடர்ந்தனர். செலவு போக பாக்கியானதை அவர்கள் நாட்டை விட்டு வெளியே கொண்டு சென்ற வண்ணமேயிருந்தனர், கடைசி நாள்வரை. இந்தச் சூழலில் பழைய கேள்வியை நாம் மீண்டும் கேட்கலாம். சட்டத்தின் ஆட்சி என்பது நீதி சாஸ்திரத்தின் அரசியல் வடிவம் ஆகுமா? இல்லை. கருணையுடன் கூடிய சர்வாதிகாரமும், அர்த்த சாஸ்திர கால அரசியல் சாஸ்திரமும் ஒரே சூழல்களில் உதித்து, இணையாக வளர்ந்த, மெல்ல நீதி சாஸ்திரத்தை அரசியல் வென்று முன்னேறி, அதை சுயநல சக்திகள் அடித்துச் செல்லும்படி நேர்ந்த என்று முன்பே கண்டோம். மத்தியகால ஐரோப்பாவைப் பார்க்கும் போது அங்கு சட்டத்தின் ஆட்சி என்ற நீதிமுறை முதலாளித்துவ அரசமைப்பு ஏற்படுவதற்கு முன்னோடியாக உண்டாயிற்று என்றும் அதனால் அது தேய்ந்து சிதைந்து உருக்குலைந்தது என்றும் கூறலாம். ஆனால்

www.tamilarangam.net



பிறந்து வளர்ந்து சிதைவதற்குப் பதிலாக நமது நாட்டில் சட்டத்தின் ஆட்சி பிறந்ததுவே சிதைவுற்று உருமாறிய வடிவில் ஆகும் – அதற்குக் காரணமாக கூறவேண்டியிருப்பது என்னவெனில் அது இந்த மண்ணில் இயல்பாக பிறந்ததல்ல என்பதுதான். அதன் காரணகர்த்தர்கள் என்றுமே ஆதிக்கசக்திகள். முதலில் முஸ்லீம் ஆதிக்கவெறியர்கள். பிறகு காலனியிசத்தின் சிற்பிகள். அவர்களும் தாங்கள் ஆதிக்க சக்திகள் என்ற உணர்வை ஒரு போதும் மறக்கவுமில்லை. தங்களுடைய தேவைகளுக்கெல்லாம் அவர்கள் சட்டத்தை சாதகமாய் வளைத்து நெளித்தார்கள். முற்றிலும் பாரதீயமாகி விட்டிருந்த முஸ்லீம் சக்ரவர்த்திகளின் காலத்தில்கூட சட்டம் வாள் நுனியால் வளைக்கப்பட்டது. பலசமயம் அதற்குத் தேவையே இருக்கவில்லை. நீதித்துறையே அதற்குத் தயாராக இருந்தது. ஏட்டில், சக்கரவர்த்தியைவிட அதிகாரம் மிக்கவனாகவும் மேலானவனாகவும் இருந்த போதும்கூட அந்த நீதிமான்களை நியமிக்கும் அதிகாரம் சக்கரவர்த்திக்குத் தான் வழங்கப்பட்டிருந்தது. அசௌகரியம் தரும் நீதிபதியை விலக்கி புதியவரை நியமனம் செய்ய முடிந்தது. கிழக்கிந்திய கம்பெனி நிலப்பரப்புகளுக் உரிமை பெற்று வரிவசூலையும் ஆரம்பித்தபோது அவர்கள் செய்த முதல் விஷயம் நாடெங்கும் நீதிமன்றங்கள் ஸ்தாபிப்பதுதான். பிளாசிப் போர் முடிந்த பதினேழு வருடத்துக்குள் கல்கத்தாவில் இந்தியாவின் முதல் சுப்ரீம் கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது. அதன் நோக்கமென்ன என்றால் கம்பெனியின் ஊழியர்களுக்கு எதிரான ஜனங்களின் புகார்களை பாரபட்சமின்றி விசாரித்தல்! எனினும் கம்பெனியின் கவர்னர் முதல் குமாஸ்தா வரை அனைவருமே சட்டத்தை சட்டை செய்யவுமில்லை. மெல்ல மெல்ல புத்தகத்தில் இல்லாவிட்டாலும் கூட இரு சட்டங்கள் அமலுக்கு வந்தன. ஆள்பவர்களுக்கு ஒன்று. ஆளப்படுபவர்களுக்கு மற்றொன்று. வியாபாரத்தின் நடவடிக்கைகளும் உறவுகளும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் நடைபெறும்போது எப்படி இது சாத்தியமாயிற்று என்று நீங்கள் கேட்கலாம். அதன் பதில் இங்கு நடந்தது வியாபாரமே அல்ல என்பதுதான். சுப்ரீம் கோர்ட் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு பத்து வருடங்களுக்குள் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றில் கம்பெனியின் செலக்ட் கமிட்டி கூறியது. இங்கிலாந்தும் வங்காளமும் பரஸ்பரம் செய்து கொள்வது வியாபாரம் அல்ல என்று. இங்கிருந்து 'ஏற்றுமதி' செய்யப்படும் சாமான்களுக்குப் பதிலாக இங்கு இறக்குமதியாக எப்பொருளும் கொண்டு வரப்படுவதில்லை. அதாவது துருக்கி – ஆஃப்கான் ஆக்கிரமிப்பாளர்கள் கொள்ளையில் ஆரம்பித்து வியாபாரமனப்பான்மைக்கு வந்தனர் என்றால், காலனியாளர்கள் வியாபாரத்தில் தொடங்கி கொள்ளை நோக்கி நகர்ந்தனர். எனினும் அவர்கள் சட்டத்தின் திரையை எப்போதும் தொங்கவிடத் தயங்கவில்லை;

www.tamilarangam.net



அர்த்த சாஸ்திரக் காலமன்னர்கள் தர்மத்தின் உடைகளை தங்கள் தந்திரங்களுக்குமேல் அணியச் செய்ததுபோல. உள்நாட்டில் 'சட்டத்தின் ஆட்சியை ஏற்படுத்திய நீதிமன்றங்கள் உண்மையில் செய்தது நம் நாட்டிலிருந்து அன்னியர் திருடிச் சென்ற செல்வங்களில் இருந்து உள்நாட்டினரின் கவனத்தைத் திசை திருப்பியதேயாகும். இங்கு தேங்காய் திருடியவனை தண்டனைக்கு உள்ளாக்கிய அதே அரசு தங்கப்பொதிகளை திருடிச்சென்றது. தன் நாட்டுக்கு மட்டுமல்ல ஆதிக்க சுயநலங்களின் நிழல் படியாத தனி நபர் விஷயங்களில்கூட சட்டம் சீர்குலைக்கப்படுதல் நடைபெற்றது. கொள்ளையர்களைப் பிடிக்க முயன்ற பிரிட்டிஷ் காவல் துறை உண்மையில் பிடித்தது எளிய கிராமவாசிகளையேயாகும். இவர்கள் பிரிட்டிஷ் அரசினரின் உளவாளிகளுக்கோ, தாசர்களுக்கோ, ஊழியர்களுக்கோ பிடிக்காதவர்களாக இருந்ததே பிரதான காரணம். சிறையில் வாடிய நிரபராதிகளைச் சந்திக்க நேர்ந்த அன்றைய வங்காள கவர்னர் பிரிட்டிஷ் கம்பெனிக்கு கடிதம் எழுத நேர்ந்தது. 1820ல் ஒன்றரை லட்சம் வழக்குகள் வங்காளத்தில் மட்டும் தேங்கிக் கிடந்தனவாம். இந்த வழக்குகளை முடிக்க சாட்சிகள் படைபடையாகத் தேவைப்பட்டனர். தூரக்கிராமங்களிலிருந்து அவர்கள் நகரங்களுக்கு இழுத்தடிக்கப்பட்டனர். ஒரு வழக்கில் சாட்சியாக ஆவது மாபெரும் தண்டனையாக ஆயிற்று. நீதிமன்றங்களோ ஊழல் லஞ்சம் இவற்றில் மிதந்தன. நீதி ஏலம் விடப்பட்டது. ஜனங்களுக்கு மத்தியில் நீதியைக் கொண்டு செல்வதற்கு மாறாக நீதிமன்றங்களையும் சட்டத்தையும் ஜனங்களிடமிருந்து விலக்கிக் கொண்டு செல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. விளைவாக நீதிமன்றச் செலவு அதிகரிக்கப்பட்டது. நீதி கிடைப்பதில் உள்ள சிரமங்களும் அதிகரிக்கப்பட்டன.

காலனியிசத்தினால் சீர்குலைக்கப்பட்ட விதத்தில் நீதியானது வந்தடைய நேர்ந்த நமது நாட்டில் மட்டுமல்ல, சட்டம் அதன் சரியான சுயத்துவத்துடன் பிறக்க நேர்ந்த மற்ற இடங்களிலும் கூட இந்த நிலையே மெல்ல ஏற்பட்டது. அங்கெல்லாம் இப்படி ஏற்படக் காரணம் சட்டம் அதன் படைப்பாளியான மானுடனை விட்டு அகன்று தனக்கேயுரிய ஹோதா ஒன்றினை உருவாக்கிச் செயல்பட ஆரம்பித்தபோதாகும். முன்பே கூறியிருப்பதுபோல ஆள்பவர்கள், ஆளப்படுபவர்கள் என்ற இருசாராருக்கும் பொதுவான செயல்முறைத் திட்டம் ஒன்று வியாபார ரீதியான செயல்பாடுகளுக்குத் தேவையாக அமைந்த புதிய சூழ்நிலையின் விளைவாகவே பாரபட்சமற்ற சட்டம் என்ற கருத்தாண்மை உதித்ததேயொழிய எவ்விதமான சமத்துவ எண்ணங்களின் தூண்டுதலினாலும் அல்ல. தொழிற்புரட்சியும் முதலாளித்துவமும் மனிதனை

www.tamilarangam.net



மூடநம்பிக்கை மத நம்பிக்கை இவற்றின் பிடிகளிலிருந்து விடுதலை பெறவைத்தன. செயல்முறை சார்ந்ததெனினும் தகவல் துல்லியம் கொண்ட கருத்துமுறையும் (Objectivity though pragmatic) பயன்பாடு சார்ந்ததெனினும் தருக்க பூர்த்தியும் (Logic though utilitarian) அவனுடைய கண்ணோட்டத்தில் ஏற்பட வழிவகுத்தன இவை. ஒரு குறிப்பிட்ட தளத்தில் மட்டுமே எனினும் கூட பிறப்பு முறை மேன்மைகளை உதறி பரஸ்பரம் சமநிலையில் பார்க்கும் ஒரு மனோபாவத்தை ஏற்படுத்தியது. ராஜ ஆட்சி ஜனநாயகத்திற்கு வழிவிட்டது. ஆனால் இவை அனைத்துமே ஒரு புதிய உற்பத்தி முறையின் தேவைக்கு ஏற்பவோ – அல்லது அதன் சகவிளைவாகவோ மட்டுமே ஏற்பட்டன. அதாவது மனித மனம் நீதியின் ஒளியைத் தேடி அடைந்ததன் மூலம் அல்ல. தொழிற்புரட்சி மேலும் முன்னேறியபோது தனிநபர் சொத்து என்பது மேலும் ஆளுமையும் வல்லமையும் உடைய தனித்ததோர் சக்தியாக மாறியது. அதிகாரம் சில இடங்களில் குவிந்தது. சுயநல நோக்குகள் தீவிரம் கொண்டன. மனிதர்கள் புதிய சக்திகளின் விரல் நுனிகளில் பொம்மைகளாயினர். சமத்துவம் இழந்த யந்திர வடிவங்களாக ஆயினர். அனைத்துமே சிதைந்து ஆபாசப்பட நேர்ந்தது. இந்நிலையில் சட்டம் மட்டும் எப்படி தூயதாகத் தனித்து இயங்கமுடியும்? மனிதர்களுக்கு இடையே சமத்துவம் உண்டாக வேண்டும் என்ற நிலையை அது தன் குறிக்கோளில் இருந்து அகற்றியது. சாதாரண மனிதர்கள் மனசாட்சியிடமிருந்து தப்பித்துக் கொள்ள உதவும் சாக்கு போக்காகவோ, சுயநல சக்திகளின் ஆயுதமாகவோ அது உரு மாறியது. சட்டம் செயல்படச் செய்வது என்றால் அது பல சமயம் மனிதாபிமானத்திற்கு எதிராகச் செயல்படுவது என்ற நிலையும் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினை அதன் முழுத் தீவிரத்துடன் காட்சிதர ஆரம்பித்தது, இரண்டாம் உலகப் போரின் காலகட்டத்தில்தான் 'நியூரம்பர்க்' விசாரணைகள் அதில் பெரும்பங்கு வகித்தன. அங்கு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டது மனிதாபிமானமிழந்து அன்னியமாக்கப்பட்ட சட்டமும்கூடத்தான். சட்டத்தைப் பின்பற்றுகின்ற பிரஜைகளாக இருப்பதனாலோ, மேலிருப்போரின் கட்டளைகளை சிரமேற்கொள்ளு வதனாலோ ஒருவனுடைய சமூகக் கடமைகள் முடிந்து விடுவதில்லை. ஒவ்வொரு மனிதனும் ஒரு தனித்த ஆளுமை. ஒவ்வொரு மானுடனுக்கும் ஒரு மிகப் பெரிய நீதிமன்றம் உள்ளது. மனசாட்சி அதையே அவன் கடைசியாகக் கொள்ளவேண்டும் என்ற வாதம் மேலெழுந்தது. நாஜிக் குற்றவாளிகள் செய்தது முழுக்க அன்றைய நாஜி அரசின் சட்டங்கள் அனுமதிப்பது மட்டுமல்ல வற்புறுத்துபவையும்கூட. ஆனால் அதுவே இறுதியானதல்ல என்று கூறப்பட்டது. பின்பு நாஜிக் குற்றவாளிகள் செய்ததெல்லாம் அவர்கள் அரசு ஆணையிட்ட அவர்களுடைய கடமைகளை

www.tamilarangam.net



மட்டுமே. எனினும் அவர்கள் குற்றவாளிக் கூண்டில் நின்று தண்டனை பெற நேர்ந்தது.

## நான்கு

சட்டத்துக்கும் அப்பால் (Beyond the law) என்ற புதிய கருத்து இவ்வாறாக நீதி சாஸ்திர அரங்கில் பிரவேசித்தது. தொழில் புரட்சியல்ல, அதற்கு முந்தைய அன்னிய ஆட்சியே நமக்கு சட்டத்தின் ஆட்சியை அறிமுகம் செய்தது. இதைப்போலவே தான் பாசிசத்தை விட முன்பே காலனியிசம் நமக்கு சட்டத்துக்கும் அப்பால் என்ற கருத்தை அறிமுகம் செய்துவிட்டது. சட்டத்தின் முழு வளர்ச்சி ஏற்படுத்திய அன்னியமாதல் அல்ல மாறாக அதன் குறைப்பிரசவமே இதற்குக் காரணமாக அமைந்தது. காலனியிசத்தின் எதிர்வினையாகப் பிறந்த காந்தியிசமே இத்தகைய சரித்திர பூர்வமான கடமையை நிறைவேற்றியது. வரப்போகும் நீயூரம்பர்க்கையும் உள்ளடக்கியதாக இருந்தது காந்தியின் குரல். ஒரு கோணத்தில் அதை விடவும் ஆழமானது அது. தோற்ற நாடுகளின் பிரஜைகள்தான் நியூரம்பர்க்கில் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டனர். காந்திஜியின் அறைகூவல் தோற்றவர்களுக்கு மத்தியிலிருந்து வென்றவர்களை நோக்கி எழுந்தது. ⋆ காந்தியின் இயக்கத்தைப்பற்றி பேசுகையில் ஐன்ஸ்டீன் ஆசைப்பட நேர்ந்தது. நியூரம்பர்க் தத்துவங்கள் தோற்ற நாடுகளில் பிரஜைகள் மீது மட்டும் பிரயோகிக்கப்படுகிற ஒரு காலகட்டம் வராமலிருப்பதாக என்று (Gandhi wields the weapon of moral power என்ற நூலுக்கு ஐன்ஸ்டீனின் முகவுரையிலிருந்து). சட்டம் எல்லா மனிதர்களிடமிருந்தும் விலகி நிற்பதான ஒரு புள்ளியாக கணிக்கப்படுகையில் கவனிக்கப்பட வேண்டிய விஷயம் ஒன்று உண்டு. அதை நடைமுறைப்படுத்த ஒரு ஸ்தாபனம் தேவையாக உள்ளது. வன்முறையை உபயோகிக்கும் வல்லமை கொண்ட ஸ்தாபனம். ஸ்தாபனம் என்பது எவ்விதத்திலானதாக இருப்பினும் சரி இறுதியில் சில மனிதர்களில் சென்று நின்றுவிடுகிற ஒன்று. அவ்விதமாக கடைசியில் சட்டத்தை அமுல்படுத்த வேண்டிய பொறுப்பானது அதிகாரமுள்ள சிலருடைய கரங்களை வந்தடைகிறது. அதிகாரமுள்ளவன் பிரயோகிக்கும் போது சட்டம் அவனுடைய இஷ்டப்படி வளையும்; சிதையும். மட்டுமல்ல சட்டத்தை நிர்மாணிப்பவர்களும் மனிதர்கள்தான். அதாவது அதிகாரமுள்ள மனிதர்கள். இதனால் பொதுநலங்களோ எதிர்கால நலன்களோ அல்ல, மாறாக சுயநலங்களின் கூட்டமைப்பும், தற்காலிக நலன்களுமே பெரும்பாலும் சட்டநிர்மாணத்தைப் பாதிக்கின்றன. இவ்வண்ணம் பார்க்கும்போது வளர்ந்து கொண்டிருக்கும் ஒரு சமூகம் அதன் நீதி போதத்தின் மூலம் ஒரு

www.tamilarangam.net



கணக்கில் சட்டத்தை தாண்டிப்போவது மிகவும் அவசியமானதாக ஆகின்றது. சட்டத்துக்கு அப்பால், மானுடம் என்ற ஆதாரப் புள்ளிக்கு திரும்பிச் செல்ல காந்திஜி அறைகூவினார். மானுட மதிப்பீடுகளின் புனிதத்தன்மைக்கு, இங்கு சட்டப்புஸ்தகத்தைப் புரட்டிப் பார்த்தல்ல, ஒவ்வொரு மனிதனும் சொந்த மனசாட்சியிடம் கேட்டே பதில் பெற வேண்டியுள்ளது. நீங்கள் உங்களிடமே வினவுங்கள் – காந்தி தன்னை விசாரணை செய்த நீதிபதியிடம் கூறினார் – "நான் செய்தது தவறென உங்களுக்குத் தோன்றியதென்றால் முடிந்தவரை கடுமையான தண்டனையை எனக்குக் கொடுங்கள். இல்லாவிடில் என்னை விடுதலை செய்யுங்கள். ராஜத்துரோகம் இன்று என் கடமையாகிவிட்டிருக்கின்றது." அவர் எழுதினார் – நியதமான சட்டத்தின் மொழியில் நாட்டுத்துரோகம் என்பது என் மனசாட்சியின் மொழியில் என் கடமையாக உள்ளது. இவ்வாறாக நீதி சாஸ்திரத்தில் ஒரு புதிய வார்த்தை அறிமுகமானது – ஒழுக்கம். அத்துடன் நாம் ஒரு புதிய சித்தாந்தத்தின் காலகட்டத்திற்கு நகர்கிறோம் – ஒழுக்க தத்துவத்தின் காலகட்டம் (Principle of Morality)

கருணை சர்வாதிகாரம் மத அடிப்படையிலான ஒரு தோற்றத்துடன் முன்வைக்கப்பட்டது என்று ஏற்கனவே சொன்னேன். சட்டத்தின் ஆட்சிக்கு தரவேண்டிய மதிப்பிற்கு ஒரு காரணம் அது தனிமனிதனின் நீதிபோதத்தை மதத்தின் பிடியிலிருந்து விடுதலை செய்தது என்பதே. மதசார்பின்மை என்பது ஒருவிதத்தின் சூனியமான ஒரு நிலையாகும். அந்த வார்த்தை குறிப்பிடுவதுபோல எதிர்மறைத் தன்மை கொண்டதுகூட. மத சார்பின்மையின் சூனியத்தன்மையிலிருந்தும், ஆதாரப் பிடிப்பில்லாத நிலையிலிருந்தும் முன்னேறிச் சென்று தூயநோக்கம் கொண்டதும், குறிக்கோள் கொண்டதுமான கலாச்சாரத்தின் ஒரு புதிய துறைக்கு நீதி சிந்தனையை கொண்டு சென்றது ஒழுக்க தத்துவ சித்தாந்தம்.

அகில உலக அளவில் தோன்றுவதற்கு முன்பே தெளிவானதும், திடமானதுமான ஒரு இயக்கமாய் மாற முடிந்தது என்றாலும் நீதி சாஸ்திர வரலாற்றில் கடைசியில் வந்த ஒழுக்க சித்தாந்தத்தினால் அரசியல் துறையில் எதையாவது செய்ய முடிந்ததா? இல்லை என்று நமக்கெல்லாம் நன்கு தெரியும். சுதந்திர போராட்ட காலத்தில் போராட்ட உத்தி என்ற முறையில் சற்று பிரயோசனப்பட்டது என்றாலும் அந்தச் சுதந்திரம் கிடைத்த பிறகு சுரண்டப்பட்ட மக்களுக்கு ஒரு புதிய அமைப்பை உருவாக்கித் தரவேண்டிய சரித்திர பூர்வமான கடமை ஏற்பட்டபோது அந்த சித்தாந்தம் எங்கோபோய் மறைந்தது. ஆட்சி ஜனநாயக மரபுகளுக்கு மாறிச் சென்றது. அரசியல் சட்ட வாசகங்களின் அழகிலும், நீதிமன்ற விவாதங்களின்

www.tamilarangam.net



சாமர்த்தியத்திலும் சுகம் காணும் ஜனநாயக மரபுகளின் புதிய சட்டம் சட்டத்துக்கப்பால் செல்லத் துடிக்கும் ஒழுக்க சித்தாந்தத்தின் அறைகூவலை எதிர்த்து வென்று தலைதூக்கி நின்றது. எனினும் நமது ஜனநாயகம் வெறும் ஜனநாயகம் அல்ல என்றும் தூய காந்தியிசமாகும் என்றும் அதாவது காந்தியன் ஜனநாயகம் என்றும் தலைவர்கள் கூவித் திரிந்தனர். மற்ற இடங்களில் காண முடியாத தலைவர்களின் மாபெரும் பொதுக் கூட்டப் பேச்சுகளும் சத்தியாக்கிரங்களும், பாதயாத்திரைகளும், பூதானங்களும், கொள்ளையர்களின் ஆத்மசமர்ப்பணங்களும் சுட்டி காட்டப்பட்டு அவர்கள் நம்மிடம் கூறினார்கள். நம்முடைய ஜனநாயகம் சட்டத்துக்கு அப்பாலும் செயற்படும் ஒழுக்க சித்தாந்த அரசியல் சாஸ்திரமாகும் என்று. இதற்கு காரணம் என்ன?

தொழிற்புரட்சி, முதலாளித்துவம் முதலானவற்றின் ஆரம்ப காலகட்டங்களில் உற்பத்தி யூனிட்டுகள் சுதந்திரமாகவும் தங்களுக்குள் போட்டி போட்டவாறும் நின்றிருந்தன. லேசஸ்ஃபெயர் (Laissez - Faire) என்று அழைக்கப்பட்ட இந்த கட்டத்தில் அரசுகளையும் அமைப்பையும் நாடுகளையும் மங்கச் செய்தபடி தனி நபர்களும் கம்பெனிகளும் பிரகாசித்தனர். இந்நிலை தொடரவில்லை. தொழில்நுட்பத்தின் வளர்ச்சியும், பெருமளவில் நடந்த யந்திரமயமாக்குதலும், ஒட்டு மொத்த உற்பத்தியும் சின்னஞ்சிறு யூனிட்டுகளை அகற்றிவிட்டு மேலும் மேலும் பெரிய யூனிட்டுகளை உண்டு பண்ணின. அங்கிருந்தும் வளர்ந்து பற்பல யூனிட்டுகளை ஆளும் தொழில் சாம்ராஜ்யங்களே உண்டாயின. மையமாக்குதலின் இந்த ஓட்டமானது இறுதியில் அரசு முதலாளித்துவம் என்ற புள்ளியை அடைந்தே நிற்க இயலும் என்ற நிலை ஏற்பட்டது. முதலாளித்துவ வளர்ச்சியில் தெளிவாகத் தெரியும் ஒரு தனிகுணம் உற்பத்தியில் போர் தளவாடங்களின் பங்கு வெகுவேகமாய் அதிகரித்ததாகும். உபயோகப் பொருட்களை ஒப்பிட்டுப் பார்த்தால் போர்த் தளவாடங்களுக்கு உற்பத்தியின் மிகப்பெரும் பங்கு இன்று தரப்பட்டுள்ளது. தொழில் வளர்ச்சியை பொருளாதார வளர்ச்சியுடன் ஒப்பிட்டு முன்னதை பின்னதின் அளவுகோலாய்க் காணப் பழகிப்போன இன்றைய அரசியல் சாஸ்திரத்திலும், மனதத்துவத்திலும் இவ்வண்ணம் போரென்பது தவிர்க்க முடியாத ஒரு இடத்தைக் கைப்பற்றுவதாக அமைந்தது. நவீனத் தொழில் வளர்ச்சியில் போர் தவிர்க்கவே முடியாத உடன் விளைவாகும். தொழிற்புரட்சி, முதலாளித்துவம் ஆகிய இவ்விரண்டின் இக்குறிப்பிடப்பட்ட இரு தனிக்குணங்களையும் எதிர்பார்த்து அமைக்கப்பட்டதாகும், காந்தியின் ஒழுக்க சாஸ்திரம். ஓடும்தோறும் வேகம் ஏறும் இந்தக் குதிரையின் அசுர வேகத்திலான பயணத்தைக் கட்டுப்படுத்த காந்தியின் இந்த நீதி

www.tamilarangam.net



சாஸ்திரத்தினால் அன்றி இன்னொன்றினால் முடியுமா என்பது சந்தேகத்துக்குரிய விஷயம்தான்; இன்றுகூட. சுய நிர்ணய உரிமை அடைந்த பாரதம் இக்காரணத்தினால் இவ்விரண்டில் ஒன்றின் முக்கியத்துவத்தை அங்கீகரிக்க வேண்டியிருந்தது. ஒன்று – குதிரையின் அல்லது கடிவாளத்தின். ஒரு சுதந்திர நாட்டை பொறுத்தவரை பொருளாதாரத் துறையில் உடனடி வளர்ச்சியே அவசியம் என்றும் முதல் விஷயமே அதற்கு உறுதுணை என்றும் நினைத்த சுதந்திர இந்திய அரசாங்கம் தொழில் புரட்சியின் தத்துவத்தை ஏற்றது. குதிரையின் மீதே கடிவாளத்தை வீசிவிட்டது. நல்ல நோக்கம் கொண்டதாக இருந்தபோதும்கூட திட்டமிடப்பட்ட தொழில் வளர்ச்சி எல்லாவற்றையும் அரசாங்கத்தின் கையில் ஒப்படைத்து ஊழலும், அதிகார வெறியும் அதன் விளைவாகத் திட்டமிடலின் உள்ளிருந்தே ஏற்பட்ட சீர்குலைப்பு வேலையுமே இதனால் ஏற்பட்ட பிரயோசனம், தேசப்பிரிவினையும் அதன் விளைவான போர்களும் ராணுவசக்தியை வளர்க்கவும் போர்தளவாடங்களின் உற்பத்தியை அதிகரிக்கச் செய்யவும் தூண்டியது. மொத்தத்தில் சுதந்திரத்துடன் முடிவடைந்த முந்தைய முப்பது வருட காலகட்டத்து தரிசனங்களிலிருந்து தேசம் பின்னால் நகர்ந்ததையே அடுத்த முப்பது வருடங்களில் நாம் காண நேர்ந்தது. அவசர நிலை பிரகடனத்துடன் அந்த பயணம் பூர்த்தியடைந்தது. 1920 களில் இருந்த பிரிட்டிஷ் ஆட்சியை விடவும் அச்சமூட்டுவதான ஏகாதிபத்திய ஆட்சிக்கு நமது தேசம் இட்டுச் செல்லப்பட்டது. சட்டத்திற்கு அப்பால் செயற்படும் ஒழுக்க போதம் என்ற தரிசனத்தை உதறி நாம் சட்டத்துக்கே திரும்பி சென்றோம் என்பது மட்டுமல்ல அச்சட்டமே அதிகாரம் உள்ளவர்களால் நாணல்போல வளைக்கவும், களிமண் போல உருட்டவும் வாகான ஒரு சாமான் என்று நிரூபணமும் ஆயிற்று. சட்டத்தின் காவலர்களே எவ்வித நியாயிகரணமும் இல்லாமல் ஒரு நிரபராதியான குடிமகனைப் பிடித்து சித்திரவதை செய்து கொன்றாலும்கூட அது ஒரு விதத்தில் சட்ட பூர்வமானதே என்று நீதிபதிகளே அறிவிக்கும் நிலையும் இங்கு ஏற்பட்டது. அர்த்தசாஸ்திர ஆசிரியன் காட்டிய மேற்பூச்சும் அலங்காரங்களும்கூட தேவையில்லை என்ற நிலை இங்கு ஏற்பட்டது.

ஒழுக்க சித்தாந்தத்தின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணங்களில் ஒன்று காந்தியின் செயல்களிலேயே இருந்த ஒரு தனித்தன்மை ஆகும். ரகசியத்தன்மை (Occult) என்று கூறப்படத்தக்க ஒரு விஷயத்தின் போர்வையை எப்போதும் காந்தி தன் அரசியல் செயற்பாடுகள் மீது போர்த்தியிருந்தார். மனசாட்சியில் கடைசித் தீர்ப்பைக் காண்பதற்குப் பதிலாக காந்தி அதைவிட அப்பாலிருக்கும், காணமுடியாத, ரகசியமான,

www.tamilarangam.net



ஒரு சக்தியில் தன்னுடைய ஒழுக்கத்தின் ஆதார மையத்தையும் தன் செயல்களுக்கான தீர்ப்பையும் கண்டார். ஒவ்வொரு இயக்கத்தையும் தொடங்குவதற்கு முன்பு அவர் கடுமையான தியானத்தில் மூழ்குவதுண்டு என்றும், வழிமுறைகள் ஒருவித அசரீரியின் குரல் போல தனக்குக் கிடைக்கப் பெற்றன என்றும், காந்தியே கூறுவதுண்டு. அதாவது யுக்திக்கு எட்டுவதும் தருக்க பூர்வமாய் யோசித்து தீர்மானிப்பதுமான வழிமுறைகள் அல்ல அவை! கடவுள் விதித்தவையாகும். அவற்றை நிறைவேற்றுதலையே அவர் செய்து வந்தார் என்று அவர் கூறியிருக்கிறார். தன்னுடைய உள்ளுணர்வுகளிலும் (Intuitions) தனக்கு கிடைக்கும் தரிசனங்களிலும் (Visions) காந்தி ஒரு தீர்க்கதரிசியைப் போல நம்பிவந்திருந்தார். எனவே விளக்க முடியாமை என்ற ஒரு பிரிக்க முடியாத அம்சம் இவ்வண்ணம் அவருடைய ஒழுக்க அரசியலில் கலந்திருந்தது. மகாத்மாக்கள், அதிமானுடர் ஆகியவர்களின் தரிசனங்களின் ஒரு அம்சம். ⋆ கடைசி நாட்களில் நவ்காலாவில் வழுக்கும் பாதைகளையும், மரத்தடிப் பாலங்களையும் கடந்து நடக்கும் தருணத்தில் மிகுந்த துயரம் கொண்டவராய் காந்தி தனக்குத்தானே கேட்க நேர்ந்தது. ஏன் என் அகிம்சையின் மந்திரம் பலிக்காமல் போயிற்று? என்று 'எங்கு எனக்கு வழி தவறியது?' என்று, மேலும் உயிர் வாழ்ந்திருந்தார் என்றால் ஒருவேளை அவர் தனது தத்துவ சாஸ்திரத்தையே மறு வார்ப்பு செய்திருக்க கூடுமோ என்னவோ.

இரு விளைவுகள் இதனால் ஏற்பட்டன. முதலாவதாய் மதத்திலிருந்து விடுபட்டு மதசார்பின்மைக்கு நகர்ந்த நீதிபோதமும் நீதி சாஸ்திரமும் மேலும் நகராமல் பின் வாங்கி மீண்டும் இரண்டாயிரம் வருடங்கள் பின்னால் சென்று மதத்தின் பாதையில் நகர ஆரம்பித்தன. இரண்டாவதாக அதிகாரத்தின் உன்னத சிகரங்களை உதறி ஒவ்வொரு மனிதனையும் அந்தரங்கமாய் ஸ்பரிசித்து அவனையும் பங்கு கொள்ள வைத்து, பொறுப்பேற்கச் செய்து, அதன் வழியாக ஒரு ஜனநாயக அடிப்படையுள்ள அமைப்பை அரசியல் சாஸ்திரத்தில் உருவாக்குவதற்குப் பதிலாக அதிமானுடரான மகாத்மாக்களையோ, அதிசயத் திறமை உள்ள (Charismatic) தலைவர்களையோ பின் தொடர்ந்து செல்லும் ஆள்கூட்ட இயக்கங்களுக்கு இந்த காந்தியின் மனப்பான்மை வழிவகுத்து தந்தது. சுதந்திரப் பிந்தைய இந்தியாவில் இந்த மந்தை மனப்பான்மை உருவாக்கிய விளைவுகளைத்தான் காண்கிறோமே. மத அடிப்படையை ஊக்கியதனால் மதவெறியை எதிர்க்க முயன்ற காந்தியின் முயற்சிகள் வீணாகின. ⋆ மிகவும் அருகாமையில் உள்ள உதாரணம் ஒன்று. வகுப்புவாத – ஜாதிய நிறுவனங்களும், வகுப்புவாத அரசியலும் கேரளாவில் வகுப்பு வெறியை

www.tamilarangam.net



கட்டுப்படுத்தி வருகின்றன என்றும் மற்ற இடங்களை போல வகுப்புக் கலவரங்கள் இங்கு உண்டாகாமலிருப்பதற்கு காரணம் இந்த நிறுவனங்கள் – கட்சிகளின் செயல்பாட்டின் காரணமாக ஒவ்வொரு வகுப்பும் பொருளாதார – சமூக ரீதியாக முன்னேற்றம் கண்டதே காரணமென்றும், இவை வகுப்புவெறியை சிருஷ்டித்தன்மை உடைய செயுல்களுக்குத் திருப்பிவிட்டு சேவை செய்தன என்று பலர் நம்பி வந்தனர். இந்த நம்பிக்கை பொய் என்றும் அடங்கியிருப்பதாய்பட்ட வகுப்புவாத சக்திகளுக்கு பற்களும் நகங்களும் வளர்ந்து கொண்டிருந்தன என்றும் சிறு பொறியில் அவை கொழுந்து விடக்கூடும் என்றும் சமீபத்திய கலவரங்கள் நிரூபித்தன. மதத்தின் பெயரால் நாடே பிளவுண்டது மட்டுமல்ல ஒவ்வொரு பிளவுபட்டக் குழுவினருக்குள்ளும் வகுப்புவாதப் புண் எரிச்சலும் வலியும் ஏற்படுத்தியவாறு தொடர்ந்து வரவும் வருகின்றது. மகாத்மாக்களை அடிப்படையாக கொண்ட அரசியல் வளர்ச்சி பெற்று 'மாமனிதர்களை' அடிப்படையாகக் கொண்ட இன்றைய அரசியல் நாடகத்துக்கு வழிவகை செய்தது தவிர்க்க முடியாத பெரும் ஆளுமைகளைப் பற்றி நாம் கேட்க ஆரம்பித்தோம். ஏழைகளை உய்யச் செய்யவும் நிரந்தரமாய் ஆட்சியதிகாரத்தைக் கையாளவும் பிறப்பு உரிமை கொண்ட குடும்பங்கள், அவதாரங்கள், மாற்ற முடியாத இயற்கை விதிகள், தரிசனங்கள், மந்திர வல்லமைகள் இன்னும் என்னென்ன என்னென்ன . . .

## ஐந்து

நமது வரலாற்றின் பற்பல காலகட்டங்களில் பிறவி கொண்ட நீதி சாஸ்திரங்களைப் பற்றிய சுருக்கமான இவ்வாராய்ச்சி சில விஷயங்களை நமது கவனத்துக்குக் கொண்டு வருகின்றது. முதலாவதாய் நமது கவனத்தைக் கவருவது நீதியை செயற்படுத்துகின்ற பொறுப்பில் ஏற்படுகின்ற நிலை பிறழ்வுகள். முதலில் அப்பொறுப்பை சமூகத்தின் ஆதிக்க சக்திகள் வகித்திருந்தன. அவர்களுடைய பெருந்தன்மையை அடிப்படையாகக் கொண்டிருந்தது அது. பிறகு அதை ஆதிக்க வர்க்கம், அடிமை வர்க்கம் இரண்டிலிருந்தும் பிரித்து வடிவம் இல்லாத ஒரு புள்ளியில் நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் ஏற்பட்டன. கடைசியில் நீதியை நிலைநாட்டும் பொறுப்பு அது தேவையுள்ள மனிதர்களிடம் வந்து சேர்ந்தது. இவ்விதமாய் நீதி அடைய வேண்டிய ஒன்று என்ற நிலையை உதறிவிட்டு உருவாக்கிக் கொள்ள வேண்டிய ஒன்று நிலையை வந்தடைந்தது. நீதியில் வந்த இந்த மாற்றமானது இதை சுயத்துவமாதல் அல்லது ஜனநாயகமயமாதல் என்று கூறலாமா? – மனிதனின் பெருகி வரும் நீதிபோதத்தையும் மேலும் மேலும் கிடைக்க ஆரம்பித்துள்ள நீதியையும்தான் காட்டுகின்றது. மறுகோணத்தில் பழங்குடிகோத்திரம், குடும்பம் என்ற

www.tamilarangam.net



அடிப்படை கூறுகள் இல்லாமலாகி உற்பத்தி சமூகத்தின் அடிப்படையானது தனிமனிதனில் வந்து நிற்கின்றது என்பதையும், மற்றெல்லா விஷயங்களையும் போல நீதி விஷயத்திலும் இன்றைய நவீன மனிதன் தன்னுடைய பொறுப்பைத் தானே ஏற்க வேண்டியுள்ளது. விதிவிலக்குகள் தனித்தன்மையை உதறி ஆள்கூட்டத்தில் ஒளியலாம். அதாவது நீதியை உதறிவிடலாம்.

நீதி போதத்திலும் நீதி என்ற கருத்தாண்மையிலும் வந்து கொண்டிருக்கும் இம்மாற்றங்களுக்கு இணையாக நம்மைக் கவரும் ஒரு விஷயம் ஒவ்வொரு காலகட்டத்திலும் நீதி போகத்தையும் நீதி என்ற கருத்தாண்மையையும் சிதைவுறச் செய்து கொண்டிருக்கும் அவற்றின் கோணலான செயல்பாட்டு முறையாகும். தொடர்ந்து வரும் இத்தகைய கோணலாக்கப்படுதலுக்கும் அதன் விளைவான பிரயோசனமின்மைக்கும் ஒரு காரணம் உண்டு – நீதி சாஸ்திரம் என்றுமே ஒரு சக்தியாக இருந்ததில்லை என்பதுதான். நீதி சாஸ்திரம் மட்டுமல்ல நீதி போதமே கூட பற்பல கால கட்டங்களில் வெளிப்படுவது எவ்வித மதிப்பீடுகளின் தொகுப்பாகவோ கருணையின் விளைவாகவோ அல்ல என்பதும்; அது எப்போதுமே அக்காலகட்டத்து சமூகவியல் பொருளாதார காரணிகளின் விளைவாகவோ, நிர்ணயிக்கும் சக்தி கொண்ட வர்க்கத்தின் தத்துவ சாஸ்திரம் என்ற நிலையிலோ ஆகும் என்பதும் கவனிக்கப்பட வேண்டும். புத்தர் காலகட்டத்து நீதி சாஸ்திரத்தின் நோக்கம் அக்காலகட்டத்து அமைப்பையும் வர்க்க ஒழுங்கையும் மனிதாயப்படுத்துவதுதான் என்றாலும் அந்த மனிதாயப்படுத்தலின் நோக்கமோ அந்த அமைப்பையும் வர்க்க ஒழுங்கையும் மேன்மேலும் வெற்றிகரமாய் செயற்படச் செய்வதன்றி வேறென்ன? இடைக்காலத்து ஜனநாயகமும் அதன் பக்க விளைவுகளாக மத சார்பின்மையும் சமநீதியும் பிறந்தது. தொழிற்புரட்சியின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு மட்டும்தான். இத்தகைய ஒரு சூழலில் நீதி சாஸ்திரம் – அது எதுவாக இருந்தாலும் – தனியுடைமை, வர்க்க ஒழுங்கு ஆகியவற்றின் சிருஷ்டியான அதிகார அரசியலுக்கு அடிப்பட்டே தீரவேண்டியுள்ளது.

இது நம்மை மற்றொரு கேள்விக்கு இட்டுச் செல்கின்றது. என்றுமே நீதிசாஸ்திரம் இவ்விதத்தில்தான் தோன்றும் என்று கூறலாமா? நடந்த விஷயங்களைப் பற்றி பேசினோம் இதுவரை. இந்த ஞானம் இனிமேல் நடக்கவிருப்பதை பற்றி யோசிக்கும்படி நம்மைத் தூண்டுகின்றது. உண்மையில் இக்கட்டுரையின் ஆரம்பத்திலேயே இவ்விஷயம் தொடப்பட்டு விட்டது. சமூகவியல் பொருளாதார யதார்த்தங்களின் விளைவாக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மட்டுமல்ல, அவைக்கு எதிரான உன்னத மனங்களின் அறைகூவலில் இருந்தும் நீதிபோதம் உருவாக முடியும் என்று கூறினேன். 'மதிப்பீட்டு புரட்சி' என்ற ஒன்றுக்கு இட்டுச் செல்வதற்கான தூண்டுதல் இத்தகைய 'மனிதாயக் கிளர்ச்சி மூலம் ஏற்பட முடியாது என்று கூறிவிட முடியாது. இத்தகைய கிளர்ச்சிகளுக்கும் கோணலாகும் விதி ஏற்படக்கூடும். ஆனால் இங்கு குறிப்பிடத்தக்கது அது நீதிபோதத்திலும் நீதி சாஸ்திரத்திலும் பெரிய மாறுதல்களை உருவாக்கும் என்பதே.

உதாரணமாய், சொத்துடைமை அமைப்பிலிருந்தும் அவ்வர்க்க ஒழுங்கில் இருந்தும் உடல் கொண்ட நீதி சாஸ்திரமானது பிறகு அவையாலேயே உருவாகும் அரசியல் சாஸ்திரத்துடன் இணைந்து உருவாக்கும் மதிப்பீட்டுணர்வு, அதிலிருந்து பிறக்கும் கலாச்சாரம். இந்த அமைப்பை பற்றியே இதுவரை பேசிக் கொண்டிருந்தோம். இந்த முறையே பற்றியே இதுவரை பேசிக் கொண்டிருந்தோம். இந்த முறையே மனிதனின் நிரந்தரமான தலைவிதி ஆக இருக்க வேண்டும் என்பதில்லை. சுயஉணர்வும் ஞானமும் கொண்ட மானுடன் உருவாக்கிக் கொள்ளும் மதிப்பீட்டுணர்விலிருந்து அல்லது கலாச்சாரத்திலிருந்து, உருக்கொள்ளும் நீதிபோதம்; அதன் அடிப்படையில் உருவாகும் அரசியல் சாஸ்திரம்; அந்த அரசியல் சாஸ்திரம் புதிய நீதிசாஸ்திரத்தின் அடிப்படையில் மறுபடைப்பு செய்யும் புதிய சமூகவியல் – பொருளாதார வாழ்வமைப்பு இவ்வணம் நேர்மாறாக அமையக்கூடிய ஒருவரிசை ஏன் உருவாகக்கூடாது? மனிதன் இச்சாசக்தி உடைய ஜீவன். சரித்திரத்தால் சிருஷ்டிக்கப்படுபவன் மட்டுமல்ல, சரித்திரத்தைப் படைப்பவனும்கூட. சூழல்களையும் சந்தர்ப்பங்களையும் அனுபவித்துக் கொண்டிருக்கும் ஒரு தலைமுறைச் சங்கிலியிலிருந்து உடைந்து விடுபட்டு ஒரு புதிய தலைமுறை அவற்றை மறுக்கவும் எதிர்க்கவும் துணிவு பெற்று முயன்றதென வைத்துக்கொள்வோம். சந்தர்ப்பங்களில் இருந்தல்ல, சந்தர்ப்பங்களை எதிர்கொள்ளும் அறைகூவலில் உண்டாகும் உள்ளுணர்விலிருந்தும் ஞானத்தில் இருந்தும் அப்புதிய மனிதனின் பிறவி உண்டாக வேண்டும். இத்தகைய ஒரு திருப்புமுனை வரை சொத்துடைமை அமைப்பு, வர்க்க ஒழுங்கு ஆகியவற்றின் சிருஷ்டியாக இருந்தது அரசியல் சாஸ்திரம். அரசியல் சாஸ்திரத்தின் ஒரு துறையாக இருந்து வந்தது கலாச்சாரம். ஆனால் இப்புதிய மானுடனின் பிறவிக்குப் பிறகு கலாச்சாரமே முதலிடம் பெறுகின்றது. அரசியலின் சிருஷ்டியாக சமூக பொருளாதார அமைப்பும் ஏற்படுகின்றது.

மேலும் யோசித்தால் இதுவரை என்றும் இனிமேல் என்றும் காலத்தைப் பிரிக்கும் எல்லைக்கோடு ஏதுமில்லை என்று நாம் காணலாம்.

www.tamilarangam.net



சமூகவியலின் அமைப்பொழுங்கில் இந்த மாற்றத்திற்கான முயற்சிகள் தொடங்கி விட்டன என்றே நாம் கருத வேண்டியுள்ளது. அதற்கு நம்மைத் தூண்டும் காரணங்கள் இரண்டு. ஒன்று நீதி சாஸ்திரத்தின் சரித்திர பூர்வமான முன்னேற்றத்தைப் பற்றி ஆராயும்போது நாம் கடைசியாகப் பார்த்த ஒழுக்க சித்தாந்தத்தின் வரவு. ஒரு கோணத்தில் மனிதனின் காலப் பரிணாமத்தில் இக்குறிப்பிட்ட மாற்றத்தையே தான் அது காட்டுகின்றது. சமூகப் பொருளாதார அரங்கில் நடைபெற்றுக் கொண்டிருந்ததன் விளைவாக அல்ல மாறாக அதற்கு எதிரான ஒரு கலகமாகவே அது உருவாயிற்று. ஆனால் நீதிபோதத்தின் எல்லைகளை மீறி பொருளாதார அமைப்பை மறுபடைப்பு செய்யும் ஒரு அடிப்படையை அது அடையவில்லை. காரணம் அதற்குத் தேவையான ஒரு அரசியல் சாஸ்திரத்தை அது உருவாக்கவில்லை. உள்ளார்ந்ததும், வெளித்தாக்குதலினால் ஏற்பட்டதுமான பலவீனங்களினால் அது பூரணத் தோல்வியை தழுவியது என்றாலும் கூட நம் மண்ணில் நிகழ்ந்த இந்த ஈடுசொல்ல முடியாத பரிசோதனை மேன்மேலும் கேள்விகளை எழுப்பிக் கொண்டிருக்கின்றது. இரண்டாவதாய்க் கூற வேண்டியது மார்க்ஸிய சிந்தனையிலிருந்து சக்தி பெற்று நிறைய நாடுகளில் உருவான கம்யூனிசப் புரட்சிகள் பற்றி விரிவான ஒரு விவாதத்துக்குப் புகவில்லை நான். எனினும் அது உண்டான எங்குமே நாம் இங்கு குறிப்பிட்ட காலப் பரிணாமம் அதாவது கலாச்சாரத்தின் ஒரு துறையாக அரசியலும் சமூகப் பொருளாதார கட்டமைப்பு உருவாகும் நிலை ஏற்படவில்லை என யாருமே சம்மதிப்பார்கள். அமைப்பின் மாற்றமே அங்கு ஏற்பட்டது. அதற்கு முன்பே நிகழ வேண்டிய பலவிஷயங்கள் அங்கு நிகழவில்லை. மற்றொரு விதத்தில் கூறுவோமானால் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டது. அமைப்பை உருவாக்கிய காரணிகளில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அதாவது அதுவும் தோல்வியைத் தழுவியது. எனினும் இந்த தோல்வியும் சிந்தனையாளர்களிடம் ஏகப்பட்ட கேள்விகளை இன்றும் எழுப்பிக் கொண்டுதான் உள்ளது.

இந்த அளவு பேசும்போது எளிதில் ஏற்படக்கூடிய ஒரு விமரிசனம் என்னவெனில் இந்தப் பேச்சுக்கள் அனைத்துமே வெறும் கருத்துத்தளம் சார்ந்த நப்பாசைகள் மட்டும்தான் என்பதே அது. ஒழுக்கமும் கலாச்சாரமும் சுதந்திரமான மானுடச் செயல்கள் அல்ல என்றும் பொருளாதார யதார்த்தங்களின் மீதாக கட்டியெழுப்பப்பட்ட அன்னிய வஸ்துக்கள் மட்டுமே என்று ஒரு தீர்மானிக்கப்பட்ட சித்தாந்தம் மார்க்ஸிய தரப்பில் முன் வைக்கப்படுவதுண்டு. கருத்துகளல்ல, உற்பத்தி சக்திகளின் வளர்ச்சியே புரட்சிக்குக் காரணமாக அமையும் என்ற கருத்தையும் நாம் மார்க்ஸில் காணலாம். ஆனால் மானுடனுக்கு அவனுடைய சாத்திரத்தை சொந்தக்

www.tamilarangam.net



கற்பனையின் அடிப்படையில் உருவாக்கும் திறன் உண்டு என்றால் பொருளாதார யதார்த்தங்களினால் உருவாக்கப்படும் வாழ்வை ஏற்காமல் தனக்குப் பிரியமான வாழ்வைத் தரும் பொருளாதார அமைப்பை உண்டு பண்ணிக் கொள்ளவும் அவனால் முடியாதா என்ன? வருவதை ஏற்று வாழ்ந்து மறைபவர்கள் என்றுமிருப்பார்கள். மாற்றங்களைக் கொண்டு வருபவர்கள் அவர்களல்ல. யுக்திக்கு ஏற்காததை எதிர்க்கும், மறுதலிக்கும், மாற்றமுனையும், அமைதியற்றவர்களான மானுடர்களே மாற்றத்தின் சிற்பிகள் – யதார்த்தங்களை எதிர்க்கும் ரீதியில் எதிர்வினை தருபவர்களாக இருந்தால்கூட இவர்கள் கருத்தாண்மைகள் மாற்றங்களில் பெரும்பங்கு வகிப்பது சரித்திர நிர்மாணத்தில் கருத்துகளுக்கு இருக்கும் பெரும் பங்கையே காட்டுகின்றது. இந்தக்கோணமும் மார்க்ஸிய நோக்கில் அடக்கம். அதனால்தான் அது புரட்சியில் நம்பிக்கை வைத்தது. புரட்சியாளர்கள் என்றால் தங்களுக்குப் பிடித்தமான வாழ்வமைப்பை உருவாக்குவதற்காக பிரக்ஞையுடன் செயல்படுபவர்கள் என்றுதானே பொருள். தன் காலகட்டத்து உற்பத்தி முறை காட்டிய வாழ்வமைப்பை ஏற்க மறுத்து அதை எதிர்த்து தனக்கு ஏற்ற இன்னொன்றை உருவாக்க முயன்ற கார்ல் மார்க்ஸே இதற்கு உதாரணம். அவருடைய பங்களிப்பு கருத்துக்களே. உற்பத்தி சக்திகளை விடவும் மார்க்ஸின் கருத்துகள் ஏற்படுத்திய எதிர்வினைகள் அல்லவா மார்க்ஸியப் புரட்சிகளுக்கு வகை செய்தன?

ஒழுக்கம் ஒரு வர்க்க அடிப்படையிலான செயல் மட்டுமே என்ற வாதம் புரட்சியாளர்களை அவர்களுக்கு மிகவும் உபயோகமாகக்கூடிய ஒரு செல்வத்தை உதறித் தள்ளச் செய்கின்றது. சுரண்டலுக்கும் அநீதிக்கும் எதிராய் நீதி போதம் உள்ள மானுடனில் உருவாகி எழும் மானுட அக்னியை அவர்கள் மறுக்கிறார்கள். இதுவரை சரித்திரத்தில் நடந்து கொண்டிருந்த கோணலை அங்கீகரிப்பதாகும் அது. இனி நடக்க வேண்டியதை மறுப்பதாகும். இந்த ஒழுக்கத்தின் மீதான அவநம்பிக்கை – ஸினி சிசம் – தான் ஒருவேளை இதுவரை ஏற்பட்ட கம்யூனிசப் புரட்சிகளை அவற்றை உருவாக்கிய அடிப்படைக் காரணிகளை உதறித்தாண்டிச் சென்று அதிகார அரசியல் சித்தாந்தங்களின் செயல்தளமாக உறைந்து போகவும் இயக்கங்களை லட்சியங்களை மறந்து சந்தர்ப்பவாதத்தில், நின்றுவிடவும் செய்ததோ என்னவோ. யுக்தியுள்ள மானுடனின் நீதி போதத்திற்கு, தார்மீக மனப்பான்மையின் பங்கற்ற நிலையில், என்ன நிலை சரித்திரத்தில் மீண்டும் மீண்டும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றதோ அதுவே அவர்களுக்கும் நிகழ்ந்தது.

**நிகழ் 19**
**டிசம்பர் 91**

www.tamilarangam.net



# இந்துத்துவம் - சில குறிப்புகள்

- ஞானி

1. இந்துத்துவம் என்பது இந்தியாவுக்கு மற்றும் தமிழகத்துக்கு ஒரு பேராபத்து என்ற வகையில் அதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது நமக்குப் பிரச்சினை. இந்துத்துவம் என்பதை மதம் என்றோ, இந்து மதம் என்றோ, பார்ப்பனியம் என்றோ சுருக்கி / குறைத்துப் பார்க்க முடியாது. இந்துத்துவம் என்பது ஒரு மாபெரும் அரசியல். இந்திய வரலாற்றில் அரசியல் களத்தில் இதற்கு நிகரான கருத்தியல் ஆக்கத்தை நாம் இதுவரை பார்த்ததில்லை.

இந்துத்துவம் காஷ்மீரின் தன்னுரிமை / விடுதலைக் கோரிக்கையை எந்த விலை கொடுத்தும் அடக்க நினைக்கிறது. பஞ்சாபை அடக்க வேண்டும் இதைப்போல தமிழகத்தையும். இந்தியா ஒரு தேசம். தன்னுரிமைக் கோரிக்கைக்கு இடமில்லை. இதற்காக இராணுவத்தைப் பெருக்க வேண்டும். அணு ஆயுதம் உற்பத்தி செய்ய வேண்டும். வலுவான மைய அரசு தேவை. கூட்டாட்சி கூடாது. அரசியல் சட்டத்தை மாற்றவேண்டும். புதிய அரசியல் சட்டம் தேவை.

இந்தியா ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளோடு பொருளாதார உறவு கொள்வதற்கு முன்பு தனியார் மயப்படுதலையும் தாராள மயமாக்கலையும் இந்தியா தனக்குள் செய்து கொள்ள வேண்டும். அதாவது பொதுத்துறை நிறுவனங்களைத் தனியார் மயப்படுத்த வேண்டும். தொழில் வளர்ச்சிக்கு தேவையான உதவிகளை முதலாளிகளுக்குச் செய்ய வேண்டும். வரிக்குறைப்பு முதலிய சலுகைகளைச் செய்யவேண்டும். இப்படியெல்லாம் செய்து இந்தியா தன்னைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். பன்னாட்டு நிறுவனங்கள் வேண்டாம். நவீன அறிவியல் தொழில் நுட்பங்களைக் கொண்டு வரலாம். பெரும் தொழில்களில் பன்னாட்டு நிறுவனங்கள் வரலாம். அதாவது டங்கல் திட்டத்திற்கு வெளிப்படையாக ஒரு பகுதியில் மறுப்பும் மறைமுகமாக முழு ஆதரவும் பாரதிய ஜனதா தருகிறது. கலாச்சார தேசியம் என்ற ஒற்றைக் குரலின் மூலம் மொழிவாரி மாநில கலாச்சாரங்களை இந்துத்துவம் ஒப்புக் கொள்வதில்லை. தமிழ்த் தேசியத்தை, தமிழின் தனித்தன்மையை இந்துத்துவம் மதிக்காது. வடமொழி மற்றும் இந்தி மொழியை அது முக்கியப்படுத்துகிறது. தமிழின் தொன்மை அதற்குக் கசக்கிறது. திராவிட நாகரிகத்தை அது ஒப்புக் கொள்ளாது. தமிழை தமிழ் நாகரிகத்தை அது

www.tamilarangam.net



அழித்து ஒழிக்கும். இந்திய வரலாற்றை அது மாற்றி எழுதும்; ஹரப்பா நாகரிகம் ஆரிய நாகரிகம்தான் என அது அடித்துப் பேசும்.

இசுலாமியர்க்கெதிராக இன்று குரல் எழுப்பும் இந்துத்துவம் கிறிஸ்தவர்களுக்கு எதிராக மட்டுமல்ல, தொழிலாளர்களுக்கு, தொழிலாளர் போராட்டங்களுக்கு, மார்க்சியத்திற்கு, சோசலிசத்திற்கு எதிராகக் குரல் எழுப்புகிறது. இடஒதுக்கீட்டை அது ஏற்காது. வருணாசிரம தர்மத்தை மீண்டும் அது புதுப்பிக்கக் கோரினாலும் அதே வடிவத்தில் இன்று செயல்படுத்த முடியாது. ஆனால் சோசலிசத்திற்கு எதிராக இந்துத்துவம் முழு அளவில் தன்னைத் திரட்டிக் கொள்கிறது.

இந்த அடிப்படையில் மக்களுக்கான ஜனநாயகம், ஜனநாயக மறுப்பிற்கு எதிரான இயக்கங்கள், மனித உரிமைக்கான இயக்கங்கள், முதலாளிகளுக்கு எதிரான போராட்டம், பெண் விடுதலைக்கு எதிரான போராட்டம் தலித் மக்களின் எழுச்சி, மாணவர் போராட்டங்கள் ஆகியவற்றை முழு அளவில் இந்துத்துவம் மறுக்கிறது. இந்த இடத்தில்தான் இந்தியா யாருடைய தேசம் என்று நாம் கேட்க வேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கான எதிர்காலம், யாருக்கான எதிர்காலமாக இருக்கிறது என்றும் கேட்க வேண்டியிருக்கிறது. இந்துத்துவத்தை எதிர்கொள்ள எந்தக் கோட்பாட்டை நாம் முன்னிறுத்த வேண்டும் என்ற சிக்கலும் எழுகிறது.

2. ஒரு பக்கத்தில் வலுவான மைய அரசு; கூடுதலான இராணுவம் தொழிலாளர் மற்றும் பொதுமக்களின் போராட்டங்களை அடக்கி ஒடுக்குவதற்கான அரசு அமைப்பு; மூலதனப் பெருக்கத்திற்கு முழு அளவிலான ஆதரவு இப்படியெல்லாம் உருவாக்கினால் தான் பாரதம் வலுவான தேசமாக உருவாகும். அப்படி உருவாக்க தொழிலாளர்கள், உழவர்கள், தலித்மக்கள், பெண்கள், மலைவாழ் மக்கள் ஆகியவர்கள்மீது கடுமையான சுரண்டலையும் ஒடுக்குமுறையையும் திணிக்க வேண்டும்.

இத்தகைய போக்குக்கு எதிராகத்தான் சோசலிசம் என்பதை நாம் முன் வைக்க வேண்டும். உழைக்கும் மக்களுக்கு உரியதாக, தேசத்தை, அரசை, தொழில் உற்பத்தியை மற்றும் வேளாண்மையை, கல்வி, மருத்துவம் முதலியவற்றை மாற்றி அமைக்க வேண்டும். ஏகாதிபத்திய ஊடுருவலை அனுமதிக்க முடியாது. முதலாளிகளுக்கு தேசத்தை விட்டுத்தர முடியாது. அரசு அதிகாரம் என்பது முதலாளியத்துக்கு முழு அளவில் பாதுகாப்புத் தருகிறது. இதை நாம் ஏற்க முடியாது.

www.tamilarangam.net



மதநிறுவனங்கள் மதத்தைக் காப்பது பற்றிப் பேசுகின்றன. மதத்தைக் காப்பதைக்காட்டிலும் தம் உடைமைகளையும், மக்கள் மீது தாம் செலுத்தும் அதிகாரத்தையும் காப்பதைத்தவிர அவற்றுக்கு வேறு நோக்கம் இருக்க முடியாது. கடவுள் பற்றி மதநிறுவனங்களுக்கு அக்கறை இருக்க முடியாது. ஆனால் கடவுள் பெயர் சொல்லி இன்று மக்களைக் கிளப்ப முடியும். மதம் என்று சொல்லி உடைமையாளர்களுக்கு, அதிகாரத்துக்கு பாதுகாப்பாக இருக்கிறார்கள். பொருளாதாரம் முதலிய களங்களில் சிக்கல்கள் கடுமையாகி வரும் சூழலில் கடவுளையும் மதவாதிகளையும் தேடி மக்கள் அலைகிறார்கள். பொருளாதாரச் சூழலின் கடுமைதான் மதநம்பிக்கைக்கு மூலகாரணம். மதநம்பிக்கையை முழு அளவில் அழித்துவிட முடியாது. இந்துத்துவம் மதத்தின் பெயர் சொல்லி மக்களைத் திரட்டுகிறது. மக்களின் ஆவேசங்களை உச்ச அளவில் கிளப்புகிறது. இது அரசு அதிகாரத்தைக் கைப்பற்ற இந்துத்துவத்தின் நடைமுறை. தனிஉடைமைச் சக்திகள் இந்துத்துவத்திற்கு ஆதரவாகச் செயல்படும் மத நிறுவனங்களுக்குச் செல்வம் சேர்ந்திருக்கிறது. இந்தச் செல்வத்தைக் காப்பாற்றும் முறையில் மதநிறுவனங்கள் இந்துத்துவக் குரலோடு ஒத்தியங்குகின்றன. இங்கு உடைமைதான் முக்கியம். மதம் அல்ல. கடவுள் அல்ல. தனிஉடைமைச் சக்திகளின் வளர்ச்சியில் பார்ப்பனர் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும். இசுலாமியர்க்கெதிராக தொடுக்கப்படும் இந்தப் போர் தொழிலாளர், உழவர், தலித்மக்கள் மற்றும் பெண்களுக்கு எதிராகத் தொடுக்கப்படும் போர்தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

தெளிவாக ஒன்றை நாம் இங்கு புரிந்து கொள்ளலாம். இந்துமதம் என்பதையும் இந்துத்துவம் என்பதையும் நாம் பிரித்துப் பார்க்க வேண்டும். இந்து மதத்திற்கு எதிராக நாம் எழுப்பும் குரல் இந்துத்துவத்தைப் பலப்படுத்தும். மக்களை இந்துத்துவ அணிக்கு கொண்டு சேர்க்கும். இந்து மதத்தின் பன்முகத் தன்மைகளை நாம் மறுக்க முடியாது. மதம் என்பது ஒரு நிறுவனம் மட்டுமல்ல. அதற்குள் இருக்கும் தத்துவத்தை நாம் மறுக்க முடியாது. உண்மையில் மதத்தை ஒழிக்க விரும்புகிறவர்கள் மதநிறுவனங்களிலிருந்து அதன் உடைமைகளைப் பிரித்தெடுக்க வேண்டும். கூடவே மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க முனைய வேண்டும். சோசலிசம்தான் மக்கள் பிரச்சினைகளுக்கான ஒரே தீர்வு. இத்தகைய போக்கின் மூலம்தான் மத ஆதிக்கம் ஒழியும். அந்நியமாதல் என்ற சூழல் நிலவும் காலம் வரை மதம் இருக்கும் என்றார் மார்க்சு. வர்க்கங்கள் முற்றாக ஒழியும்வரை மதம் இருக்கும். மதத்தையும்

www.tamilarangam.net



பார்ப்பனியத்தையும் நாம் குழப்பிக் கொள்ள வேண்டியதில்லை. சாதிகள் நமக்குத் தேவையில்லை. சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகளோடுதான் சாதி வாழ்கிறது. சாதிக்கெதிரான போராட்டங்கள் அவசியம்தான். சாதியை ஒழித்துவிட்டுத்தான் வர்க்கப் போராட்டம் என்பது உண்மை இல்லை. சாதி ஒழிப்பாளர்களும் வர்க்கப்போராளிகளும் தமக்குள் முழு அளவில் ஒத்துழைத்துச் செயல்படவேண்டும். எதிரி டெல்லியில் இருக்கிறான் வாஷிங்டனில் இருக்கிறான் சென்னையிலும்தான் இருக்கிறான். பார்ப்பனியம் என்ற பெயர் சொல்லி போராட்டத்தை ஒருமுனைப்படுத்த முடியாது.

நமக்கான அரசு, நமக்கான பொருளாதாரம், கல்வி, நமக்கான நிலம், இயற்கை, பெண்களுக்கான உரிமை தலித் மக்களின் மேம்பாடு என்று பலமுனைகளில் நாம் செயல்பட வேண்டும். மதம் பற்றி மார்க்சிய முறையில் ஆழ்ந்த விளக்கங்களைக் கொண்டு செல்லமுடியும். தெய்வங்களுக்கிடையில் நடக்கும் போர் என்பது மண்ணுலகத்தில் மனிதர்களுக்கிடையில் நடைபெறும் போர்தான் என்ற மார்க்சியப் புரிதலோடு நாம் செயல்பட வேண்டும். மதம் என்பது அபின்தான் என்பது மார்க்சியப் புரிதல் அல்ல. நாம் எச்சரிக்கையாக இருந்தால் அன்றி இந்துத்துவத்தின் படையெடுப்பைத் தடுக்க முடியாது.

அடுத்த 10 / 20 ஆண்டுகளில் இந்தியாவை இந்துத்துவம் கைப்பற்றும். முதலில் இஸ்லாமியர்கள் கூடவே கிறிஸ்தவர்கள் அடுத்து கம்யூனிஸ்டுகள் பத்தாயிரக்கணக்கில் கொலை செய்யப்படுவார்கள். ஆர்.எஸ்.எஸ். இயக்கம் இளைஞர்களுக்கு முழு அளவில் பயிற்சி கொடுக்கிறது. இலங்கையில் இந்தோனேசியாவில் இன்றும் போஸ்சினியா முதலிய நாடுகளில் நடைபெற்ற படுகொலைகளை நினைத்துக் கொள்வோம். இந்துத்துவத்தை வலுப்படுத்தும் செயலை நாமும் செய்கிறோம் என்பதை மீண்டும் நினைவுபடுத்திக் கொள்வோம்.

**நிகழ் 29**
**ஏப்ரல் 95**

www.tamilarangam.net



# இந்து இந்தி இந்தியா

- ஜி. எஸ். ஆர். கிருஷ்ணன்

மண்டல் குழு அறிக்கை மீது நடந்த விவாதத்தின்போது உருவானதாகக் கூறப்படும் இந்நூல், இந்தியத் தேசியம் என்பதை நிராகரித்து தமிழ் முதலிய தேசிய இனங்களின் விடுதலைக்கு சித்தாந்த வடிவம் கொடுப்பதாகக் கருத இடமுண்டு. அதற்காக முதலில் இந்தியத் தேசியம் என்பது பார்ப்பனியம்தான் என்று நிறுவ வேண்டியுள்ளது. பார்ப்பனியத்தின் கருவிகளாகவே இந்துத்துவமும் இந்தியும் செயல்படுவதாகக் கூறப்படுகிறது. இந்தியா என்ற சோற்றில் இந்தி, இந்து என்ற பூசணிக்காய்களை பார்ப்பனியம் மூடி மறைக்கப் பார்க்கின்றது என்று இந்நூல் கூறுகிறது. பனியாக்களின் முழு ஆதரவுடன் இந்துத்துவம், இந்தி என்ற கருவிகளைக் கொண்டு இந்தியத் தேசிய அரியணையில் அமர்ந்து கோலோச்சுகிறது பார்ப்பனியம் என்று வழக்காடுகிறார் எஸ்.வி.ஆர். இந்தியத் தேசியம் என்பது பார்ப்பனியம்தான் என்று துல்லியமாக இனம் கண்டு அம்பலப்படுத்தி அதைத் தீவிரமாக எதிர்த்துப் போராடியவர்கள் என்று பெரியாரையும் அம்பேத்கரையும் குறிப்பிடுகிறார். அவர்கள் வழியில் கொஞ்சம் மார்க்சியம் சேர்த்துக் கொண்டு இந்தியத் தேசிய இனங்கள் விடுதலை பெறவேண்டும் என்று பரிந்துரைக்கிறார்.

தமிழக மார்க்சிய சிந்தனையாளர்களில் முன்னணியில் வைத்துப் பேசப்படுகிறவர் எஸ்.வி.ஆர். மார்க்சியத்தை செயல்படுத்தும் முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். தெளிவாக சிந்தித்து நாகரிகமாக அதை வெளிப்படுத்தத் தெரிந்தவர். மார்க்சிய அணுகுமுறையில் தேறியவர் என்பதால் அவரிடமிருந்து நிறையவே எதிர்பார்ப்பதில் தவறில்லை. இந்தியத் தேசியம் என்பது பார்ப்பனியம்தான் என்பதை மார்க்சிய அடிப்படையில் நிறுவுவதில் எஸ்.வி.ஆர். வெற்றி பெறவில்லை என்பதே என் முடிவு. மார்க்சியத்தில் என்னதான் புதுமைகள் செய்தாலும் அது பொருளியல் அடிப்படையில் ஒன்றைத் தெளிவுபடுத்தாமல் மார்க்சியமாக இருக்க முடியாது. பார்ப்பனியம் என்பதன் பொருளியல் அடித்தளம் என்ன என்பதை எஸ்.வி.ஆர். சரியாக விளக்குவதில்லை என்பதோடு அத்தகைய அடித்தளமே இல்லாமல் சித்தாந்த மேல் கட்டுமானத்தால் மட்டுமே பார்ப்பனியம் தன் மேலாண்மையை நிறுவிக் கொண்டுள்ளதாக நாம் கருத இடம் அளிக்கிறார். இந்நூலின் முன்னுரையில் பார்ப்பனியத்தின் பொருளியல் அடிப்படைகளை விரிவாக விளக்க இடம் இல்லை என்று அவர் கூறுவது உண்மைதான். ஆனால் என்னுடைய சந்தேகம் அவரிடம்

www.tamilarangam.net



அதற்கான 'சரக்கு' இல்லையோ என்பதாகும். நூலில் இல்லாத விஷயத்தை பெரிதுபடுத்தாமல், அதில் உள்ளவற்றை விமர்சனம் செய்ய வேண்டும் என்று கூறுவதுண்டு. ஆகவே நூலில் உள்ளவற்றைப் பார்க்கலாம்.

## 2

பார்ப்பனியத்தின் பல்வேறு முகங்களை நமக்கு அறிமுகம் செய்வதோடு நூல் தொடங்குகிறது. சுவாமி சின்மயானந்தாவின் சொற்பொழிவு, இந்தியன் எக்ஸ்பிரஸின் வாசகர் கடிதங்கள், அருண்ஷோரி முதலியவர்கள் எழுதியவை என்று தொடங்கி கோல்வால்க்கர், நேரு, இந்திராகாந்தி, ராஜீவ் என்று பலரையும் பார்ப்பனியத்தின் பல்வேறு முகங்களாக, அவதாரங்களாகக் காட்ட முனைகிறார் எஸ்.வி.ஆர். இட ஒதுக்கீடு என்ற பிரச்சினையிலிருந்து பார்ப்பனியத்தின் பல முகங்களுக்குச் செல்வதில் நிறையக் கேள்விகள் எழுகின்றன. இடஒதுக்கீடு என்பதை பலர் பல காரணங்களுக்காக எதிர்த்தனர். இடஒதுக்கீடு என்ற கொள்கையால் உண்மையிலேயே பின் தங்கிய வகுப்பினருக்கு சலுகைகள் போய்ச் சேருவதில்லை என்று கருதி பலர் அதை எதிர்த்தனர். சிலர் பின்தங்கியவர்கள் என்ற பட்டியலில் முன்னேறியவர்கள் இடம் பெற்றுள்ளனர் என்று சுட்டிக்காட்டி அதை எதிர்த்தனர். வேறு சிலர் இடஒதுக்கீடு என்ற கொள்கை எவ்வளவு ஆண்டுகளுக்கு என்ற கேள்வியை எழுப்பினர். இன்னும் சிலர் இடஒதுக்கீடு என்பது கல்வியில் மட்டும் இருக்க வேண்டுமேயன்றி உத்தியோகங்களில் அல்ல என்று எதிர்த்தனர். ஒரு சிலர் இடஒதுக்கீடு என்ற கொள்கையே பின்தங்கியவர்கள், புரட்சிகரமான மாற்றங்களைத் தழுவாமல் தடுக்கும் தந்திரம் என்றனர் . . .

இப்படி கூறிக்கொண்டே செல்லலாம். மண்டல குழு அறிக்கையை எதிர்த்தவர்கள் எல்லோரும் பார்ப்பனியத்தின் ஆதரவாளர்கள் என்பது பிரச்சினையை மிகவும் சுருக்கி எளிமைப்படுத்துவதாகும். அரசியல் மேடைகளில் அதற்கான நியாயம் இருக்கலாம். ஆராய்ந்து எழுதப்பட்ட நூலில் அத்தகைய மிகையான எளிமைப்படுத்தல் எதற்காக?

நூலின் மையக் கருத்தென்று இப்படிக் கூறலாம் :

இந்தியா, இந்தியத் தேசியம் என்பவை பார்ப்பனிய மாயை. அரசியல் பொருளியல் ரீதியில் இந்தியா என்ற ஒன்று பிரிட்டிஷ் வருகைக்கு பின்னரே உருவானது. அதற்கு முன்பாக ஒரு கலாச்சார அடிப்படையில் இந்தியா

www.tamilarangam.net



என்ற ஒன்றை உருவாக்க முயன்ற பார்ப்பனியம் பெரும்பாலும் தோல்வியடைந்ததாகவே கூறலாம். காலங்காலமாக அதிகாரத்தை அண்டியே இருந்து, வழிபட்டு வந்திருந்த பார்ப்பனியம், பிரிட்டிஷ் ஆட்சியில் அதே தந்திரத்தைக் கையாண்டது. இந்தியா என்ற அதன் கனவை நனவாக்க பிரிட்டிஷ் ஆட்சி வழிவகுத்தது எனலாம். அரசியல் பொருளியல் ரீதியில் இந்தியா ஒன்றுபட்டது. சமஸ்கிருதம் மூலமாகச் செய்ய முடியாமல் போனதை ஆங்கிலம் வழியாக பெரும் அளவு செய்ய முடிந்தது. ஆங்கிலத்தில் தேர்ச்சி பெற்று அரசு பதவிகளில் அமர்வது பார்ப்பனர்களுக்கு சுலபமாகவே கைகூடிய. பிரிட்டிஷ் ஆட்சியில் தோன்றிய பொருளியல் முரண்பாடுகள் (வடநாட்டு) பனியாக்களை பார்ப்பனியத்தின் பங்காளிகளாக்கியது எனலாம். பார்ப்பன சத்திரியர்களின் கூட்டு என்பதற்கு பதிலாக பார்ப்பன பனியாக்களின் கூட்டு இந்தியத் தேசிய உருவாக்கத்தில் முக்கியமானது. அவ்வப்போது மதசார்பின்மை, சிறுபான்மையினர் நலன், ஜாதி ஒழிப்பு, பெண்களின் முன்னேற்றம் என்ற தாராளவாதக் கருத்துகளை உதிர்த்தாலும், அடிப்படையில் தங்கள் நலனை மட்டுமே குறியாகக் கொண்டு, சமயத்துக்கு ஏற்றவாறு வளைந்துகொடுத்து வந்துள்ளது. இந்த அணியின் முக்கியமான அரசியல் கட்சியாக காங்கிரஸ் இன்றும் செயல்படுகிறது. பார்ப்பனியத்தின் தன்மை எல்லாவற்றையும் சமாளித்து எந்தச் சூழலுக்கும் ஏற்றவாறு வளைந்து கொடுப்பதாகும். அகில இந்திய ரீதியில் வைத்துப் பேசக்கூடிய ஒரே ஜாதி பார்ப்பனர்கள் மட்டுமே. இந்தியத் தேசியம் என்பதில் லாபம் அடைபவர்கள் பார்ப்பன – பனியாக்கள் மட்டுமே. புள்ளி விவரங்கள் பார்ப்பனர்களின் அதிகாரம் – ஆதிக்கம் கொஞ்சமும் குறையாமல் இருப்பதையே காட்டுகின்றன.

## 3

பார்ப்பனர்களிடம் அரசியல் அதிகாரம் இருந்ததில்லை என்பதை ஏற்றுக்கொள்ளும் எஸ்.வி.ஆர். பார்ப்பனர்கள் சத்திரியர்களுக்கு துணையாக நின்று ஆலோசனைகள் வழங்கி தங்கள் அதிகாரத்தை / மேலாண்மையை மறைமுகமாக செலுத்தி வந்தனர் என்ற முடிவுக்கு வருகிறார். பார்ப்பனர்களிடம் ஏன் அரசியல் அதிகாரம் இருக்கவில்லை என்ற கேள்விக்கு பதில் தேடியிருந்தால் இந்தியாவுக்கும் மற்ற பல சமூகங்களுக்கும் இருந்த முக்கியமான வேறுபாட்டை எஸ்.வி.ஆர். அறிந்திருப்பார். சத்திரிய – புரோகிதக் கும்பலின் சதி, கூட்டு என்பது இந்தியாவில் இருந்ததற்கான ஆதாரங்கள் குறைவு. ஐரோப்பிய நாகரிகத்திலும் மற்ற பல சமூகங்களிலும் அதிகாரம் – அறிவு என்பதன் இணைப்பு இருந்ததாலேயே இந்தியாவிலும் சத்திரியப் பார்ப்பனக் கூட்டு

www.tamilarangam.net



இருந்தது என்பது தவறு. அரசியல் அதிகாரம் என்பதையும் சமூக அந்தஸ்து, அறிவு என்பதையும் மிகவும் நேர்த்தியாகப் பிரித்து வைத்தது இந்திய மரபு. ஆகவேதான் சத்திரிய பார்ப்பனியக் கூட்டுக்கு பதிலாக இந்தியாவில் சத்திரிய – பார்ப்பனியப் பகைமை இருந்தது. புத்த மதத்தின் தோற்றம் அதை உறுதிப்படுத்துகிறது. இந்தியாவில் இருந்த சத்திரியர்கள் பார்ப்பன அறிவைக் கண்டு கொஞ்சம் பயந்து ஒதுங்கியே இருந்தனர். பார்ப்பனர்களுடைய 'சாபம்' தவிர்க்கப்பட வேண்டும் என்பதில் சத்திரியர்கள் கவனமாக இருந்ததை நம் இலக்கியங்கள் காட்டும். அதேபோல பார்ப்பனர்களும் சத்திரியர்களிடமிருந்து ஒரளவு விலகியே இருந்தனர். அவர்கள் வழியில் குறுக்கிடாமல் இருந்தனர். நேரிடையான மோதல்கள் இருக்கவில்லை என்பது உண்மையாக இருந்தாலும் உள்ளூர் இரு வர்ணங்களும் ஒருவரை ஒருவர் வெறுத்தனர் என்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்ட முடியும். பார்ப்பனர்களின் முக்கியமான பாத்திரம், அரசின் அதிகாரம் என்பது மக்கள்மீது கொடுங்கோலாக மாறாமல் தடுப்பதில் இருந்தது என்பது என் எண்ணம். நீதி, நெறி, தர்மம் என்பவற்றை எடுத்துக் கூறி சத்திரிய அதிகாரத்துக்கும் மக்களின் நித்திய வாழ்க்கைக்கும் இடையே பார்ப்பனர்கள் செயலாற்றியதாகக் கொள்ளலாம். அதற்காக அவர்கள் மக்களின் பக்கம் இருந்து அதிகாரத்தை எதிர்த்தனர் என்பது அர்த்தமல்ல. அரசு X சிவில் சமூகம் என்ற பிரிவின் நடுவே இயங்கியதன் மூலம், இரண்டுக்குமிடையே ஒரு சமநிலை உருவாக வழி செய்தவர்களாகவே பார்ப்பனர்களைக் காணவேண்டும். ஐரோப்பிய சமூகத்தில் அரசு என்பது சிவில் சமூகம் என்பதைவிட முக்கியமானதாக, அதன் தலைவிதியையே நிர்ணயிப்பதாக, உருவாகியபோது இந்தியாவில் அவ்விரண்டும் தனித்தியங்க முடிந்தது.

மேற்கில் சுமார் ஒரு ஆயிரம் ஆண்டுகள் திருச்சபையும் அரசும் கூட்டாக இருந்ததும் திருச்சபையே அரசாக இயங்கியதும் பின்னர் அவ்விரண்டும் பிரிந்து மதச்சார்பற்ற அரசு உருவானதும் வரலாறு. ஆனால் இந்தியாவிலோ மதஅமைப்புகளும் அரசும் கட்டிப் புரண்டதும் இல்லை. கடித்துக் குதறிக் கொண்டதும் இல்லை. போப் ஆண்டவரே கத்தியெடுத்து யுத்தம் செய்து நாடு பிடித்த வரலாற்றை இந்தியாவில் ஒட்ட வைக்கப் பார்ப்பது எதனால் என்று தெரியவில்லை. அரசு என்ற அமைப்பு சமூக வாழ்க்கை முழுவதும் வியாபித்து, அரசின் மாற்றங்கள், சரிவுகள் சமூக வாழ்க்கையை நேரிடையாக பாதித்த வரலாறு இந்தியாவில் இல்லை. மற்ற சமூகங்களில் கலாச்சாரம் சமூக வாழ்வு என்பது அங்கிருந்த அரசுகளின் வளர்ச்சி, வீழ்ச்சியுடன் பின்னிப் பிணைந்திருந்தபோது இந்தியாவில் ராமன்

www.tamilarangam.net



ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன என்ற பழமொழி இருந்தது. ஆரம்ப கால பிரிட்டிஷ் அறிக்கைகளிலும் மார்க்ஸ், ஹென்றிமெய்ன், முதலியவர்களின் எழுத்துகளிலும் அரசியலில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகளால் மாற்றங்களால் இந்திய சமூகம் கொஞ்சமும் பாதிப்படையாமல் இருக்கும் தோற்றம் பற்றி காணப்படுவது கவனிக்கத் தகுந்தது. இந்தியர்களுக்கு அரசியலில் அக்கறையின்மை என்பதை வெளிப்படுத்துவதாக அவற்றைக் கொள்ளும் அதேசமயம், வெளி நாட்டவர்களுக்கு இந்திய மரபில் இருந்த நேர்த்தியான பிரிவு சரியாகப் புரியாமல் அவ்விரண்டும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்படாமல் இயங்கியதாகத் தோற்றம் அளித்தது என்பதையும் காட்டுகின்றன.

இங்கு மற்றொரு விஷயம் கவனிக்கப்பட வேண்டும். இந்தியாவில் நான்கு வர்ணங்கள் இருந்தன என்றாலும், சத்திரிய வர்ணம் என்பது மிகவும் அரிதாகவே இருந்து வந்துள்ளது. மகாநந்தர்களுக்குப் பிறகு உண்மையான சத்திரியர்கள் வம்சம் என்று காண்பதரிது என்பார் சர்தார் பணிக்கர் என்ற வரலாற்றறிஞர். சுமார் ஓர் ஆயிரம் ஆண்டுகளாக இந்தியாவில் ஆட்சி புரிந்த பெரிய, சிறிய அரசர்களின் வர்ணம் பற்றி ஆராய்ந்தால் அவர்களில் பெரும்பாலோர் சூத்திரர்கள் என்பது தெரியும். சத்திரியன் என்ற பட்டம் பார்ப்பனர்களால் வழங்கப்பட வேண்டியிருந்தது என்பது முற்றிலும் உண்மையல்ல. குஜராத்தில் பழங்குடிகள் ஒருவனை அரசனாக ஏற்றால்தான் அவன் பட்டம் சூடிக் கொள்ள முடியும் என்ற பழக்கம் இருந்தது. (கோசாம்பி இதுபற்றிக் கூறுவதாக நினைவு) வேறு பல இடங்களிலும் இவ்விதமான பழக்கங்கள் இருந்திருக்கலாம். தவிர பார்ப்பனர்கள்தாம் சத்திரியன் என்ற பட்டம் சூட்ட வேண்டியிருந்தது. ஆகவே அவர்கள்தான் மறைமுகமாக அதிகாரம் செலுத்தினார்கள் என்பது வேடிக்கையான வாதம். இன்று ஆளுநர்தான் முதல்வரை பதவிப் பிரமானம் செய்து வைக்கிறார் என்பதற்காக முதல்வரைவிட ஆளுநர்தான் அதிகாரம் உள்ளவர் என்பது போல இருக்கிறது. சடங்கு நடத்துபவர்களுக்கு அதிகாரம் ஏது? சடங்கை நடத்த முடியாது என்று எந்தப் பார்ப்பனன் கூறியிருப்பான்?

இன்று மேல்நாட்டு சமூகவியல் அறிஞர்கள் பலரும் இந்தியாவை சரியாகப் புரிந்து கொள்ள அரசன் X பார்ப்பனன் என்ற இரு கலாச்சார துருவங்களைப் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் இந்தியாவின் தனித்தன்மையை விளங்கிக் கொள்ள அதிகாரம் X அறிவு அல்லது அந்தஸ்து என்ற பிரிவுகளை அறிய வேண்டும் என்றும் கூறி வருகிறார்கள். எஸ்.வி.ஆருக்கு இதெல்லாம் தெரியாது அல்லது புரியாது என்று நான்

www.tamilarangam.net



நம்பத் தயாராக இல்லை. ஆனால் ஏனோ இதையெல்லாம் ஒதுக்கிவிட்டு அன்று சத்திரியர் பார்ப்பனியர் கூட்டு, இன்று பார்ப்பனிய பனியாச் சூழ்ச்சி என்று எளிமைப்படுத்தி விடுகிறார்.

பர்ட்டன் ஸ்டெயின் போன்ற அறிஞர்கள் இந்தியாவில், குறிப்பாகத் தென்னிந்தியாவில் பேரரசுகள் எதுவும் இருக்கவில்லை என்றும் (சோழப் பேரரசு என்பதுகூட மிகவும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று) உண்மையில் அதிகாரம் பரவலாக்கப்பட்டு உழவர்களும் அவர்களுடைய சாதி அமைப்புகளுமே அதிகாரம் செலுத்தியவர்கள் என்றும் பல ஆதாரங்களை முன் வைத்துள்ளனர். இந்தியாவில், தென்னிந்தியாவில் பல நூற்றாண்டுகளாகவே உழவர்கள்தாம் ஆதிக்க சக்திகளாக இருந்தனர் என்பது, பார்ப்பன – சத்திரிய சூழ்ச்சி என்பதை மட்டும் மறுப்பதில்லை; அதற்கும் மேலாக இந்திய அமைப்பு ஒரு மையப்படுத்தப்பட்ட அரசியல் அதிகாரத்தை, ஆதிக்கத்தைக் கொண்டிருந்தது என்பதையும் மறுக்கிறது. அரசியல் அதிகாரம் எப்படி மையப்படுத்தப்படவில்லையோ அப்படியே சாத்திரம், தர்மம், நெறி, முறை, நீதி என்பனவும் மையங்கொள்ளாமல் இருந்தன. பார்ப்பன ஆதிக்கம் எப்படி சாத்தியமானது என்பதற்கு எஸ்.வி.ஆர். போன்றவர்கள் கூறுவது கலாச்சார ரீதியில் என்பதாகும். அதாவது மனு நீதி போன்ற தர்ம சாத்திரங்களை கருவிகளாகக் கொண்டு பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்தினர் என்பதாகும். மனுநீதியைப் பார்ப்பனர்கள் தூக்கிப் பிடித்தார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் அந்த மனுநீதியை ஒட்டியே சமூகம் இயங்கியது என்பதற்கு ஆதாரம் என்ன? மனுநீதியை எந்த அளவு சத்திரியர்கள் ஏற்றார்கள், சமூகம் ஏற்றது? மேலும் எந்த அளவுக்கு மனுநீதி அனுசரிக்கப்பட்டது? புனிதமான சாத்திரம் என்ற அந்தஸ்து இருந்ததாலேயே ஒன்று அனுசரிக்கப்பட்டிருக்கவேண்டும் என்பது சமூகவியல் அரிச்சுவடி கூடத் தெரியாமல் கூறுவதாகும். இந்திய சமூக வாழ்க்கையைக் கூர்ந்து கவனிக்கும் எவருக்கும் ஒரு கேள்வி எழும். சொல்லுக்கும் செயலுக்கும்; சாத்திரங்களுக்கும் தினநித்தியப் பழக்கவழக்கங்களுக்கும்; உயர் இலக்கியங்கள் காட்டுவதற்கும் நடைமுறையில் இருந்ததற்கும் / இருப்பதற்கும்; தத்துவத்திற்கும் வாழ்க்கைக்கும் – இப்படி முரண்பாடுகளுடன், அவற்றை முரண்பாடுகளாகக் கருதாமல், அநாயசமாக ஒன்றை கூறிக்கொண்டே அதற்கு நேர் விரோதமானவற்றை அனுசரிக்கும் போக்கு இந்தியாவில் தொன்று தொட்டே உள்ளது. ஓரளவு எல்லாச் சமூகங்களிலும் இத்தகைய முரண்பாடுகள் உண்டு என்றாலும் இந்திய வாழ்க்கை கொஞ்சம் தூக்கலாகத் தெரியும். இவ்வுலக வாழ்க்கை மாயை, சம்சாரம் என்ற சாகரத்திலிருந்து வெளியேற வேண்டும் என்று ஓயாமல் கூறிக்கொண்டே இவ்வுலக வாழ்க்கையின்

www.tamilarangam.net



ஒவ்வொரு சிறு அம்சத்துடனும் ஒன்றிப் போய் அனுபவித்து அஞ்ஞானத்தில் மூழ்கி இருப்பவர்கள் ஏராளம்.

இந்தியர்கள் பல காரணங்களுக்காக ஒதுக்கி வைத்திருந்த நூல்கள், சாத்திரங்கள் (டெக்ஸ்ட்ஸ் என்று கூறலாமா?) ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு புத்துயிர் பெற்றன. மாக்ஸ்முல்லர் கண்களுக்கும், வில்லியம் ஜோன்ஸ் அறிவுக்கும் இந்தியாவின் ஒப்பற்ற செல்வங்கள் என்று தோன்றியவற்றை அவர்கள் மொழி பெயர்த்துக் கொண்டாடி தூக்கிப் பிடித்தனர். பகவத்கீதையும் மனுநீதியும் மற்ற பல நூல்களும் சாத்திரங்களும் புத்துயிர் பெற்றன என்பது மறுக்கமுடியாத உண்மை. அவர்கள் (ஐரோப்பியர்கள்) மனுநீதியையும் பகவத்கீதையையும் ஏன் தூக்கிப் பிடித்தார்கள் என்ற விஷயங்களுக்குள் போனால் சுவாரசியமான விவாதம் நடக்கலாம். ஆனால் நாம் வாழ்க்கைக்கு ஒவ்வாதது என்றோ அதிகமாகக் கண்டுகொள்ள வேண்டாம் என்றோ ஒதுக்கி வைத்திருந்த நூல்களையும், விளக்கங்களையும் இந்தியவியல் (Indology) மீண்டும் நம் கவனத்துக்கு, குறிப்பாக பார்ப்பனர்கள், படித்தவர்கள் கவனத்துக்கு கொண்டு வந்தது. பாகவத புராணமே முக்கியமாக இருந்த சூழல் மாறி பகவத்கீதைதான் இந்தியாவின் தத்துவம் என்று நமக்குக் கூறப்பட்டது. நாமும் அதை ஏற்று கீதையின் உயர்வைக் கொண்டாடினோம். நம் பார்ப்பனர்களும் "பார்த்தீர்களா, பார்த்தீர்களா, என்னதான் சொல்லுங்கள் அவர்களுக்குத்தான் சனாதன தர்மத்தின் உயர்வு புரிகிறது" என்று குதூகலித்தனர். மனுநீதியைப் பொருத்தவரையில் ஆங்கில ஆட்சியில் உருவான நீதிமன்றங்களில் இந்திய பழக்கவழக்கங்களுக்கு ஏற்ப சிவில் வழக்குகள் தீர்மானிக்கப்படும் என்ற சூழலில் இந்துக்களின் பழக்கவழக்கங்கள் என்ன, எது முறையானது, எது முறையற்றது என்ற கேள்விகளுக்கு பதில் அளிக்க, பண்டிதர்களை அமர்த்திக் கொண்டனர். குடும்ப விவகாரங்கள் சொத்துச் சண்டைகள் என்று வழக்குகள் வந்தபோது உங்கள் சாத்திரம் என்ன சொல்லுகிறது என்று ஆங்கிலேய நீதிபதி, பண்டிதர்களைக் கேட்பது வழக்கமாகியது. அப்பண்டிதர்களும் தாங்கள் அறிந்த (படித்து அறிந்த) மனுநீதியையும் மற்ற சாத்திரங்களையும் எடுத்துக் காட்டியது நடந்தது. ஆங்கிலேய நீதிபதிகளில் மிகவும் படித்துத் தேறிய சிலர் நம் பண்டிதர்களின் விளக்கங்களை அப்படியே ஏற்காமல் "உங்கள் சாத்திரம் இப்படித்தானே கூறுகிறது" என்றோ "மனு நீதியில் இந்த வாசகத்திற்கு இப்படித்தான் அர்த்தப்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றோ கூறியதும் உண்டு. அதாவது இந்தியாவின் பெருமை என்பது என்ன என்று (மறு) விளக்கம் இந்தியவியல் மூலமாகவும் ஆங்கிலேய அதிகாரிகள், நீதிபதிகள் மூலமாகவும் நமக்கு கிடைத்தன. வேதாந்தம் என்ற தரிசனம்

www.tamilarangam.net



இந்திய தரிசனங்களில் ஒன்று என்ற நிலை மாறி, அதுவே இந்தியத் தத்துவத்தின் சாரம் என்று அவர்களும் சொல்லி நாமும் கேட்டு மகிழ்ந்தது நடந்தது. சுருக்கமாகக் கூறினால் இந்திய சமூகத்தில் அதுவரை இருந்த சமன்பாடுகள் பலவற்றை காலனியம் மாற்றிவிட்டது. வேண்டுமென்றே, திட்டம் போட்டு அப்படிச் செய்தார்கள் என்பதல்ல என் வாதம். அவர்களுக்கு உகந்ததை அவர்களுக்கு உயர்வாகக் கண்டவற்றை அவர்கள் முன்வைத்தனர். அப்படிச் செய்யும்போது இந்தியாவிலிருந்த சமன்பாடுகளையும் தாங்கள் அறியாமலே மாற்றிவிட்டனர். இந்தியாவில் காலங்காலமாக நீதிமன்றங்களில் மனு நீதியை வைத்துத்தான் நீதி வழங்கப்பட்டதாக சான்றுகள் இல்லை. இந்து மதத்தின் (பார்ப்பனியத்தின்?) காவலராகக் கருதப்படும் காஞ்சி சங்கராச்சாரியார் ஓரிடத்தில் பேசும்போது "எதை அனுசரிக்க வேண்டும் எதைச் செய்யக்கூடாது என்ற சந்தேகம் தோன்றினால் முதலில் சாத்திரங்களை அணுகலாம். சாத்திரங்கள் என்ன கூறுகின்றன என்று சந்தேகம் ஏற்பட்டால் பண்டிதர்களிடம் கேட்கலாம். ஆனால் பண்டிதர்கள் கூறுவதற்கும் வழக்கத்தில் இருப்பதற்கும் இடையே முரண்பாடு இருந்தால் பண்டிதர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை மறந்துவிட்டு எது வழக்கத்தில் இருக்கிறதோ அதையே கடைப்பிடியுங்கள். எது வழக்கம் எது எப்படிச் செய்வது என்ற சந்தேகம் வந்தால் பெண்களையும் சூத்திரர்களையும் கேளுங்கள். அவர்களுக்கே எது வழக்கத்திலுள்ளது எது வழக்கற்றது என்பது தெரியும்" என்று கூறியுள்ளார். மனுநீதியும் மற்ற பல சாத்திரங்களும் இந்தியர்களின் வாழ்க்கையில் எவ்வித பாதிப்பும் செலுத்தவில்லை என்பதல்ல. இன்று மனுநீதியை எரிக்க வேண்டும் என்று கூறுகிறவர்கள் மனுநீதிக்கு என்றுமே இருந்திராக 'பெருமை'யைத் தருகிறார்கள் என்பது என் கருத்து. மனுநீதிக்கு மட்டுமல்ல வேறு பல விஷயங்களுக்கும் இது பொருந்தும்.

## 4

காங்கிரஸின் தோற்றம், வளர்ச்சி, அதன் கொள்கைகள், அதன் உள் நோக்கம் முதலிய எல்லாமே பார்ப்பனிய – பனியா நலனுடன் பின்னிப் பிணைந்திருப்பதாகக் காட்டுகிறார் எஸ்.வி.ஆர். ஆர்.எஸ்.எஸ். மற்றும் பாரதிய ஜனதாவை அவ்வளவாக அவரால் வம்புக்கு இழுக்க முடியவில்லை. காரணம் தெரிந்ததே. இந்தியத் தேசியத்தின் உருவாக்கத்தில் மிகப்பெரும் பங்கு காங்கிரஸ் இயக்கத்தினது. இந்திய மக்களை ஒன்று திரட்டி காலனியத்திற்கு எதிராக உலகத்தில் வேறு எங்குமே நடந்திராது அளவுக்கு ஒரு பெரும் போராட்டத்தை காங்கிரஸ் நடத்தியது. ஆகவே இந்தியத் தேசியம் பார்ப்பனியம்தான் என்பது நிரூபிக்கவேண்டுமானால் காங்கிரஸ்

www.tamilarangam.net



இயக்கத்தைத் தகர்க்க வேண்டும். அதற்காக எஸ்.வி.ஆர். படாதபாடுபட்டிருக்கிறார். காந்தியையும், நேருவையும் மட்டுமல்ல, அதன் தலைவர்கள் எல்லோரையும் பார்ப்பனக் காவலர்களாகக் காட்ட முனைகிறார். காங்கிரஸ் இயக்கம் இந்திய சமூகத்திலுள்ள அழுக்குகளை நீக்க ஒரு திட்டமும் முன்வைக்கவில்லையாம்; சாதி ஒழிப்பு பெண்கள் முன்னேற்றம் அது இது என்று பேசியிருந்தாலும் அதெல்லாம் வெறும் கண்துடைப்புத்தானாம்; காந்தி இந்து மதத்தலைவர்களின் கைதி போல இயங்கினாராம். தலித் இயக்கம் பிரிட்டிஷாருடன் ஒத்துழைத்தது புரிந்து கொள்ளப்படவேண்டுமாம். ஏனென்றால் உயர்ஜாதி இந்துக்களையே முதன்மையான எதிரியாகக் கருதி அவர்களது ஒடுக்குமுறையை எதிர்க்கும் பொருட்டு பல சமயங்களில் பிரிட்டிஷாருடன் சேர்ந்து கொண்டார்களாம். ஆனால் அதையே திருப்பிப் போட்டால்? காங்கிரசும், காந்தியும் அந்நிய ஆட்சியை முதன்மையான எதிரியாகக் கருதி . . . சீனாவில் மாவோ சியாங்குடன் ஒப்பந்தம் செய்துகொண்டு அந்நிய ஆதிக்கத்தை முறியடித்தால் அது ராஜதந்திரம், புரட்சிகர இயங்கியல் அதையே நம்மூர் காந்தி செய்தால் அது வர்க்க சமரசம்! "தலித் இயக்கம் பிரிட்டிஷாருடன் ஒத்துழைப்பதையே காங்கிரஸ் கட்சி விரும்பியது. ஏனெனில் அப்போதுதான் மட்டுமே உண்மையான ஏகாதிபத்திய எதிர்ப்புச் சக்தி என்று காட்டிக் கொள்ள முடியும் என்று நினைத்தது" (பக்கம் 72) என்று அவதூறு செய்கிறார் எஸ்.வி.ஆர். அதற்கு ஆதாரமாக எதையாவது காட்டுகிறாரா என்று துருவித் துருவிப் பார்த்தால் ஒன்றும் இல்லை. ஆண்டர்ஸ்னோ, கிளாட் மார்கோவிட்சோ கூட அவருக்குத் துணையாவதில்லை. தலித் இயக்கம் பிரிட்டிஷாருக்கு வால் பிடித்தது என்பதை புரட்சிகர இயங்கியலைக் கொண்டு எவ்வளவு நேர்த்தியாக காங்கிரஸ் கட்சியின் தவறாகக் காட்ட முடிகிறது பாருங்கள்! அம்பேத்கருடைய முரண்பாடுகளையெல்லாம் புரிந்து கொள்ள வேண்டும். அவருடைய சூழல், அவருக்கு ஏற்பட்ட அனுபவங்கள் இப்படி பற்பல. ஆனால் காந்தியை விமர்சனம் செய்யும்போது அதைப் புரிந்து கொள்ளுதல் தேவையில்லை. காரணம் அவர் பார்ப்பனிய சக்திகளை வளர்த்தவர் என்று முடிவு செய்தாகிவிட்டது. இன்று அம்பேத்கரை முன்வைத்து அரசியல் நடத்துவது அவசியமாக இருக்கலாம். ஆனால் அவரிடம் இருந்த முரண்பாடுகளையெல்லாம் பூசி மெழுகி ஒப்பற்ற தலைவராக அவரைக் காட்டுவது ஆராய்ச்சியாளரின் வேலை அல்ல. 1942–ல் அம்பேத்கார் பிரிட்டிஷ் அரசுக்கு கொடுத்த மனுவின் பிற்பட்ட வகுப்பினருக்கு சில சலுகைகள் தந்தால், தான் பிரிட்டிஷ் ஆட்சியுடன் ஒத்துழைப்பதாகக் கூறினார். அந்த மனுவின் மீது பிரிட்டிஷ் வெளிநாட்டு அமைச்சர் எழுதிய குறிப்பில், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் என்ற துருப்புச்

www.tamilarangam.net



சீட்டால் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அதிகமான லாபம் கிடைக்க வழியில்லை என்றும், அதை ஏற்கனவே காந்தி வெட்டி விட்டார் என்றும் குறிப்பிட்டார். அம்பேத்கருடைய மனுவை அவர்கள் எப்படி எடுத்துக் கொண்டார்கள் என்பதைவிட அம்மனு கொடுத்த சில மாதங்களில் அம்பேத்கர் வைஸ்ராய் சபையில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட்டார் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

## 5

வீர சாவர்க்கரையும் நேருவையும் (அவர்கள் இரு துருவங்களாக காட்சியளித்தாலும்) இந்துத்துவத்தின் இரண்டு முகங்களாக காட்டுகிறார் எஸ்.வி.ஆர். சாவர்க்கர் நாத்திகர். கலப்புத் திருமணம், கோயில்களில் எல்லோருக்கும் அனுமதி, சாதி தொழில்களை ஒழித்தல் என்று ஒரு திட்டம் சாவர்க்கரால் முன்வைக்கப்பட்டது. சாவர்க்கர் கூறியவற்றை புரட்சிகரமானது என்று ஏற்றுக் கொள்ளமுடியுமா எஸ்.வி. ஆரால்? 'போனால் போகிறது' என்று அவற்றையெல்லாம் கூறினாராம் சாவர்க்கர்! அவரிடம் செயல்திட்டம் எதுவும் இருக்கவில்லையாம். மேலும் சாவர்க்கரின் திட்டம் மதத்தை மறுதலிக்கின்றதா? (பக்கம்–86) என்று கேட்டு, சாவர்க்கரின் திட்டம் இந்து மதத்தைப் புதுப்பிக்கவே என்று முடிவு செய்து, அவரையும் பார்ப்பன ஆதிக்கத்தின் துணையாகக் காட்டுகிறார். விமர்சனத்தின் அடிப்படை விதிகளைக்கூட ஏற்காமல் ஒருவரை விமர்சிப்பது ஒரு கலையாக எஸ்.வி.ஆரால் ஆக்கப்படுகிறது. விவேகானந்தரையோ, ராமகிருஷ்ண பரமஹம்சரையோ இவர் இந்துமதத்தை மறுதலிக்கவில்லை ஆகவே அவர் என்னதான் கூறினாலும் . . ." என்று எழுதினால் என்ன செய்வது? இந்து மதத்தை உடைத்து நொறுக்க வேண்டும் என்று எஸ்.வி.ஆர். விரும்பினால் அதைத் தாராளமாகச் செய்யட்டும். ஆனால் அவர் செய்யவில்லை இவர் செய்யவில்லை என்றோ, அவர் நொறுக்கவேண்டும் என்று சொன்னாரா என்று கேட்பதும் சிறுபிள்ளைத் தனமானது. அம்பேத்கரும் பெரியாரும் இன்னும் சிலரும் இந்து மதத்தை மறுத்தனர். உடைத்து நொறுக்க வேண்டும் என்றனர். ஆனால் நாளை யாராவது எஸ்.வி.ஆரைப் பற்றி நூல் எழுதி பெரியார் இந்துமதத்தை உடைக்கவேண்டும் என்று சொன்னாரே தவிர செய்தாரா? அப்படியென்றால் அவரும் இந்து மதத்தைக் காப்பாற்றியவர் என்றுதானே அர்த்தம் என்று எழுதினால் எப்படி இருக்கும்?

சாவர்க்கர் மஹர்களைப் பற்றி கூறியதை விமர்சனம் செய்யும்போது அவர்கள் (மஹர்கள்) தங்கள் குலத்தொழில் செய்து கொண்டேயிருக்க

www.tamilarangam.net



வேண்டுமா? என்று கேட்கிறார் எஸ்.வி.ஆர். பிற்பட்ட வகுப்பினர்கள் தங்கள் தொழிலைக் கீழாகக் கருதாமல் தலைநிமிர்ந்து நிற்கவேண்டும் என்று சாவர்க்கர் கூறியதற்கு இந்த விமர்சனம். ஆனால் அதே சாவர்க்கர் சூத்திரர்களும், ஆதி சூத்திரர்களும் வேத சடங்குகளைக் கற்கலாம். அவர்களும் சடங்குகளைச் செய்யலாம் என்று கூறியதை எஸ்.வி.ஆர். "அவர்களைப் பார்ப்பனத் தன்மை பெற்றவர்களாக்குவதும் அவர்கள் இந்து சாத்திரங்களை ஏற்றுக் கொள்ளுமாறு செய்வதுமே (நோக்கம்) ஆகும்" (பக்கம் 86) என்கிறார். இந்த வேடிக்கையை என்ன என்று சொல்வது! மஹர்கள் தங்கள் தொழிலைச் செய்வதில் பெருமைப்பட வேண்டும் என்றால் "ஐயோ அவர்களை அப்படியே வைத்திருக்க சதி" என்கிறார். அவர்கள் வேதம் கற்கலாம். சடங்குகள் செய்யலாம் என்றால் "பார்த்தீர்களா அவர்களையும் பார்ப்பனர்களாக்க சூழ்ச்சி" என்கிறார். எஸ்.வி.ஆருக்கு புரட்சி செய்யவேண்டும்; எதையாவது உடைத்து நொறுக்கவேண்டும் என்று கூறினால் மட்டுமே சமாதானமாக இருக்கும்போலத் தோன்றுகிறது. நேருவின் Discovery of India இந்து மதத்தை இந்திய நாகரிகமாகக் காட்டியது என்று குற்றம் சாட்டுகிறார். வேறு எந்த நூலிலும் இல்லாத அளவு தாராளவாதம் பொங்கி வழிகிறது என்று நேருவை மற்றவர்கள் விமர்சிக்கிறார்கள். நேருவின் நூலில் பாபர் பெரிய மனிதாபிமானியாக சித்தரிக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல, ஆப்கானிஸ்தானம் சென்றால் பாபரின் மசூதியைக் கட்டாயம் பார்த்து மரியாதை செய்ய வேண்டும் என்று இந்திராவுக்கு கடிதம் எழுதினார் நேரு. இந்திராவும் அப்படியே செய்ததாகத் தகவல். ஆனால் எஸ்.வி.ஆருக்கு நேருவும் இந்துத்துவத்தைக் காப்பாற்றியவரே.

## 6

அனைத்திந்தியப் பெருமுதலாளிகள் (பனியாக்கள்) பார்ப்பனர்களுடன் சேர்ந்து தேசியத்தை வளர்த்தது மட்டுமல்ல, அப்பெருமுதலாளிகள் இந்தியப் பிரிவினைக்கும் தூண்டுதலாக இருந்தார்கள் என்று கிளாட்மஸ்கோவிட்ஸ் எழுதிய நூலை ஆதாரமாக்கி குற்றம் சாட்டுகிறார். இந்தியப் பெருமுதலாளிகளும் இன்னும் பலரும் பிரிவினை வந்தே தீரும் என்ற சூழலில் அதை ஏற்றார்கள் என்பது வேறு. ஆனால் அவர்கள் விரும்பினார்கள், அதைத் தூண்டினார்கள் என்பது எப்படி? இந்தியப் பிரிவினையை முடிவு செய்தது பிரிட்டிஷ் அரசு. அதிகார மாற்றம் பற்றிய பல ஆவணங்கள், கோப்புகள், ரகசியச் சுற்றோலைகள், கடிதங்கள் இன்று பகிரங்கப்பட்டுள்ளன வெளியிடப்பட்டுள்ளன. பிரிட்டிஷ் அரசின் உயர்மட்டத்தில் இந்தியா பற்றி எடுக்கப்பட்ட முடிவுகள், பெரும்

www.tamilarangam.net



அதிகாரிகள் பரிமாறிக் கொண்ட கடிதங்கள், குறிப்புகள் எல்லாம் காணக்கிடைக்கின்றன. மவுண்ட்பாட்டன் இந்தியாவின் பொறுப்பை ஏற்பதற்கு முன்பு எழுதிய கடிதம் ஒன்றில் தான் இந்தியாவில் எப்படி செயலாற்றப் போகிறேன் என்று விவரிக்கிறார். போலோ விளையாடப் போவதாக உருவகப்படுத்தி அதில் அவர் சூசகமாகத் தெரிவிப்பது என்னவென்றால் காங்கிரஸ் தலைவர்கள் எதிர்பாராத அளவுக்கு வேகமாக அரசியல் நிகழ்வுகளை துரிதப்படுத்துவதும், பிரிட்டிஷ் வலையிலிருந்து வெகுகாலம் மீள முடியாமல் இந்தியாவை மாட்டிவைப்பதும் ஆகும். கடிதத்தில் கூறியபடியே இந்தியா வந்ததும் மவுண்ட்பாட்டன் காங்கிரஸ் தலைமையை திகைப்பில் மூழ்கடித்தார். இன்னும் 2, 3 ஆண்டுகளாவது ஆங்கிலேயர் ஆட்சி நீடிக்கும் என்று எதிர்பார்த்திருந்த காங்கிரஸ் தலைவர்களிடம் ஆகஸ்ட் இறுதிக்குள் இந்தியாவிலிருந்து மூட்டை கட்டுவதாக அறிவித்தார். அவ்வளவு துரிதமாக பிரிட்டிஷ் ஆட்சி நீங்கி சுதந்திரம் பெறுவோம் என்ற எண்ணமே இல்லாமல் இருந்த காங்கிரஸ் தலைவர்கள் செய்வதறியாமல் விழித்தனர். 'நீங்கள் இவ்வளவு சீக்கிரம் போகக்கூடாது என்று சொல்லவும் முடியாமல் பிரிட்டிஷ் ஆட்சியிடமிருந்து அதிகாரத்தை ஏற்கத் தயாராகவும் இல்லாமல் காங்கிரஸ் திணறியது. உண்மையில் மவுண்ட்பாட்டானின் வருகைக்குப் பின்பு நடந்த அரசியல் விளையாட்டில் காங்கிரஸ் ஒரு சாதாரணப் பார்வையாளர் நிலையில்தான் பங்கேற்க முடிந்தது. மகாத்மா காந்தியால் பிரிட்டிஷ் ராஜதந்திரத்தைப் புரிந்துகொள்ள முடிந்திருக்கலாம். ஆனால் அதை முறியடிக்க முடியவில்லை. போராட்டங்களையும் சிறைவாசத்தையும் அனுபவித்து தளர்ந்து சோர்ந்து போயிருந்த காங்கிரஸ் தலைவர்கள் ஏதோ கிடைப்பதை ஏற்று சந்தோஷமாக இருக்கவேண்டும் என்ற மனநிலைக்கு வந்திருந்ததாகத் தெரிகிறது. ஆகவே பிரிவினையை எதிர்க்கவோ மாற்று திட்டம் தீட்டவோ சக்தியற்ற நிலையில் வேறு வழியில்லாமல்தான் அதை ஏற்க வேண்டியவர்களானார்கள். பிரிவினை நடந்தது பிரிட்டிஷ் ராஜதந்திரத்தின் வெற்றியால் என்பதுதான் உண்மை.

மவுண்ட் பாட்டனின் வருகைக்கு முன்பாக பிரிட்டிஷ் அரசு அதிக ராணுவத்தைக் குவித்து இந்தியாவை அடக்கி ஆளமுடியும் என்றும் ஆலோசித்தது பிரிட்டிஷ் ராணுவத்தின் உயர் தளபதிகளின் சபையில் ராணுவ பலத்தைக்கொண்டு இந்தியாவை எவ்வளவு ஆண்டுகள் தங்கள் கையில் வைத்திருக்க இயலும் என்ற விஷயத்தைப் பற்றி ஆலோசிக்கப்பட்டது. முடிவில் ராணுவ பலத்தை கொண்டு இந்தியாவில் இருப்பது சாத்தியமென்றாலும் அது மிகவும் கடினமானதாக பெரும் பொருள்

www.tamilarangam.net



நஷ்டமானதாக இருக்கும் என்றும் பல்லாயிரக்கணக்கான துருப்புகளை ஈடுபடுத்த வேண்டும் என்றும் அப்படிச் செய்வதென்றால் குறைந்தது 10/20 ஆண்டுகள் பிரிட்டிஷ் ஆட்சி நீடிக்க வேண்டியிருக்கும் என்றும் ஆலோசனை வழங்கப்பட்டது. பிரிட்டிஷ் ராணுவத்தை இந்துக்கள் வாழும் பகுதிகளிலிருந்து நீக்கி முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் மட்டும் வைத்துக் கொண்டு கொஞ்ச காலம் தள்ள முடியுமா என்ற யோசனையும் செய்யப்பட்டது. இந்துக்கள் வாழும் பகுதிகளில் நிர்வாகம் நடத்த இயலாத அளவுக்குச் சென்றுவிட்டது. முஸ்லீம்கள் வாழும் பகுதிகளில் (குறிப்பாக வடமேற்குப் பகுதிகளில்) பிரிட்டிஷ் ராணுவத்தை குவித்து வைத்துக்கொள்ளலாம் என்றும் தீவிரமான ஆலோசனைகள் செய்யப்பட்டன. எஸ்.வி.ஆர்.க்கு இவை எல்லாம் முக்கியமாகத் தென்படுவதே இல்லை. தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று பிடிவாதமாக, பார்ப்பன பனியாக்களின் சூழ்ச்சியாக எல்லாவற்றையும் காண்கிறார்.

## 7

இந்த நூலில் சிறப்பாகச் சொல்ல எதுவுமே இல்லையா என்று கேட்கலாம் இருக்கிறது. பார்ப்பனியம் என்பது சாகவில்லை. அது இன்னும் தீவிரமாகவே நம் சமூக வாழ்வில் செயல்படுகிறது என்பதை எஸ்.வி.ஆர். புரிந்துள்ளார். ஆனால் அவர் பார்ப்பனியம் என்று எதை அடையாளம் காட்டுகிறாரோ அது மட்டுமே பார்ப்பனியம் அல்ல பார்ப்பனியம் என்பது காலத்துக்குஏற்ப, சூழலுக்குத் தக்கவாறு தன்னை மாற்றிக் கொள்ளும் தன்மையுடையது என்று சரியாகவே கூறும் எஸ்.வி.ஆர். இன்றுள்ள நிலையில் பார்ப்பனியம் என்றால் என்ன என்று தேடியிருந்தால் புதிய வெளிச்சம் கண்டிருப்பார். பார்ப்பனியம் என்பது பார்ப்பனர்கள் என்ன செய்கிறார்கள் அல்லது சொல்கிறார்கள் என்பது மட்டுமல்ல என்பதை ஏற்றுக்கொள்ளும் எஸ்.வி.ஆர். அதை ஒருவிதமான மனப்பாங்கு; கலாச்சாரம், சமூகம் பற்றிய பார்வை என்று இனங்கண்டிருந்தால் இன்றுள்ள சூழலில் பார்ப்பனியம் எப்படிச் செயல்படுகிறது என்பதைப் புரிந்திருப்பார். தலித் இயக்கத்திலும் பார்ப்பனியப் பார்வை புகுந்து கொள்ளலாம்; மார்க்சியக் கட்சிகளிலும் இம் மனப்பாங்கு ஆட்சி செலுத்தலாம். வாழ்வின் ஒவ்வொரு தளத்திலும் பார்ப்பனியச் சிந்தனையைக் கண்டுபிடிக்கலாம். சிறு பத்திரிகைகள் என்ற நிகழ்வில் பார்ப்பனிய மனப்பாங்கு வெளிப்படவில்லையா? லெனின் எழுதிய 'What is to be done?' என்ற நூலில் உழைக்கும் வர்க்கத்திற்கு சரியான புரிதலை, வர்க்கக் கண்ணோட்டத்தை வழங்க புரட்சிகரமான கட்சியின் அவசியம் பற்றி எழுதியதில் பார்ப்பனியப் பார்வை இல்லையா?

www.tamilarangam.net



பார்ப்பனியப் பார்வை, மனப்பாங்கு என்பதை பார்ப்பனர்களுக்கு மட்டும் சொந்தமானதாக நான் கருதவில்லை. மேலும் பார்ப்பனியப் பார்வை என்பதை கெட்டவார்த்தையாகவும் உபயோகிக்கவில்லை. நம் சமூக வாழ்வில், அரசியலில், கலாச்சாரத்தில் இரண்டு விதமான, ஒன்றுக்கொன்று நேர்எதிரான போக்குகள், பார்வைகள், மனப்பாங்குகள் செயல்பட்டன என்று எடுத்துக் கொண்டால் அதில் ஒன்று பார்ப்பனியப் பார்வை. இப்பார்வையின் லட்சணங்கள் என்று சிலவற்றைக் கூறலாம். தனிமனிதன் ஒருவன் சமூகத்தை தன்னுடைய அறிவினால் தவவலிமையால் நல்ல செய்கையாய் மாற்ற முடியும். லட்சக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள், ஆற்றல்கள், கோபதாபங்கள், முயற்சிகள் என்பனவற்றைவிட உயர்ந்த ஒரு ஞானியின், தலைவனின், கலைஞனின், புரட்சியாளனின் அறிவு, நம்பிக்கை, உணர்வுகள் . . . மேலானவை – முக்கியமானவை சமூகத்தை மாற்றவல்லவை. 'உன்னதங்களுக்காக' 'சாதாரணங்களைப்' பலியிடவும் செய்யலாம். பகுத்தறிவு என்பது உணர்வுகளால் செயல்படுவதைவிட உயர்வானது. தர்க்க நேர்த்தியானது எதுவோ அதுவே சிறந்தது. உண்மை என்றுமே சிறுபான்மையினரிடமே இருக்கும். ஜனரஞ்சகமானது எதுவோ அது சிறப்பாக இருக்க முடியாது. மனித அறிவால் செய்ய முடியாதது என்றும் இல்லை. வாழ்க்கையை விட தத்துவம்தான் பெரியது . . .

பார்ப்பனிய பார்வை என்பது அவசியமற்ற ஒன்றல்ல. வரலாற்றில் அப்பார்வை, மனப்பாங்கு பெரிய சாதனைகளை நிகழ்த்தியுள்ளது; சமூக மாற்றத்தைக் கொண்டுவந்துள்ளது. ஒவ்வொரு சமூகத்திலும் இப்பார்வை இருந்துகொண்டுதான் இருக்கும். அதை முற்றிலும் களைந்தெறிவது என்பது என்னைப் பொருத்தவரை சாத்தியமல்ல. அவசியமும் அல்ல. சமூக வாழ்வில், அரசியலில் அதற்கான இடம் உண்டு. ஆனால் நம் அரசியலில், சமூக வாழ்வில் அதையே உயர்த்திப் பிடித்தோமென்றால் சமூக நியாயம், ஜனநாயகம் சாதாரண மக்களின் நலன் என்பவை பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும் அபாயம் உள்ளது. இந்திய வரலாற்றில் பார்ப்பனியம் கோலோச்சவில்லை என்பதே என் முடிவு. இந்தியாவில் இருந்த ஆயிரக்கணக்கான சாதிகளை நான்கு வர்ணங்கள் என்ற நேர்த்தியான கட்டமைப்புக்குள் கொண்டுவர எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. 1891–ல் பிரிட்டிஷ் ஆட்சியில் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு நடந்தபோது பஞ்சாப் பகுதியில் மட்டும் ஒரு லட்சம் சாதிகள் / உபசாதிகள் / குலங்கள் இருந்தன. இந்தியா முழுவதிலும் 5 லட்சத்திற்கும் அதிகமான சாதிகள் / உபசாதிகள் இருந்திருக்கலாமென்று தெரிகிறது. ஜாட் எனப்படும் சாதியில் மட்டும் 11,000 உட்பிரிவுகள் / உபசாதிகள் (பஞ்சாப் பகுதியில் மட்டும்)

www.tamilarangam.net



இருந்ததாகக் கணக்கெடுப்பில் தெரிகிறது. அதேபோல இந்துமதப் பிரிவுகள் என்று எடுத்துக்கொண்டால் பஞ்சாபில் மட்டும் சுமார் 300 க்கும் அதிகமான இந்துமதப் பிரிவுகள் பட்டியல் இடப்பட்டன.

பிரிட்டிஷ் ஆட்சியில்தான் பார்ப்பனர்களும் பார்ப்பனியமும் வீரியமடைந்தன. அதற்கு ஐரோப்பிய மரபு – பார்ப்பனியம் இரண்டுக்கும் இருந்த பல ஒற்றுமைகள் காரணமாக இருக்கலாம். பார்ப்பனியச் சிந்தனை ஐரோப்பிய அறிஞர்களைக் கவர்ந்ததன் காரணம் முக்கியமானது. சமஸ்கிருத மொழியின் இலக்கண நேர்த்தியும் உபநிடதங்களின் சாரமும் மனுநீதியின் அமைப்பும் அர்த்தசாத்திரத்தின் அழகும் ஐரோப்பியர்களின் கவனம் பெற்றதில் வியப்பில்லை. கிரேக்க, ரோமானிய சிந்தனை மரபுக்கு இணையாக அவை இருந்தன.

சுதந்திரப் போராட்டமும் சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல் சமூக மாற்றங்களும் இந்தியாவில் மீண்டும் பழைய சமூக சமநிலை உண்டாக வழி செய்துள்ளன. பெரியாரும் அம்பேத்காரும் இன்னும் பல்வேறு தலைவர்களும் இயக்கங்களும் காலனியம் உருவாக்கிவிட்ட சமனற்ற நிலையை ஒரளவு சரி செய்துள்ளதாகவே காண்கிறேன். பல்வேறு இனங்களும் ஒதுக்கப்பட்ட மக்களும் தங்கள் உரிமைகளுக்காகவும் மரியாதைக்காகவும் நடத்தும் போராட்டங்கள், இயக்கங்கள் பார்ப்பனியத்தை அதற்கு உரிய இடத்தில் வைப்பதில் வெற்றி கண்டுள்ளன. மண்டல் குழு அறிக்கையை நான்தான் சட்டமாக்கினேன், நாங்கள்தான் அமுலுக்குக் கொண்டுவந்தோம், எங்களால்தான் மண்டல் குழு அறிக்கையை சரியாக நடைமுறைப்படுத்த இயலும், மண்டல் குழு அறிக்கையை தாண்டியும் நாங்கள் செய்வோம் . . . என்று கட்சிகளும் இயக்கங்களும் போட்டியிடுவது பார்ப்பனியம் வெகுவாக எடை குறைந்து இளைத்து தன்னுடைய பழைய நிலைக்கு வரும் என்று உணர்த்துகிறது. ஆனால் நம் பொருளாதாரக் கொள்கைகளும் விஞ்ஞானம், தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றில் கடைப்பிடிக்கும் அணுகுமுறையும் பார்ப்பனியத்தை ராஜமரியாதையுடன் மீண்டும் அரியணையில் அமர்த்திவிடும் அபாயமும் உள்ளது. எஸ்.வி.ஆரின். நூல் அந்த அபாயங்களின் பக்கம் தன் கவனத்தை செலுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

**நிகழ் 27,**
**ஆகஸ்டு 94**

www.tamilarangam.net



# ராஜமரியாதையும் அரியணையும்

**- எஸ். வி. ராஜதுரை**

'சூரியன் உதிப்பது கிழக்கில்தான்' என்பதை மெய்ப்பித்துக் காட்டு என்று நம்மைக் கேட்பது போலத்தான் 'இந்த நாட்டில் பார்ப்பன ஆதிக்கம் உள்ளதா? இந்த தேசம் பார்ப்பனத் தன்மையுடையதா?' என்பதை மெய்ப்பித்துக் காட்டு என்று கேட்பதுமாகும். கைப்புண்ணுக்குக் கண்ணாடி கேட்பவர்கள் பார்ப்பனர்கள். அப்படி ஒரு கண்ணாடியை வாங்கினால் அந்தக் கண்ணாடி வழியாக எதையுமே பார்க்க முடியவில்லை என்பார்கள். அப்படி எதையேனும் பார்த்தாலும் அது புண் அல்ல, புனுகுதான் என்பார்கள். ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன் செய்துள்ளது இதுமட்டுமல்ல. நான் எழுதாத, செரல்லாத விஷயங்களை எனக்கு ஏற்றிச்சொல்லிவிட்டு அவற்றின் மீது விமர்சனம் செய்யும் கைங்கரியமும் செய்துள்ளார். நான் எவற்றை விளக்குவதற்காக 'இந்து இந்தி – இந்தியா' என்ற நூலை எழுதியுள்ளேனோ அதற்குப் பதிலாக, உருப்படியான, பொறுப்புள்ள மாற்றுக் கருத்துக்களைச் சொல்லாமல் நா்ன் எதையுமே விளக்கவில்லை என்று மட்டையடி அடித்திருக்கிறார். ('நிகழ்' 27, ஆகஸ்ட் 1994)

பெரியார், அம்பேத்கார் வழியில் கொஞ்சம் மார்க்சியம் சேர்த்துக் கொண்டு இந்தியத் தேசிய இனங்கள் விடுதலை பெற வேண்டும் என்று நான் பரிந்துரைப்பதாக ஜி.எஸ்.ஆர். கூறுகிறார். அம்பேத்கர், இந்தியாவிலுள்ள தேசிய இனங்களின் தன்னுரிமைக் கோரிக்கைகளை அங்கீகரிக்காதவர் என்ற எளிய உண்மைகூட ஜி.எஸ். ஆருக்குத் தெரியவில்லை. எனது நூலில் உள்ள "இந்தியாவில் தேசிய இனப்பிரச்சினை" என்ற அத்தியாயத்தில் தேசிய இனப்பிரச்சினைகளைப் புரிந்து கொள்வதில் மரபான மார்க்சியத்திற்குள்ள சிக்கல்கள், தேசியத் தன்னுரிமைக் கோரிக்கைகளை ஜனநாயகக் கோரிக்கைகளாக அங்கீகரித்து அவற்றை அரசியல்ரீதியாகத் தீர்க்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்தும் லெனினிய நிலைப்பாடு, தன்னுரிமைப் போராட்டங்கள் பெண் விடுதலையையும், தலித் விடுதலையையும் (தலித் தலைமையையும்) கருத்தில் கொள்ள வேண்டிய தேவை ஆகியவற்றுடன் ஒரு புதியவகை இந்தியாவைக் 'கற்பிதம் செய்வது' குறித்தும் எழுதியுள்ளேன். பெண்கள் விடுதலை குறித்து பெரியார் சொன்ன ஓரிரு கருத்துக்களை இங்கு குறிப்பிட்டிருக்கிறேன். அவ்வளவுதான்.

2) "இந்தியத் தேசியம் என்பது பார்ப்பனியம்தான் என்பதை மார்க்சிய அடிப்படையில் நிறுவுவதில் எஸ்.வி.ஆர். வெற்றி பெறவில்லை

www.tamilarangam.net



என்பதே என் கருத்து முடிவு . . . பார்ப்பனியம் என்பதன் பொருளியல் அடித்தளம் என்ன என்பதை எஸ்.வி.ஆர் சரியாக விளக்குவதில்லை என்பதோடு அத்தகைய அடித்தளமே இல்லாமல் சித்தாந்த மேல்கட்டு மானத்தால் மட்டுமே பார்ப்பனியம் தன் மேலாண்மையை நிறுவிக் கொள்வதாக நாம் கருத இடம் அளிக்கிறார்" என்று ஜி.எஸ்.ஆர். கூறுகிறார். எனது நூலின் அத்தியாயங்கள் II, IV, VII, VIII, IX ஆகியவற்றில் பார்ப்பனியத்தின் பொருளியல் அடிப்படை விளக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு வகையான பொருளியல் அடிப்படைகளுக்கு ஏற்பத் தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் ஆற்றலுடைய பார்ப்பனியம் என்பதும் வரலாற்று ரீதியாக விளக்கப்பட்டுள்ளது.

எனது நூலின் முன்னுரையில் "இந்தியத் தேசியம், இந்தியத் தேச உருவாக்கம் ஆகியவற்றின் வரலாற்றை விரிவாக ஆராயும் இந்நூல் அவற்றின் அரசியல், பொருளியல், சித்தாந்தக் கூறுகளை எடுத்துக் கூறுகிறது" என்றும் "இந்தியத் தேசத்திற்கும் தேசியத்திற்கும் நியாயவாதங்களை வழங்கும் பார்ப்பனியச் சித்தாந்தம் இருபோக்குகளைக் கொண்டுள்ளது" என்றும் குறிப்பிடுகிறேனேயன்றி பார்ப்பனியம் என்பது ஏதோ வெற்றிடத்தில் தனித்தியங்கும் சித்தாந்த சக்தி (பார்ப்பனர்களுக்கு பொருளியல் வலிமையும் இருக்கிறது என்று நான் கூறியுள்ளபோதிலும்) என்று எங்குமே கூறவில்லை. பார்ப்பனர்கள், உயர்சாதியினர், அனைத்திந்திய (தரகு) பெருமுதலாளிகள், நிலவுடைமைச் சக்திகள் ஆகியோரின் நலன்களைக் காப்பதற்காக உருவாக்கப்பட்ட இந்தியத் தேசியம், இந்தியத் தேசம் ஆகியவற்றின் அரசியல், பொருளாதார நலன்களுக்கு சித்தாந்த நியாயவாதங்கள் வழங்குவதுதான் பார்ப்பனியம் என்பது எனது நூலில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது, இந்தியாவிலுள்ள ஆளும் வர்க்கங்களும் சாதிகளும் சிவில் சமுதாயத்தில் தமது மேலாண்மையை நிறுவிக் கொள்வதற்கும் அரசியல் அதிகாரம் வகிப்பதற்கான சாதனம் தான் பார்ப்பனியம் என்பதுதான் என் நூலின் சாரம். இந்த மேலாண்மையையும் அரசியல் அதிகாரத்தையும் நிறுவுவதில் ஓரம்சமாகவே பார்ப்பனர்கள் இந்து சமுதாயத்தில் தமது மேலாண்மையை நிறுவிக் கொள்வதைப் பார்க்க வேண்டும். உண்மை இப்படியிருக்க "இந்நூலின் முன்னுரையில் பார்ப்பனியத்தின் பொருளியல் அடிப்படைகளை விரிவாக விளக்க இடம் இல்லை என்று அவர் (எஸ்.வி.ஆர்.) கூறுவது உண்மைதான்" என்று ஓர் அப்பட்டமான பொய்யைச் சொல்லிவிட்டு, அதோடு நிற்காது "அதற்கான சரக்கு எஸ்.வி.ஆருக்கு இல்லை" என்று தீர்ப்பளித்தும் விடுகிறார் ஜி.எஸ்.ஆர்!

www.tamilarangam.net



பார்ப்பனியத்தின் பல்வேறு முகங்களிலொன்று ஜி.எஸ்.ஆர். கிருஷ்ணன். அதனால்தான் மண்டல்குழு எதிர்ப்பாளர்கள் பற்றி நான் எழுதியுள்ளவற்றை நரித்தனமாகத் திரிக்கிறார். பிற்படுத்தப்பட்டவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோர் திறமையற்றவர்கள், இரண்டாந்தர மானவர்கள் என்ற அடிப்படையில் இட ஒதுக்கீட்டை எதிர்த்த பார்ப்பனர்களையும் உயர்சாதியினரையும்தான் (சின்மயானந்தாவும் அருண் ஷோரியும் பார்ப்பனர்களல்லர்) எனது முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டு அவர்களுக்கும் இந்து – இந்தியத் தேசியத்துக்குமுள்ள உறவைச் சுட்டிக்காட்டியிருக்கிறேனேயன்றி "வேறு காரணங்களுக்காக" இட ஒதுக்கீட்டை எதிர்த்த / எதிர்த்துவரும் 'நல்லெண்ணம்' கொண்டோரைப் பற்றி நான் எங்கும் பேசவில்லை. இத்தகைய 'நல்லெண்ணம் படைத்தவர்களும் கூட பார்ப்பனியத்தைக் காணத் தவறுகிறவர்கள் / மறுக்கிறவர்கள்தான். இவர்களைப் பற்றி பேசுவதற்கு இது தருணமல்ல. எனினும் இந்த 'நல்ல' மனிதர்களில் இருவர் உதிர்த்த முத்துக்களைக் குறிப்பிடுவது நம் நாட்டில் சமூகவியல் (Sociology) துறைக்கு ஏற்பட்டுள்ள 'கதி'யைப் புரிந்துகொள்ள உதவும்.

(1) "இட ஒதுக்கீட்டு முறையின் காரணமாக நாம் நமது அரசியல் சட்டத்தில் ஒரு இலட்சியமாகப் பொறித்து வைக்கப்பட்டுள்ள சமத்துவ சமுதாயம் என்பதிலிருந்து மிக வேகமாக விலகிச் சென்று கொண்டிருக்கிறோம்." (M.N. Srinivas, End of Egalitarian Dream, SUNDAY OBSERVER, August 12, 1990)

(2) "அரசியலைத் தவிர சாதி வேறெங்கும் செயல்படுவதில்லை" (Andre Beteilem, Caste and Politics, Times of India 11-9-90)

எனது நூலின் மையக்கருத்து என்று தனது விமர்சனக் கட்டுரையின் பகுதி 2–ல் விளக்கவுரை நிகழ்த்தும் ஜி.எஸ்.ஆர். "(அகில இந்திய ரீதியில் வைத்துப் பேசக்கூடிய ஒரு ஜாதி" என்பதல்ல என் கூற்று; "நவீன இந்தியத் தேசியம் உருவாவதற்குமுன் 'அனைத்திந்திய தேசியவாதிகளாக' இருந்த ஒரே சமூகப் பிரிவினர்கள்தான்" (ப.208) என்று தான் கூறியிருக்கிறேன்). பகுதி 3–ல் நான் சொல்லாத விஷயங்களை சொன்னதாகக் கூறிவிடுகிறார். சத்திரியர் – பார்ப்பனர் கூட்டு என்று அதன் நேரடிப் பொருளில் அதாவது ஒரு Technical Sense –ல் நான் எங்குமே கூறவில்லை. பக்கம் 71–ல் நான் மேற்கோள் காட்டியுள்ள அம்பேத்கரின் கூற்றுக்கும் கூட இத்தகைய பொருள் எடுத்துக்கொள்ள கூடாது. வி.பி.சிங்கின் தேசிய முன்னணி அரசாங்கத்திலும் கருணாகரனின் ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்திலும் பல்வேறு

www.tamilarangam.net



கட்சிகளைச் சேர்ந்தவர்கள் அமைச்சர் பதவிகளைப் பங்கு போட்டுக் கொள்வது போல, பழைய காலத்தில் சத்திரியர்களும் பார்ப்பனர்களும் கூட்டாக அரியணையில் உட்கார்ந்திருந்தார்கள் என்று நானே கூறாதபோது அம்பேத்கர் என்ற மேதை எப்படிக் கூறுவார்? அரசு யந்திரத்தின் வன்முறை (வாள்) சிவில் சமுதாயத்தில் பார்ப்பனர்கள் / பார்ப்பனியம் செலுத்தும் மேலாண்மை (பேனா) ஆகிய இரண்டும் சேர்ந்து மக்களை ஒடுக்கியதையும்தான் அம்பேத்கர் மேற்காணும் மேற்கோளில் விளக்குகிறார். எனினும் வரலாற்றுப் போக்கில் பார்ப்பனர்கள் சிவில் சமுதாய மேலாண்மையுடன் அரசியல் அதிகாரத்தை நேரடியாகப் பெறுகின்ற வளர்ச்சியையும் பெற்றிருக்கிறார்கள்.

"பார்ப்பனியம் : ஒரு வரலாற்று ஆய்வு" என்ற அத்தியாயத்தில் பார்ப்பனர்களும் பார்ப்பனியமும் வரலாற்று ரீதியாக வகித்துவந்த பாத்திரத்தை தலைசிறந்த ஆராய்ச்சியாளர்களான அசோக் ருத்ரா, ஜன்ஸ்லி எம்பரி, கிறிஸ்தோபர் போக்கர், டி.டி. கோஸாம்பி போன்றோரின் ஆராய்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு (இந்தியாவில் ஆண்ட மன்னர்கள் எல்லாரும் சத்திரிய வர்ணத்தினர் என்று நான் எங்கும் குறிப்பிடவில்லை. இந்த சாதாரண விஷயம் எனக்கும் தெரியும்) அரசியல் சமுதாயத்திற்கும் சிவில் சமுதாயத்திற்கும் இடையேயான உறவை வடிவமைத்த பார்ப்பனர்கள் / பார்ப்பனியம் பற்றி விளக்கியிருக்கிறேன். இந்தியாவில் ஒரு நியதியாகச் செயல்பட்ட விஷயத்தை ஜி.எஸ்.ஆர். மறுப்பதற்கான நோக்கம் என்ன? பார்ப்பனர் ஆதிக்கம் என்பது இருந்ததே கிடையாது என்று நிலைநாட்டி, "பாவம் பார்ப்பனர்கள், அன்று கோயில் புரோகிதம் பண்ணிக் கொண்டிருந்தார்கள், இன்று Computer Boys ஆகப் பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று நிலைநாட்டுவதுதான்! இதற்காக அவர் கூறும் விளக்கம் நகைப்புக்கிடமானது: "சத்திரியன் என்ற பட்டம் பார்ப்பனர்களால் வழங்கப்பட வேண்டியிருந்தது என்பது முற்றிலும் உண்மையல்ல. குஜராத்தில் பழங்குடிகள் ஒருவனை அரசனாக ஏற்றால்தான் அவன் பட்டம் சூடிக்கொள்ள முடியும் என்ற பழக்கம் இருந்தது (கோசாம்பி இது பற்றிக் கூறுவதாக நினைவு) வேறு பல இடங்களில் இவ்விதமான பழக்கங்கள் இருந்திருக்கலாம்." குஜராத் உதாரணத்திற்கு அவர் சரியான ஆதாரம் காட்டவில்லை என்பது ஒருபுறமிருக்க, அந்த உதாரணமும் (பார்ப்பனியத்தின் கரம்படாத வடகிழக்கு மாகாணங்கள் போன்ற) வேறு பல இடங்களில் அதேபோன்ற நிகழ்வுகளும் இருந்ததாக வைத்துக் கொண்டாலும்கூட, அவை இந்தியாவில் நிலவிய பொது நியதிகளுக்கு விதிவிலக்காக மட்டுமே இருக்கமுடியும். பாண்டிய, சோழ,

www.tamilarangam.net



விஜயநகர மன்னர்கள் தொடங்கி சிவாஜி வரை மன்னர்கள் அனைவரும் விதிவிலக்கின்ற பார்ப்பனர்களின் அங்கீகாரத்தையும் ஆசியையும் பெற வேண்டியிருந்தது. அவர்கள் இந்த அங்கீகாரத்தின் மூலம் சத்திரிய **வர்ணத்தாராகி விடவில்லை** (ஏனெனில் இவர்கள் பிறப்பால் சூத்திரர்கள். பல மன்னர்கள் பழங்குடி வகுப்பினர்.) மாறாக சத்திரிய **அந்தஸ்து** பெற்றனர். பார்ப்பனர் என்பது அந்தஸ்தையும் (வருணத்தையும்) பிறப்பால் ஏற்பட்ட சாதியையும் குறிக்கும். சத்திரியர் என்பது அந்தஸ்தை மட்டுமே குறித்தது.

ஜி.எஸ்.ஆர். என்ற சமூகவியல் பேராசிரியர், ஆளுநர் – முதல்வர் உறவையும் ஆளுநருக்குள்ள அதிகாரத்தையும் தெரிந்து கொள்ளாமல் வைத்திருப்பது ஆச்சரியமாக உள்ளது. இந்திய அரசியல் சட்டப்படி ஆளுநர்தான் ஒரு மாநிலத்தின் காப்பாளர் (Custadian), முதல்வரல்ல. ஆளுநர் விருப்பமில்லாவிட்டால் ஒரு துணைவேந்தரைக் கூட முதல்வர் நியமிக்க முடியாது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களையும் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வரையும் வீட்டுக்கு அனுப்பிவிடும் அதிகாரம் அவருக்கு உண்டு. "சடங்கை நடத்த முடியாது என்று எந்தப் பார்ப்பனன் கூறியிருப்பான்?" என்று கேட்கிறார் ஜி.எஸ்.ஆர். தனது பிழைப்பையும் அந்தஸ்தையும் உத்திரவாதம் செய்யும் சடங்கை நடத்தமுடியாது என்று பார்ப்பனர்கள் சொல்வது அரிது. ஆனால் அதைச் சொன்ன நிகழ்வுகளும் வரலாற்றில் உண்டு. சிவாஜிக்கும் அவரது வழித்தோன்றலான சத்ரபதி மகாராஜுக்கும் அது நடந்திருக்கிறது. அவர்கள் தம் அதிகாரத்தையும் வலிமையையும் கொண்டு வேறு பார்ப்பனர்களைப் பிடித்து 'சடங்கு'களைச் செய்வித்தனர்.

பர்ட்டன் ஸ்டெயின் என்ற வரலாற்றறிஞர் மீது ஜி.எஸ்.ஆருக்கும் அவரது பெங்களூர் நண்பர்களுக்கும் அபார வாஞ்சை. 'பார்ப்பனர் ஆதிக்கம்' என்று நாம் சொன்னால் உடனே 'வேளாளர் ஆதிக்கம்' என்று எதிர்முழக்கமிட பர்ட்டன் ஸ்டெயினைப் பிடித்துக் கொள்வார்கள். "சோழப் பேரரசு என்பதும்கூட மிகவும் மிகைப்படுத்தப்பட்ட ஒன்று" என்பதை விவாதிப்பதற்கு இதுவல்ல இடம். எனினும் ஜி.எஸ்.ஆர். & கம்பெனிக்குப் புரிபடாத மிக எளிய உண்மைகளை இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

(1) சோழர் காலத்தில் அதிகாரப்பங்கீடு எவ்வாறு இருந்தது என்பது குறித்த பர்ட்டன் ஸ்டெயினின் Segmentary State என்ற கருத்தாக்கம் இன்று பல வரலாற்றறிஞர்களால் கேள்விக்குட்படுத்தப் பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, கேசவன் வேலுதட் எழுதியுள்ள Political Structure in Early Medical South India என்ற நூலைக் கூறலாம். இந்த நூல் பற்றிய மதிப்புரை வழங்கியுள்ள வரலாற்றறிஞர் ஆர். சம்பகலட்சுமி (A

www.tamilarangam.net



Framework for South Indian Polity, The Book Review, June, 1994) சோழர் காலத்தில் பார்ப்பனர்களுக்கு இருந்த அதிகாரங்களை விரிவாக விளக்கியுள்ளார்.

(2) உழவர்களும் (வேளாளர்களும்) அவர்களது சாதியமைப்புகளுமே அரசியல் அதிகாரம் செலுத்தினர் என்ற கருத்து இன்று மறுக்கப்பட்டுவிட்டது. உழவர்கள் (வேளாளர்) என்ற திணையில் சுரண்டும் நிலவுடைமையாளர்கள் மட்டுமல்லாது உழுது பயிரிட்ட உழைக்கும் குடியானவர்களும் இருந்தனர். ('உழவர்கள்' அல்லது 'வேளாளர்கள்' என்பது குறிப்பிட்ட ஒரே ஒரு சாதி அல்ல. பல்வேறு சாதியைச் சேர்ந்தவர்களையும் உள்ளடக்கக்கூடிய வகையில் விரிந்து கொடுத்துவந்த ஒரு திணைதான் 'வேளாளர்' என்பது) சில வேளாள நிலவுடைமையாளர்கள் காலப்போக்கில் சோழப் பேரரசின் நிர்வாகத்தில் அதிகாரிகளாக நியமிக்கப்பட்டனர். இவர்கள் மேற்பார்வையின் கீழ்தான் வரிவசூல் முதலியன நடந்தனவேயன்றி சாதாரண உழவர்களுக்கு (வேளாளர்களுக்கு) அதிக அதிகாரம் இல்லை. ('வேளாள' சாதிகளிலிருந்து மட்டுமல்லாமல் 'கீழ்' சாதிகளிலிருந்தும் கூட அரசாங்க அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் என்று கெய்ல் ஓம்வெத் Dalits and the Democratic Revolution என்ற நூலில் கூறுகிறார்) அரசு நிர்வாகத்துடன் தொடர்பு கொண்டிருந்த ஒரே காரணத்தால் மட்டுமே வேளாள சாதிகளைச் சேர்ந்த தனிக் குடும்பங்கள் சில அதிகாரம் பெற்றிருந்தனரேயன்றி வேளாள சாதிகள் முழுவதும் ஒட்டுமொத்தமாக அல்ல. இதற்கு மாறாக பிறப்பால் உயர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக பார்ப்பனர்கள் என்ற சாதி அலகு (Caste Unit) முழுவதுமே அதிகாரம் பெற்றிருந்தது.

"அரசியல் அதிகாரம் என்பதையும் சமூக அந்தஸ்து, அறிவு என்பதையும் மிக நேர்த்தியாகப் பிரித்து வைத்தது இந்திய மரபு"; "பார்ப்பனர்களின் முக்கியமான பாத்திரம் அரசின் அதிகாரம் என்பது மக்கள் மீது கொடுங்கோலாக மாறாமல் தடுப்பது என்பதில் இருந்தது"; "நீதி, நெறி, தர்மம் என்பனவற்றை எடுத்துக்கூறி சத்திரிய அதிகாரத்துக்கும் மக்களின் தினநித்திய வாழ்க்கைக்கும் இடையே பார்ப்பனர்கள் செயலாற்றியதாகக் கொள்ளலாம்" – இவை யாவும் ஜி.எஸ்.ஆர். கருத்துக்கள். 'சத்திரிய அதிகாரம்' என்று அவர் கூறுவதற்கு அரசதிகாரம் என்று பொருள் என நினைக்கிறேன். (ஏனெனில் "உண்மையான சத்திரிய வர்ணம் என்பது காண்பதரிது")

இக்கருத்துக்களைத் தொடர்ந்து ஜி.எஸ்.ஆர். கூறுகிறார் :

www.tamilarangam.net



இந்தியாவில் அரசியல் அதிகாரம், சாத்திரம், தர்மம், நெறிமுறை, நீதி என்பனவும் மையங்கொள்ளாமல் இருந்தன. "பார்ப்பன ஆதிக்கம் எப்படி சாத்தியமானது என்பதற்கு எஸ்.வி.ஆர். போன்றவர்கள் கூறுவது கலாச்சார ரீதியில் என்பதாகும். அதாவது மனுநீதி போன்ற தர்மசாத்திரங்களைக் கருவியாகக் கொண்டு பார்ப்பனர் ஆதிக்கம் செலுத்தினர் என்பதாகும். மனுநீதியைப் பார்ப்பனர்கள் தூக்கிப் பிடித்தார்கள் என்பது உண்மையாக இருந்தாலும் அந்த மனுநீதியை ஒட்டியே சமூகம் இயங்கியது என்பதற்கு ஆதாரம் என்ன? ... புனிதமான சாத்திரம் என்ற அந்தஸ்து இருந்ததாலேயே ஒன்று அனுசரிக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது சமூகவியல் அரிச்சுவடி கூடத் தெரியாமல் கூறுவதாகும்."

இப்போது எனது நூலில் கூறப்பட்டுள்ள சில கருத்துகளைக் காண்போம்: "பார்ப்பனர்கள் தங்களது அடையாளத்தை வெளிப்படையாக அரசியல் செயல்பாடுகளினூடாக வெளிப்படுத்துவதைத் தவிர்த்து, சமய, பண்பாட்டு, சித்தாந்த தளங்களிலேயே தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தி வந்துள்ளனர்" (ப. 206) "பார்ப்பனியச் சித்தாந்த மேலாண்மை என்பது சமுதாய ஒழுங்குமுறைகளையும் சாதி வருணப் பாகுபாடுகளையும் (மேற்கூறிய வகையில்) நியாயப்படுத்தி வந்ததுடன் அரசாட்சிக்கும் அரசனின் இருப்புக்கும் பெருமை சேர்க்கும் நியாயவாதங்களையும் வழங்கி வந்தது." (ப. 206 – 207); "அரசன் நியாயமானவன், வேதங்களையும் பார்ப்பனர்களையும் பாதுகாக்கக்கூடியவன், சமுதாயக் கட்டுக்கோப்பைக் காக்க வல்லவன் என்று அரசனது தனிப்பட்ட இறையாண்மையை உறுதி செய்யக் கூடியவர்களாக விளங்கிய ஒரே சமூகப் பிரிவினர் பார்ப்பனர்கள்தான்"; "இந்திய சமூக, பண்பாட்டுச் சூழலில் மன்னன் தனது படையாற்றலையும் அதிகாரத்தையும் மட்டுமே தனது இருப்புக்கு உத்திரவாதம் வழங்குபவனாகக் கருதவில்லை. இவை அனைத்தையும் அவன் பெற்றிருந்தாலும் அவனுக்கு இன்றியமையாததாகவும் அவனது ஆட்சிக்குப் பெருமை சேர்ப்பதாகவும் விளங்கியது பார்ப்பனர்கள் வழங்கிய அங்கீகாரம்தான்". (ப. 207)

ஜி.எஸ்.ஆர். போலவே நானும் அரசியல் சமுதாயம் (அரசு), சிவில் சமுதாயம் என்ற பாகுபாட்டைச் செய்திருக்கிறேன். ஆனால் அரசியல் அதிகாரமும் சமூக அந்தஸ்து, அறிவு ஆகியவையும் மிகவும் நேர்த்தியாக ஒன்றுக்கொன்று அனுசரணையாக இருந்தன என்பதுதான் எனது வாதம். கிராம்ஷி கூறுவது போல எந்த ஒரு வர்க்கமும் தனது அரசியல் அதிகாரத்தை வன்முறை மூலம் மட்டும் நிறுவிவிட முடியாது, சிவில் சமுதாயத்தில் சித்தாந்த மேலாண்மையை நிறுவுவதன்மூலமே, அதாவது

www.tamilarangam.net



மக்களின் 'சம்மதத்தை' பெறுவதன் மூலமே அது சாத்தியம். மக்களின் 'சம்மதத்தை' பெற்றுத் தந்தவர் பார்ப்பனர்கள். ஆனால் சிவில் சமுதாயத்தில் தங்களது மேலாண்மையின் வழியாகத்தான் பார்ப்பனர்கள் அரசனது மேலாண்மையை உத்திரவாதம் செய்தனர். இங்குதான் பார்ப்பனர்கள் ஐரோப்பிய போப் அல்லது வேறு மதகுருமார்களிடமிருந்து வேறுபடுகின்றனர். "மேலை நாடுகளில் மன்னனுக்கு போப் வழங்கிய அங்கீகாரம், அவனது சமுதாய, அரசியல், பண்பாட்டு மேலாண்மையை உறுதிப்படுத்தியது. பார்ப்பனர்கள் அரசனுக்கு வழங்கிய அங்கீகாரமோ அவனது அரசியலதிகாரத்தை பார்ப்பனச் சித்தாந்த வரையறைக்குள் முடக்கவே பயன்பட்டது" (210); "பார்ப்பனர்களின் ஏற்புடன் ஆட்சி புரிந்த மன்னர்கள் வருண தருமத்தினைப் பேணிக்காக்க வேண்டியவராகவும் பார்ப்பனர்களின் மேன்மையை உறுதி செய்யக் கடமைப்பட்டவராகவுமே அடையாளப்படுத்தப்பட்டனர். எனவே மன்னனின் அரசியல் செயல்பாடுகள் அவனது அரசியலதிகாரத்தை வெளிப்படுத்தி அவனது ஆதிக்கத்தை நிலைநிறுத்த உதவிய போதிலும் சமூகத்தின் சமய, பண்பாட்டுச் செயல்பாடுகள் அரசனின் ஒப்புதலைப் பெற்ற பார்ப்பனியச் சித்தாந்தத்தால்தான் வடிவமைக்கப்பட்டன. கிராம்ஷியால் 'குடிமைச் சமுதாயம்' எனப்படும் சமூக, பண்பாட்டு தளங்களில் அரசனின் செல்வாக்கைவிட பார்ப்பனர்களின் செல்வாக்கே மேலோங்கியிருந்தது. இன்னும் சொல்லப்போனால் இந்திய வரலாற்றின் எல்லாக் காலகட்டங்களிலும் பார்ப்பனியம் மட்டுமே எல்லா வகையான அரசியல், பொருளாதார மாற்றங்களையும் நெருக்கடிகளையும் சமாளித்து தனது உளமார்ந்த தன்மையை எப்படியேனும் தக்க வைத்துக் கொண்டுள்ளது என்று சொல்ல வேண்டும். எனவேதான் ஜி.எஸ்.ஆர். கூறுவதுபோல "இந்தியாவில் இருந்த சத்திரியர்கள் (அரசர்கள்) பார்ப்பன 'அறிவை' கண்டு கொஞ்சம் பயந்து ஒதுங்கியே இருந்தனர்."

இனி ஜி.எஸ்.ஆரின் மேற்சொன்ன கருத்துகளுக்கு வருவோம். எந்தவொரு சமுதாயத்திலும் ஆதிக்கம் செலுத்தும் கருத்துகள் ஆளும் வர்க்கத்தின் கருத்துகள்தான் என்பது சமூகவியல் அரிச்சுவடி கற்ற எவருக்கும் தெரியும். இந்தியாவில் ஆளும் வர்க்கங்கள் மாறிக் கொண்டே வந்தாலும் அவர்கள் அனைவரது ஆளும் கருத்துகள் பார்ப்பனியக் கருத்துகளாகவே இருந்து வந்திருக்கின்றன. பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக பார்ப்பனியச் சித்தாந்தம் ஆதிக்கம் செலுத்திவரும் ஒரு நாட்டில் உயர் இலக்கியம் தொட்டு நாட்டார் வழக்காறுவரை அனைத்துமே பார்ப்பனியச் சித்தாந்தத்தின் தாக்கத்துக்குட்பட்டிருக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை. எந்தவொரு சமுதாயத்திலும் ஆதிக்க சித்தாந்தம் என்பது உயர் இலக்கியங்கள், முறைப்படுத்தப்பட்ட தத்துவங்கள்

www.tamilarangam.net



தொடங்கி பாமர மக்களின் 'பொது அறிவு' வரை எல்லாத் தளங்களிலும் ஊடுருவியிருக்கும் என்பதையும் சொல்லத் தேவையில்லை. இவ்வகையில் உலகில் உள்ள எல்லாச் சித்தாந்தங்களுமே 'மையப்படுத்தப்படாதவை' தான். எந்தவொரு நாட்டிலுமே உயர் இலக்கியங்கள் / சாத்திரங்கள் ஆகியவற்றில் கூறப்பட்டுள்ள ஒவ்வொரு எழுத்தும் பிசகின்றிக் கடைப்பிடிக்கப்படுவதில்லை. அது சாத்தியமும் அல்ல. அவற்றுக்கு முரணான நடத்தைமுறைகளைக் கூடக் காணலாம். ஆனால் (இத்தகைய விதிவிலக்கான) நடத்தைமுறைகள், ஒரு குறிப்பிட்ட சமுதாயம் குறிப்பிட்ட சித்தாந்தத்தினால் ஆற்றுப்படுத்தப்படுவதை எவ்வகையிலும் பாதிப்பதில்லை. காஞ்சி சங்கராச்சாரியார் கூறும் பெண்களுக்கும் சூத்திரர்களுக்கும் தெரிந்த 'வழக்கத்திள்ளது'களும் 'வழக்கற்றது'களும் கூட இத்தகைய பாதிப்புக்குள்ளாகியவைதான். (சங்கராச்சாரியார் 'சூத்திரன்' என்ற பதத்தைப் பயன்படுத்துவது ஜி.எஸ். ஆருக்கு சிறிதுகூட உறுத்தலாக இல்லை என்பது கவனிக்கப்பட வேண்டிய செய்தி) மனுநீதி போன்றவற்றின் மூலம் பார்ப்பனர்கள் செலுத்திய கலாச்சார ஆதிக்கம் என்பது ஏதோ வெறும் சிந்தனைத் தளத்தில் நடந்ததல்ல; மாறாக, உழைப்பு, உற்பத்தி, துய்ப்பு ஆகியனவற்றைத் தீர்மானித்ததுமாகும்.

ஜி.எஸ். ஆரின் கூற்றுகளை மறுக்கவும் எனது கருத்துகளுக்கு வலுச்சேர்க்கவும் நான் இங்கு சோழ நாட்டு உதாரணங்களை – அவர் பர்ட்டன் ஸ்டெயினைத் துணைக்கழைப்பதன் காரணமாக – கீழே தருகிறேன். இவை சோழராட்சியையும் அந்தணரின் 'அறவுணர்ச்சி'யையும் பாராட்டும் ஒரு வரலாற்றாசிரியரின் நூலிலிருந்து எடுக்கப்பட்டவை (மா. பால சுப்பிரமணியன், சோழர்களின் அரசியல், கலாச்சார வரலாறு, பாகம் – 2, மா. பாலசுப்பிரமணியன் மூலத் தீர்வுகளை மட்டுமல்லாது நீலகண்ட சாஸ்திரி முதல் பாஷாய், ரொமிலா தாப்பர், நபூரோ கோஷிமா வரை பல்வேறு வரலாற்றறிஞர்களையும் ஆதாரமாகக் கொண்டு இந்த நூலை எழுதியுள்ளார்) :

(1) "மனு, மிடாக்சாரம், ஹேமாத்ரி, முகவாதனா எழுதிய தயாபாகம் (தர்மவதனா என்ற நீதிநூலின் ஒரு பகுதி) ஆகிய நான்கு சாஸ்திரங்களின் மேல் சோழர்களுடைய நீதி நிர்வாகத்தின் அடித்தளம் அமைக்கப்பட்டது. 'அர்த்த சாஸ்திரம்' அரசியல் நூல் என்றளவில் ஸ்மிருதிகளின் ஒரு சிறிது மாறுபட்டுக் காணப்பட்டது. இவ்வாறாக அரசியல் தத்துவத்திற்கு அர்த்த சாஸ்திரமும் நீதி தத்துவத்திற்கு மேற்சொன்ன நான்கு சாஸ்திரங்களும் சோழர் காலத்து அந்தணர்களால் நீதிமன்றங்களிலும் அரச நீதி வழங்குமன்றத்திலும் எடுத்தோதப்பட்டு விளக்கவுரை சொல்லப்பட்டன. சோழ மண்டலமெங்கும் நிறுவப்பட்டிருந்த சதுர்வேதி மங்கலங்களிலும்

www.tamilarangam.net



எண்ணாயிரம், திருபுவனி என்ற குருமுறைக் கல்லூரிகளிலும் எண்ணற்ற கோயில்களைச் சார்ந்திருந்த வேதபாட சாலைகளிலும் நீதி சாஸ்திரங்கள் அந்தணர்களுக்குப் புகட்டப்பட்டன. அவ்வந்தணர்களை சோழ நாட்டுக்குரிய நீதிபரிபாலனத்திற்கான ஆக்கப்பூர்வமான காவலர்கள் என்ற பொறுப்பை ஏற்றுத் திறம்படச் சேவை செய்தனர்.

(2) மனுதர்மத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்கிய சோழமண்டலத்தின் நீதி நிர்வாகம் அரசனுடைய இணக்கத்தைப் பெற்று இயங்கவில்லை என்பது உண்மையாகும். தர்மாசனங்கள் நீதி நிர்வாகத்தை தர்மாசனப்பட்டர்கள் வியாக்கியானம் செய்ததை நிறைவேற்றுகின்ற ஒரு ஏவலாளனாகத் தான் அரசன் செயல்பட்டான் என்று கூறிவிடலாம். (பக்கம் 109)

(3) சோழ மக்கள் அனைவரும் அவரவர்களுக்குத் தம் பிறப்பினால் ஏற்பட்டுள்ள சாதி முறையிலும் அச்சாதி முறையினால் கணிக்கப்பட்ட சமுதாய அந்தஸ்தின் அடிப்படையிலும் செயல்பட வேண்டும் என்பது அந்நாளையச் சமுதாயத்தின் நியதியாகும். இதற்குரிய சமுதாயச் சிந்தனையை மக்கள் மனத்தில் ஊட்டுவதற்குச் சோழர் கால அந்தணர்கள் அரசியல், பொருளாதாரச் செல்வாக்கும் பெற்றார்கள் . . . இவ்வாறு சாதி ஆசாரமானது சமயத்திற்கும் சமூகத்திற்கும் அரசியலுக்கும் தொடர்பு ஏற்படுத்தியது. (பக்கம் 7)

(4) பொருளாதார இன்னல்கள் தெய்வ சங்கல்பத்தால் ஏற்படுகின்றன என்ற மனஉணர்வை வலுப்படுத்துகின்ற முறையில் புராணங்கள் கிராமங்கள் தோறும் மக்கள் மனத்தில் தீவிரமாகப் புகட்டப்பட்டன. (ப. 196)

(5) சோழர் காலச் சமுதாயத்தின் அடிப்படைகள் சிதறுண்டு போகாமல் தடுக்க சோழர்களை அந்தணர்கள் மக்களுடைய சமூக உணர்வை சாதி ஆசாரப்படி வளர்த்தார்கள். இதனால்தான் பல்லவர் காலத்தில் தோன்றிய நந்தனார் போன்று வேறு எவரும் சோழர் காலத்தில் தோன்றவில்லை. (ப. 8)

(6) சோழர் காலச் சமூக நிலையில் சாதாரண வாழ்வியல் நடவடிக்கைகள் கூட மறுதலிக்கப்பட்ட அவலத்திற்கு ஆட்பட்ட சாதிகள் அதிகம். (ப. 227)

www.tamilarangam.net



(7) சோழப் பேரரசுக்குப் பின்பு சுமார் 250 ஆண்டுகள் கழித்து விஜயநகரப் பேரரசுக்கு அதிபதியாயிருந்த கிருஷ்ண தேவராயன் (1509 – 1524) தன்னுடைய 'அமுக்த மாலதியம்' என்ற நூலில் (கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் போன்றது) அந்தணர்களுக்கே அரசாங்கத்திலுள்ள சிவில், ராணுவப் பதவிகளை வழங்குவதற்கு வேண்டிய அவசியத்தை எடுத்துச் சொல்கிறான். தன்னுடைய அரசாங்கத்தின் உயர்பதவிகளை அந்தணர்களுக்கே அவன் அளித்தான். சோழருக்கு முந்திய பல்லவர் காலத்தில் தொடங்கிய, இத்தகைய ஆதிக்கம் விஜயநகரப் பேரரசில் முழுமை பெறுவதற்கு சோழப் பேரரசு காலத்தில் அவர்களுக்கு ஏற்பட்டிருந்த ஏற்றந்தான் வழி செய்தது வரலாற்று உண்மையாகும். (ப. 60)

இதுபோன்ற ஏராளமான செய்திகள் மேற்காணும் நூலில் உள்ளன. மேற்சொன்ன அரசியல், நீதி, நிர்வாகம், பொருளாதாரம் ஆகியன ஜி.எஸ்.ஆரைப் பொருத்தவரை 'கொடுங்கோல்' அல்ல, பார்ப்பன பார்ப்பனிய ஆதிக்கமும் அல்ல! அதுமட்டுமல்ல "இன்று மனுநீதியை எரிக்க வேண்டும் என்று சொல்கிறவர்கள் மனுநீதிக்கு என்றுமே இருந்திராத 'பெருமை'யைத் தருகிறார்கள் என்பது என் கருத்து" என்ற முத்தொன்றையும் உதிர்க்கிறார். இன்றும்கூட சங்கராச்சாரியார்கள் 'மனுநீதி'யை உயர்த்திப் பிடிக்கத்தானே செய்கிறார்கள்?

பகுதி 4–ல் ஜி.எஸ்.ஆர். எழுதுவது அடாவடித்தனம். காங்கிரஸ் தேசியம் வடிவமைக்கப்பட்ட விதத்தை, அதன் சித்தாந்தச் சட்டகத்தை, அதன் பொருளியல் அடிப்படையை விளக்குவதுதான் என் நூல். அப்படியிருக்க, எந்தவிதமான உருப்படியான மாற்றுக் கருத்தையும் தெரிவிக்காமல், "(எஸ்.வி.ஆரால்) ஆர்.எஸ்.எஸ். –பா.ஜ.க. வை வம்புக்கு இழுக்க முடியவில்லை" (இது சுத்தப் பொய் என்பது என் நூலைப் படித்தவர்களுக்குத் தெரியும். வேண்டிய அளவுக்கு அந்த அமைப்புகளை 'வம்புக்கு இழுத்திருக்கிறேன்') என்றும் "இந்திய தேசியம் பார்ப்பனியம்தான் என்பதை நிரூபிக்க . . . எஸ்.வி.ஆர்.. படாதபாடுபட்டிருக்கிறார்" என்றும் பொறுப்பற்ற முறையில் எழுதுகிறார். அவர் கூறுவதுபோல் காலனியத்திற்கு எதிராக உலகில் வேறெங்கிலும் இல்லாத பெரும் போராட்டத்தை காங்கிரஸ்தான் நடத்தியது என்பது உண்மையல்ல. சீனாவில் இதைவிடப் பெரிய போராட்டம் நடந்திருக்கிறது. மேலும், இந்தியாவில் நடந்த மாபெரும் போராட்டங்கள், போர்க்குணமிக்க போராட்டங்கள் பல காங்கிரசுக்கு வெளியே இருந்த சக்திகளால் நடத்தப்பட்டன. பல போராட்டங்களைக் காங்கிரஸ் அங்கீகரிக்க மறுத்தது அல்லது போராட்டங்களால் ஏற்பட்ட ஆபத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டது.

www.tamilarangam.net



"காந்தி இந்து மதத் தலைவர்களின் கைதி போல இயங்கினார்" என்று நான் கூறியுள்ளதாக மற்றொரு பொய்யைச் சொல்கிறார் ஜி.எஸ்.ஆர். "காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த பார்ப்பனிய – உயர்சாதி இந்துத் தலைவர்களின் கைதியாகவே அவர் செயல்பட்டார்" (ப. 69) என்பதுதான் எனது வாசகம். இதற்கான ஆதாரங்கள் என் நூலில் 'புனா ஒப்பந்தம்' பற்றிய பகுதியில் உள்ளது. இன்னும் ஆதாரம் வேண்டுமானால் பெங்களூர் பல்கலைக் கழகத்திலுள்ள D.R. நாகராஜ் என்ற அறிஞர் (காந்தியவாதி) எழுதியுள்ள The Flaming Feet என்ற நூலில் 21–26 ஆம் பக்கங்களில் உள்ள பகுதிகளைப் படித்துப் பார்க்கலாம்.

காந்தியையும், மாவோவையும் ஒப்பிடுகிறார் ஜி.எஸ்.ஆர். மாவோ சியாங்கே ஷேக்குடன் சேர்ந்தது ஜப்பானிய ஏகாதிபத்தியத்தை முற்றாக முறியடிக்க. காந்தி உயர்சாதி இந்துத் தலைவர்களுடன் சேர்ந்தது தலித்துகளின் உரிமையை நசுக்க, பார்ப்பனிய–பனியா நலன்களைக் காக்க மாவோ அடைந்தது முழு வெற்றி. காந்தி சாதித்தது ஏகாதிபத்தியத்துடன் சமரசம். அம்பேத்கர் பற்றிய ஓர் அவதூறையும் மொழிந்துள்ளார் ஜி.எஸ்.ஆர். பிரிட்டிஷாரிடமிருந்து சுயராஜ்யம் பெறுதல் என்பதிலிருந்து அம்பேத்கர் சிறிதளவுகூட பிசகியதில்லை. ஆனால் அவரே ஒருமுறை கூறியதுபோல "எல்லா எதிரிகளையும் ஒரே நேரத்தில் எதிர்த்துப் போராட முடியாது." இரண்டாம் உலகப்போரில் நாஜிகள் வெற்றி பெற்றால் நமது போராட்டத்தை மீண்டும் அரிச்சுவடியிலிருந்தே தொடங்க வேண்டியிருக்கும் என்று கூறிய அவர், நாஜிகளோடு யுத்தகளத்தில் இறங்கிய பிரிட்டிஷாரை ஆதரித்தார். மேலும் அவர் முன்வைத்த கோரிக்கை வைஸ்ராயின் நிர்வாகக் கவுன்சிலில் தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டும் என்பதுதான். அவருக்கு அந்த நிர்வாக கவுன்சிலில் தொழில்துறை உறுப்பினராக இடம் கிடைத்த போது அதை "பார்ப்பனியத்துக்குக் கிடைத்த அடி" என்று கூறினார். ஜி.எஸ்.ஆர் தவறாகக் குறிப்பிடுவது போல அம்பேத்கர் "பிற்பட்ட சாதியினருக்கு சலுகைகள்" கேட்கவில்லை, மாறாக தலித்துகளுக்கு அரசியல் அதிகாரத்தில் உரிய பங்கு கேட்டார். அவர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்துடன் 'சமரசம்' செய்து கொண்டதாக வைத்துக் கொண்டாலும், அது நிச்சயமாகப் பார்ப்பன – பனியா நலன்களுக்காக அல்ல, நாயினும் கேடாய் நலிந்துழன்ற கோடானு கோடி தாழ்த்தப்பட்ட மக்களின் நலன் பொருட்டுத்தான்.

"தலித் இயக்கம் பிரிட்டிஷாருடன் ஒத்துழைப்பதையே காங்கிரஸ் விரும்பியது. ஏனெனில் அப்போதுதான் தான் மட்டுமே உண்மையான

www.tamilarangam.net



ஏகாதிபத்திய எதிர்ப்புச்சக்தி என்று காட்டிக் கொள்ள முடியும் என்று நினைத்தது" என்று நான் அவதூறு செய்வதாக ஜி.எஸ்.ஆர். எழுதுகிறார். அம்பேத்கரும் ரெட்டமலை சீனிவாசனும் கலந்து கொண்ட வட்டமேசை மாநாட்டில் காந்தி பேசிய ஆணவப் பேச்சுகளே இதற்குச் சான்று. மற்றொரு சான்று இப்போது திடீர் காங்கிரஸ் தேசியவாதியாகக் காட்சியளிக்கும் ஜி.எஸ்.ஆர். அம்பேத்கர் பற்றிக் கூறியுள்ள அவதூறு. காங்கிரஸ் பற்றிய எனது மேற்காணும் கருத்துக்கு ஆதாரமாக கிளாட் மார்க்கோவிட்ஸையும் ஆன்டர்ஸனையும் ஏன் துணைக்கு அழைக்கவில்லை என்று ஜி.எஸ்.ஆர். கிண்டலடிக்கிறார். இயற்பியல் பற்றிப் பேச ஐன்ஸ்டினைத்தான் துணைக்கழைப்பார்களே தவிர துர்க்கீமை அல்ல என்பதை சமூகவியல் பேராசிரியர்களுக்கு நினைவூட்ட வேண்டியதில்லை.

சாவர்க்கர் (இவரை 'வீர சாவர்க்கர்' என்றழைப்பது நானல்ல, ஜி.எஸ்.ஆர். தான். அதற்குக் காரணம் உள்ளது) நேரு ஆகியோர் பற்றிய எனது கருத்துகளை விமர்சிக்கையில் "விமர்சனத்தின் அடிப்படை விதிகளைக்கூட ஏற்காமல் ஒருவரை விமர்சிப்பது ஒரு கலையாக எஸ்.வி. ஆரால் ஆக்கப்படுகிறது", 'சிறுபிள்ளைத் தனமானது' என்று சகட்டுமேனிக்கு விளாசித் தள்ளுகிறார். நான் சுட்டிக் காட்டியது சாவர்க்கரிடமிருந்த முரண்பாட்டைத்தான்: ஒருபுறம் இந்தியாவில் உள்ள 3000–த்துக்கும் மேற்பட்ட சாதிகள் அனைவருக்கும் 'இந்து' என்ற அடையாளத்தை வழங்குதல்; மற்றொருபுறம் மஹர்கள் தங்கள் சாதியை விட்டு வெளியேறக் கூடாது என்ற அறிவுரை தருதல். கலப்புத் திருமணம் என்பதற்கு அவர் நிபந்தனைக்குட்பட்ட ஆதரவுதான் அளித்தார். மேலும், சாதி ஒழிப்புக்காகப் பெரும் எண்ணிக்கையில் மக்களை திரட்டுவதற்குத் தேவையான உணர்வுப்பூர்வமான நடவடிக்கையின் பகுதியாக அதைக் கருதாமல் அதற்குப் பதிலியாகவே கருதினார். இந்த விவரங்களை 'சமக்ரா சாவர்க்கர்' என்ற மராத்திய நூலிலிருந்து மேற்கோள் காட்டிய மராத்திய தலித் அறிஞர் டாக்டர் கோபால்குருவின் கட்டுரையிலிருந்து தான் நான் எடுத்தாண்டுள்ளேன். சாவர்க்கர் சாதியமைப்பைப் பாதுகாத்தது மட்டுமல்ல, அவற்றை நியாயப்படுத்தும் சாஸ்திரங்களைச் சூத்திரர்களுக்கும் தலித்துகளுக்கும் கற்பிக்க வேண்டும் என்று பரிந்துரை வேறு செய்தார். அம்பேத்கரும் கலப்பு மணம், கலந்துண்ணல் ஆகியவற்றைச் சாதியொழிப்புக்குப் பயன்படும் கருவிகள் என்று கருதினார். ஆனால் அவை மட்டுமே போதுமானவை என்று கருதவில்லை. இரண்டாவதாக, சாதியற்ற சமுதாயத்தைக் கலப்புமணங்கள் மூலமாக அடைவதற்கு சாஸ்திரங்களுக்குள்ள புனிதத் தன்மையையும் அவற்றுக்கும் அவற்றை

www.tamilarangam.net



வியாக்கியானம் செய்யும் பார்ப்பனர்களுக்குமுள்ள அதிகாரத்தையும் மக்கள் தகர்த்தெறிய வேண்டும் என்றும் கூறினார். இன்று அம்பேத்கரையும் சாவர்க்கரையும் ஒரே வார்ப்பில் போட்டெடுக்க இந்துத்துவவாதிகள் முயற்சி செய்யும் சூழலில் இந்த வேறுபாட்டை நாம் வலியுறுத்த வேண்டியுள்ளது. "மஹர்கள் தங்கள் தொழிலைச் செய்வதில் பெருமைப்பட வேண்டும்" என்று சாவர்க்கர் கூறியதாக நான் எங்கும் எழுதவில்லை. என் சார்பில் ஜி.எஸ்.ஆர். மற்றொரு நூலை எழுதுகிறார் போலும்! மஹர்கள் தங்கள் குலத்தொழிலைச் செய்தாலும் இராணுவத்தில் சேர்ந்தாலும் வேதம் கற்றாலும் மஹர் சாதியிலேயே இருக்க வேண்டும் என்பதுதான் சாவர்க்கரின் கருத்து.

அது சரி. சாவர்க்கர் பற்றிய மிக முக்கியமான விஷயத்தைப் பற்றி அதாவது முஸ்லீம் விரோத பாசிசத் தத்துவத்தைப் பற்றி ஜி.எஸ்.ஆர். வாயே திறக்கவில்லையே ஏன்? காரணம் எளிதானது. பாபர் மசூதியை இடித்துவிடலாம் என்று பரிந்துரை செய்தவர் தானே ஜி.எஸ்.ஆர்.?

'இந்துத்துவம் : சாவர்க்கரும் நேருவும்' என்ற அத்தியாயம் மட்டுமல்லாது I, VII, VIII –ஆம் அத்தியாயங்களிலும் நேருவின் கருத்துகள், செயல்பாடுகள், சொல்லுக்கும் செயலுக்குமுள்ள முரண்பாடுகள் ஆகியவற்றைப் பற்றிப் பல செய்திகள் கூறியிருக்கிறேன். ஆனால் விமர்சகரோ நேருவின் 'Discovery of India' விலுள்ள சில கருத்துகள் பற்றிய எனது விளக்கத்தைக் கேலி செய்வதோடு (அவற்றை மறுக்க முயற்சி கூடச் செய்யவில்லை) நின்றுவிட்டார். ஆப்கானிஸ்தான் சென்று அப்பாவின் – கட்டளைப்படி பாபரின் மசூதிக்கு மரியாதை செலுத்தி வந்த இந்திராகாந்தியின் பாபர் மசூதிக்குக் காட்டிய மரியாதைதான் என்ன? அவரது முஸ்லீம் விரோத நடவடிக்கைகளை (என் நூல் பக்கம் 17–22) ஜி.எஸ்.ஆர். மறந்துவிட்டது ஏனோ? பாபரின் சமாதி மீது அக்கறை காட்டிய நேரு அவர் கட்டிய மசூதி விஷயத்தில் ஏன் அசிரத்தையாக இருந்தார்? ஜி.எஸ்.ஆர். கூறுவது போல நேருவை நான் இந்துத்துவவாதி என்று குறிப்பிடவில்லை, நேருவின் சமயச் சார்பான தேசியத்திற்கும் இந்தியத்திற்கும் அடிப்படையில் பார்ப்பனியம் தான் என்பதுதான் எனது வாதம்.

ஜி.எஸ்.ஆர். கட்டுரையின் 6–ஆம் பகுதிக்கு வருவோம். இந்தியா – பாகிஸ்தான் பிரிவினைக்கு பிரிட்டிஷார் ஒரு காரணமல்ல என்று எங்குமே நான் கூறவில்லை. அவர்களது 'பிரித்தாளும் சூழ்ச்சி'யைப் பற்றி பள்ளி மாணவன்கூட எடுத்துச் சொல்வான். ஆனால் பேராசிரியர்கள்கூட

www.tamilarangam.net



எடுத்துச் சொல்லாத விஷயம் – பிரிக்கப்படுவதற்கு ஏதுவான வகையில் இங்கிருந்த உள்முரண்பாடுகளாகும். நாட்டைத் துண்டு போட்டதற்கு முக்கியக் காரணமாக இருந்தவர்கள் முஸ்லீம் முதலாளிகளும் முஸ்லீம் வகுப்புவாத அரசியல்வாதிகளும்தான் என்ற வழக்கமான இந்திய 'தேசியவாதி வாத' விளக்கம் மூடி மறைத்துள்ள உண்மைகளை வெளிப்படுத்துவதுதான் என்நோக்கம். முஸ்லீம்கள் எல்லா சமயங்களிலுமே நாட்டுப்பிரிவினையை மட்டுமே ஒரே தீர்வாகக் கொண்டிருக்கவில்லை என்பதையும் ஒரு மூன்றடுக்குக் கூட்டாட்சியமைப்பை ஏற்றுக் கொள்வதற்குக்கூட அவர்கள் முன் வந்திருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டி இந்துப் பெருமுதலாளிகள் ஏன் முஸ்லீம் முதலாளிகளுடன் அதிகாரத்தைப் பங்கு போட்டுக் கொள்ள விரும்பவில்லை என்பதற்கான காரணங்களைச் சொல்லியிருக்கிறேன். நாட்டுப் பிரிவினையை ஒத்துக் கொள்வதா வேண்டாமா என்று தீர்மானிக்கும் அதிகாரம் காங்கிரசிடம் அல்ல இந்துப் பெருமுதலாளிகளிடம்தான் இருந்தது. இந்திய அரசியலமைப்பின் குறிக்கோள் தீர்மானத்தையே மாற்றியமைக்கக்கூடிய வலிமை அவர்களிடம் இருந்தது. நாட்டுப் பிரிவினையால் அவர்களுக்கு ஏற்பட்டது இழப்பல்ல – மாறாக அரசியல், பொருளாதார லாபங்களே என்பதை கிளாட் மார்க்கோவிட்ஸ் என்ற வரலாற்றறிஞர் திரட்டியுள்ள ஆவணங்களின் அடிப்படையில் விளக்கியுள்ளேன்.

தனது கட்டுரையின் கடைசிப் பகுதியில் 'பார்ப்பனீயம்' என்பதை நமது பொது அறிவும் தத்துவ அறிவும் புரிந்து கொண்டிருப்பதற்கும் எனது நூலில் விளக்கியுள்ளவற்றுக்கும் மாறான ஓர் 'உன்னதமான' வரையறை கொண்டு விளக்குகிறார். ஜி.எஸ்.ஆர். இப்படிச் செய்வதன் மூலம் நமது நாட்டில் உள்ள அரசியல், பொருளாதார, சமூக, பண்பாட்டு ஒடுக்குமுறைக்குத் துணை புரியும் பார்ப்பனியத்தை, வரலாற்று ரீதியாகத் திட்டவட்டமான, பருண்மையான வடிவத்தில் நிலவும் பார்ப்பனியத்தை (இதை வெறும் 'கெட்ட வார்த்தை'யாக நானும் குறுக்கவில்லை) இல்லாத ஒரு விஷயமாகக் காட்ட கடைசி முயற்சி செய்கிறார். இதைவிட சாதுர்யமான பார்ப்பனியம் உண்டா?

அதாவது பார்ப்பனியம் என்பதை elitism என்று வரையறுத்து எல்லாச் சமுதாயங்களிலும் elite களும் elitism மும் இருக்கத்தான் செய்யும் என்றும் கூறுகிறார். சமூகவியலாளரான பாரெட்டோவை (Pareto) ஒட்டி இக்கருத்துகளைச் சொல்லும் ஜி.எஸ்.ஆர். லெனினின் முன்னணிப்படை (Vanguarc) கூட elite group தான் என்று கூறுகிறார். லெனினின் elite

www.tamilarangam.net



group ல் ஒரு 'சக்கிலியரு'க்கும்கூட இடம் இருந்தது. ஆனால் இங்குள்ள பார்ப்பனர்களோ, elite ஆகுவதற்குத் தகுதியும் திறமையும் பிறப்பால் உரிமையும் தங்களுக்கு மட்டுமே உண்டு என்று கூறிக்கொண்டிருந்தவர்கள். மற்றபடி லெனினிடம் பார்ப்பனியம் இருந்ததா இல்லையா என்பதை விளக்கும் பொறுப்பை மார்க்சியச் சார்பான சிற்றேடுகளுக்கே விட்டுவிடுகிறேன்.

"தனிமனிதன் ஒருவன் சமூகத்தைத் தன்னுடைய அறிவினால், தவவலிமையால் நல்ல செய்கையாய் மாற்றமுடியும்" என்கிறார் ஜி.எஸ்.ஆர். பார்ப்பனர்கள் தம் அறிவைக் கொண்டும் தவவலிமையைக் கொண்டும் ஏற்படுத்தியுள்ள சமூக விகாரங்களைப் பற்றி நாம் விளக்கத்தான் வேண்டுமா? அறிவாளிகளும், கலைஞர்களும், ஞானிகளும் எல்லாச் சமுதாயங்களுக்கும் தேவைதான். அவர்களது பணிகள் குறிப்பிட்ட சமூகச் செயல்பாடுகள்தான் (Functions). ஆனால் மூளை உழைப்பை மட்டுமே உயர்வானதாகக் கருதும் போக்கைத்தான் மார்க்சியம் எதிர்க்கிறது. மூளை உழைப்பு தங்களுக்கு மட்டுமே உரியது என்று பார்ப்பனர்கள் கூறுவதைத் தான் பெரியாரியமும் அம்பேத்கரியமும் எதிர்க்கின்றன.

"இந்திய வரலாற்றில் பார்ப்பனியம் கோலோச்சவில்லை என்பதே என் முடிவு" என்ற தனது இறுதித் தீர்ப்புக்கு ஆதாரமாக எதையாவது சொல்கிறாரா என்று பார்த்தால் அது இந்தியாவிலுள்ள பல்லாயிரம் சாதிகளை நான்கு வர்ணங்களுக்குள் கொண்டுவரச் செய்யப்பட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன என்ற ஒரு கருத்தைச் சொல்கிறார். எத்தனையோ சாதிகளும் உபசாதிகளும் இருக்கலாம். அவற்றை வர்ணங்களுக்குள் உள்ளடக்க முடியுமா முடியாதா என்பதல்ல பிரச்சினை. பஞ்சாபாக இருந்தாலும் மதராஸாக இருந்தாலும் எல்லா இடங்களிலும் சாதிகள் ஏறுவரிசையில்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன என்பதும் எல்லா இடங்களிலும் பார்ப்பனர்கள்தான் உச்சாணிக் கொம்பில் உட்கார்ந்திருக்கிறார்கள் என்பதும் தான் பிரச்சினை.

"பிரிட்டிஷ் ஆட்சியில்தான் பார்ப்பனர்களும் பார்ப்பனியமும் வீர்யமடைந்தன" என்ற ஒரே ஓர் உண்மையையாவது சொல்கிறாரே என்று நாம் நினைக்கலாம். ஆனால் அதற்கான சமூக, அரசியல், பண்பாட்டு, பொருளாதாரக் காரணங்களை (எனது நூலில் காணப்படுவன போன்றவற்றை) கூறுகிறாரா என்று பார்த்தால், பார்ப்பனியச் சிந்தனை ஐரோப்பிய அறிஞர்களைக் கவர்ந்ததுதான் காரணம் என்கிறார். இதெல்லாம் 'ஓரியண்டலிசம்' அல்ல போலும்!

www.tamilarangam.net



"சுதந்திரப் போராட்டமும் சுதந்திரத்திற்குப் பிறகு ஏற்பட்ட அரசியல், சமூக மாற்றங்களும் இந்தியாவில் மீண்டும் பழைய **சமூக சமநிலை** உண்டாக வழி செய்துள்ளன. பெரியாரும் அம்பேத்கரும் இன்னும் பல வேறு தலைவர்களும் இயக்கங்களும் காலனியம் உருவாக்கிவிட்ட சமனற்ற நிலையை ஓரளவு சரி செய்துள்ளதாகவே காண்கின்றேன்" என்கிறார் ஜி.எஸ்.ஆர். (அழுத்தம் என்னுடையது)

இந்திய வரலாற்றில் பார்ப்பனியம் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருந்த நிலையை ஜி.எஸ்.ஆர்., 'சமூக சமநிலை' என்று தன் கட்டுரையின் 3–ஆம் பகுதியில் வியாக்கியானப்படுத்தியுள்ளதால் பெரியாரையும் அம்பேத்கரையும்கூட அவர் இங்கு பார்ப்பனர்களாக மாற்றிவிட்டார் என்று பொருள் கொள்ள வேண்டியுள்ளது!

"பல்வேறு இனங்களும் ஒதுக்கப்பட்ட மக்களும் தங்கள் உரிமைக்காகவும் மரியாதைக்காகவும் நடத்தும் போராட்டங்கள், இயக்கங்கள் பார்ப்பனியத்தை அதற்கே உரிய இடத்தில் வைப்பதில்" வெற்றிபெறவில்லை என்பதுதான் உண்மை. பல்லாயிரக்கணக்கான ஆண்டுக்காலம் இருந்த ஆதிக்கத்தை 70–80 ஆண்டுக் காலத்திற்குள் எப்படித் தகர்த்தெறிய முடியும்?

"நவீன பொருளாதாரக் கொள்கைகளும் விஞ்ஞானம், தொழில் நுட்பம், கல்வி போன்றவற்றில் கடைப்பிடிக்கும் அணுகுமுறையும் பார்ப்பனியத்தை ராஜமரியாதையுடன் மீண்டும் அரியணையில் அமர்த்திவிடும் அபாயம் உள்ளது. எஸ்.வி.ஆரின் நூல் அந்த அபாயங்களின் பக்கம் தன் கவனத்தைச் செலுத்தியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்" என்று ஜி.எஸ்.ஆர் கூறும்போது நமக்கு சிரிப்புதான் வருகிறது. ஏனெனில் (1) பார்ப்பனியம் ஒருபோதும் ஆதிக்கம் செலுத்தியதில்லை, 'கோலோச்சியதில்லை' என்று கட்டுரை நெடுகக் கூறிக்கொண்டு வந்தவர் "ராஜமரியாதையுடன் மீண்டும் அரியணையில்" பார்ப்பனியம் அமர்ந்துவிடும் அபாயம் உள்ளது என்று கூறி முன்பு அது அரியணையில் இருந்தது என்று குறிப்பால் உணர்த்துகிறார்; (2) 'அந்த அபாயங்கள் யதார்த்தங்களாகி நீண்ட காலமாகிவிட்டது என்பதைத் தானே எனது நூல் கூறுகிறது!

**நிகழ் 28, 29**
**டிசம்பர் 94**

www.tamilarangam.net



# ஒரு ஆன்மீக அதிசயம்

**தவத்திரு குன்றக்குடி அடிகளார் - பொன்னீலன்**

சைவ மடங்கள், வைணவ மடங்கள் எனத் தமிழகத்தில் திருமடங்கள் பல உள்ளன. பலநூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியவை இவை. சமயப் பணியும், சமயம் சார்ந்த இலக்கியப் பணியும், தத்துவப் பணியும் செய்து வருபவை. தமிழ்நாட்டின் ஆதிக்கச் சக்திகளுக்குச் சொந்தமானவை. இந்து மேன்மை, இந்து ஒற்றுமை என்று என்னதான் பேசினாலும் இன்றுவரை சாதீயச் சம்பிரதாயங்களிலிருந்து பெருமளவில் விலகாதவை. சொல்லப் போனால் தமிழகத்தின் வலுவான சாதி மையங்களே இம்மடங்கள்தான்.

குன்றக்குடி திருத்தலத்திலிருக்கும் திருவண்ணாமலை ஆதீன மடமும் இதற்கு விதிவிலக்கல்ல. ஐநூறு ஆண்டுகட்கு அதிகமான தொன்மையுள்ள இந்த சைவ வேளாளர் மடத்தின் பழைய மடாதிபதிகளில் எவருமே மடத்திற்குரிய சாதீயக் கட்டுக்கோப்பினை மீறியவரில்லை. முற்றும் துறந்த இம்மடாதிபதிகள், திருமடத்தின் கடல் போன்ற செல்வங்களின் மன்னர்கள். மக்களுக்கு இவர்கள் சிவபெருமானின் மறு அவதாரங்கள். தங்கப் பல்லக்கில் பவனிவந்து மக்களுக்குத் தரிசனம் தருபவர்கள். மனுதரும அடிப்படையில் மக்களை வகைப்படுத்தி, அருளாசி அளிப்பவர்கள். சொர்க்கலோக நுழைவின் திசைகாட்டிகள். மக்களின் இவ்வுலக வாழ்க்கை இவர்களுக்கு மாயம் – பொய் – புறக்கணிப்பட வேண்டிய கீழ்மை – அருவருப்பு!

இப்படிப்பட்ட திருமடத்தின் தலைவராகத்தான் தவத்திரு அடிகளார் 1952 ஜூன் 16–ஆம் நாள் பொறுப்பேற்றார். தன் வாழ்நாளில் அவர் எத்தனை புரட்சிகரமான மாறுதல்களைக் கொண்டுவந்து விட்டார்! தான் பதவி ஏற்ற வைபவத்தை அவர் எப்படிக் கொண்டாடினார் தெரியுமா? சமபந்தி போஜனமாக! அதுமட்டுமா? அவருடைய பதவி ஏற்பைச் சிறப்பிப்பதற்காக மயிலாடுதுறையில் மகேசுவரர் பூஜை ஏற்பாடு செய்யப்பட்டது. பிரம்மாண்டமான ஏற்பாடு. ஆனால் ஆதிக்கச் சாதியாருக்கும், அடிப்படைச் சாதியாருக்கும் தனித்தனியாகப் பந்தி போடப்பட்ட போது மகேசுவரர் பூசையைப் புறக்கணித்துத் தன் சாதியினரையே பகைத்துக் கொண்டார். குன்றக்குடித் திருமடத்தினுள் சாதிசமய பேதமின்றி எல்லாரும் வரவும், அருளாசி பெறவும் வழிசெய்தார். அதுமட்டுமல்ல திருமடத்துப் பணியாளர் குழுவில் தலித்துகளையும்

www.tamilarangam.net



நியமித்தார். தமிழகச் சமய வரலாற்றில் எத்தனை புரட்சிகரமான புதுமை இது. அதுமட்டுமா, சமயச்சீலமுள்ளோர் யாவரும் தீட்சை பெற்றுச் சாதிவேறுபாடின்றிப் புனலும் மலரும் சொரிந்து இறைவனை வழிப்படலாம் என்றார்.

தமிழ்நாட்டில் வேறு எந்தத் திருமடத்திலாவது இப்படி உண்டா? இன்றாவது இப்படி உண்டா?

அடிகளார் ஒரு இந்து. அதிலும் சைவர். சிவனே அவருக்கு முழுமுதற் கடவுள். ஆனால் இதுதான் கடவுளின் திருநாமம் என்று எங்காவது, எப்போதாவது ஒரு பெயரைத் தனிமைப்படுத்தி மக்களிடம் சொல்லியதுண்டா? இந்த மதத்துக்கு வாருங்கள் என்று எப்போதாவது மக்களை அழைத்தது உண்டா? மாறாக எல்லாக் கடவுள்களுக்கும் அவர் சம முக்கியத்துவம் அளித்தார். எல்லாக் கோவில் வழிபாடுகளிலும் அவர் வேறுபாடு இன்றிக் கலந்து கொண்டார். ஒரு மடாதிபதி இன்னொரு மடாதிபதியைச் சந்திக்காத சூழ்நிலையை மாற்றி மடாதிபதிகள் கூடிக் கலந்து தமிழனுக்கு நன்மை பயக்கும் காரியங்கள் செய்யும் தெய்வீகப் பேரவையை நிறுவினார். தான்தோன்றித்தனமாகச் செயல்பட்ட மடாதிபதிகளை சனநாயக மரபுகளுக்குப் பழக்க முயற்சித்தார். தீண்டாமைக்கு எதிராகவும், கலப்புத் திருமணங்களுக்கு ஆதரவாகவும் தீர்மானங்களை தெய்வீகப் பேரவையே நிறைவேற்றச் செய்தார். எப்பேர்பட்ட அரிய சாதனை இது.

வணக்க முறையில் கூட புதுமையைப் புகுத்தினார் அவர். இறைவணக்கம் என்பது உயிர் தன் தரத்தை மேம்படுத்திக் கொள்ளச் செய்து கொள்ளும் பயிற்சி என்பதால், கடவுளுக்கும் மனிதனுக்கும் இடையில் தரகன் ஒருவன் இருப்பதையே வெறுத்தார் அவர். விழாக்களை அவற்றின் பொருள் துலங்க நடத்தினார். பிட்டுக்கு மண் சுமந்த விழா நாளில் பக்தர்கள், திருமடத்தில் திருப்பணி செய்து இறைவன் உழைப்பாளியாய் மாறியதை நினைவு கூரச்செய்தார். கண்ணப்பர் விழாவில் கண்ணொளி வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். திருமுறை விழாவில் திருத்தொண்டர்கள், திருமுறை அறிஞர்கள் கவுரவிக்கப்பட்டனர்.

தமிழனின் அடிப்படையான பண்பாட்டு அலகு எது? சாதியா? சமயமா? இனமா? எது சரியான அலகு? ஒரு மேற்சாதிப் பீடாதிபதியாக இருந்து கொண்டும் அடிகளார் அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார். இனமே மனித சமுதாயத்தின் அடிப்படை அலகு. சாதி உணர்வு, சமய

www.tamilarangam.net



உணர்வு, எல்லாம் இன உணர்வுக்கு உட்பட்டவைகளே. அப்படி உட்படும்போது தான் அவை வீரியம் மங்கிச் சுருங்கும், தேயும், படிப்படியாக மாயும். அது மட்டுமல்ல, சமத்துவமான இனங்களின் கூட்டணியே தேசம். பல தேசங்களின் சமத்துவமான கூட்டணியே சர்வதேசம். இவ்வாறு பிரபஞ்ச வியாபகத்துக்கும் இன உணர்வு இடம் தருவதை விளக்கினார் அவர்.

எந்த நிலையிலும் தான் முதன்மையாக ஒரு தமிழன் என்பதை அடிகளார் மறந்ததில்லை. இந்தத் தமிழுணர்வாலேயே அவர் கோயில்களின் வழிபாட்டு மொழியாயிருந்தாலும் சரி, கல்விக்கூடங்களின் பயிற்று மொழியாயிருந்தாலும் சரி, அரசின் நிர்வாக மொழியாயிருந்தாலும் சரி, விஞ்ஞானத் தொழில் நுட்ப மொழியாயிருந்தாலும் சரி, தமிழ்நாட்டில் தமிழே இருக்க வேண்டும் என்று தன் காலம் முழுதும் போராடினார்.

இந்த இன உணர்வுதானே ஆத்திகரான அவரையும், முழுக்க நாத்திகரான பெரியாரையும் இணைத்தது. தங்கள் வேறுபாடுகளை மறந்து தமிழனின் நலனுக்காக ஒன்றுபட்டுப் போராட வைத்தது. எவ்வளவு நெஞ்சுறுதி வேண்டும், இப்படி ஒரு நிலை எடுக்க!

அடிகளார் ஒரு துறவி. துவராடை அணிந்தவர். இப்பூமியின் வாழ்வு மாயை என்று ஒதுக்கி, பரம்பொருளை அடையும் மேலுலக வாழ்வுக்காக மக்களைத் தயார்படுத்த வேண்டியவர். ஆனால் அவருடைய மாபெரும் சாதனையாக உலகம் கருதுவது எது? மண்ணில் விண்ணைக் காண முயற்சிக்கும் குன்றக்குடித் திட்டம் தானே? சுரண்டலற்ற, ஏற்றதாழ்வற்ற, எல்லாருக்கும் வேலை வாய்ப்புத் தருகின்ற, ஒரு பொதுமைச் சமுதாயம் உருவாக்கும் திட்டமல்லவா அது. அது வீட்டுக்கு ஒருவருக்கு வேலை உத்திரவாதம். எந்த வீட்டிலும் பட்டினி இல்லை. ஊரில் வட்டிக்கடை இல்லை. சாராயக்கடை, பிராந்திக்கடை இல்லை. உழைப்பிலும், வாழ்விலும் ஆணும், பெண்ணும் சரிநிகர். உள்ளூர் கச்சாப் பொருட்களைக் கொண்டு இயங்கும் விதவிதமான தொழிற்சாலைகள், கூட்டுப்பண்ணைகள். அடிகளார் சொர்க்கத்தை விண்ணில் காட்டவில்லை. மண்ணில் படைத்துக் காட்டினார்.

உலக வாழ்வை மறுக்க வேண்டிய சமயவாதி இவ்வாறு உலகை நேசிக்கிறார். வாழ்வை நேசிக்கிறார். அவர் சொல்லுகின்றார். "வாழ்க்கை அருமையானது. அருமையிலும் அருமையானது! வாழ்க்கை பொய்யானது, துன்பமானது என்ற கருத்து தமிழியலுக்கு மாறானது."

www.tamilarangam.net



கருத்து முதல்வாதியான அவர் கருத்து முதல் வாதத்தை மறுக்கும் மார்க்சீயத்தை நேசிக்கின்றார். மார்க்சை மாமேதை என்று போற்றுகின்றார். உலகம் இன்னாததுதான். ஆனால், அதை மாற்றிக் காட்ட வேண்டிய பொறுப்பு அறிஞருக்கு உண்டு என்னும் சங்க காலக் கருத்தே மார்க்சீயத்தின் மூலக்கருத்து என்கிறார். சைவ சித்தாந்தத்துடன் மார்க்சீயத்தின் கூறுகளை இணைக்கத் துணிச்சலுடன் முயன்ற தத்துவ மறவன் அவர். கடவுள் நம்பிக்கையில் சைவமும், மார்க்சியமும் வேறுபடுகின்றன அன்றி, மற்றபடி மனிதவாழ்வை மேம்படுத்துவதில் இரண்டின் இலட்சியங்களும் ஒன்றே என்றார். மார்க்சியத்தின் லட்சியத்தைத் தன் ஆன்மீக நோக்கில் அற்புதமாய்ச் சொல்லுகிறார் பாருங்கள் :

"மார்க்சியத்தின் லட்சியம் மானிடத்தின் தரத்தை உயர்த்துதல், ஆன்மாவைச் செழிப்புறச் செய்தல். உலகின் எண்ணற்ற வைப்புகளை அனுபவத்துக்குக் கொண்டு வரச் செய்தல். காலம் தூரம் ஆகியவற்றை வென்று விளங்கும் ஒருலகம் காணல். மனித நாகரிகத்தினை அரித்து அழிக்கும் நச்சுத் தீமைகளை அறவே அகற்றுதல். உலக வரலாற்றுக்கு உந்து சக்தியாக விளங்குதல். இவை மானிடத்தின் சிறப்புகள். இத்தகைய சிறப்புகளுடன் மனிதன் வாழ்ந்தால்தான் அது மானிட வாழ்க்கை. அதுவே மார்க்சியத்தின் திரண்ட கருத்து."

இந்த லட்சியம் சைவ சித்தாந்தத்துக்கு விரோதமானதல்ல. நுணுகிப் பார்த்தால் எந்தச் சமய சித்தாந்தத்துக்கும் விரோதமானதல்ல. பின் ஏன் சமயங்கள் மார்க்சியத்தை எதிர்க்கின்றன? இயக்கங்களாகத் தொண்டு செய்து கொண்டிருந்த சமயங்கள் இறுகி, இயக்கத்தன்மை இழந்து, அதிகார பீடங்களாகி விட்டதுதான் காரணம் என்கிறார் அடிகளார்.

உழைக்கும் மக்களிடம் எவ்வளவு பாசம் வைத்திருந்தார் அடிகளார்! மனிதனை மனிதன் சுமக்கும் கொடுமையில் அருவருப்படைந்து அல்லவா தான் பதவிக்கு வந்த மறு ஆண்டே மடத்தின் தங்கப் பல்லக்குகள் இரண்டையும் மூலையில் போடச்சொன்னார்! அதற்காக மக்களைச் சந்திக்காமலிருந்தாரா? படிப்பறிவற்ற நம் பாமர சனங்களைச் சந்திப்பதற்காகவே குறுக்கும் நெடுக்குமாகத் தமிழகத்தை எத்தனை ஆயிரம் முறை சுற்றியிருப்பார் அவர். எத்தனை கூட்டங்களில் முழங்கியிருப்பார் அவர். அந்தக் கூட்டங்கள் வெறுங்கூட்டங்களா? தமிழ்ப் பாமர மக்களின் பல்கலைக் கழக வகுப்பறைகளல்லவா அவை.

www.tamilarangam.net



திருமடத்திலுள்ள அலுவலர்களையும், பணியாளர்களையும் அவர் ஏமாற்றிய கதை தெரியுமா உங்களுக்கு? சேதுபதி மன்னனும் பரிவாரங்களுமாக 40 பேர் மடத்துக்கு வருகிறார்கள். வரவேற்கச் சிறப்பான ஏற்பாடுகளைச் செய்யுங்கள் என்று அவர் சொன்னபோது திருமடம் எத்தனை சுறுசுறுப்படைந்திருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? கடைசியில் மடத்துக்கு வந்தவர்கள் யார் தெரியுமா? திருமடத்து வயல்களில் வேலை செய்யும் 40 விவசாயத் தோழர்கள். சேதுபதி மன்னனுக்கும் பரிவாரங்களுக்கும் உரிய சிறப்புகள் அத்தனையையும் அன்று அனுபவித்தவர்கள் அவர்கள். எல்லம் முடிந்த பிறகு ஏமாற்றத்தோடு முணுமுணுத்த மடத்துப் பணியாளர்களுக்கு அடிகளார் என்ன சொன்னார் தெரியுமா? தொழிலாளர்கள் வருகிறார்கள், வரவேற்புக்கு ஏற்பாடு செய்யுங்கள் என்று. நான் உண்மையைச் சொல்லியிருந்தால் இத்தனை சிறப்பாக வரவேற்றிருப்பீர்களா? என்று. உழைக்கும் மக்கள்பால் எவ்வளவுநேசம் இருந்திருந்தால் இப்படி ஒரு கேள்வி அவர் உள்ளத்திலிருந்து பிறந்திருக்கும்.

இதுதானே நிசமான ஆன்மீகம்! இது தானே நிசமான இறைத்தொண்டு! இதனால் தானே சாதிப்பூசல்களையும், சமயப் பூசல்களையும் தீர்த்துவைக்கச் சலிப்பில்லாமல் அலைந்தார் அடிகளார். உலக சமாதான இயக்கம் முதல் உள்ளூர் சமாதான முயற்சி வரை அத்தனையிலும் ஆழ்ந்து ஈடுபட்டார். ஜீவாவின் இலக்கியப் பெருமன்றத்தில் இதனால்தானே தன் வாழ்வின் இறுதிவரை தலைமைப் பொறுப்பேற்று உழைத்தார். பட்டிமன்றங்கள் வாயிலாகவும், சிறப்புரைகள் வாயிலாகவும் மக்களுக்கு நல்லறிவும் நல்லுணர்வும் ஊட்டினார்கள். பாரதியையும், பாரதிதாசனையும், பட்டுக்கோட்டையையும் ஜனங்களுக்கு இனங்காட்டினார்.

எத்தனை அற்புதமான மனிதர்! மறைந்து விட்டாரே! தமிழ் பண்பாட்டுப் பரப்பில் எவ்வளவு பெரிய வெற்றிடம் ஏற்பட்டு விட்டது. எளிதில் பூர்த்தி செய்யத்தக்க வெற்றிடமா? எதிர்நிலைகளின் ஒருமையும், போராட்டமும் என்ற மார்க்சிய இயக்க இயல் கோட்பாட்டுக்கு முழு உதாரணமாய்த் திகழ்ந்த அடிகளார் போல் இன்னொருவர் உருவாகத் தமிழகம் எத்தனை காலம் இனித் தவங்கிடக்க வேண்டும்! எத்தனை பெரிய ஆன்மீக அதிசயம் அவர்! அந்த அதிசயம் மறைந்து, தமிழகமெங்கும் இருள் பரவிக் கிடக்கிறதே. தமிழனே எத்தனை பெரிய இழப்பு . . .

நிகழ் 30
ஜூலை 95

www.tamilarangam.net



# பெண்களும் அரசியலும்

- கெயில் ஓம்வெய்த்

பெண்ணடிமைத்தனத்தின் பரிமாணங்கள் பல. உழைப்பை ஆண் – பெண் என்ற முறையில் பிரிப்பதால் குழந்தையை வளர்ப்பதும் வீட்டு வேலையும் பெண்ணின் முக்கிய கடமை ஆக்கப்படுகிறது. மேலும் இதனால் ஆண் ஆதிக்கம் உள்ள இன்றைய பொது வாழ்விலே மிகவும் சுரண்டலுக்கு உள்ளாவதும், மிகவும் அமைப்பாக்கப்படாததுமான இடங்களுக்கே தள்ளப்பட்டு உள்ளாள். அவளுக்கு சொத்து கிடையாது. மூல வளங்களின் மேல் உரிமை கிடையாது. வன்முறையும், வன்முறை செலுத்தப்படும் என்ற அச்சுறுத்தலுமே இந்த உழைப்புப் பிரிவினையை நிர்ப்பந்தமாக நடைமுறைப்படுத்துகிறது. மதத்தில் – பண்பாட்டில் – கல்வியில் ஒரே விதமாக பெண் கீழ்ப்படுத்தப்பட்டுள்ளாள். சுருக்கமாகச் சொன்னால், உற்பத்தி சாதனங்கள், மறு உற்பத்தி சாதனங்கள், வன்முறைச் சாதனங்கள் ஆகியவற்றை கட்டுப்படுத்துவதிலிருந்தும், கையாள்வதிலிருந்தும் பெண்கள் விலக்கி வைக்கப்பட்டு உள்ளனர். அதாவது பொருளாதாரம், குடும்பம், அரசு ஆகிய துறைகளில் அவர்கள் ஆதிக்கம் செய்யப்படுகின்றனர், சூறையாடப்படுகின்றனர்.

மார்க்சீயக் கோட்பாடானது – சுரண்டல் பற்றிய முழுமையான ஆராய்ச்சியைச் செய்ய விரும்புகிறதுதான். அவ்வாறே பொருளாதாரத் துறையில் அது ஏறக்குறைய முழுமையான விளக்கம் தரும் திறனையும் பெற்றுள்ளது. உற்பத்தி, உற்பத்தியுடைமை, உற்பத்தி உறவுகள் போன்ற கருத்துகளை அது விளக்குகிறது. குடும்பம், தனிச்சொத்து, அரசு என்ற தன் நூலில் எங்கல்சு உற்பத்தி முறையில் ஏற்படும் மாற்றமும் தனிச் சொத்தின் தோற்றமும் தீர்மானகரமானவை என்று பார்க்கிறார்; குடும்பத்தையும் அரசையும் தனி அத்தியாயங்களில் ஆராய்கிறார், இரண்டையும் பொருளாதாரத்துடன் உறவுபடுத்திப் பார்க்கிறாரே தவிர, அவற்றின் இடையிலுள்ள இருபுற உறவை அவர் ஆராய்வது இல்லை. அரசின் ஆணாதிக்கத் தடையை கணக்கில் கொள்வதில்லை. ஆணாதிக்கத் தன்மையைக் குடும்பத்தில் மட்டுமே பார்க்கிறார். அரசுக்கும் பெண்களுக்கும் இடையில் ஆன உறவு, மற்ற அரசியல் அமைப்புகளுக்கும் (குறிப்பாக கட்சிக்கும்) பெண்களுக்கும் இடையிலான உறவு என்பனவற்றை, பெண்களைப் பற்றி பேசும் சோசலிச, கம்யூனிச இலக்கிய மரபு ஒரு போதும் பிரச்சனைகளாகப் பார்த்தது இல்லை. இதன் விளைவாக இந்த மரபானது பெண்கள் சுரண்டப்படுவதை முதலாளிய வாதங்களை விட அதி கரிசனமாக அணுகினாலும் சோசலிசப் புரட்சியுடனேயே பெண்களின் விடுதலையும் வந்து விடும் என்றே அது கூறி வைக்கிறது. அடிப்படையான பல பிரச்சனைகள் தொடாமலே உள்ளன.

www.tamilarangam.net



**சோசலிசரும் கம்யூனிசரும் :**

மார்க்சியத்தில் இருந்து தமக்கான உத்வேகத்தைப் பெற்றுக் கொண்டுள்ள தேசிய விடுதலை இயக்கங்களும் பெண்களைச் சமூக உற்பத்திக்குள் இழுத்து விடக் கோரும் முயற்சிகளிலேயே மும்முரமாக ஈடுபட்டுள்ளார்கள். போராட்டத்தின் சில கட்டங்களிலும் சோசலிச சமுதாயத்தை நிறுவும் போக்கிலும் அவர்கள் வீட்டு வேலையில் பெண்களுக்கு உள்ள சுமையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுத்தார்கள். குழந்தை காப்பகங்களுக்காகவும் கருச்சிதைப்பு உரிமை போன்றவற்றுக்காகவும் போராடினார்கள். ஆனால் இவை குடும்ப விவகாரங்களாக பேர் சூட்டப்பட்டு ஓரளவு புறக்கணிக்கப்பட்டன. ஆண்–பெண் உறவுப் பிரச்சனைகள் வீட்டிலும் வேலையிடத்திலும் பெண்கள்மேல் நடக்கும் வன்முறை போன்றவை கவனிக்கப்படவே இல்லை. எல்லாவற்றுக்கும் மேலே முதலாளிய அரசிலோ தொழிலாளிய கட்சிலோ முடிவு எடுக்கும் அமைப்புகளில் பெண்களுக்கு இடம் தேவை என்பதை பிரச்சனையாகவே கொள்ளவில்லை. தொழிலாளி வர்க்க தலைமை என்பதே பிரச்சனைக்கு போதுமான தீர்வாகக் கொள்ளப்பட்டது. தொழிலாளி வர்க்கத்திலும், பெரிய ஆலைத் தொழிலாளி வர்க்கமே முன்னணிப் படை எனப்பட்டது. இவர்களில் பெண்களின் அளவு குறைவே, மேலும் தம் வாழ்நிலை காரணமாகவும் அரிதாகவே பெண்கள் முழுநேர புரட்சியாளிகளாக முன்வர முடிகிறது. இதன் ஒரு விளைவு என்னவென்றால் பெண்களை விடுதலை செய்யும் தேவைகளில் இருந்து கட்சிகளில் உள்ள பெண்களால் அதை எதிர்க்க பலமோ கோட்பாட்டுத் தயாரிப்போ இருப்பதில்லை.

**புதிய பெண்ணிய இயக்கம் :**

1960 களில் கொந்தளிப்புடன் கிளம்பி குறிப்பிடத்தக்க செயல்கள் செய்தது. புரட்சிகர பெண்ணியம் தன்னை ஒரு புரட்சிக் கோட்பாடு என்று சொல்லிக் கொண்டது. சில சமயங்களில் மார்க்சியத்துக்கு வெளிப்படையாக முரண்பட்டுக் கொண்டது, தன் சொந்த முறையில் ஒரு வித்தியாசமான புரட்சியை செய்ய குறி வைத்தது. இந்தக் கோட்பாட்டில் வன்முறையும் காமமும் மய்யப்படுத்தப்பட்டன. ஆனால் இதனால் அன்றாட வாழ்க்கையும் குடும்பமுமே முகாமையான செயல்பாட்டுக் களங்கள் ஆயின. சொந்தப் பிரச்சனை என்பதும் அரசியல் பிரச்சனைதான் என்ற முழக்கமானது அரசியல் வாழ்வையும் பொது வாழ்வையும் அடிப்படையில் மாற்றுவதற்கான உபாயத்துக்கு இட்டுச் செல்லவில்லை. அதற்கு எதிரான நிலைக்கே இட்டுச் சென்றன. மாற்று நிறுவனங்களை உருவாக்குவதில்

www.tamilarangam.net



முடங்கின. 'புரட்சிகர பெண்ணியர்கள்' ஆணாதிக்க தந்தைவழி அமைப்புகளில் பங்கேற்பதை வெறுத்து ஒதுக்கினர். அது மட்டுமல்ல ஆண்களோடு எல்லாவிதமான தொடர்பையும் கைவிட்டனர். வலுவான அமைப்புகளை கட்டும் வேலையை முதலாளியப் பெண்ணியர்களே மேற்கொண்டனர். இவர்கள் சீர்திருத்தங்கள் பற்றிய மாயைகளில் சிக்கினவர்கள். சில மிகத் தீவிரமான பெண்கள் தம் ஆற்றலுடன் இவர்களிடம் ஒதுங்க நேர்ந்தது. அரசியல் செயல்பாட்டில் பெருத்த இடைவெளி விழுந்தது. வலுவான இயக்கத்தின் அரசியல் அமைப்பினால் சமுதாய மாற்றத்துக்கான அமைப்பாக மாறமுடியவில்லை. இது சமீப காலமாக வலது சாரிகளின் கை ஓங்கி உள்ளதற்கு ஒரு முகாமையான காரணம் ஆகலாம்.

இன்று உள்ள மார்க்சியத்தாலும் புரட்சிகர பெண்ணியத்தாலும் அரசு பற்றி, பெண்களுக்கான அரசியல் போராட்டம் பற்றியோ ஒரு கோட்பாட்டையும் நடைமுறையையும் வகுத்துக் கொள்ள முடியவில்லை. முதலாளியத்தை முதன்மையாக ஆராய்கிற மார்க்சியம். பெண்களை மூலதனத்தால் சுரண்டப்படும் பொருள்களாகப் பார்த்தது; தொழிலாளி வர்க்க தலைமைக்கு சக்தி தரும் பொருள்கள் ஆகவும் பார்த்தது. பெண்கள் தம் சொந்த விடுதலையை தாங்களே படைத்துக் கொள்ளும் படைப்பாளிகளாக அவர்களை ஒழுங்கமைப்பதற்கு அது போராடியதில்லை, தன்னாட்சி என்ற சொல் தேசியம்பற்றி பேசும்போது இனிக்கிறது; பெண்கள் பிரச்சனை பற்றி பேசும்போது மட்டும் கசக்கிறது! ஆணாதிக்கத்தினை முதன்மையாக ஆராய்கிற பெண்ணியம் கண்முன் தெரியும். (தனிப்பட்ட) ஆண்களிடம் அந்த ஆதிக்கத்தை காண்கிறது. பெண்களின் தன்னாட்சி, செயல்பாடு, போராட்டம் என்பதை வலியுறுத்துகிறது. ஆனால் அதற்காக அது மேற்கொள்ளும் துறைகளும் முறைகளும் அரசியல் ரீதியில் குறைகளோடு உள்ளன. கோட்பாடுகளும் தலைமையும் கட்சிக்கே உரியவை. பெண்கள் அமைப்புகளுக்கு உரியவை அல்ல என்று மார்க்சியம் பார்க்கிறது. கோட்பாடு என்பதை பெண்ணியம் ஆண் தன்மை உடையதாக கொண்டு கோட்பாட்டின்மீது அவநம்பிக்கை கொள்கிறது. சில சமயங்களில் தலைமையையும் அமைப்புக் கட்டுமானங்களையும் ஒட்டு மொத்தமாகப் புறக்கணிக்கிறது. மார்க்சியப் பெண்கள் அமைப்பு கட்டுவதை இயக்கம் கட்டுவதாக பார்ப்பது இல்லை; கட்சியுடன் தொடர்புபடுத்தப்பட்டு அதனால் கட்டுப்படுத்தப்படும் அமைப்புகளை கட்டுவதாகத்தான் பார்க்கிறார்கள், இதற்கு வெளியில் உள்ள இயக்கங்கள் 'உழைக்கும் வர்க்கம் அல்லாதவை அல்லது 'பூர்சுவா' அல்லது வெறும் மேடைகள்' அதற்குள் தம் கருத்துக்களை முன் வைத்து கட்சிக்கு ஆள்சேர்க்க முயலலாம்; மறுபுறம்

www.tamilarangam.net



பெண்ணியர் அனைத்துப் பெண்களின் ஒற்றுமையை அடிப்படை என்று வலியுறுத்துகிறார்கள். இயக்கத்தை குறுங்குழு வாத ரீதியில் பார்ப்பது இல்லை. ஆனால் அவர்கள் இயக்கம் கட்டும் வேலையையே தொடுவது இல்லை.

**சுரண்டப்படும் மக்களின் அமைப்பின் மூலமாக :**

சுரண்டலை எதிர்த்துப் போராடுவதற்கும், அந்தப் போராட்டத்தில் இருந்தும் அந்த போராட்டத்திற்காகவும் கோட்பாட்டை வளர்த்தெடுக்கும் அவசியமான பணியிலும் மார்க்சியம் தன்னை அர்ப்பணித்துக் கொண்டுள்ளது. இது அதன் பலம். பெண்கள் சுரண்டப்படுவதை குறைத்து மதிப்பிட முடியாது என்றும் 'சொந்த' வாழ்க்கையின் மய்யத்துவத்தையும் பெண்ணியம் வலியுறுத்துகிறது. இது அதன் பலம். பெண்கள் இயக்கம் இந்த இரண்டு மரபுகளின் பலங்களையும் தன்னில் எடுத்தாக வேண்டும். இது வெறுமனே ஒட்டு வேலையாக ஆகிவிடக் கூடாது. சோசலிச பெண்ணியம் ஒரு பேர் சொல்லும்படியான போக்காக வளர்ச்சி அடைவதில் தோற்றுவிட்டது. காரணம் "வர்க்கமும் பாலும்" "வர்க்கமும் சாதியும்" வர்க்கமும் இனமும் என்று வெறுமனே உம் களை ஒட்டி வைத்து பேசினதுதான். மார்க்சியம், பெண்ணியம் இரண்டும் ஒரு வகையில் குறைகள் உடையவை. இரண்டையும் ஒரு வகையினில் கடந்தாக வேண்டும். வளர்த்தாக வேண்டும்.

இந்த வளர்ச்சிப் போக்கிலே நிகழ்காலத்தின் பிற பிரதான சமூக இயக்கங்களோடு நடைமுறை ரீதியாகவும் கோட்பாட்டு ரீதியாகவும் பெண்கள் உறவு கொள்வது பயனுள்ளதாகும். 1. சூழலியல் இயக்கத்தில் இருந்து பாடங்கள் எடுக்க முடியும். (உதாரணமாக வந்தனாசிவா செய்வதுபோல) சூழலியல் பெண்ணியம் உண்மையாகவே உலக அளவில் பெண்கள் இயக்கத்துக்கு புதிய வீரியம் தந்துள்ளது. 2. இந்திய தலித் இயக்கத்திடம் இருந்து – குறிப்பாக அரசியல் அதிகாரத்தை பெண்கள் தீவிரமாக தம் கையில் எடுக்க வேண்டும் என்பதன் தேவை பற்றி அம்பேத்கார் உறுதியாக கூறியதில் இருந்து – பல உண்மைகளைப் பெற முடியும். (அரசு என்ற நிறுவனத்தின் சுரண்டல் தன்மை, ஆணாதிக்கத் தன்மை, பார்ப்பனிய தன்மை என்பவை குறித்து அவருக்குமே புரிதல் குறைவு இருந்ததென்பது வேறு விசயம்) 3. 'புதிய உழவர் இயக்கத்திடம் இருந்து போர்த்தந்திர உணர்வையும் சிதறிக் கிடக்கும் பாட்டாளி மக்களை ஒன்றிணைப்பதன் மூலம் வலுவான போராட்டத்தைத் தட்டி எழுப்புவது எவ்வாறு என்பதையும் கற்றுக் கொள்ள வேண்டும். கற்றுக் கொள்வது, உறவு கொள்வதென்றால் மற்றவர்களின் ஆதிக்கத்துக்கு உட்பட வேண்டும்,

www.tamilarangam.net



மற்றவர்களின் இயக்கத்தில் கரைந்து போக வேண்டும் என்பது அல்ல. உண்மையில் வலுவானதும் மிகுந்த உணர்வுள்ளதும் பரந்துபட்ட மக்கள் அடிப்படையை கொண்டதுமாக பெண்கள் இயக்கம் இருக்குமேயானால் இந்த எல்லா இயக்கங்களையும் அது தட்டி உருமாற்றி விடக்கூடிய சக்தியாக வளரமுடியும்.

**பெண்கள் இயக்கத்துக்கு :**

அரசைப் பற்றியும் அரசியல் அமைப்பை பற்றியும் ஒரு கோட்பாடு தேவைப்படுகிறது. அரசையும் முதலாளியத்தையும் ஆண் ஆதிக்கத்தையும் எதிர்த்துப் போராடுவதற்கான போர்த்திட்டங்கள் அதற்குத் தேவைப்படுகிறது. முதலில் வர்க்க சமுதாயமும் ஆணாதிக்க குடும்பமும் உருவாகியது. பிறகு வெறுமனே அதை நிலைநிறுத்துவதற்காகத்தான் அரசு எழுந்தது – என்ற பார்வை தவறானது. ஒருவகையில் தொடக்கத்தில் இருந்தே அரசு ஆணாதிக்கத் தன்மை கொண்டிருந்தது. சுரண்டலும் ஆணாதிக்கமும் உருவாவதற்கே அரசுதான் முக்கியமாக உதவியது என்று இன்று கூறுகிறார்கள். இன்றைய அரசு, முதலாளிய உற்பத்தி செவ்வனே நடப்பதற்கான வெறும் உத்திரவாதி மட்டுமல்ல. தானும் ஒரு சுரண்டல் கருவியாகவும் உள்ளது. முதலாளிய சமுதாயத்தில் உற்பத்திகர பாத்திரங்களை அரசு வகிக்கிறது. புரட்சிக்குப் பிந்திய சமுதாயங்களில் உற்பத்தியை ஒழுங்கமைப்புகளில் பிரதானமாக அரசு இருக்கிறது. பெண்களை ஒடுக்குவதில் அரசின் பங்கை நாம் காண வேண்டும். பெண்களை ஒடுக்க வன்முறையை செலுத்துவதில் அரசு முதலிடம் வகிக்கிறது. அதுமட்டுமல்ல. சேமநலத் திட்டங்களைத் தயாரித்து அளிப்பதாகவும் அது நிற்கிறது. இந்தத் திட்டங்களில் பெரும்பாலும் பெண்களின் வீட்டு வேலை லேசாக்கப்படுகிறது. அல்லது ஏதாவது ஒருவகையில் அதற்கு சன்மானம் தரப்படுகிறது.

இதுபற்றி எல்லாம் பெண்களுக்கு ஒரு கோட்பாடு வேண்டும். சுரண்டப்படுவோர் அனைவரின் இயக்கத்துக்கும் இது தேவையே. ஆனால் குறிப்பாக அரசின் நடவடிக்கைகளில் இருந்து பெண்கள் மிகவும் அந்நியப் படுத்தப்பட்டிருக்கிறதால் அதை உடைத்து நொறுக்குவதில் அவர்களே மிகவும் சாதக நிலையில் இருக்கிறார்கள்.

**அரசியல் அமைப்பு பொறுத்தவரை :**

ஜனநாயக மய்யத்துவ கட்சியை விமர்சிக்கும் பெண்ணிய திறன் ஆய்வாளிகளின் முக்கிய படைப்புகள் இன்றைக்கு ஏற்றுக் கொள்ளப்பட்டு

www.tamilarangam.net



இருக்கின்றன. இவை மரபு மார்க்சியத்தோடு நடத்தப்படும் தொடர்ந்த மோதலில் முக்கிய ஆயுதங்களாக விளங்குகின்றன. இந்த விசயத்தில் பெண்ணியம் சமரசம் செய்து விடக்கூடாது. ஏனெனில் லெனினிய கட்சிக் கட்டமைப்பு இன்றைய நிலைக்கு பொருத்தமில்லாமல் ஆகியுள்ளது. பெண்களின் நலனுக்கு எதிராகிவிட்டது. இப்படி கருத போதிய ஆதாரங்கள் இன்று உள்ளன. ஆனால் பெண்ணியம் இதற்கு மாற்றாக எந்த உருப்படியான யோசனையையும் முன் வைக்கவில்லை. மேலும் அமைப்பே வேண்டாம்; அமைப்பு ரீதி முயற்சிகள் வேண்டாம்; எந்த விதமான தலைமையும் அதிகாரவர்க்கத்தனமானதே என்ற தன்னிடம் உள்ள தவறான போக்கை அது அவசியம் கடந்தாக வேண்டும். இந்த விதமான போக்குகள் ஒரு சூனியத்தையே உருவாக்குகின்றன. அந்த சூனியத்துக்குள் முதலாளிய அதிகார வர்க்க உலகம் எளிதில் நுழைந்து விடுகிறது. 'நம்பிக்கை நட்சத்திரங்களை' உருவாக்கி தன் சொந்த மேலாதிக்கத்தைத் திணித்து விடுகிறது. அரசில் இருந்தும் கட்சியில் இருந்தும் விடுபட்ட தன்னாட்சி போன்ற முழக்கங்கள், அரசை எதிர்த்து அழிக்கும் விசயத்தை தவறவிட்டு விடுகின்றன. கட்சியினர் செய்ய முயலும் பெரும்பணியை செய்யத்தக்க ஒரு அரசியல் அமைப்பு உருவாக்கும் தேவையினை தவறவிட்டு விடுகின்றன.

சமகால அரசியல் சவால்களைக் கூட்டாகவும் பயன் உள்ள முறையிலும் எதிர்கொள்ளத் தகுந்த ஒரு பாதை, பெண்கள் இயக்கங்களுக்குத் தேவை.

**தேர்தல்களையும் :**

பெண்களுக்கு 30% இட ஒதுக்கீட்டைப் பற்றி சில கருத்துகள் : அரசியல் பிரதிநிதித்துவத்தை பெண்கள் அவசியம் அதிகரித்துக் கொள்வது தேவை. பொது பதவிகளில் சில பெண்கள் இருப்பதால் மட்டும் யாருக்கும் விடுதலை ஏற்பட்டு விடாதுதான். பெண்களை வேட்பாளர்களாக நிறுத்தும் திட்டத்தில் இன்றுள்ள அமைப்புக்கு 'உள்ளும்' பரந்துபட்ட பெண்களுக்கு சில பயன்களை தரக்கூடிய சீர்திருத்தக் கொள்கைகளை இணைத்தாக வேண்டும். பிறகு இதனை அமைப்பையே மாற்றும் நீண்ட காலத் திட்டத்தோடு இணைக்க வேண்டும். ஆனால் பெண்களுக்கான அரசியல் இடத்தை இன்று பெறுவதை 'இது புரட்சி அல்ல' என்று கூறி கட்சிகள் விடுகின்றன. இதை ஏன் பெண்கள் இயக்கம் சும்மா பார்த்துக் கொண்டு இருக்கிறது. பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க இட ஒதுக்கீடு என்ற வழி ஆபத்தானது என்று கூறி நாம் அதை மறுக்கலாம். அந்த திட்டமே சுத்த மடத்தனமானது என்று நாம் அடித்துக் கூறலாம். பெண் வேட்பாளிகள் கூட்டு முயற்சியுடன் செயல்பட வேண்டும் என்று நாம் வலியுறுத்தலாம்.

www.tamilarangam.net



பொதுப்பணியிலிருக்கும் எந்தப் பெண்ணும் இயக்கத்துக்கு பதில் சொல்ல கடமைப்பட்டவள் என்று நாம் ஏற்கலாம். ஆனால் எப்படியும் நாம், கட்சிகள் பேருக்கு ஒரு சில பெண்களை நிறுத்திவிட்டுப் போவதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க கூடாது. 30% இட ஒதுக்கீடு என்ற யோசனையை கேட்டால், சராசரியான படிப்பு இல்லாத, ஆனால் துடியான கிராமத்துப் பெண்கள் என்ன கூறுவர்? ஏன் வெறும் 30%? ஏன் 50% கூடாது? எல்லாரும் ஒன்று தானே என்பார்கள். இடஒதுக்கீட்டை மறுக்கலாம். (ஏனெனில் எப்படியுமவை பெண்களை ஒரு புது விதத்தில் தனிமைப்படுத்தியே வைக்கின்றன). ஆனால் கட்சிகள் இப்போதே தேச அளவில் பெண்களுக்கு முழுசாக 50% இடங்களை ஒதுக்கட்டும்.

இயக்கம் பலமாக இருக்கும் பகுதிகளில் ஆதரவும் பலமாக இருந்தால் 100% உம் பெண்களை நிறுத்துவதற்கான நடவடிக்கைகள் மாற்றத்துக்கான வரிசைகளாக விளங்க முடியும். வழக்கமாக உள்ள பேரம், சூழ்ச்சிகள் அடுக்கு மொழி, வாக்குறுதிகள் என்கிற மாதிரி இல்லாமல் தேர்தலை ஒரு கூட்டு இயக்கமாக மாற்றுவதற்கான சூழலை உருவாக்கும் திறன் 100% கோரிக்கைக்கு உண்டு.

**மாபெரும் மாற்றம் :**

உலகம் முழுதும் மாற்றம் ஏற்பட்டு வரும் காலம் இது. இதை அரசியலில் பல்வேறு விதங்களில் உணர முடிகிறது. ஒரு போக்கு தொழிலாளி வர்க்கத்தின் பேரால் மாற்றத்தை எதிர்ப்பது. அதிகாரத்தில் கெட்டியாகி ஒட்டிக் கொள்வது, வழக்கொழிந்த வழக்கில் பேசிக் கொண்டிருப்பது. மற்றொரு போக்கு சுதந்திர வணிகத்தின் நன்மைத் தனங்களை உலக முழுதும் பரப்பி வருவது. இதற்கு மத்தியில் மதவெறியர்கள் கூட்டமாக உட்கார்ந்து கொண்டு குழம்பி உள்ளவர்கள், ஏழைகள், ஒதுக்கப்பட்டவர்கள், ஒடுக்கப்பட்டவர்கள் ஆகியோரின் உணர்ச்சிகளோடும் தேவைகளோடும் விளையாடிக் கொண்டிருக்கிறார்கள்.

பழங்குடிகள், தலித்துகள், சூழலியல்காரர்கள், பெண்கள், கூலி விவசாயிகள், தொழிலாளிகள் ஆகியோரின் இயக்கங்களே மாற்றத்துக்கான உண்மையான இயக்கங்கள் ஆகும். இவையும் வளர்ந்தே வருகின்றன.

தமிழில் : **சிங்கராயர்**

நன்றி : ஃபிராண்டியர் – 89
ஆண்டு மலர்

**நிகழ் 18**
**ஜீன் 91**

www.tamilarangam.net



# தலித்களின் அவலக் குரல்கள்

**- டேவிட் சித்தையா**

இங்கு பெரியாரின் பார்ப்பன மேலாதிக்க எதிர்ப்புத் தோன்றுவதற்கு முன்பு 1893–ல் மகாராஷ்டிராவில் அது வேரூன்றிவிட்டது. இதன் ஆரம்பக் கர்த்தாக்கள் ஒரு தம்பதிகள் : ஜோதிபா பூஃலே (1827–1890), சாவித்திரி பாய் பூஃலே (1831–1897). இவர்கள் சத்தியஷ்யோடக் மண்டலைத் தொடங்கினார்கள். தலித்துக்கள் பார்ப்பன மேலாண்மையை எதிர்த்த, மகாராஷ்டிர மாநில முதல் எதிர்ப்பு இயக்கம் இது.

மங்–மஹர்கர், மகாராஷ்டிராவில் பெரும்பகுதியினர்; டாக்டர் அம்பேத்காரும் மஹர் வகுப்பைச் சேர்ந்தவரே. இந்த சாதியினர் பெரும்பான்மையினராக இருந்தும் ஒடுக்கப்பட்டவர்கள், தீண்டத் தகாதவர்கள். இவர்கள் பல்வேறு கிராமப் பணியாளர்கள்; செய்திகளைக் கொண்டு செல்வது. ஊர்களுக் வழிகாட்டுவது. ஊர்க் கவுண்டர்களுக்கு உதவுவது, கிராம எல்லைகளைப் பாதுகாப்பது, கிராமத்தைக் கூட்டித் துப்புரவு செய்வது ஆகியவை முக்கிய பணிகள். இவர்களுக்குக் கிராம நிலம் புலன்களின் கணக்குகளும், கிராம மக்களின் பரம்பரைகளும் நன்றாகத் தெரிந்திருந்ததால், அந்த வழக்குகளிலும் பிணக்குகளிலும் நடமாடும் ஆவணங்களாகவும் இருந்தார்கள். நம் தலித்கள் மாதிரி ஊருக்கு வெளியில் வாழ்ந்து, ஒதுக்கப்பட்ட கிணறுகளிலிருந்து மாத்திரம் தண்ணீர் எடுத்துக் கொண்டார்கள்.

சாவித்திரி பாய் ஒன்பதாவது வயதில் (1840–ல்) ஜோதிபா பூஃலேயை மணந்த பின்பே கணவனிடம் கல்வி கற்றார். மகாராஷ்டிராவின் முதல் ஆசிரியை இவர்தான். பின்பு புனேயிலும் அதைச் சுற்றியுள்ள ஊர்களிலும் பல பள்ளிகளைத் தொடங்கியபோது இவருக்கு வயது பதினேழுதான்! இவற்றில் ஒன்று மங்–மஹர் தலித்துகளுக்கானது. பாத்திமா ஷேக் என்ற முஸ்லீம் பெண்மணியும் இவர்கள் இருவருமே ஆசிரியர்கள். அவர்கள் காலத்தில் எதிர்ப்புகளுக்கும் ஏளனத்துக்கும் ஆளானாலும், பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கத்தின் தந்தை என்று ஜோதிபா இன்றைக்கும் போற்றப்படுகிறார்.

இவர்களிடை வேலை எளிதாக இருக்கவில்லை; சமுதாயத்தின் புறக்கணிப்பு, சாதி நீக்கம், ஏளனம் என்று எதிர்ப்புகள் ஏராளம். யாருடைய மேலாதிக்கத்திற்கு எதிராகக் கேள்விக்குறிகளை எழுப்பினார்களோ அவர்களுடைய நேரடித் தாக்குதல்கள் ...!

www.tamilarangam.net



இவற்றில் சாவித்திரி பாயின் பொறுப்பு அதிகமாக இருந்தது. வன்முறைத் தாக்குதல்களில் கணவனின் உயிரையும் சேர்த்துக் காக்கும் பொறுப்பு ...!

சாவித்திரி பாய் வெறும் சமூகச் சீர்திருத்தவாதி மட்டுமல்ல; கவிஞரும் எழுத்தாளரும் கூட. நாற்பது கவிதைகளை உள்ளடக்கிய இவரது முதற் கவிதைத் தொகுப்பு "காவ்யபூலே" (1854 – பாடல்களின் மலர்ச்சி) யில் பெரும்பாலானவை இயற்கைக் கவிதைகள்; சில கல்வி கற்பதன் பெருமையைப் பேசுகின்றன; குழந்தைகளுக்கான அறிவுரைகள். பல சாதி அமைப்பைச் சாடுகின்றவை.

இவரது இரண்டாவது புத்தகம் "பவன் காஷி சுபோத் ரத்னாகர்" (1892 – 'தூய முத்துக்களின் கடல்') உரைநடையிலான ஜோதிபா பூஃலேயின் வாழ்க்கை வரலாறு; இதில் வாழ்க்கை வரலாற்றுடன், ஜோதிபாவின் புரட்சிகரமானக் கருத்துக்களும் உள்ளடங்கி உள்ளன – முக்கியமாக, கடைசியாக மகாராஷ்டிராவை ஆண்ட பேஷ்வர் அரசர்களைப் பற்றி பார்ப்பனர்கள், 'அழிவுக்குரிய, வன்முறையாளர் ஆட்சி' என்று திருத்திக் கூறியவைகளுக்கான ஆணித்தரமான மறுப்புகளும் அடங்கியது.

இவற்றைத் தவிர 'இந்திய வரலாறு' பற்றிய ஜோதிபாவின் சில சொற்பொழிவுகளையும் இவர் தொகுத்துள்ளனர்.

இவைகளோடு சாவித்திரி பாயின் கடிதங்கள் முக்கிய ஆவணச் சான்றுகளாக இருக்கின்றன. சாவித்திரி பாய் சொந்தக் கிராமத்திலிருந்து எழுதிய (1868) ஒரு கடிதம், ஒரு மகர் தலித் பெண் ஒரு பார்ப்பன இளைஞனால் கருவுற்றதையும், ஊர்க்காரர்கள் அவர்களைக் கொல்ல முயன்றபோது இவர் காப்பாற்றி பூனேக்குத் தன் கணவனிடம் அனுப்பியதையும் பற்றி விவரிக்கிறது. மற்றொரு கடிதம், 1876–ல் ஏற்பட்ட பஞ்சத்தின்போது தமது மண்டல் செய்த சேவைகளைக் கூறுகிறது. ஆனால் இங்கே நாம் கவனிக்கப் போகிற மூன்றாவது கடிதம் முக்கியமானது; ஏனெனில் சாவித்திரி பாயின் சகோதரனே இவர்களுடைய கருத்துக்களுக்கு மாறுபட்டு வாதிப்பதைப்பற்றி சொல்கிறது. இவைகளுக்கு சாவித்திரி பாயின் மறுப்புரை எவ்வளவு ஆணித்தரமாக இருக்கிறது!

"உன்னையும் உன் கணவனையும் சாதி நீக்கம் செய்தது சரிதான். மகர்–மங்களுக்கு உதவுவது சந்தேகமில்லாமல் பாவம்தான்! நம் குடும்பப் பெயரே மண்ணாகி விட்டது! நம் சாதிப் பழக்கங்களைக் கடைபிடித்து, பார்ப்பனர்கள் சொல்வதைக் கேளுங்கள்!" என்று சகோதரன் வாதிக்கிறார்.

www.tamilarangam.net



சாவித்திரி பாயின் வாதம் நீண்டதாக இருக்கிறது.

"பார்ப்பனர்களின் போதனைகளால் உன் அறிவு சிறுத்துப்போய் விட்டது; பசுவையும், ஆட்டையும் ஆதரிக்கிறீர்கள்; கொடிய நஞ்சுள்ள பாம்புக்கும் நாகப் பஞ்சமி என்று பால் வார்த்துப் பேணுகிறீர்கள்; ஆனால், மாதிரி உடலும் தசையுள்ள மனிதர்களான மங்களையும் மகர்களையும் தீண்டத்தகாதவர்கள் என்று ஒதுக்குகிறீர்கள்? இது என்ன வகையில் நியாயம்? அவ்வளவு ஏன்? பார்ப்பனர்கள் பூசை செய் புனித உடைகள் அணிந்திருக்கிறபோது உன்னையும் தீண்டத் தகாதவனாகத்தான் பாவிக்கிறார்கள்! நீ தொட்டாலும் தீட்டு என்று சொல்கிறார்களே! அப்பொழுது நீயும் தீண்டத்தகாதவனாகத் தானே ஆகிறாய்?"

"இந்தத் தலித்களும் கல்வி கற்றால், தங்கள் மேலாண்மைக்கு மோசம் வந்துவிடும் என்று பார்ப்பனர்கள் அஞ்சுகிறார்கள்; அதனால் எங்களை எதிர்க்கிறார்கள். ஆனால் என் கணவர், அவர்களையும் மனிதர்களாக மதிக்கிறார்; மனிதர்களைப் போல வாழ வேண்டுமென்று கல்வி போதிக்கிறார் ... அவர் உன் மாதிரி சும்மா மந்திரங்களை ஓதிக் கொண்டு யாத்திரைகள் போகிறவர் அல்ல – அவர்தான் உண்மையான இறைத் தொண்டு ஆற்றுகிறார்!"

ஆசிரியை இவ்வளவு தீவிரமானவரானால், மாணவி எப்படி இருப்பாள் என்பதற்கு முக்தா பாய் (1841–?) ஓர் உதாரணம்; இவர் சாவித்திரியின் பள்ளியில் படித்த ஒரு 'மங்' தலித். பதினான்கு வயதில் (1855–ல்) முக்தா பாய் எழுதிய ஒரு கட்டுரையில், 'ஓ கல்வியில் சிறந்த பண்டிதர்களே! உங்கள் சுயநல அறிவு மூட்டைகளை ஒருபுறம் கட்டி வைத்துவிட்டு, நான் சொல்வதைக் கேளுங்கள்!' என்று சவால் விடுகிறார். சாவித்திரிபாய் சில ஆண்டுகளுக்கு முன்பு 'தலித்கள் கல்வி கற்றால் எங்கே தங்கள் ஆதிக்கத்திற்கு எதிராகக் கேள்வி எழுப்புவார்களோ என்ற அச்சம் பார்ப்பனர்களுக்கு உள்ளது!' என்று சொன்னதன் தீர்க்கதரிசன நகல் மாதிரி முக்தாபாயின் கடிதம் உள்ளது.

"அவர்கள் சொல்கிற மாதிரிவேதங்கள் எல்லாம் பார்ப்பனர்களுக்கே சொந்தமானால், ஓ, இறைவா! எங்களுக்கும் உண்மையான வேறு மதத்தைப் போதி; நாங்களும் அதன்படி வாழ்வோம்! ஒரு குலம்தான் உயர்ந்தது; மற்ற குலங்கள் எல்லாம் தாழ்ந்தவை என்றும் போதிக்கும் மதம் பூமியிலிருந்து ஒழியட்டும். அந்த மதத்தைப் பற்றி பெருமை கொள்கிற புத்தி எங்கள் மூளைக்குள் நுழையாமல் இருக்கட்டும்! ..."

www.tamilarangam.net



நில ஆக்ரமிப்புகளும், குடிசைகளைக் கொளுத்தி குழந்தைகளையும் கொல்லும் கொடுமைகளும் அன்றும் இருந்தன என்று முக்தாபாய் குரல் கொடுத்திருக்கிறார் :

"ஏழை மக்களும் மகர்களுமான எங்களை அவர்கள் எங்கள் நிலங்களிலிருந்து விரட்டி அடிக்கிறார்கள், அவற்றில் தங்கள் பெரிய மாளிகைகளைக் கட்டுவதற்காக அபகரிக்கிறார்கள். அதோடு மட்டுமல்ல! எண்ணெயுடன் ஈயத்தைக் காய்ச்சிக் குடிக்க வைத்து, தங்கள் மாளிகை அஸ்திபாரங்களுக்கு அடியில் புதைத்து, ஏழைகளாகிய எங்களைத் தலைமுறை தலைமுறையாகக் குறைத்தும் அழித்தும் கொண்டிருக்கிறார்கள் ...!"

"பீஜி ராவ் ஆண்ட காலத்தில், எந்த மங்காவது மகராவது போட்டிப் பந்தய அரங்கைக் கடக்கவிருந்தால், அவன் தலையை வெட்டிப் பந்தாகவும், வாளை மட்டையாகவும் பயன்படுத்தி விளையாடினார்கள்!"

"நாங்கள் தீண்டத் தகாதவர்களாகையால் யாரும் எங்களை வேலைக்கு வைத்துக் கொள்வதில்லை; எங்களிடம் பணமில்லாததால் அதிகத் துன்பங்களை அனுபவிக்கிறோம்! எங்கள் பெண்கள் பிரசவிக்கும்போது கூட ஒதுங்குவதற்கு ஒரு கூரை இல்லை; குளிரிலும் மழையிலும் எப்படி அவர்கள் சிரமப்படுகிறார்கள் ..."

"பார்ப்பனச் சிறுவர்கள் மங்–மகர் சிறுவர்கள் மீது கல்லெறிந்தாலும், மோசமாகக் காயப்படுத்தினாலும்கூட, அவர்கள் புகார்கள் செய்வதற்குப் போவதில்லை; மௌனமாக வாய்மூடி துன்புறுகிறார்கள் – ஏனெனில், பார்ப்பனர்கள் தின்று கழித்தவைகளை வாங்கி வயிற்றை நிரப்புவதற்கு இவர்கள் அவர்களிடம்தான் போக வேண்டும்!"

"ஐயோ, கடவுளே! இதெல்லாம் என்ன கொடுமை ...! எழுத எழுத எனக்குக் கண்ணீர் பொங்குகிறது ... !"

மேல் சாதிக்காரர்கள் தின்று திகட்டியது போக எஞ்சியதைத் திணித்து வயிற்றுத் தீயை அணைத்தஇன்னொரு தலித்தின் அவலக்குரல் தென்னக மாநிலமான கர்நாடகாவிலிருந்து அண்மையில் நம் செவிப்பறைகளைத் தாக்குகிறது.

சொல்கிறவர் : சித்தலிங்கையா.

"மாந்தோப்பு நிலத்துக்காரர் தாராள மனசுக்காரர். நான், அப்பா, அம்மா மூவரும் அவர் வீட்டு வாசலில் சென்று நின்றதும் சித்திரன்னம், பூரி

www.tamilarangam.net



முதலியவைகளைத் தருவார். இவ்வகையான சிற்றுண்டிகளை என்றுமே தின்று பார்க்காதவன் நான். அவற்றின் ருசியோ ருசி! எங்களிடத்ம நன்றியுணர்வு மிகுந்தது. கொஞ்சம் கிழிந்த, பழைய சட்டைகளையும் எனக்குத் தருவார். ஐயரின் மகன் என்னையும் விடப் பெரியவன்; ஆகையால் அவை மிகவும் 'தொள – தொள' என்று இருக்கும் ... எப்படியோ அவற்றை அணிந்ததும், மற்றச் சேரிப் பிள்ளைகளை விட வித்தியாசமானவனாக உணர்ந்தேன் ..."

"ஒரு நாள் தோட்டத்துக்கு வெளியே வந்து ஏரிக்கரையில் நின்று கொண்டிருந்தேன். யாரோ எங்களைக் கூப்பிடுகிற சப்தம் ... உடனே பெண்களும் ஆண்களும் சிறுவர்களும் 'பம்ப் செட்' பக்கத்திலிருந்த ஐயரின் வீட்டுக்கு அம்புப் பாய்ச்சலில் சென்றார்கள். நானும் மெல்ல நடந்து ஐயரின் வீட்டை அடைந்தேன். அந்த வீட்டிலிருந்து சற்றுத் தூரம் வரை 'தலித்'துகள் வரிசையாக நின்றார்கள். ஐயரின் மனைவி வீட்டில் எஞ்சிய பூரி, சித்திரன்னம் முதலியவற்றை எல்லோருக்கும் கொடுத்தார். கடைசியாக நான் சென்றதால் எனக்கு எதுவும் கிடைக்கவில்லை. அதனால் நிராசையாக இருந்தது. ஆனால் எல்லோரையும் விட முதலில் வந்திருந்த என் அப்பாவும் அம்மாவும் பலகாரங்களை வாங்கி வருவதைப் பார்த்து, மிகவும் மகிழ்ந்தேன் ..."

"பலசாதிகளிலும் என் அப்பாவுக்கு நண்பர்கள் உண்டு. உயர்ச் சாதிக்காரர்களின் குடியிருப்புக்குச் சென்று அவர்களின் வீட்டுக்கு முன்னால் நிற்பதுண்டு. அவர்கள் எப்பொழுதாவது என்னைப் பக்கத்துக் கல்லில் உட்கார வைத்து சாப்பிட ஏதாவது கொடுப்பதுண்டு. சிலசமயம் அப்பாவே என்னை ஊர் நடுவிலிருக்கிற ஓட்டல்களுக்கு அழைத்துச் செல்வார். ஓட்டல்காரர் மற்றவர்களிடமிருந்து தள்ளி எங்களை உட்கார வைப்பார். அந்த ஓட்டல்காரர் கொடுத்த இட்லிகளைத் தின்பது மிகவும் ஆனந்தமாக இருந்தது. அந்த இட்லிகளின் வடிவம், மிருதுத் தன்மை, ருசியில் மூழ்கி இருந்த எங்களுக்கு வேறு எந்தவிதமான எண்ணங்களும் அவசியமற்றவைகளாகத் தோன்றின ..."

"ஒருநாள் நான் தெருவில் வேகமாக ஓடினேன்; எதிரே வந்து கொண்டிருந்தவரின் சட்டைமேல் என் கை பட்டுவிட்டது. அவர் கோபங்கொண்டு நின்று விட்டார். நானும் பயத்தில் நின்றேன் ... அவரிடம் கெஞ்சிக் கெஞ்சி என் பாட்டி மன்னிப்பு கேட்டபிறகு அவர் சென்றார். அவர் உயர்சாதிக்காரர் என்பதும், என் கை அவரைத் தீண்டிவிட்டது

www.tamilarangam.net



என்பதும்தான் அவர் கோபத்துக்குக் காரணம்! என் தவறால் மேல் சாதிக்காரர்களின் கோபத்துக்கு ஆளாகி விடுவோமோ என்று என் பாட்டி மிகவும் பயந்தாள். அன்றிலிருந்து என்னை ஓடக்கூடாது என்று தடுத்து விட்டாள். பெரியவர்கள் யாரைப் பார்த்தாலும் உடனே கைகுவித்து அவர்களை, "கும்புடறங்க சாமி!" என்று சொல்ல வேண்டும் என வற்புறுத்தினாள். நானும் அவள் பேச்சைக் கேட்டு நடந்து எல்லாருடைய பாராட்டுகளுக்கு ஆளானேன் ...."

"வழக்கம் போல எங்கள் வீட்டுக்குப் பக்கத்திலிருந்த குட்டிச் சுவரின் மேல் நானும் மற்ற பிள்ளைகளும் நின்று, அப்பா—அம்மாவைக் கூவி அழைத்துக் கொண்டிருந்தபோது ஒரு காட்சி தெரிந்தது: ஐயரின் நிலத்தில் இரண்டுபேர் தம் கழுத்தில் நுகத்தடியைச் சுமக்க ஒருவன் கலப்பையை அழுத்தி உழுது கொண்டிருந்தான். நுகத்தடியை சுமந்த இருவரும் எருதுகள் போலச் சென்று கொண்டிருக்க, மூன்றாவது ஆள் பின்னால் இருந்து உழுத அக்காட்சி, ஏதோ மாயாஜாலக் காட்சியை போல இருந்தது. ஆனால், நுகத்தடியைச் சுமந்த இருவரில் ஒருவர் எனது தந்தை என்று தெரிந்தபோது, என் மனத்தில் இனம் புரியாத வேதனை பரவியது. நாங்கள் இருந்த பக்கமாக வந்த சில பெண்கள், "பாவம்! தேவண்ணனுக்கு வந்த கஷ்டத்தப் பாரு!" என் காதில் விழுந்ததும், என் மனவேதனை இரண்டு மடங்கானது; எருதுபோல கலப்பையை இழுத்து விட்டு சாயங்காலமாக வீட்டுக்கு வந்த அப்பாவின் தோள்களுக்கு ஒத்தடம் கொடுத்தாள் அம்மா.."

சித்தலிங்கையாவைப் போலவும் முக்தர் பாயைப் போலவும் வெளிப்படையாக ஒலிக்காத 'தலித்' அவலக் குரல்கள் எத்தனையோ காலத்தின் மண்ணுக்கடியில் புதையுண்டு போயிருக்கின்றன. ஆனாலும் காலக்காற்றில் கரையாத குரல்கள் அவை ....

விடிவுக்காக ஏங்கும் மனங்களுக்கு, அது அண்மையா? சேய்மையா? என்ற தீர்க்கதரிசனப் பார்வை எப்பொழுது ஏற்படும்,

**- நிகழ் 31**
**அக்டோபர் 95**

www.tamilarangam.net



# தமிழ் ஆன்மீகமும், தலித்தியமும்

**- எஸ். இராமகிருஷ்ணன்,** சிவகங்கை

சீர்திருத்த தேசிய இயக்கத்திலும், திராவிட இயக்கத்திலும், தமிழ் இயக்கத்திலும், என் பொதுவுடமை இயக்கத்திலும்கூட, இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி தொட்டு பங்கேற்ற குடும்பங்கள் யாவும் பிராமண தமிழ் குடும்பங்கள் இந்தத் தமிழ்ப் பண்பாட்டின் விளைச்சல்கள்தான். தலித் விடுதலைக்குக் குரல்கொடுத்தவர்களும் துணை நின்றவர்களும் கூட இந்தத் தமிழ்ப் பண்பாட்டின் உரிமையாளர்களே ஆவர்.

இவர்களே தமிழ்ப்பண்பாட்டின் உண்மையான வாரிசுகள். இவர்கள் உருவகப்படுத்தியதே தமிழ்ப்பண்பாடும், திராவிட பண்பாடும்.

தாழ்த்தப்பட்ட, சூத்திர சாதியினர் இடையில் இருந்த, சுயமான தலைமையும், அணிகளும் உருவாகும் வரை, உருவாகமுடியாத காலத்தில் இந்த தமிழ் மரபின், தமிழ் பண்பாட்டின் உரிமையாளர்களே சாதியத்தை எதிர்த்தும், உழைப்பின் உயர்வை வலியுறுத்தியும், எளிய ஆன்மீக மரபுகளையும், அன்பு வழியையும் வலியுறுத்தியும் பொருளாசையை எதிர்த்தும் (இது உடைமை வர்க்கத்திற்குத் தான் பிரதானமாக வலியுறுத்தப்பட்ட அறம்), ஞானத்தின் மேலாதிக்க நிலையை நிராகரித்தும், பக்திமார்க்கத்தையும், கர்மயோகத்தையும், மனிதநேயத்தையும், ஏன் ஜீவகாருண்யத்தையும் பொதுவான, மேலான "தர்மமாக" வலியுறுத்தியும், அதிகாரத்தையும், செல்வத்தையும், ஞானத்தையும், உழைப்பிற்கும், அன்பிற்கும் பக்திக்கும், அடுத்தபடியில் வைத்தும், இந்த தமிழ்ச் சமூகத்தையும், இந்திய சமூகத்தையும் பண்படுத்தி வந்தவர்கள். இப்பணிக்கு இவர்கள் பெரும்பாலும், ஆன்மீகத்தையே – தமிழ் ஆன்மீக மரபையே, கருவியாகக் கொண்டனர்.

பார்ப்பனர்களின் கருத்துப் பிரச்சாரத்தால் அல்ல, இனக் கலப்பின் காலப் போக்கிலான வரலாற்று விளைவால்கூட அல்ல, வாளின் மூலமே, அரசு அதிகாரத்தின் மூலமே போர்களின் மூலமே இந்தியாவின் தமிழகம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் ஆரிய ஆதிக்கமும், நால்வருணச் சமூக (ஆரிய)ப் பாகுபாடும் பண்ணை அடிமை முறையும் (தீண்டாமையும்) நிலைநாட்டப்பட்டன, சுட்டிக்காக்கப்பட்டன.

நிலப்பிரபுத்துவ தமிழ்ச்சாதிகளைவிட இந்த சத்திரிய–சூத்திர

www.tamilarangam.net



சாதிகளே, சாதியத்தின் குறிப்பாக தீண்டாமையின் காவலர்களாகவும் இருந்து விடுகின்றனர். இவர்களில் உயர்தமிழ் சாதிகளாவது, தமது தமிழ் உணர்வு காரணமாகவும், பிராமணர்களோடு உள்ள 'ஆதிக்கப் போட்டி' காரணமாகவும், தமிழ் மரபின் கலாச்சார பாதிப்பின் காரணமாகவும், பல சமயங்களில், தலித் சமூக விடுதலையையாவது அங்கீகாரம் செய்துள்ளனர்; சாதி ஒழிப்பிற்குக் குரல் கொடுத்துள்ளனர். இத்தகைய இயக்கங்களில் பங்காற்றியும் உள்ளனர். ஆனால், இந்த சத்திரிய தமிழ் சூத்திரர்கள் பெரியாரைப் பயன்படுத்திக்கொண்டு பிராமண எஜமானர்களை விரட்டிவிட்டு, அவர்களுடைய நில உடைமையையும், கலாச்சாரத்தையும் தமதாக்கிக் கொண்ட, பிராமணியக் கலாச்சாரத்தின் விசுவாசமிக்க ஊழியர்களாகவே இன்றும் செயல்பட்டு வருகிறார்கள். இதன் காரணமாக இவர்கள் இன்றும் தலித் எதிர்ப்பாளர்களாக, தலித் ஒடுக்கு முறையாளராக உள்ளனர்.

இந்திய விளைநிலங்கள் மீது, பிராமணர்கள் உள்ளிட்ட முதல் மூன்று ஆரிய வருணத்தாரின் உரிமை ஓரளவு ஒழிக்கப்பட்டபோது இந்திய விளைநிலம் பிராமணர் உள்ளிட்ட ஆரிய முதல் மூன்று வருணத்தாரிடம் ஆரியரல்லாத சூத்திர சத்திரியர் ஒத்துழைப்பின் மூலம் தமது நிலத்தைப் பறிகொடுத்த, இந்திய தமிழ் உழவர்கள் அதாவது பாரம்பரிய உழவர்கள் – அதாவது தாழ்த்தப்பட்டவர்கள் வசம் வராது, சூரிய அடிமைமுறை நிலவுடைமைச் சமுதாயத்தைக் கட்டிப் பாதுகாத்த இந்த சத்திரிய – சூத்திரகள் வசம் வந்துவிட்டது. இதுவே இன்றைய இந்திய கிராமப்புற சமூக முரண்பாட்டின் (தலித் பிரச்சினை) முக்கிய காரணம்.

தலித்துகளை இதர ஆரியரல்லாத வர்ணத்தாரிடமிருந்து குறிப்பாக சத்திரியரிடமிருந்து, சூத்திரரிடமிருந்து இன ரீதியாகப் பிரிப்பது, மொழி ரீதியாகப் பிரிப்பது தலித் விடுதலைக்கு ஊறு விளைவிக்கும்.

தலித்துகளிடமிருந்து ஆரியராலும், காலத்தாலும் பிரிக்கப்பட்ட, ஆரியரல்லாத குடிகளை அதாவது சாதிகளை மீண்டும் தலித்துகள்பால் வென்றெடுக்க இக்கண்ணோட்டம் உதவாது (எல்லா மாநிலங்களிலும்). எனவே உண்மையாகவே, இந்திய தலித்துகள் அல்லது தமிழக தலித்துகள், மொழியாலும், இனத்தாலும் ஒரு தனித்த பிரிவாக இருந்தாலும் அவ்வாறு கூறக்கூடாது.

எனவே இந்த எல்லா தேசிய இனங்களிலும், பஞ்சமரும் (தலித்) பெரும்பாலான சூத்திரரும் ஒரு பொது இனத்தைச் சேர்ந்தவர்களாக

www.tamilarangam.net



இல்லாவிடினும், ஆரியர்கள் அல்ல என்பதே உண்மை. ஆரியர்களும் தங்கள் தனித்தன்மையை இழந்துள்ளனர் என்பது உண்மையே (குறிப்பாக மொழிமட்டத்தில்). ஒரு எழுத்தாளன், சமூக ஊழியன் பேசும்போது இந்த கடைசி இரு வர்ணத்தாரைச் சேர்த்தே பேசுவது நல்லது. இன்று தலித் எதிர்பபாளர்களாக இருக்கும் சூத்திரரை அதாவது பிற்பட்டோரில் ஒருபிரிவினரை – பார்ப்பனீய ஏஜண்டுகள் என்ற அளவில் உருவகித்தால் போதும்.

இந்திய தேசிய இனங்களின் மொழிப் பண்பாடும், மொழி வரலாறும், சாதி எதிர்ப்புக் குணமும், தீண்டாமை எதிர்ப்புக் குணமும் உடையதே.

கீழ் சாதிகள், உழைக்கும் வர்க்கம், அடிமைகள் மூவரும் என்றுமே தாய்மொழியைக் காக்கின்றனர். அதற்காகப் போராடுகின்றனர். ஏனெனில் அது தேவையாகிறது. தமிழ் இயக்கம் என்றுமே புறவயமாக தலித் இயக்கம்தான். ஒடுக்கப்பட்ட எந்த மொழி இயக்கமும் – அதாது தேசிய இன விடுதலை இயக்கமும் அவ்வாறே. மற்ற தேசிய இனப் போராட்டங்களும், அம்மாநிலங்களின் தலித் நலனையே பிரதான நோக்கமாகக் கொண்டது. இதைப் புரிந்து கொண்டால், தலித் இயக்கத்தை, தமிழ் இயக்கத்திற்கு எதிராகவும், தமிழ் ஆன்மீக மரபுக்கு எதிராகவும் நிறுத்த முயலமாட்டார்கள்.

சீனப்புரட்சி, ரஷ்யப் புரட்சி, ஏன் பிரெஞ்சு புரட்சி மாதிரியில், இந்திய நிலப்புரட்சி, பெரும்பான்மை தலித்துகளின் உண்மையான சமூக, பொருளாதார அரசியல் விடுதலைக்கு வழிகோலும்.

புரட்சிகர கம்யூனிஸ்ட் குழுக்களும், திருத்தல்வாத கம்யூனிஸ்ட் கட்சிகளும், ஏன் நிலபிரபுத்துவச் சார்பு இல்லாத முதலாளித்துவக் கட்சிகள்கூட, தலித் விடுதலையின் கருவிகளே. திராவிட, தமிழ் இயக்கங்களும் அவ்வாறே.

இந்தியாவிலேயே முதன்முதலாக, தாழ்த்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு நமது தமிழ்நாட்டில் செய்யப்பட்டதும், கேரள, வங்க மாநிலங்களிலும், கர்நாடகத்திலும் ஒப்பீட்டளவில் தலித் முன்னேற்றமும் தற்செயலானது தானா? நிச்சயம் இல்லை. சாதி ஒழிப்பையும், தலித் சமூக சமத்துவத்தையும் நோக்கமாகக் கொண்ட சமயங்களும், இலக்கியங்களும் இத்தமிழ் மண்ணிலும், இந்தியாவின் இதர தமிழ்க்குடியேற்றப் பகுதிகளிலும் உருவானது தற்செயலானது அல்ல.

www.tamilarangam.net



இந்திய தலித் விடுதலைக்கு நேச சக்திகள் வேண்டும். இவை உழைக்கும் வர்க்கங்களாகிய பிற்பட்ட சாதிகளே. இவற்றை தலித்துகளோடு இணைக்கும் பாலம், பொதுவான மொழிப்பண்பாடே. இவற்றைப் பலவீனப்படுத்துவது, தலித் விடுதலை நோக்கிலேயே அறிவுடைமை ஆகாது. தமிழ் ஆன்மீக இயக்கமும் இவ்விரு சமூகப் பிரிவுகளையும் இணைக்கும் ஒரு பாலமே.

உலக விடுதலை இயக்கங்களைவிட மிகக் கடினமானது இந்திய தலித் விடுதலையே. இதற்கு தலித் எண்ணிக்கைச் சதவிகிதம் குறைவு (15%), மேலும் அரசு இயந்திரமும், அடக்கு முறையும் மிகவும் பலமுள்ள அமைப்பாக உருவெடுத்துள்ள காலம் இது.

பிற்பட்டோரில் கணிசமான உழைக்கும் பகுதியினர், மதச்சிறுபான்மையினர், மொழிச் சிறுபான்மையினர் கூட்டே இந்திய ஒடுக்குமுறை, பார்ப்பனிய, பனியா, சத்திரிய அரசு இயந்திரத்தை உடைத்து நொறுக்கி தலித் விடுதலையைப் பெற்றுத்தர வல்லது. கம்யூனிஸ்ட் இயக்கம், தமிழ் ஆன்மீக மரபும் தலித்துகளின்பால் தன் கடமையை ஆற்றும். செத்துவிடாது.

ஜெர்மனிய பாசிசத்தை எதிர்த்து ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் இலட்சக்கணக்கில் உயிர்விட்டனர். சித்திரவதைப்பட்டனர். தென்னாப்பிரிக்க நீக்ரோக்களுக்கு ஆதரவாக கம்யூனிஸ்ட் வெள்ளையர்கள் துப்பாக்கி தூக்கிப் போராடினர். உதாரணங்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

இந்திய மேல் சாதி வெறியர்களுக்கு எதிராக, இந்திய தலித்துகளோடு சேர்ந்து, மேல்சாதி கம்யூனிஸ்டுகளும் உறுதியாக போரிடுவார்கள். தமிழ்ப் பண்பாட்டைப் போற்றுபவர்களும், தமிழ் ஆன்மீகவாதிகளும் அவ்வாறே போரிடுவர். இந்த வாய்ப்பை நம்பியிருக்க வேண்டாம். கெடுத்துவிடவும் வேண்டாம்.

குறிப்பு : 11.2.95 அன்று நண்பர் ராஜ் கௌதமனுக்கு எழுதிய கடிதத்தில் இருந்து சில பகுதிகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டு உள்ளன.

**நிகழ் 31**
**அக்டோபர் 95**

www.tamilarangam.net



# பார்ப்பனீயத்தின் வெற்றி - அம்பேத்கர்

- குறிஞ்சி

"அதிக எதிர்பார்ப்போடு திறக்கப்பட்டு, மிக்க இலாபம் பெற்ற திருப்தியோடு மூடப்படுவதே சிறந்த புத்தகமாகும், எனக்குறிப்பிட்டார் அறிஞர் ஒருவர். அந்த அளவுகோலின்படி, இந்நூல் நிச்சயமாக சிறந்ததோர் படைப்புத்தான்.

எல்லாவகையிலும் தமிழுக்கு இது ஒரு புதிய வரவு. இந்நூல் இரண்டு அம்சங்களில் குறிப்பிடத்தக்க வெளிச்சத்தை தருகிறது.

1. இந்திய வரலாறு பற்றிய புதிய கண்ணோட்டம்.
2. வர்ணம் எவ்வாறு சாதியாக மாறியது என்ற விளக்கம்.

பொதுவாக, இந்தியக் கலாச்சாரம் என ஒன்று எப்பொழுதுமே இருந்ததில்லை எனக் கூறும் அம்பேத்கார் வரலாற்று ரீதியாக மூன்று இந்தியர்கள் உள்ளன என வரையறுக்கிறார்.

1. பார்ப்பான – இந்தியா
2. பௌத்த – இந்தியா
3. இந்து – இந்தியா

இம்மூன்றுமே தனக்கே உரித்தான கலாச்சாரத்தைக் கொண்டிருக்கின்றன. அடுத்து, "முஸ்லீம் ஆக்கிரமிப்பிற்கு முந்திய இந்திய வரலாறு என்பது பார்ப்பனியத்திற்கும், பௌத்தத்தித்திற்கும் இடையிலான ஜீவமரணப் போராட்டத்தின் வரலாறு ஆகும். இந்த இரு உண்மைகளையும் ஏற்றுக் கொள்ளாத எவராலும் உண்மையான இந்திய வரலாற்றை – அர்த்தமும் அதனால் விளையும் பலன்களையும் கொண்ட ஒரு வரலாற்றை எழுத முடியாது" எனவும், "பௌத்த இந்தியாவின் மீதான பார்ப்பனியத்தின் ஆக்கிரமிப்பு பற்றிய வரலாற்றையும், பௌத்தத்திற்கு எதிரான பார்ப்பனீயத்தின் அரசியல் வெற்றி பற்றிய வரலாற்றையும் நான் மறுவார்ப்பு செய்யக்கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் ஏற்கனவே எழுதப்பட்டுள்ள இந்திய வரலாற்றைச் சரிப்படுத்த வேண்டும்" எனவும் அம்பேத்கார், நூலின் நோக்கத்தைக் குறிப்பிடுகிறார். (பக். 21/22)

இந்த நோக்கத்தைப் பல்வேறு வரலாற்று நிகழ்வுகள் மற்றும் மனு தர்ம நூலில் காணப்படும் அகச்சான்றுகள் வழி நிறுவ முயல்கிறார். ஆரியர்கள் இந்தியா மீது படையெடுத்து வந்து தம் பண்பாட்டை நிறுவுவதிலிருந்து இந்திய வரலாறு துவங்குகிறது என்பது தவறு. நாகர்கள்

www.tamilarangam.net



எனச் சொல்லப்படும் ஆரியரல்லாத மக்களின் எழுச்சியிலிருந்தே இந்திய வரலாறு தொடங்குகிறது. உலக வரலாற்றில், இந்தியாவின் புகழுக்கும் பிரகாசத்திற்கும் காரணம் நாகர்களே!

கி.மு. 642–ல் பீகாரில் தோன்றிய மகதப் பேரரசை நிறுவிய சிசுநாகு, ஆரியர் அல்லாதவர். சிசுநாக வம்சத்தைத் தொடர்ந்து வந்து நந்த வம்சம், மௌரிய வம்சம் ஆகியவை நாகர்களின் பேரரசை மறுநிர்மாணம் செய்தன. மௌரிய வம்சத்து அசோகர் பார்ப்பனீய மதத்தின் மிக முக்கிய அம்சமான மிருக பலியைத் தடை செய்தார். இதனால் கேள்விகள் மூலம்கிடைத்த வருமானம் பார்ப்பனர்கட்குப் பறிபோனது; பார்ப்பனியம் நசுக்கப்பட்டது. (பக்.8) மௌரியப் பேரரசின் 140 ஆண்டுக்கால ஆட்சியில், பார்ப்பனர்கள் ஒடுக்கப்பட்ட அடக்கப்பட்ட வகுப்பாகவே இருந்து வந்தார்கள்.

இப்படிப்பட்ட மௌரிய ஆட்சியை – பௌத்தத்தை – தூக்கியெறிய, பார்ப்பனரால் உருவாக்கப்பட்ட அரசியல் புரட்சிதான் புஷ்யமித்திரன் எனும் ஆரிய அரசனின் புரட்சி இது. கி.மு. 185–ல் தொடங்கப்பெற்றது. இந்த உண்மையை ஒத்துக் கொள்வதிலிருந்து தான் நாம் தொடங்க வேண்டும் என அம்பேத்கார் எல்லைக்கோடு வகுக்கிறார். இந்த புஷ்யமித்ரா ஆட்சியின் கீழ்தான், முதன்முறையாக மனுஸ்மிருதி புதிய சட்ட விதியாக அறிவிக்கப்படுகிறது.

அடுத்து இந்தியாவை முஸ்லீம்கள் ஆக்கிரமித்தது குறித்து அளவுக்கதிகமான முக்கியத்துவம் தரப்படுகிறது; முஸ்லீம் படையெடுப்புத்தான் இந்திய வரலாற்றின் ஒரே முக்கிய அம்சம் என்ற தோற்றம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இது தவறு. இதற்கிணையாக மற்ற படையெடுப்புக்களும் இருந்திருக்கின்றன. இந்து – இந்தியாவின் மீதான முஸ்லீம் படையெடுப்பைக் காட்டிலும் புத்த இந்தியாவின் மீதான பார்ப்பனப் படையெடுப்பு கடுமையானது; தலைகீழ் மாற்றத்தை உருவாக்கியது என அம்பேத்கர் மதிப்பிடுகிறார்.

வர்க்கங்களுக்கிடையேயான போராட்டமே மனித குல வரலாறு எனும் மார்க்சிய அடிப்படையில் அம்பேத்கர் இந்திய வரலாற்றை அணுகியுள்ளாரா என்பது இப்பொழுது ஒரு கவனத்தை ஈர்க்கும் ஒரு கேள்வியாகும். பார்ப்பனர்களை ஒரு சாதியாக மட்டும் பார்க்காமல், வர்க்கமாகவும் அம்பேத்கர் அவதானிப்பதை இந்நூல் புலப்படுத்துகிறது. பார்ப்பனர் ஆட்சி தனக்குத்தானே நியாயமானதாக இருக்க

www.tamilarangam.net



வேண்டுமானால், பார்ப்பனர்களுக்கு ஒரு வர்க்கம் என்ற முறையில் சில சிறப்பு சலுகைகளும், விதிவிலக்குகளும் தரப்பட வேண்டும். பார்ப்பனர்களின் உயர் தகுதியை அங்கீகரிக்காமல் இருந்திருந்தால், ஒரு வர்க்கம் என்ற முறையில் அவர்களுக்குச்சில சிறப்புச் சலுகைகள் தரப்படாமல் இருந்திருந்தால் உண்மையில் புஷ்யமித்திரரின் புரட்சி பயனற்ற ஒன்றாகவே இருந்திருக்கும். இதை மனு உணர்ந்திருந்தார். ஆகவேதான், பார்ப்பனர்களுக்கு என ஏகபோக உரிமைகளை உருவாக்கினார். (பக்.27) என அம்பேத்கர் குறிப்பிடுகிறார்.

இத்தகைய ஜனநாயக விரோதப் போக்கை, பார்ப்பனர்கள் எப்படி அரசு அதிகாரத்தின் மூலம் நிறுவினார்கள் என்பதையும், கருத்தியல் தளத்தில் மனு நூல் இதை எப்படி நியாயப்படுத்துகிறது என்பதையும் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். ஆனால், இம்மாற்றங்களை வெகுமக்கள் எதிர்கொண்டவிதம், இக்கருத்தாக்கத்திற்கு எதிரான அக்கால வரலாற்றுக் குரல் ஆகியன போதிய அளவு பதிவு செய்யப்படவில்லை.

'மக்கள், சுலபத்தில் இந்த (பார்ப்பன) புரட்சியோடு ஒத்துப் போகவில்லை. பானா என்ற கவிஞர் மக்களின் அதிருப்தியை நன்றாகவே வெளிப்படுத்தியுள்ளார். புஷ்யமித்திரரை இழிபிறப்பாளர் என்று நிந்திப்பதோடு அவர் நடத்திய அரச கொலையை 'அநாரியம்' என்றும் விளக்குகிறார்.

பானா, புஷ்யமித்திரரின் நடவடிக்கை அநாரியம் என்று சரியாகவே விளக்குகிறார். அநாரியா என்பதன் பொருள், ஆரிய சட்டத்திற்கு விரோதமானது என்பதாகும்' என்ற ஒரு தகவல் மட்டும் காணப்படுகிறது. ஏனைய அம்சங்களில் 'விடுதல்கள்' நிறைய உள்ளன.

அதேபோல், சாதி–வர்ணம் பற்றிய விளக்கமும் இந்த நூலில் குறிப்பிடத்தக்க இரண்டாவது அம்சம் 'வர்ணத்தைச் சாதியாக மாற்றும் மாற்றத்தைக் கொண்டு வர, பார்ப்பனர் எடுத்த நடவடிக்கைகளுக்குப் புறவயமான ஆதாரம் நமக்கு ஏதும் இல்லை . . . வர்ணம், சாதியாக மாறியது பற்றிய வரலாற்று விவரங்களை விரிவாக நாம் தரமுடியாது. ஆனால் அதிர்ஷ்டவசமாக இம்மாற்றம் எப்படி நடைமுறைக்கு வந்தது என்பது பற்றிச் சில முக்கிய ஆதாரங்கள் நம்மிடம் உள்ளன' என அம்பேத்கர் (பக். 42/43) தெரிவிக்கிறார்.

www.tamilarangam.net



வர்ணம் – சாதி இரண்டுமே, அந்தஸ்து தொழில் இரண்டையும் குறிப்பிடுகின்றன. ஆனால், ஒரு முக்கிய விஷயத்தில் வர்ணமும் – சாதியும் வேறுபடுகின்றன. வர்ண முறையில் அந்தஸ்தோ அல்லது தொழிலோ தலைமுறைத்தன்மை கொண்டதல்ல! ஆனால் சாதியோ, அந்தஸ்தும் தொழிலும் தலைமுறைத் தன்மை கொண்டதான ஓர் அமைப்பை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கிறது' என்கிறார்.

இந்த மாற்றம், மூன்று கட்டங்களாக வந்தது –

1. வர்ணத்தின் கால அளவு – அதாவது ஒரு நபரின் அந்தஸ்தும் தொழிலும் ஒரு வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மட்டுமே என்றிருந்தது.

2. ஒரு நபரின் தொழிலும் அந்தஸ்தும் அவன் வாழ்நாள் முழுவதற்கும் மட்டுமே என்றிருந்தது.

3. இறுதியாக அந்தஸ்தும் தொழிலும், பரம்பரை உரிமையானது, படிப்படியான இந்த மாற்றம் பற்றி தர்க்க ரீதியாக அம்பேத்கர் குறிப்பிடுகிறார். ஒரு நபரின் வர்ணம் எப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டது என்பதிலிருந்து தந்தையின் வர்ணம் மகனுக்கு வந்தபோது, வர்ணம் எப்படிச் சாதியானது என்பது வரை விரிவான விளக்கம் தரப்பட்டுள்ளது.

வர்ணம், சாதியாக மாறியதன் விளைவாக, பன்மடிப் படிநிலையிலான சமத்துவமற்ற சமுதாயம் உருவானது. இந்த அமைப்பில் ஒரு சாதி, ஒடுக்கப்படும் அதே சமயத்தில் தனக்குக்கீழுள்ள ஏனைய சாதிகளை ஆதிக்கம் செய்யவும் வாய்ப்புத் தரப்படுகிறது. எனவே சமத்துவமின்மைக்கெதிரான போராட்டத்தில், சாதீயம் இருநிலைகளில் பெருந்தடையாக நிற்கிறது.

(1) ஏற்றத்தாழ்வுக்கெதிரான அதிருப்தி சாதிகளிடையே இல்லை. தீண்டத்தகாதோர் தவிர அனைத்து சாதிகளும் அதிகாரம் செய் தங்களுக்குக் கீழே சில சாதிகள் இருப்பதைப் பெருமையாகக் கருதுகின்றன.

(2) பொது எதிரிக்கு எதிராகப் பாதிக்கப்பட்டவர்கள் ஒன்றிணையும் வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. பார்ப்பனனுக்கெதிராக வைசியன் இருக்கலாம். ஆனால் அவன் அக்காரணத்திற்காக, சூத்திரனோடு சேர ஆயத்தமாக இல்லை.

www.tamilarangam.net



மேலும், 'கலப்பு மணத்தடை, கலந்துண்ணல் மீதான தடை ஆகிய இந்த இருதூண்களின் மீதுதான் சாதியம் நிற்கிறது' என அம்பேத்கர் (பக். 58) வரையறுக்கிறார். சாதியத்தின் பொருளாதாரப் பின்னணி பற்றி மார்க்சியம் தரும் அழுத்தம் குறித்து ஒப்பாய்வு இவ்விடத்தில் அவசியமானதாகும்.

அதேபோல், "ஒவ்வொரு சமூகமும் பல குழுக்களைக் கொண்டதாக இருந்தபோதிலும், இந்து சமூகத்தில் உள்ள குழுக்கள் சமூக எதிர்ப்பு கொண்டவையாக உள்ளன. மற்ற சமூகங்களில் குழுக்களானது சமூகத்தன்மையற்று மட்டுமே இருக்கின்றன. வர்க்க சமூகத்திற்கும் சாதி சமூகத்திற்குமான வேறுபாடுகள் அதன் பெயரிலேயே இருக்கிறது. வர்க்க சமூகத்தில் வெறும் சமூகத்தன்மையற்று மட்டுமே இருக்கும். ஆனால், சாதிய சமூகமோ சமூக எதிர்ப்புத் தன்மை கொண்டதாகவும் இருக்கும்" எனக் கருதும் அம்பேத்கரின் கண்ணோட்டமும் (பக். 87) இங்கு மனங்கொள்ளத்தக்கதாகும்.

இந்தியா, ஒரே நாடு. ஒரே கலாச்சாரத்தைக் கொண்டுள்ளது என்பதை அம்பேத்கர் கடுமையாக மறுதலிக்கிறார். சாதியமைப்பு, தேசியத்திற்குக் குறுக்கே நிற்கிறது எனச் சுட்டிக்காட்டுகிறார். "தேசியம் என்பது அகவயப்பட்ட உளவியல் உணர்வுகள் ஆகும். அது ஐக்கியப்பட்ட ஒற்றுமை உணர்வு ஆகும். இவ்வுணர்வு பூகோள, கலாச்சார அல்லது பொருளாதார அல்லது சமூக மோதல்கள் ஆகியவற்றிற்குச் சம்பந்தப்படாத சுதந்திரமான ஓர் உணர்வு என்பதை முக்கியமாக மனதில் கொள்ளவேண்டும்" என்ற அம்பேத்கரின் கருத்து. இந்திய ஒருமைப்பாடு எனும் 'இந்து' கூச்சலுக்குச் சரியான பதிலடியாக அமைந்துள்ளது. இறுதியாக ஒன்று – அதுதான் இயல்பான மொழியாக்கம்! அம்பேத்கரின் மூலப் பிரதியைச் சிதைக்காமல், அதே சமயத்தில் இதுவே ஒரு மூலநூல் போல, வாசிப்புச்சுகத்தைத் தந்தமைக்காக, ஆங்கிலத்திலிருந்து இதை மொழிபெயர்த்த வெ. கோவிந்தசாமி, மிகுந்த பாராட்டுக்குரியவர்.

**நிகழ் 23**
**செப்டம்பர் 92**

www.tamilarangam.net



# சூத்திரர் யார்?
## மதிப்புரை - ஞானி

டாக்டர் அம்பேத்கர் அவர்களின் ஆய்வு நூல்களில் 'சூத்திரர் யார்?' என்பதும் ஒன்று. வரலாற்று ஆய்வில் தனக்கு தகுதி உண்டு என்பதை மிகச் சிறப்பாக இந்த நூலில் மெய்ப்பித்துக் கொள்கிறார். ஏற்கெனவே பலர் பலமுறை சொல்லி பலரால் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் கொள்கைகள் பலவற்றை அம்பேத்கர் கலைத்துப் போடுகிறார். முதலில் இவற்றை ஒருவாறு இங்கு தொகுத்துக் கொள்ளலாம்.

1. ஆரியர் மேற்கிலிருந்து இந்தியாவுக்கு வந்தவர்கள் என்பதை அம்பேத்கர் மறுக்கிறார். தஸ்யுக்களும் தாசர்களும் அடிமைகள் அல்லர் என்கிறார். தஸ்யுக்கள் இரானிலிருந்து வந்தவர்கள். அரண்மனையோடு வாழ்ந்தவர்கள் என்கிறார். வர்ணம் என்பதன் பொருள் நிறமல்ல என்கிறார். கொள்கை / மதம் என்று கூறுகிறார். தாசர்கள், அடிமைகள் அல்ல என்கிறார்.

2. ஆரியர்கள் வெள்ளை நிறம் / செந்நிறம் உடையவர்கள் என்பதையும் மறுக்கிறார். ஆரியரில் கறுப்பு நிறத்தவரும் உண்டு, ஆரியர்களில் அடிமைகளும் இருந்திருக்கின்றனர். துருவப் பிரதேசத்திலிருந் ஆரியர் வந்திருக்க வேண்டும் என்ற திலகர் கூற்றை மறுக்கிறார். காரணம் அங்கு குதிரைகள் இல்லை என்கிறார். தலைமுடி, நிறம் ஆகியவற்றை வைத்து இனம் என்ற கருத்து உருவாக்கப்பட்டதை இவர் ஒப்புக்கொள்ளவில்லை. யூதர்கள் ஓர் இனம் அல்ல என்கிறார், ஆரியர் ஓர் இனம் அல்ல. மொழி சார்ந்த பெயர்தான் ஆரியம் என்கிறார்.

3. மேற்கிலிருந்து வந்து வெள்ளையரை இங்குள்ள பிராமணர்கள் தங்கள் இனம் என்றனர். அவர்களும் இவர்களைத் தம் இனம் என்றனர். மேற்கத்தியவர் அறிவாண்மைமிக்கவர். படைபலம் உடையவர். அவர்கள் இந்தியரை ஆளத் தகுதி உடையவர்கள். இக்கருத்தை பிராமணர்கள் ஒப்புக் கொண்டதன்மூலம் இந்திய மக்களின்மீது மேலாண்மை செய்யும் தகுதி தமக்கும் உண்டு என்பதை நிலைநிறுத்த முடியும் என்று கருதினர். ஆரியர் மேற்கிலிருந்து வந்தவர் என்ற கொள்கை இப்படித்தான் ஏற்பட்டது என்கிறார் அம்பேத்கர்.

www.tamilarangam.net



4. ரிக் வேதத்தில் புருச சூக்தம் ஓர் இடைச்செருகல் என்கிறார். புருச சூக்தத்தில் புதிர்கள் பல உள்ளன என்று சொல்லி ஒவ்வொன்றாக எடுத்து விளக்குகிறார். நால்வருணக் கொள்கையை நிலைநிறுத்துவது புருச சூக்தம். ரிக் வேத காலத்தில் மூன்று வர்ணங்கள்தான் இருந்தன. சூத்திரர் என்ற வர்ணம் ரிக்வேதத்தில் இடம் பெறவில்லை. ரிக் வேதத்திலேயே பிரபஞ்சம் / உலகத்தோற்றம் பற்றி முரண்பட்ட இருவேறு கொள்கைகள் கூறப்பட்டுள்ளன. ரிக் வேதமும் அதர்வண வேதமும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை. ஆரியரிலும் இருவகை இருந்தனர். சத்திரியர்களில் ஒரு பிரிவினர்தான் பிறகு சூத்திரராக தாழ்த்தப்பட்டனர். இவர்கள் சூரிய வம்சத்தைச் சேர்ந்தவர்கள்.

5. இதிகாசமான பாரதத்தில் பைஜாவணர், வேள்வி செய்தவர். தவிர இவர் சூத்திரர். அம்பேத்கர் அவர்களின் ஆய்வுக்கு முதன்மையான ஆதாரம் இந்தக் கண்டுபிடிப்புதான். பைஜாவணர் மகன் சுதாஸ். அவன் மகன் திவோதாஸ். இவர்களின் தொடர்ச்சியாக புரூரவஸ், நகுசா, வேனா முதலியவர்கள். இவர்கள் வேள்வி செய்தனர். இவர்களுக்கு உபநயனம் செய்விக்கப்பட்டிருந்தது. சுதாசின் குரு விசுவாமித்திரர். இவர்கள் பிராமணரோடு போரிட்டனர், கொன்றனர். இவர்கள் வசிட்டரோடு முரண்பட்டு விசுவாமித்திரருடன் யாகங்கள் செய்தனர். சூத்திரர் என பிற்காலத்தில் சொல்லப்பட்ட இவர்கள் வேதபாடல் இயற்றினர். வேதங்களைத் தொகுத்தனர். வேள்வி செய்தனர். சூத்திரர் என தாழ்த்தப்பட்ட காலத்திலும்கூட, பிராமணப் பெண்ணை மணந்து கொண்ட சூத்திரனின் ஐந்தாவது தலைமுறையைச் சேர்ந்தவன் பிராமணன் ஆகலாம் என்று ஸ்ருதிகள் கூறின. அலெக்சாண்டரால் தோற்கடிக்கப்பட்ட பழங்குடியினருள் சூத்திரரும் ஒருவகையினர். சூர்யவம்சத்தை சேர்ந்த இந்த சத்திரியர்களுக்கும் பிராமணர்களுக்கும் இடையறாத போர்கள் ஏற்பட்டன. நகுசா பிராமண முனிவர்களை தன் பல்லக்கைச் சுமக்க வைத்தான். இப்படி பல கதைகள் தொடர்கின்றன. இந்தச் சூத்திரர்களுக்கு தொடக்கத்தில் வேதம் மறுக்கப்படவில்லை. உபநயனம் மறுக்கப்படவில்லை. தொடக்க காலத்தில் ஊமைகளும், பெண்களும், செவிடர்களும் உபநயனம் செய்விக்கப்பட்டனர். இப்படியெல்லாம் அம்பேத்கர் ஏராளமான சான்றுகளை எடுத்துக் காட்டுகிறார். புருச சூக்தம், உலகத்தோற்றத்திற்கு புருசன் காரணம் என்கிறது. ரிக்வேதத்தில் மனிதச் சார்பான / பொருள்வகைப்பட்ட தோற்றம் கூறப்படுகிறது. படைப்புக் கொள்கையும் இருவகைப்படுகின்றன. ஆரியரில் இருவகை. இவர்களின் படைப்புக் கொள்கைகளும் இருவகை. இப்படிச் செல்கிறது அம்பேத்கரின் ஆய்வு.

www.tamilarangam.net



6. உபநயனம் செய்வதை இவர்களுக்கு மறுப்பதன்மூலமே பிராமணர்கள் இவர்களை சூத்திரர் என தாழ்த்தினர் என்பதை விளக்குகிறார். இதற்கேற்ற முறையில் பிராமணர் பல கட்டுக்கதைகளைப் புனைந்து வைத்திருக்கின்றனர் என்றனர். வசிஷ்டரை இவர்கள் கெஞ்சி வாழ்வு பெற்றனர். தன்னை எட்டி உதைத்த நகுசாவை அகத்தியன் அழித்தான் என்றும் பிராமணர்களைக் கெஞ்சி இவர்கள் குழந்தைகள் பெற்றுக் கொண்டார்கள் என்றும் கதைகள் உருவாக்கி வைத்திருக்கின்றனர் என்கிறார். உபநயனம் செய்து கொண்டால் மட்டுமே ஒருவர் சத்திரியர் / அரசராக முடியும் என்ற முறையில் இந்தியாவில் பிரிட்டிசார் காலத்தில் நடைபெற்ற பல வழக்குகளை எடுத்துக் காட்டுகிறார். காகபட்டரைக் கொண்டு சிவாஜி முடிசூட்டிக் கொண்டதை விரிவாக எடுத்துச் சொல்கிறார். (அண்ணாவின் சந்திரமோகன் நாடகத்திலுள்ள அத்தனை விவரங்களும் அம்பேத்கரின் இந்த நூலிலிருந்துதான் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்) உபநயனம் மறுக்கப்பட்ட சூரிய வம்சத்து சத்திரியர் தாழ் நிலை அடைந்தனர் என்கிறார். வைசியர்களும் ஒரு சமயம் பிராமணரோடு முரண்பட்டுப் பார்த்தனர். முடியாத நிலையில் சமரசம் செய்து கொண்டனர் என்கிறார் அம்பேத்கர்.

7. அருமையான ஆராய்ச்சி நூல். அம்பேத்கரின் ஆய்வுகளை மறுத்து பிராமண அறிஞர்கள் எனப்பட்டவர்கள் யாரேனும் எழுதியிருக்கிறாரா என்பது பற்றி தெரியவில்லை. இந்த ஆய்வு நூலில் தனக்கு ஆதரவாக மாக்ஸ்முல்லரை சில இடங்களில் அம்பேத்கர் மேற்கோள் காட்டுகிறார். ரிப்ளே, போப் முதலியவர்களையும் மேற்கோள் காட்டுகிறார். சத்திரியரில் ஒரு பகுதியினர் சூத்திரராகத் தாழ்த்தப்பட்டனர். ஆனால் ஆரிய இனத்தவர் அல்லாத இந்திய மக்கள் கோடிக்கணக்கானவரை இவர்கள் சூத்திரராக தாழ்த்தி இருப்பதையும் அம்பேத்கர் குறிப்பிடுகிறார். புருச சூக்தம், ரிக்வேதத்தின் பிற பாடல்களிலிருந்து மாறுபட்டிருப்பதை எடுத்துக் காட்டுகிறார். இதன் இலக்கிய நடை, வினா – விடை முறை ஆகியவற்றை எடுத்துரைக்கிறார். ரிக்வேதத்திற்கு இந்த அம்சங்கள் முரண்பட்டவை என்கிறார். ரோமானியச் சட்டத்தில் பேட்ரிசியன்கள், பிளெபியன்கள் என்ற பிரிவு உண்டு என்கிறார். எனினும் குற்ற தண்டனைச் சட்டத்திற்கு முன் இவர்கள் சமம். இவர்களுக்கிடையில் கலப்புத் திருமணம் உண்டு. பிளெபியன் எனப்படும் கீழ்மக்கள் தம் அறிவாற்றல் மூலம் மேன்மக்களாக முடியும். புருச சூக்தம்தான் இந்தியாவில் இந்தப் போக்கை மறுத்தது. இதற்காகத்தான் இடைச் செருகலாகச் சேர்க்கப்பட்டிருக்கிறது என்கிறார் அம்பேத்கர்.

www.tamilarangam.net



8. தலை, முடி, நிறம் ஆகியவற்றைக் கொண்டு இனம் என வகுப்பதை அம்பேத்கர் மறுக்கிறார். மேற்கத்திய இனம்தான் உலகை ஆளும் தகுதியுடையது என்ற முறையில் செய்யப்பட்ட இன ஆய்வை தூக்கி எறிவது தேவைதான். எனினும் பண்பாடு / கலாச்சாரம் என்ற அடிப்படையில் இனம் என்ற ஆய்வு தொடரத்தான் செய்கிறது. இந்த நூற்றாண்டிலும் ஒரு வகையிலும் இது தேவையாகத்தான் இருக்கிறது. இந்தியாவில் இருந்தவர் ஆரியர் என்கிறார் அம்பேத்கர். பாமிர் பீடபூமியை இந்தியாவுடன் இணைத்து இவர் பேசுவதாகத் தெரிகிறது. மேற்கத்தியர் தம் மேலாண்மையை இந்தியாவிற்குள் திணிப்பதை ஏற்றதன் மூலம், பிராமணரும் தம் மேலாண்மையை நிலைநாட்ட விரும்பினர் என்ற கருத்தின் சமூகவியலின் ஆய்வுப் பரிமாணம் வியக்கத்தக்கது. ரிக் வேதத்துள்ளும் பொருள்முதலியல் அடிப்படையிலான வரலாற்று ஆய்வை செய்வதற்கு அம்பேத்கர் வழிதிறந்து வைக்கிறார். ஆரியரில் இருவகை. ரிக்வேதமும் அதர்ண வேதமும் தமக்குள் முரண்பட்டவை என்ற கருத்தின் வளம் புதிய ஆய்வுக்கு வழி திறக்கிறது. ரிக்வேதம், உபநிடதம் இவைகள் வழியே தொடர்வது ஒருவகைப் பார்ப்பனியம் என்றால், அதர்வணம் சடங்கு, யாகம், மனுதர்மம் என்பதன் வழியே தொடர்வது புரோகிதம் என்று வகைப்படுத்தலாம். சூத்திரர் என சிலரைத் தாழ்த்தியது இந்தப் புரோகிதம். புருசசூக்தம் இதன் கையில் ஒரு கூர் ஆயுதம். ஆய்வை அழித்து ஆதிக்கத்தை நிலைநிறுத்துவது இந்த புரோகிதம். விசுவாமித்திரர் தொடங்கி புரோகிதர் எதிர்ப்பு எப்படி நடந்தது, எப்படி ஓய்ந்திருக்க முடியும்? உபநயனம் என்ற விலங்கை இவர்கள் எப்படி ஒப்புக்கொண்டனர்? இப்படி பல கேள்விகளோடு நாம் இந்த நூலை ஆழ்ந்து கற்கவேண்டும். சமஸ்கிருத மொழி ஆதாரங்களிலிருந்து ஆய்வைச் செய்வதில் அம்பேத்கர் தன்னிகரற்றவராகத் திகழ்கிறார். சூத்திரர் யார் என்ற இந்த நூலை தமிழக அரசு மொழிபெயர்த்து வெளியிட்டிருப்பதாகத் தெரிகிறது. சூத்திரர் பற்றிய பிரச்சினையில் திசை திருப்புவது தமிழக அரசின் நோக்கமாகவும் இருக்கக்கூடும்.

அம்பேத்கரின் மிகச் சிறந்த இந்த நூலை சிறப்பான முறையில் மொழி பெயர்த்து நம்முன் வைப்பவர் திரு. பெ. சுந்தரம் அவர்கள். இவரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

www.tamilarangam.net



**தமிழ்ச் சமுதாயம் - நோயும் மருந்தும் :**

தற்காலத் தமிழ்ச் சமூகத்தின் தேவையை முன்னிறுத்தி தமிழாய்வில் பேரார்வத்துடன் ஈடுபட்டிருப்பவர் பேராசிரியர் க.ப. அறவாணன் அவர்கள். தமிழர்களின் சமூக நோய்களை கண்டறிந்து மருத்துவம் செய்யும் முறையில் தொடர்ந்து நூல்கள் எழுதி வருகிறார்.

இந்தியாவில் சாதி, பெண்ணடிமை ஆகியவை எப்படித் தோன்றின என பொதுப்படையாக சிலர் ஆராய்ந்திருக்கின்றனர். பார்ப்பனியம்தான் காரணம் என்றும் சொல்லுகின்றனர். இந்தியச் சூழலை அப்படியே தமிழகத்திற்கும் பொருத்திப் பார்க்கின்றனர். அறவாணன் அவர்களைப் பொருத்தவரை, குறிப்பிட்ட எத்தகைய சூழலில் இவை தோன்றியிருக்க முடியும் என்ற தனி ஆய்வில் கவனம் செலுத்துகிறார். அன்றியும் இன்றுவரை உணர்ச்சிகரமானவன் தமிழன் என்று எடுத்துக் கொண்டு இந்த வரலாறு எப்பொழுது தோன்றியது என்றும் ஆய்வு செய்கிறார். நூலின் கருத்துக்களைக் கீழ்க்கண்டவாறு தொகுக்கலாம்.

1. தமிழகத்தில் சங்க காலத்திற்கு முன் இருந்தது பொதுமைச் சமூகம். முதலில் தலைவனும் பிறகு அரசனும் அரசனுக்கு வாரிசு உரிமையும் தோன்றியபொழுது மன்னனுக்கும் மக்களுக்கும் இடைவெளி ஏற்பட்டது. அந்த இடைவெளியை நிலைப்படையும் அமைச்சரவையும் நிறைத்தன. இவற்றோடு வணிகமும் சேர்ந்தது. அரசனுக்கு இறைமை கற்பிக்கும் முறையில் ஆரியம் நுழைந்தது. விதிக் கோட்பாடு மூட நம்பிக்கைகளும் வந்து சேர்ந்தன.

2. சங்கம் - முதற் காலத்தில் பெண்ணுக்கு இருந்த தலைமை, சங்கம் - பிற்காலத்தில் மாறியது. ஆண் தலைமை தாங்கிய ஆரியமும் சமணமும் தமிழகத்தில் பெண் தலைமையை மாற்றின. பெண்ணுக்கு இழிவு கற்பிக்கப்பட்டது.

3. கவரிமான் போன்ற மானத்தைத் தமிழன் போற்றினான். 'மானம் அழியின் உயிர் வாழான். வடக்கிருந்தான்' இப்படி உணர்ச்சிமயமானவன் தமிழன். இந்த உணர்ச்சிதான் பக்திப் பெருக்கத்திற்கு ஆதாரம். கடவுளை/தலைவனை வழிபடுவது இவன் குணம். திரைப்படத் தலைவனை அரசியல் தலைவனாக்குபவன் இவன்.

www.tamilarangam.net



4. தமிழ்ச் சமூகம் நோயின் உச்சகட்டத்தில் இருக்கிறது. ஊழல், வாழ்வின் நெறியாகிவிட்டது என்கிறார் அறவாணன். செல்வம் ஒருவனின் அக்கிரமங்களை மறைத்து விடுகிறது. தமிழ்ச் சமூகத்திற்கு சிங்கப்பூர் மருத்துவம் செய்ய வேண்டும். அதாவது சட்டரீதியாக அடித்து உதைத்து திருத்த வேண்டும். அறிவுரையும் தரவேண்டும். இப்படி பல கருத்துக்களை இந்த நூல் உள்ளடக்கியிருக்கிறது.

5. நூலில் இறுதிக்கட்டுரை : தனிச்சொத்து, குடும்பம், அரசு ஆகியவற்றின் தோற்றம் என எங்கல்சு வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தை விளக்கியிருக்கிறார். அண்மைக் காலத்தில் சிம்பன்சி, உராங் உட்டாங் ஆகிய குரங்குகளோடு சிலர் வாழ்ந்து கண்ட உண்மைகள் எங்கல்சின் சில முடிவுகளை மறுக்கின்றன என்கிறார் ஆசிரியர். மேற்சொன்ன குரங்கு இனத்தில் குடும்பம் இருக்கிறது. ஆண் தலைவனாக இருக்கிறான். இவை பெரும்பகுதி நேரம் குகையில் வாழ்கின்றன. குச்சிகளைப் பயன்படுத்தி உணவை சேகரிக்கப்படுகின்றன. இவை விளையாட்டில் ஈடுபடுகின்றன. ஒருதார முறையைக் கடைப்பிடிக்கின்றன. இக்குணங்கள் மனிதனுக்குள்தான் வளர்கின்றன என்ற எங்கல்சின் கூற்றை ஆய்வுகள் மறுக்கின்றன என்கிறார். உண்மையாக இருக்கலாம். ஆனால் தனி உடைமை, அரசு ஆகியவை குரங்கு இனத்தில் இல்லை. சாதியும் இருக்கமுடியாது. அறவாணன் அவர்களுக்கு நன்றி சொல்லவேண்டும்.

**திராவிடர் இயக்கமும் வேளாளரும் :**

கால்டுவெல் திராவிட மொழிகள் தனிக்குடும்பமென மெய்ப்பித்தார். பேராசிரியர் சுந்தரம் பிள்ளை, ஆரிய நாகரிகத்திற்கு எதிரானது திராவிட நாகரிகம் என்ற முறையில் ஓர் இயக்கத்தை ஊக்குவித்தார். சிந்துவெளி நாகரிகம், சங்க இலக்கியம் என்ற ஆதாரங்களோடு திராவிட இயக்கச் சிந்தனைகள் வளர்ச்சி பெற்றன. பார்ப்பனர் அல்லாதார் இயக்கமாக நீதிக்கட்சி தோன்றியது. வகுப்புவாரி உரிமை சட்டமாயிற்று. சுயமரியாதை இயக்கம் ஆக்கம் பெற்றது. இந்தச் சூழலில் பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தில் வரலாற்றுத் தேவையை ஒட்டி முன்னர் இணைந்திருந்த சைவர் / வேளாளர்களுக்கும், சுயமரியாதை இயக்கத்தவர்க்கும் முரண்பாடு எழுந்தது. பெரியபுராணம் பற்றிய திறனாய்வில் தொடங்கிய இந்தப் போக்கு தீவிரம் பெற்றது. சுயமரியாதை இயக்கத்தின் தாக்குதல்களை எதிர்கொள்ளும் முறையில் திருநெல்வேலி, திருப்பாதிரிப் புலியூர் ஆகிய இடங்களில் சைவர்கள் மாநாடு கூட்டினர். சுயமரியாதை இயக்கத்திற்கு எதிர்நிலை என்ற முறையில் சைவர்களுக்குள் கடுஞ்சைவர்கள், நடுத்தரச்

www.tamilarangam.net



சைவர்கள், சீர்திருத்தச் சைவர்கள் என்ற பிரிவுகள் ஏற்பட்டன. முதலில் சீர்திருத்தச் சைவர்கள் வெளியேற்றிவிட்டு நடுத்தரச் சைவர்கள், கடுஞ்சைவர்களோடு சமரசம் செய்து கொண்டனர். சுயமரியாதை இயக்கத்தை எதிர்கொள்ளுதல் என்ற முறையில் சைவம், தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் போக்கு முடிவு பெற்றது. பார்ப்பனர் அல்லாதார் இயக்கத்தில் இணைந்திருந்த சைவர்கள் இப்போது, விளிம்பிற்குத் தள்ளப்பட்டனர். 37–ல் தொடங்கிய இந்தி எதிர்ப்புப் போரில் சுயமரியாதை இயக்கத்தவர்களும், சைவர்களும் ஓரணியில் திரண்டனர். இந்தியின் பின்னணியில் இருக்கிற பார்ப்பனியத்தை எதிர்க்கும் நோக்கில் இணைந்தனர். இந்தியை அரசு கைவிட்டவுடன் மீண்டும் சைவர்களும் திராவிட இயக்கத்தவரும் தமக்குரிய திசைகளில் பிரிந்து சென்றனர்.

இந்த வரலாற்றை தேவையான ஆதாரங்களோடு இந்தச் சிறிய நூலில் எடுத்துரைக்கிறார் இதன் ஆசிரியர் வேங்கடாசலபதி. ஏற்கனவே வரலாற்றாய்வில் தன் தகுதியை மெய்ப்பித்துக் கொண்டவர் திரு. சலபதி அவர்கள். திராவிடர் இயக்கம், வேளாளர் இயக்கம்தான் என்ற இர்ஷிக், ரகுநாதன், தமிழவன் ஆகியவர் சொல்லும் கருத்துரையை இந்த நூலில் இதன் ஆசிரியர் மறுக்கிறார். சைவர்களுக்கும் சுயமரியாதை இயக்கத்தவர்களுக்கும் நடைபெற்ற விவாதங்கள் பற்றிய குறைந்த அளவுக்கான விவரத் தொகுப்பு என்ற முறையில் இந்த நூல் ஆசிரியர் நோக்கத்துக்கு அப்பாலும் – நம்மைப் பொருத்தவரை ஓர் அரிய வருகை.

மறைமலையடிகள், பெரியார், திரு.வி.க., கி.ஆ.பெ. விசுவநாதம், சோமசுந்தர பாரதியார், சச்சிதானந்தம் பிள்ளை, திரிகூட சுந்தரம்பிள்ளை ஆகிய தமிழ் இனச் சான்றோர்கள் இந்த விவாதங்களில் தமக்கென நிலை எடுத்து செயல்பட்டார்கள். தமிழகத்தில் நடந்த மாபெரும் விவாதமென இதை மதிக்க முடியும். 1925–35 காலக்கட்டம் தமிழக வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்புமுனையாக அமைந்தது. இன்றுவரை இந்த வரலாறு நமக்குள் தொடர்கிறது. நாட்டு விடுதலை, சமுதாய விடுதலை, சமயம், சாதி, மொழி, பழமை, புதுமை என்ற பல முனைகளில் இணைந்தும் முரண்பட்டும் இந்த விவாதங்கள் நடைபெற்றன. உண்மையில் இந்த முரண்பாடுகளும் மோதல்களும் தீர்வுக்கான அரிய முயற்சிகளும் அரும்பெரும் தலைவர்களை, மற்றும் சிந்தனையாளர்களை நமக்குத் தந்தன. ஒரு எல்லை மறைமலையடிகள்; மறு எல்லையில் பெரியார்; இடையில் திரு.வி.க. வ.உ.சி. முதலியவர்கள். தமிழினத்தின் ஆக்கம் மற்றும் விடுதலை என்ற முறையில் இவர்கள் அனைவரும் அவரவர்க்குரிய

www.tamilarangam.net



ஆற்றலோடு சில ஆக்கங்கள் மற்றும் சாதனைகள் செய்தவர்கள். ஒரு கட்டத்தில் சைவத்துக்குள்ளிருப்பது பார்ப்பனியம்தான் என்று பேசிய பெரியார், இந்திக்கு எதிரான இயக்கத்தில் மறைமலையடிகளோடு இணைந்து நின்றார்.

பல இழைகளால் பின்னப்பட்டதாகத் தமிழகத்தின் இந்த வரலாற்றுக் கட்டம் நமக்குத் தெரிகிறது. இவற்றிலிருந்து ஓர் இழையை மட்டும் தொடக்கம் முதல் இறுதி வரை பிரித்தெடுப்பதிலும் இக்கருத்தை மெய்ப்பிப்பதிலும் ஆசிரியரின் ஆய்வுத்திறத்தை நாம் பெரிதும் பாராட்டலாம். செறிவான இந்த வரலாற்றுக் காலம் தீவிரமான / முழுமையான ஆய்வை நோக்கி நம்மை இழுக்கிறது. ஆசிரியரின் பெரியாரியச் சார்பு விருப்பு வெறுப்பற்ற வரலாற்றாய்வுக்குத் தடையாக இருப்பது போலத் தோன்றுகிறது. எந்தச் சமூகமும் பழமையிலிருந்த ஒரே பாய்ச்சலாகத் தன்னை விடுவித்துக் கொள்வது சாத்தியமில்லை. சைவம், காலத்தின் தேவையை உள்வாங்கி தன்னைப் புதுப்பித்துக் கொள்ளும் முயற்சியையும் விடுதலை இயக்கத்தின் ஒரு பகுதியாகவே நாம் மதிக்கமுடியும். மறைமலையும் திரு.வி.க.வும், வ.உ.சி. யும் இம்முறையில் பழமையிலிருந்து மக்களை விடுதலை செய்யும் பணியில் செயல்பட்டவர்கள். மறைமலை பின்னோக்கி நகர்ந்து தமிழினம், குமரிக்கண்டம், தனித்தமிழ் என்றெல்லாம் தமிழர்க்கான விடுதலை இயக்கம் கண்டார். திரு.வி.க. மார்க்சியத்தை உள்வாங்க முயன்றார். நாட்டு விடுதலையும் சமூக விடுதலையும் கோவை அய்யாமுத்து அவர்களுக்குள் ஒரு புள்ளியில் இணைந்தன. தமிழகத்தில் மாபெரும் / ஒரே தலைவரென பெரியார் நிமிர்ந்து நிற்பது இந்த நூலிலும் நாம் காண்கிறோம். சைவத்துக்குள்ளும் பார்ப்பனியத்தைப் பெரியார் கண்டார். அப்புறம் சைவரோடு இணைந்து இந்தியை எதிர்த்தவர். இந்தச் சிக்கல் ஒன்றை நமக்குத் தெளிவுபடுத்துகிறது. மதம் பற்றிய புரிதல் சுயமரியாதை இயக்கத்துக்கு இல்லை. சச்சிதானந்தம் பிள்ளை எழுப்பும் கேள்விகள் அருமையானவை. ஆதாரங்கள் திரட்டுவது தேவைதான். அதற்கு மேலும் வரலாற்றாய்வுக்கு ஆழமான தத்துவப் பார்வை சரியான வெளிச்சம் தரும். மார்க்சியம் இந்த வெளிச்சத்தைத் தரவல்லது. நண்பர் சலபதி அவர்கள் சிந்திக்கவேண்டும்.

**சாதி ஒழிப்பில் அம்பேத்கர் – பெரியார் :**

இந்து மதம் – சாதி / தீண்டாமை ஆகிய மூன்றையும் சேர்த்தே ஒழிக்கவேண்டுமென்றார் பெரியார். இதற்கு பல திட்டங்களை முன்வைத்தார். சாதி ஒழியவில்லை. புத்தமதத்திற்கு மாறினால் சாதி

www.tamilarangam.net



அடிமைத்தனத்திலிருந்து விடுதலை கிடைக்கும் என்றார் அம்பேத்கர். இந்தப் பரிந்துரையுடன் தங்கராசு கட்டுரை முடிவடைகிறது. மதம் / இந்து மதம் இருக்கும்வரை சாதி ஒழியாது என்றார் பெரியார். சாதி எதிர்ப்புக்கு சில திட்டங்களை பெரியார் முன்வைத்தார். கலப்புமணம், பார்ப்பனிய சடங்குகளை ஒழித்தல் போன்ற திட்டங்கள் – சாதி வேலைப்பிரிவினையோடு தொடர்புடையது. சாதிகளுக்கிடையில் வர்க்கத்தளம் / பொருளியல் தளம் இருக்கிறது. இதைப் பெரியார் கவனிக்கவில்லை. கலப்புத் திருமணம் போன்றவை அவசியம்தான். எனினும் கோட்பாட்டளவில் பெரியாரைக் கடந்தாக வேண்டும். வர்க்க சமூகத்தின் ஒழிப்போடுதான், ஒழிப்புக்குப் பிறகும் சாதியின் கருத்தியல் அம்சங்களைப் போராடித்தான் ஒழிக்கவேண்டும். இப்படிச் சொல்கிறார் கேசவன். சிறிய நூல். பயனுடைய நூல்.

**எரிமலை வாயின் மேல் இந்துமதம் :**

திராவிட இனம் என்ற உணர்வூட்டல் தமிழின உணர்வை அழிப்பதற்கான ஒரு சூழ்ச்சி. தெலுங்கின வந்தேறிகள், அன்று நயன்மைக் கட்சிக்குள் புகுந்து இதைச் செய்தனர். தொல் தமிழர்களிடமிருந்து நிலத்தை இவர்கள் கைப்பற்றினார்கள். பள்ளபாளையம் ராஜபாளையம் ஆயிற்று. தெலுங்கு வந்தேறிகள் மூலம் பார்ப்பனியம் தமிழகத்தில் வலிமை பெற்றது. திராவிட இனமாயை என்பதிலிருந்து தமிழினம் தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டும்.

ஆயிரத்து தொள்ளாயிரத்து ஐந்து – முப்பது காலத்தில் தோன்றிய தமிழகத்து சாதிச் சங்கங்கள் ஆங்கில வந்தேறிகளின் ஆதரவின்மூலம் தம் வாழ்நிலையை உயர்த்திக் கொள்ள முயன்றன. பார்ப்பனியத்தை உள்வாங்கிக் கொள்வதன் மூலம் தம் சமூகத் தகுதியை உயர்த்திக் கொள்ள முயன்றன. இப்போக்கின் தொடர்ச்சியான நயன்மைக்கட்சி (நிதிக்கட்சி) சாதி ஒழிப்புக்காக முயற்சி செய்யவில்லை. இக்கட்சியிலிருந்து சாதித் தமிழர்கள் தொல் தமிழர்கள் மீது வன்முறையைப் பயன்படுத்தித் தம் ஆளுகையை நிலைநிறுத்திக் கொண்டனர். இன்றும் சாதிக் கலவரங்கள் என்பனவற்றுள் பெரும்பான்மையானவை தெலுங்கு நாயக்கருக்கும் தொல் தமிழர்களுக்குமிடையிலான கலவரங்கள். சாதிக் கலவரத்தை நாம் இனக்கலவரமாக மாற்றிப் பார்க்கவேண்டும். சாதித் தமிழர், பார்ப்பனியத்திலிருந்து தம்மை விடுவித்துக் கொள்ளவேண்டும். சாதித் தமிழரும் தொல் தமிழரும் இணைத்து நிற்கவேண்டும். இந்துமதம் /

www.tamilarangam.net



இந்தியத்திலிருந்து விடுதலை பெற இதுவே வழி. குணா அவர்களின் சிந்தனை வீச்சின் பதிவு இந்நூல்.

**தாழ்த்தப்பட்டோரும் சமூக விடுதலையும் :**

கிறித்தவப் பாதிரிமார்கள் மனிதநேயத்தோடு வைத்த பெயர் தாழ்த்தப்பட்டவர் என்கிறார். தமிழக அளவில் தாழ்த்தப்பட்டவர் என்றும் இந்திய அளவில் தலித்கள் என்றும் அழைக்கலாம் என்கிறார். தாழ்த்தப்பட்டவர் பற்றி நிறைய வாழ்வியல் விவரங்கள் தருகிறார். இந்து சமூக எல்லைக்குள் தான் தாழ்த்தப்பட்டவர்கள் இருக்கவேண்டும் என்பது காந்தியின் அக்கறை. அம்பேத்கரோடு ஒத்துழைத்த இரட்டைமலை சீனிவாசன் காந்தியின் கூட்டுத் தொகுதியைத்தான் ஆதரித்தார். சாதியத்திலிருந்து விடுதலை பெற அம்பேத்கர் இசுலாமியத்தைத் தழுவ விரும்பவில்லை. பாரதப் பண்பாட்டின் எல்லைக்குள் இருக்கிற புத்தமதத்தைத் தான் தழுவினார். நீதிக்கட்சிக்கு தாழ்த்தப்பட்டவர் விடுதலையில் அக்கறையில்லை. சாதியம் முதலாளியத்தால் ஊடறுக்கப்பட்டது என்றாலும் சாதியத்தின் கட்டு தகரவில்லை. தொழில் வளர்ச்சி, நகரியம் ஆகியவற்றால் சாதியம் தகரும் என்ற பொது உடைமையர் நம்பிக்கை நிறைவேறவில்லை. அத்துமீறல் என்ற பண்பாட்டுத் தளத்திற்கு பொதுவுடைமையர் முக்கியத்துவம் தரவில்லை. இடஒதுக்கீடு நகரியம் ஆகியவை தாழ்த்தப்பட்டவருக்கு கொஞ்சம் விடுதலை தரலாம். ஏகாதிபத்தியத்தால் ஊடுருவப்பட்ட முதலாளியத்திற்கு இவர்கள் இரையாவது கண்கூடு. டங்கல் திட்டம் இந்தப் போக்கை அதிகப்படுத்தும். 70–க்குப் பிறகு சாதிய மோதல் அதிகரிக்கிறது. ஆசிரியர் காரணம் சொல்லவில்லை. பசுமைப்புரட்சி முதலிய திட்டங்கள் மூலம் கிராமப்புறங்களில் ஏகாதிபத்திய சுரண்டல் அதிகரித்ததன் அளவை ஆசிரியர் கண்டிருக்கலாம். ஏகாதிபத்தியத்திற்கு எதிராக தேசியப் பொருளாதாரம் பின்னர் சோசலிசம் என்று ஆசிரியர் பேசுகிறார். இவற்றின் சாத்தியப்பாடு தெளிவுபடவில்லை. தமிழகத்தில் நடைபெற்ற சில சாதியமோதல்கள் பற்றி தனி நூல் நமக்குத் தேவை. புக்கனான், தருமகுமார் சுந்தர் ஆகியவர் ஆய்வுகளிலிருந்து நிறைய விவரங்கள் தருகிறார். தரம்பால் ஆய்வு பற்றி குறிப்பிடவில்லை. அ. மார்க்சின் ஆவணம் பற்றி வெளிப்படையான விமரிசனத்தை ஆசிரியர் முன் வைத்திருக்கலாம்.

நிகழ் 28
டிசம்பர் 94

www.tamilarangam.net



# தலித் மக்களுக்கும், இஸ்லாமியர்களுக்கும் எது விடுதலை? எப்படி?

- எஸ்.என். நாகராசன்

இன்று முன்வந்துள்ள ஒரு பெரும் பிரச்னை – தலித் மக்களின் விடுதலை. இதுபற்றி மார்க்சியர் கொள்ள வேண்டிய பார்வையாக எதைச் சொல்ல முடியும்? தலித் என்பவர்கள் யார் என்பதில் நாம் தொடங்கலாம்.

இந்திய சமுதாயத்தில் ஒதுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட, தீண்டத்தகாதவர்களைத்தான் தலித்துகள் என்று சொல்வது பொருந்தும். மற்றவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள். இந்த மக்கள் எவ்வாறு உயர்நிலைய, அதாவது விடுதலையை எய்துவார்கள் என்பது இன்றைய பிரச்னை. இதை ஒரு மார்க்சியவாதி எவ்வாறு அணுகவேண்டும்? மார்க்ஸ் ஐரோப்பிய சூழலில் இத்தகைய பிரச்னையைப் பார்க்கவில்லை. ஆனால், அவர் வாழ்ந்த சமூகத்தில் ஒதுக்கப்பட்ட பகுதியாக இருந்தது பாட்டாளி வர்க்கம். பாட்டாளி வர்க்கத்தின் விடுதலைதான் அவருக்கு அடிப்படையான கேள்வி. விடுதலை என்பதன் இலக்கணம் என்ன? விடுதலை என்பது பிரிக்க முடியாதது என்றார் மார்க்ஸ். இந்தக் கருத்தை அவர் ரூஸோவிடமிருந்து பெற்றார். இந்தக் கருத்து மேற்கத்திய நவீன வாதத்திற்கு உகந்த கருத்து அல்ல; அதற்கு நேர்மாறான கருத்து.

நவீன கால மேற்கத்திய கருத்து என்பதை மாக்கிய வெல்லியிலிருந்து, பேக்கனிலிருந்து பெறுகிறோம். ஒரு சிறுபான்மையினரின் விடுதலை, ஆனந்தம் என்பதை, பெரும்பான்மையினரை, இயற்கையை அடிமைப்படுத்தித்தான் பெற முடியும் என்பது அவர்கள் கருத்து. உலகத்தில் பெரும்பான்மையான மக்களை மேற்கத்தியர் அடிமைப்படுத்துவதற்குமான நியாயம் இதில் உள்ளது. 14–ஆம் நூற்றாண்டிலிருந்து வலுப்பெற்றது இந்தக் கருத்து. இதற்கு நேர்மாறானது ரூஸோவின் கருத்து (விடுதலை பிரிக்க முடியாதது என்பது அவர் கருத்து). அடிமைக்கு விடுதலை வேண்டுமென்றால் ஆண்டானும் விடுதலை பெறவேண்டும். இருவரும் இணைந்திருப்பதன் காரணமாக இருவர் விடுதலையையும் ஒன்றாகத்தான் பெறமுடியும். முழு சமூகத்தையும் விடுவிக்காதவரை, பாட்டாளிவர்க்கம் தனக்கான விடுதலையைப் பெறமுடியாது என்றார் மார்க்ஸ்.

www.tamilarangam.net



சமுதாயம் முழுவதும் என்று அவர் குறிப்பிடுவதில் ஆண்டானும் அடங்குகிறான். மார்க்சின் இந்தக் கருத்து மாக்கியவெல்லி, பேக்கன் அவர்களை முற்றாக மறுக்கிறது.

● இடையில் ஒரு கேள்வி : ஆண்டானுக்கு விடுதலை என்பது, அடிமைக்கு அடிமைத்தனம். அடிமைக்கு விடுதலை என்பது ஆண்டான் மீது அதிகாரம். இப்படித்தான் இங்கு பேசப்படுகிறது. இது தவறா?

○ பதில் : இது தவறு. இது மார்க்சியமல்ல. பொருளுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுதான் மார்க்சியம் கண்ட பிரச்னை. பொருளை உற்பத்தி செய்பவன், உற்பத்தி செய்யப்பட்ட அந்தப் பொருளோடு கொண்டுள்ள பகை உறவில்தான் அனைத்து விளைவுகளும், அடங்கியுள்ளன என்று மார்க்ஸ் கூறுகிறார். இந்தப் பகை உறவை மாற்ற வேண்டும். இது மார்க்சியம்.

உற்பத்தி உறவின் பகைத் தன்மையை மாற்றவேண்டும். உற்பத்தி உறவை மாற்றுவதன் மூலம், இருவரும் விடுதலை பெறுகின்றனர். பகை உறவுமாறி நட்புறவு ஏற்படுகிறது. உற்பத்தி உறவை மாற்றுவதென்பது, உற்பத்திக்கான கருவிகள் ஒருசிலரின் தனிஉடைமை என்பதை மாற்றுவது. இவற்றை பொதுஉடைமை ஆக்கவேண்டும். அதாவது இருவரும் உழைப்பது, பகிர்ந்து கொள்வது. இப்படி உற்பத்திக் கருவிகளை பொது உடைமைப்படுத்துகிற பணியை ஆண்டான் செய்யமாட்டான். செய்வதற்கான மனமும் துணிவும் அவனுக்கு இல்லை. முதற்காலத்தில், ஆண்டானுக்கு விண்ணப்பம் செய்வதன் மூலம் அவனை மாற்ற முடியுமென்று மார்க்ஸ் கருதினார். மிக விரைவில் ஆண்டான் தன்னை மாற்றிக்கொள்ளமாட்டான் என்பதை மார்க்ஸ் புரிந்து கொண்டார். இதைச் செய்யும் தகுதி பாட்டாளி வர்க்கத்துக்கு தான் உண்டு என்பதைப் புரிந்து கொண்டார். இதன் பிறகுதான் பாட்டாளி வர்க்க இயக்கத்துடன் மார்க்ஸ் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பாட்டாளி வர்க்கத்தை அவர் எவ்வாறு பார்க்கிறார்? ஒவ்வொரு சமுதாயத்திலும், ஒரு பக்கத்தை உடன்பாடான, பழையதைப் பாதுகாக்கிற, பிற்போக்கான பக்கம் என்றும் இன்னொரு பகுதியை படைப்புத்திறன் கொண்ட பகுதி என்றும் மார்க்ஸ் பார்க்கிறார். பின்னது, எதிர்மறை சக்தி. இந்த எதிர்மறை சக்திதான் படைப்புத்திறன் கொண்ட சக்தி.

சூழ்நிலையைத் தொடர்ந்து அப்படியே தக்க வைத்துக் கொள்கிற

www.tamilarangam.net



சக்திக்கு இது எதிர்மறையான சக்தி. சூழ்நிலையை இந்தச் சக்திதான் மாற்றுகிறது. மார்க்ஸ் கண்ட சமூகத்தில் இந்த எதிர்மறைச் சக்தியாக இருந்தது பாட்டாளி வர்க்கம். இதை லெனின் ஏற்றுக் கொண்டார். தன் தத்துவக் குறிப்பேடுகளில் லெனின் இதைக் குறிப்பிடுகிறார். பாட்டாளி வர்க்கம், தவிர்க்க முடியாமல் வர்க்கமற்ற சமுதாயத்தைப் படைக்க வேண்டுமானால் பூர்ஷ்வா வர்க்கத்தையும் விடுதலை செய்தே ஆகவேண்டும். ஆண்டான்களை அடிமைப்படுத்தி வைக்கிற பாட்டாளிவர்க்க சர்வாதிகாரத்தை விடுதலை என்று கூற முடியாது. தனக்கு விடுதலையை விரும்பாத சமூகப் பகுதியை விடுதலையை நோக்கி எடுத்துச் செல்வதற்குத்தான் பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரம். அடிமைப்படுத்துகையில் அதனுள் அடிமைப்படுத்துகிறவனும் மாட்டிக் கொள்கிறான். இது விடுபட்ட நிலை அல்ல. விடுதலை பிரிக்க முடியாதது என்ற மார்க்ஸ் கூற்றை இப்படித்தான் பொருள்படுத்த வேண்டும். இது ஒரு நீண்டகால நிகழ்வுப் போக்கு. அவசியம் / கட்டாயம் என்ற களத்திலிருந்து விடுதலை என்ற களத்தை நோக்கிச் செல்வது என்பது இதுதான்.

● இன்னொரு கேள்வி : புரட்சியின் போது நில உடைமை யாளர்களையும் முதலாளிகளையும் கொன்று தீர்த்துவிட வேண்டும். மிச்சமிருப்பவரை பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரத்தின் கீழ் உழைப்பு முகாம்களில் அடைத்து கடுமையான வேலை வாங்கி அவர்களைத் திருத்த வேண்டும். அல்லது ஒழித்துக் கட்டவேண்டும்.

அவர்களை இப்படி சக்கையாக்கிய பிறகு சர்வாதிகாரம் தேவையில்லை. இப்படி அர்த்தப்படுத்த முடியாதா?

○ பதில் : இப்படிச் செய்தால் சோவியத் ரசியாவில் நடந்தது போல இது திருத்தல் வாதத்தில் தான் போய் முடியும்.

உற்பத்திக் கருவிகள் முக்கியமல்ல. உற்பத்தி உறவுகள்தான் முக்கியமானவை. இதற்குத்தான் மாவோ அழுத்தம் கொடுத்தார். ஆதிக்கவர்க்கத்தோடு சேர்ந்திருக்கிற காலத்தில் அதன் அடிமைப்படுத்தலுக்கு, துன்புறுத்தலுக்கு உள்ளான பாட்டாளி வர்க்கம், ஆதிக்க வர்க்கத்தின் இந்த குணத்தை பெற்று விடுகிறது என்றும் சொல்ல முடியும். புரட்சிக்கு பிந்திய சமூகத்தில் ஆண்டான் அடிமை உறவின் மறு உற்பத்திக்கான வாய்ப்பு இருக்கத்தான் செய்கிறது. இது, விடுதலை பெற்ற நிலை என்று சொல்ல முடியாது. விடுதலைக்கான செயல் தொடர்ந்து நடைபெறமுடியும். முதலாளியம் தன்னை மீண்டும் உயிர்ப்பித்துக்

www.tamilarangam.net



கொள்வதற்கான வாய்ப்பு இருப்பதை மாவோ சுட்டிக் காட்டினார். உற்பத்தி உறவில் இன்னும் பரிமாற்றம் என்பதனுள் பிரச்னை தொடர்கிறது. உற்பத்திக்கும் பரிமாற்றத்திற்கும் உள்ள முரண்பாடு களையப்பட வேண்டும். உற்பத்தியைப் பெருக்கினால் போதாது. பரிமாற்றத்தின்போது உற்பத்தியின் நலன்கள் ஒரு பகுதிக்குப் போய்ச் சேர்ந்துவிடும். இந்தப் பகுதி பூர்ஷ்வா வர்க்கம். இராணுவமும் கட்சி அதிகாரிகளும் அரசு அதிகாரிகளும் கூடுதலாக எடுத்துக் கொள்கிற போக்கு இது. ரசியாவில் இப்படித்தான் நிகழ்ந்தது.

சமூகத்திற்கு தங்கள் நிர்வாகம் அவசியம் என்று கருதி அவர்கள் எடுத்துக் கொண்டிருந்தார்கள். இந்தச் சூழலில்தான் வெளிநாடுகளில் இருக்கிற பூர்ஷ்வாக்களும் உள்நாட்டில் இருந்த இந்த பூர்ஷ்வாக்களும் கை கோர்த்துக் கொண்டார்கள்.

ஆக, பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரம் என்ற காலகட்டத்தை, விடுதலைக்கான பேரியக்கம் நடைபெறுகிற காலம் என்று பார்ப்பது தான் சரி.

நம் சமூகத்தில் தலித் மக்களின் விடுதலைக்கான வழி என்ன என்பதுதான் ஒரு மார்க்சியனுக்கான பிரச்னை. இடஒதுக்கீடு மூலமாக சட்டசபைகளில் இடம் பெறுவதன் மூலமாக கல்வி வாய்ப்பு, பதவி உயர்வு மூலமாக காலப் போக்கில் விடுதலை சாத்தியமா? இந்தக் கருத்துதான் முற்போக்குவாதிகளின் மத்தியில் உள்ளது. அம்பேத்கரும் இப்படித்தான் கருதினார். பெரியார் கருத்தும் இதுதான். இடதுசாரிகள் சொல்வதும் இதுதான். இடஒதுக்கீடு முதலியவற்றை இப்பொழுது, இவர்களில் யாரும் மறுக்கவில்லை. ஆனால் இது விடுதலையைத் தருமா?

மார்க்சைக் காட்டிலும் லெனின் விடுதலைக்கான போராட்டம் பற்றி அதிகம் சிந்தித்தார். திருத்தல் வாதம்தான் விடுதலைக்கான பெரும்தடை என்று அறிந்தார். திருத்தல்வாதத்தின் இரண்டு அம்சங்கள் : ஒன்று : சீர்திருத்த வாதம் (சீர்திருத்தம் வேண்டும் என்பது அல்ல சீர்திருத்தவாதம்). இன்னொன்று : பொருளாதாரவாதம் (பொருளாதார முன்னேற்றம் வேண்டும் என்பதல்ல பொருளாதாரவாதம்). திருத்தல்வாதத்தின் மூலங்கள் என்று இவ்விரண்டையும் லெனின் குறிப்பிட்டார். சில ஆண்டுகளுக்கு முன்பு தோழர் ஆனைமுத்து அவர்களிடம் இதைப்பற்றி விவாதித்தேன். இடஒதுக்கல் மூலமாக பிரச்னை தீராது என்பதை ஒப்புக்கொண்ட அவர், நீங்கள் போனஸ் பிரச்னையை எப்படி பார்க்கிறீர்களோ, அதைப்

www.tamilarangam.net



போலத்தான் நான் இந்தப் பிரச்னையைப் பார்க்கிறேன். போனஸ் மூலம் பாட்டாளி வர்க்கம் விடுதலை பெறாது. ஆனாலும் போனஸ் தேவை. அதற்குமேல் இதற்கு மதிப்பு இல்லை.

ஆக, இட ஒதுக்கீடு தேவை. இட ஒதுக்கீட்டு வாதம், தவறு. இந்தப் போக்கு வராமல் தடுப்பது எப்படி? தாழ்த்தப்பட்ட சமூகம் முதலில் கல்வி வாய்ப்பைப் பெற வேண்டும். அரசுப் பதவியில் அமர வேண்டும். அரசுப்பதவி என்பதன் மூலம் தங்களுக்கு விடுதலை சாத்தியமில்லை என்பதை அனுபவ பூர்வமாக அறிய வேண்டும். இப்படி சொல்கிற போக்கில், என்ன தவறு?

தொழிற்சங்கம் என்ற வரையறைக்குள் பாட்டாளிவர்க்கம் பூர்ஷ்வா வர்க்கத்தை விட படுமோசமாகும் என்றார் லெனின். தொழிற்சங்கத்திற்குள் தன்னைச் சுருக்கிக் கொள்கிற போது, பணத்திற்குப் பாட்டாளி இரையாகிறான். ஆகவேதான் சோசலிசக் கருத்தை பாட்டாளிக்கும் செலுத்து என்றார் லெனின். அதுபோல 'தலித்' மக்களுக்கு இட ஒதுக்கீடு தேவைதான். ஆனால் இந்த வாதத்திற்கு தலித் மக்கள் இரையாகக் கூடாது. இது பெரும் பிரச்னை. தலித் இயக்கத்தினுள் இப்படி இதுவரை இந்தப் பிரச்னை எழவில்லை. தொழிற்சங்க இயக்கத்தினுள் சோசலிசக் கருத்து இடம் பெறாததைப் போலத்தான் இதுவும்.

பாராளுமன்றப் பாதை அதாவது சட்டமன்றம் நாடாளுமன்றம் ஆகியவற்றுக்குள் செல்வது என்ற பாதை – எப்பொழுது சரி, எப்பொழுது தவறு? இதுபற்றி இங்கு நாம் பார்க்க வேண்டும். ஐரோப்பாவில் முதற்கால கட்டத்தில் நிலஉடைமையாளரை ஒழிக்க பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை சட்டசபைக்குள் வா என அழைத்தது. பிற்போக்காளனை அடிக்க இருவரும் சேரவேண்டி யிருந்தது. அப்பொழுது பூர்ஷ்வா வர்க்கம் ஜனநாயக சக்தியாக இருந்தது. பிறகு நிலை மாறிவிட்டது. இன்றைய நிலையில் ஏகாதிபத்தியத்தையும் நில உடைமை ஆதிக்கத்தையும் அழிப்பதற்காக தனக்குத் துணை சேர்த்துக்கொள்ள பூர்ஷ்வா வர்க்கம் பாட்டாளி வர்க்கத்தை இன்று அழைக்கவில்லை. கிராமப்புறங்களில் நில உடைமை ஆதிக்கத்தையும் நகர்ப்புறங்களில் ஏகாதிபத்திய ஊடுருவலையும் ஒழிப்பதற்காக பூர்ஷ்வா வர்க்கம் அழைத்தால் பாட்டாளி வர்க்கம் ஏற்கலாம். இன்று நிலைமை முற்றாக மாறியிருக்கிறது. இந்தியாவில் பூர்ஷ்வா வர்க்கம் நில உடைமை ஆதிக்கத்தை ஒழிக்கவில்லை. இதை எம்.என்.ராய். தொடக்கத்திலேயே கூறினார். இன்றும் அதே நிலைதான். இன்றுள்ள பாராளுமன்றத்தில் புரட்சிகர உள்ளடக்கம் அறவே இல்லை. இந்தக் கேள்வி

www.tamilarangam.net



பாட்டாளிவர்க்கத்துக்கும், அதைப் போலவே தலித் மக்களுக்கும் தேவையான கேள்வி. பூர்ஷ்வா வர்க்கத்தோடு சமரசம் செய்து கொள்வதற்காகப் பாராளுமன்றத்தினுள் செல்லலாம். இந்தச் சமரசத்தின் மூலம் பூர்ஷ்வா வர்க்கம்தான் தன்னை வலுப்படுத்திக் கொள்ளும்.

இனி அரசுப் பதவி பற்றி : நாற்பதாண்டு காலத்தில் படிப்பாளிகள், தொழிலாளிகள் அனைவரும், இருக்கிற ஆதிக்கக் கட்டமைப்பினுள் பங்காளிகளாக மாறியதுதான் நடைபெற்றிருக்கிறது.

அரசுப் பதவிக்குள் செல்வதை நாம் மறுக்கவில்லை. அந்தப் பதவியை எவ்வாறு பயன்படுத்துவது என்பதுதான் பிரச்னை. பதவிக்குள் செல்லும் பொழுது, சமூக மாற்றத்திற்காக உழைக்கிற ஒரு புதிய மனிதனாக நீ செயல்பட வேண்டும்.

சில பதவிகளில் இருக்கும்பொழுது அரசு நிர்வாகம், மக்கள் மீது திணிக்கிற ஒடுக்குமுறையை சட்ட ரீதியாகக் கூட உன்னால் தடுக்க முடியும். மேலதிகாரி சொன்னால் கேட்டுத்தான் தீர வேண்டும் என்பது இல்லை. வங்கி ஊழியராக இருக்கிற ஒருவர் ஏழைகளுக்கு உதவி செய்ய முடியும். இட ஒதுக்கீட்டின் மூலம் இதுவரை சென்றவர், இப்படிச் செய்கிறார்களா? என்று நாம் கேட்க வேண்டும். வெளியில் இருக்கிற இயக்கம், இந்தக் கருத்தை இவர்களுக்குள் ஏற்படுத்தவில்லை / ஏற்படுத்த வேண்டும். இப்படி செய்திருந்தால், பார்ப்பான் வேண்டாம், பறையன் வேண்டும் என்று மக்கள் சொல்லியிருப்பார்கள்.

● ஒரு கேள்வி : 'இப்பொழுதுதான் எங்கள் மக்கள் அரசுப் பதவிக்கு சென்று வாழ்க்கை வசதிகளை அனுபவிக்கிறார்கள். வாழ்க்கை வசதிகள் எங்கள் மக்களுக்கு வேண்டாம் என்றா சொல்கிறீர்கள்' இப்படிச் சிலர் கேட்கிறார்கள்.

○ பதில் : வேண்டாம் என்றா நான் சொன்னேன். வாழ்க்கை வசதிகளுக்குள் மூழ்கி தன்னை இழந்துவிடக் கூடாது. வாழ்க்கை வசதி, ஒரு வாய்ப்பு, வாழ்க்கை வசதியை பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும். நீ ஒரு புதிய மனிதன் என்பதை உணர வேண்டும். தலித் மக்கள் மட்டுமல்ல, பிற்படுத்தப்பட்ட மக்களும் அரசுப் பதவிக்குள் செல்லும்பொழுது இதைத்தான் செய்யவேண்டும். தலித் இயக்கம், தன் திட்டத்தின் ஒரு பகுதியாக இதைக் கொள்ள வேண்டும்.

www.tamilarangam.net



இன்று, தி.க./தி.மு.க./அ.தி.மு.க. வைச் சேர்ந்தவர்கள் அரசு பதவியில் இருக்கிறார்கள். இவர்கள் இப்படிச் செய்கிறார்களா? இல்லை! கிடைக்கிற வசதிகளை அனுபவிக்கிறார்கள். எந்த ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமோ அந்த ஆதிக்கத்தின் பகுதியாக இவர்கள் மாறிவிட்டார்கள். பூர்ஷ்வா வர்க்கத்தைக் காப்பாற்றுகிற செயலை அவனைவிட இவர்கள் சிறப்பாகச் செய்கின்றனர். பார்ப்பனன் செய்யும் வேலை எதுவோ அதை இவர்கள் உறுதியாகச் செய்கின்றனர். வெளியில் பார்ப்பனன் பற்றி கடுமையான தாக்குதல். உள்ளேயிருந்து அதை வலுப்படுத்துகிற செயல்.

இனி, கல்வி பற்றி : தலித் மக்களுக்கு இன்னும் கூடுதலாகக் கல்வி வாய்ப்பு தேவை. கல்வியை இலவசமாக இன்னும் அதிக அளவில் அவர்களுக்குத் தர வேண்டும். ஆனால் கல்வி ஆங்கிலத்தில் இருக்கக் கூடாது. ஆட்சிமொழி, கல்வி மொழி அனைத்திலும் தமிழ்தான் இருக்க வேண்டும். இப்படி தமிழில் இருந்தால்தான் உயர்சாதிக்காரனோடு இந்த மாணவர்கள் போட்டிக்குச் செல்ல முடியும். தலித் மாணவர்களுக்கான கல்வித் திட்டமென்றும் தலித் இயக்கம் பேச வேண்டும். ஏற்கனவே இருக்கிற கல்வித் திட்டம் மற்ற மாணவர்களைப் போலவே தலித் மாணவர்களையும் கெடுக்கத்தான் செய்யும். இருக்கிற கல்வித் திட்டம் மாணவர்களை மடையர்களாக, மலடுகளாகச் செய்கிறது. நிபுணர்களைத் தயாரிக்க 10/15 ஆண்டுக் கல்வி தேவைப்படுகிறது. 20 ஆண்டுகள் கூடத் தேவைப்படும். கல்வித் திட்டத்தில் செயல்படும் கருத்தியல் பற்றி நமக்கு அக்கறை வேண்டும். தாய்மொழியில்தான் கல்வி, தாழ்த்தப்பட்ட மக்களும் பிற்படுத்தப்பட்டவர்களும், வைக்கிற முதல் முழக்கமாக இதைத்தான் சொல்ல வேண்டும். என்றைக்கும் ஆங்கிலம், இந்திக்கு இடமில்லை என்ற முழக்கம் தலித் மக்களுக்கு, பிற்படுத்தப்பட்டவர்களுக்குத் தீங்கு செய்யும்.

● இன்னும் ஒரு கேள்வி : ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு என்பதில் தொடங்கி மக்கள் விடுதலைக்கான ஒரு பொதுத்திட்டம் தேவை. இது சமூகத்தின் பல பிரிவினர்க்குமான செயல்திட்டமாக அமைய வேண்டும். இந்தத் திட்டத்தில் தலித் மக்களுக்கான திட்டம் என்னவாக இருக்க முடியும்?

○ பதில் : இது பற்றி சிந்திக்கும்பொழுது இஸ்லாமிய மக்கள் பிரச்னையையும் சேர்த்துப் பேசவேண்டும். கடந்த நாற்பதாண்டுகளில் இந்தப் பிரச்னை மெல்ல மெல்லப் பெரிதாகி பூதாகாரமாக மாறியுள்ளது. அவர்கள் இடஒதுக்கீடு கேட்பதில்லை. சிறுபான்மையினர் என்ற முறையில் அவர்கள் உரிமை கேட்கிறார்கள். இவர்களது பிரச்னை, சிறுபான்மையினர்

www.tamilarangam.net



பிரச்னை. கடந்த நான்காண்டுகளாக இவர்களோடு விவாதம் நடத்துகிறேன். இங்கும் விடுதலை என்பதுதான் பிரச்னை. அச்சமற்ற ஒரு சமூகம் தேவை. இந்தியாவின் பெருந்தொழில், வேளாண்மை. இதில் உழைக்கும் சக்தியாக இருப்பவர்களில் ஒரு பெரும் பகுதி தலித் மக்கள். இவர்கள் இல்லாமல் வேளாண்மை இங்கு நடைபெறாது. வேளாண்மைக் களத்திலிருந்து இவர்களை எந்தச் சக்தியும் விரட்டிவிட முடியாது. இந்தியாவில் சமூகம் வாழ்வதற்கு தலித் மக்கள் என்ற உறுப்பு இன்றியமையாதது. இந்த உறுப்பு இல்லாமல் சமூகம் என்ற உயிர் வாழ முடியாது. இஸ்லாமியர் வேளாண்மை என்ற களத்தில் இல்லை. கேரளாவில் உழவர்களாக இஸ்லாமியர் இருந்தனர். மாப்பிள்ளைமார் கலகம் செய்தவர்கள் இவர்கள்தான். பீகாரில் ஒரு பகுதியிலும், உத்திரப்பிரதேசத்தில் ஒரு பகுதியும் நில உடைமையாளராக சிறிய அளவில் இஸ்லாமியர் இருக்கின்றனர். இஸ்லாமியரில் பெரும் பகுதியினர் நகரத்தில் வாழ்கின்றனர். போட்டிகளுக்கு அதிகம் இடம் தரும் தொழிற்சூழலில், நகரங்களில் இஸ்லாமியர் இருக்கின்றனர். கிராமங்களில் இவர்கள் இல்லை. இஸ்லாமியர் இயக்கங்கள் இதுவரை உழவர் பிரச்னை என்று பேசவில்லை. நிலம், நீர், ஆறு, சூழல் சீர்கேடு என்று இவர்கள் பேசுவதில்லை. ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதில் சூழல் சீர்கேடு என்பது முதன்மையான பிரச்னை. நகரங்களில் சூழல் சீர்கேடு, என்று தொடங்கி நிலம், நீர், ஆறு என்று இவர்கள் பேசவேண்டும். மக்களின் பொதுவான பிரச்னை என்பதிலிருந்து இஸ்லாமியர் அன்னியப்பட்டு நிற்க முடியாது. தோல் பதனிடும் தொழிலில் இஸ்லாமியர் பெருவாரியாக ஈடுபட்டுள்ளனர். ஏகாதிபத்தியம் செயல்படும் முக்கிய முனைகளில் இந்தத் தொழில் குறிப்பிடத்தக்கது. இதில் சூழல் சீர்கேடு மலிந்துள்ளது. இந்தத் தொழிலில் பெருத்த லாபம் சம்பாதிப்பவர் இஸ்லாமிய முதலாளிகள். இந்தத் தொழிலில் ஈடுபடுவதன்மூலம் பெரும் பாதிப்பை அடைபவர்கள் ஏழை இஸ்லாமியர். இஸ்லாமியர் இதை ஒரு முக்கியப் பிரச்னையாக எடுக்க வேண்டும். இஸ்லாமியத் தலைவர்கள் இந்த இயக்கத்தை எடுத்துச் செயல்பட வேண்டும்.

சூழல் சீர்கேடு என்று தொடங்கி ஏகாதிபத்திய எதிர்ப்புத் திட்டத்தை மார்க்சியர் செயல்படுத்தியிருக்க வேண்டும். தோல் பதனிடும் தொழில் போன்ற தொழில்கள்மூலம் ஏகாதிபத்தியத்திற்கு அனுசரணையாக இருக்கும் இஸ்லாமியரை மார்க்சியர் அணுகியிருக்க வேண்டும். முதலாளிகளுக்கு எதிராக உழவர்களை, உழைக்கும் மக்களைத் திரட்டியிருக்க வேண்டும்.

www.tamilarangam.net



ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பதில் இன்று இஸ்லாமியர் பெருமளவில் முனைப்புக் கொள்வதற்கான காரணங்கள் உலக அளவில் இருக்கின்றன. மத்தியக் கிழக்கிலுள்ள அரபு நாடுகள் இன்று ஏகாதிபத்தியத்திடம் சிக்கி உள்ளன. ஏகாதிபத்திய நாடுகளுக்கு பெட்ரோலியம் தேவை. பெட்ரோலியத்தின்மீது அரபு நாடுகள் அமர்ந்துள்ளன. சுடுகாட்டின்மீது இவர்கள் அமர்த்திருந்தால் ஏகாதிபத்தியத்தின் தாக்குதல் வந்திருக்காது. பெட்ரோலியம் என்ற சக்தியை தனக்கு வசப்படுத்திக் கொள்வதன் மூலம்தான் உலகத்தை ஏகாதிபத்தியம் தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முடியும். இந்தப் பெட்ரோலியத்தைக் கைப்பற்றத்தான் ஏகாதிபத்தியம் இஸ்லாமியர் மீது தாக்குதல் தொடுத்திருக்கிறது. ஷேக்குகள் ஏகாதிபத்தியத்திடம் சரணடைந்துள்ளனர். ஏகாதிபத்தியத்திடம் பெற்ற நவீன ஆயுதங்களைக் கொண்டு சதாம் உசேன் ஏகாதிபத்தியத்தை வெற்றி கொள்ள முடியாது. போரைத் தீர்மானிப்பது ஆயுதமல்ல. இறுதியில் மக்கள் சக்திதான் வெற்றியைத் தீர்மானிக்க முடியும். ஷேக்குகளோ, சதாம் உசேனோ இஸ்லாமியருக்கு விடுதலை தரமுடியாது. ஏகாதிபத்தியத்தை எதிர்த்து முற்றாக அழிப்பதன் மூலம்தான் மத்திய ஆசிய மக்களுக்கு விடுதலை கிடைக்கும். ஆகவே, மூன்றாம் உலக நாடுகளிலுள்ள தாழ்த்தப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட மக்களோடு சேர்ந்து நின்று இஸ்லாமியர் ஏகாதிபத்தியத்தை எதிர்க்க வேண்டும். இந்தியாவிலுள்ள இஸ்லாமியரும் இதனைத் தம் கடமையாக ஏற்றுச் செயல்பட வேண்டும். இஸ்லாமியருக்கு ஷேக் ஒரு பகைவன். ஏகாதிபத்திய எதிர்ப்பில் இஸ்லாமியர் ஈடுபடும் பொழுது ஷேக்குகளுக்கும் இஸ்லாமியர்களுக்கும் முரண்பாடு ஏற்பட்டே தீரும். இந்தப் பிளவு ஏற்பட்டால்தான் இஸ்லாமியருக்கு விடுதலை என்ற பாதை புலப்படும்.

இந்தியாவைப் பொறுத்தவரை, இஸ்லாமியரின் தலைமை யாரிடம் உள்ளது? இஸ்லாமியரில் முதலாளிகள், பெரும் படிப்பாளிகள், மௌல்விகள் ஆகிய சிலரிடம்தான் தலைமை உள்ளது. டெல்லியில் உள்ள இமாம் இவர்களோடு சேர்ந்தவர். அத்வானி வளர்க்கும் மூடத்தனத்தைத்தான் இவர்களும் வளர்க்கிறார்கள். ஒருவரின் மூடத்தனம், இன்னொருவரிடம் மூடத்தனத்தை வளர்க்கிறது. இவர்கள் இருவரும் மக்களின் பகைவர்கள். இவர்களால் மக்களுக்கு விடுதலை சாத்தியமில்லை, இவர்களை நம்பிச் சேவை செய்வதன் மூலம் ஏழை இந்துக்களும் முஸ்லீம்களும் இன்னும் அதிக அளவில் அடிமைத்தளையில் மாட்டிக்கொள்கிறார்கள். இந்துக்கள் எனப்படும் ஏழை மக்களும் இஸ்லாமியரும் ஒன்று சேர்ந்தால்தான் விடுதலையைப் பெற முடியும். பாரதீய ஜனதாக் கட்சிக்கு ஏகாதிபத்திய எதிர்ப்புக் கண்ணோட்டம் இல்லை.

www.tamilarangam.net



● தொடர்ந்து ஒரு கேள்வி : ஏகாதிபத்திய எதிர்ப்புக்கான திட்டம் என்பதன் அம்சங்களாகப் பல தெரிகின்றன. இவற்றை நாம் தொகுத்துக் கொள்ள வேண்டும். அவை என்ன?

○ பதில் : ஒடுக்கப்பட்டவர்கள் என்ற வரையறைக்குள் இவர்கள் எல்லோரும் வருகின்றனர். பிற்படுத்தப்பட்டவர்களும் ஒடுக்கப்பட்டவர்கள் தான். பெண்களும், ஆதிவாசிகளும் ஒடுக்கப்பட்டவர்கள். இவர்கள் பிரிந்து நிற்கக்கூடாது. பாரதீய ஜனதா என்பது இஸ்லாமியருக்கு மட்டுமல்ல. தலித் மக்களுக்கும் எதிரிதான். ஏகாதிபத்தியம், நிலவுடைமை ஆதிக்கம், முதலாளியம் இவற்றோடு பாரதீய ஜனதாவுக்குப் பகை இல்லை. இதைப்போலத்தான் காங்கிரஸ் கட்சியும் பிற கட்சிகளும்.

● கேள்வி : நிலம் கிடைத்தால் தலித் மக்களின் பிரச்னை தீரும் என்று சொல்கிறார்கள். இது சரிதானா?

○ பதில் : இன்று சிறு விவசாயிகளிடமும் நிலம் இருக்கிறது. இவர்களுக்கு விடுதலை வந்துவிடவில்லை. ஏகாதிபத்தியமும் அதன் தொங்கு சதைகளாக உள்ள பல்வேறு சக்திகளும் இவர்களை ஒடுக்கி வைத்திருக்கின்றன. தவிர, தலித் மக்களுக்குக் கொடுப்பதற்கான நிலம் இல்லை. உபரி நிலம் தலித் மக்களுக்குப் போய்ச் சேராது. சேர்ந்தாலும், ஏற்கனவே சொன்னபடி அதனால் அவர்களுக்கு விடுதலை வந்துவிடாது.

● கேள்வி : தலித் மக்கள் தாங்கள் விடுதலை பெறுவதற்குத் தம் கிராமங்களை விட்டு நகரங்களுக்குப் போய்ச் சேரவேண்டும் என்றும் சிலர் கூறுகிறார்கள். இது சரிதானா?

○ பதில் : இன்றுவரை கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர்களும் இப்படித்தான் கூறுகிறார்கள். நாட்டைத் தொழில்மயப்படுத்தினால், அதாவது தொழிற்புரட்சியின் மூலம் சாதியம் முதலிய பிரச்னைகள் தீரும் என்கிறார்கள். இது தவறான கருத்து. நகர்ப்புறங்களில் சாதி ஒழிந்து விடவில்லை. நகர்ப்புறங்களில் ஒடுக்கும் சக்திகளின் பகுதியாக மாறுவதனால் விடுதலை கிடைத்து விடாது. நகரங்களில் உள்ள சேரிகளில் தான் இவர்கள் வாழ்கிறார்கள். இவர்கள் ஆதிக்கச் சக்திகளாக மாற முடியுமா? மாறத்தான் வேண்டுமா?

www.tamilarangam.net



● கேள்வி : பார்ப்பனீயம்தான், சாதி என்ற ஏணியின் கீழ்ப்படியில் இவர்களை வைத்திருக்கிறது. பார்ப்பனீயத்தை ஒழித்தால் இவர்களுக்கு விடுதலை கிடைக்கும். இக்கருத்து சரியா?

○ பதில் : இன்று கிராமங்களில் பார்ப்பனன் இல்லை. அவன் நகரத்திற்கு வந்துவிட்டான். முதலாளியோடும், ஏகாதிபத்திய வாதிகளோடும் அவன் இப்போது சேர்ந்திருக்கிறான். பார்ப்பனீயம் என்பது அடிப்படையில் சாதியம்தான். இன்று கிராமங்களில் சாதியத்தைக் காப்பவர் யார்? ஆதிக்கத்தைத் தக்கவைத்துக் கொள்வதற்கு உயர் சாதியினர்க்கு சாதி பயன்படுகிறது. உண்மையில் தாழ்த்தப்பட்ட மக்கள் இந்த சமுதாயத்தின் முழுமையான விடுதலையில் எப்பொழுது பங்கு பெறுகிறார்களோ அப்பொழுதுதான் சாதி ஒழியும்.

ஏகாதிபத்தியம் இன்று காடுகள், தண்ணீர், நிலம் முதலிய அனைத்து மூல வளங்களையும் நாசமாக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் தலித் மக்கள் இன்னும் ஓரங்களுக்கு ஒதுக்கப்படுகிறார்கள். முன்பு இருந்ததைவிட இன்னும் மோசமான சூழலில் இன்று சேரிகள் இருக்கின்றன. இன்று இவர்களை இப்படித் தள்ளிவைத்திருப்பது ஏகாதிபத்தியம்தான். இதை இன்று தலித் இயக்கத்தினர் சரியாகத் தெரிந்துகொள்ள வேண்டும். சமூகத்தின் விடுதலை என்ற கண்ணியில் இவர்களும் இணைந்துகொள்ள வேண்டும். விடுதலை பிரிவு படாதது என்று மார்க்சு கூறியதை நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்.

(கேள்விகள் : ஞானி)

நிகழ் 25
ஏப்ரல் 93

SEELAN BOOKS
SIGNATURE
NORWAY

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



கோவை ஞானி அவர்கள் ஆசிரியர், இதழாளர், கவிஞர், மார்க்சியர், எழுத்தாளர். எல்லாவற்றுக்கும் மேலாக அபூர்வமான மனிதர். இவரது இயக்கங்களுள் ஒன்றான வெளியீடு மிகவும் குறிப்பிடத் தக்கவை.

இந்நூலில் 'நிகழ்' கட்டுரைகளைத் தொகுத்து தந்துள்ளார்.
உலகாயுதம், மார்க்சியம், இந்துத்துவம்,
தலித்தியம் போன்ற பல்வேறு தத்துவங்கள் இந்தியக் கலாச்சாரத்தில் பெறும் இடத்தை இந்நூல் விவரிக்கும்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்